# சிலப்பதிகாரத்தில் கேரள நாட்டார் வழக்காறுகள்

**(FOLK RITUAL ASPECTS OF KERALA IN CHILAPPATHIKARAM EPIC)**

**கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்டத்திற்காக அரசுக் கல்லூரி சித்தூர் தமிழ்த்துறை வாயிலாக அளிக்கப்பெறும் ஆய்வேடு**


**ஆய்வாளர்**

**த.சுஜாதா**

**Reg.No.8977/2015/Admn**

**ஆய்வு நெறியாளர்**

**முனைவர்.நா.ஞானப்பழம்**

இணைப் பேராசிரியர் & தலைவர் (மேனாள்)

தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்

அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு (மா)


**தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்**

**அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு -678104**

**ஜூன் 2023**

# FOLK RITUAL ASPECTS OF KERALA IN CHILAPPATHIKARAM EPIC

*Thesis submitted to the University of Calicut*
*for the Award of Doctor of Philosophy Degree*
*in Tamil*

By


T.SUJATHA

Reg.No.8977/2015/Admn

*Research Scholar*
*Department of Tamil & Research Centre*
*Govt. College Chittur, Palakkad*

Guide

Dr.N.GNANAPALAM

*Associate Professor & Head (Retd)*
*Department of Tamil & Research Centre*
*Govt. College Chittur, Palakkad*



DEPARTMENT OF TAMIL & RESEARCH CENTRE
GOVT. COLLEGE CHITTUR, PALAKKAD -678104
June 2023

# நெறியாளர் சான்றிதழ்

**முனைவர்.நா.ஞானப்பழம்**

இணைப் பேராசிரியர் & தலைவர் (மேனாள்)

தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்

அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு -678104

கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்டத்திற்காக அளிக்கப்பெறும் **"சிலப்பதிகாரத்தில் கேரள நாட்டார் வழக்காறுகள்"** என்னும் இவ்வாய்வேடு, அரசுக் கல்லூரி சித்தூர் தமிழ்த்துறையின் பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர், த.சுஜாதா அவர்களால் தன்னிச்சையாகச் செய்யப்பட்டது என்றும், இப்பொருள் குறித்து இப்பல்கலைக்கழகத்தில் இதுவரை எவ்வித ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் உறுதியளிக்கிறேன்.

நெறியாளர்

நா.ஞானப்பழம்

Recdn & HoD of Tamil GCC.

ஒப்புதல் கையொப்பம்

தமிழ்த்துறைத் தலைவர்,

தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்,

அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு -678104

Dr. G. MUTHULAKSHMI
Professor & Head
Dept. of Tamil & Research Centre
Govt. College, Chittur,
PALAKKAD - 678 104.

GOVT. COLLEGE, CHITTUR
Palakkad, Kerala
Pin-678 104
CHITTUR COLLEGE P.O.

PRINCIPAL
GOVT. COLLEGE
CHITTUR

# நெறியாளர் சான்றிதழ்

**முனைவர்.நா.ஞானப்பழம்**

இணைப் பேராசிரியர் & தலைவர் (மேனாள்)

தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்

அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு -678104

கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்டத்திற்காக அளிக்கப்பெறும் **“சிலப்பதிகாரத்தில் கேரள நாட்டார் வழக்காறுகள்”** என்னும் இவ்வாய்வேடு, அரசுக் கல்லூரி சித்தூர் தமிழ்த்துறையின் பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர், த.சுஜாதா அவர்களால் தன்னிச்சையாகச் செய்யப்பட்டது என்றும், இப்பொருள் குறித்து இப்பல்கலைக்கழகத்தில் இதுவரை எவ்வித ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் உறுதியளிக்கிறேன்.

நெறியாளர்

**நா.ஞானப்பழம்**

ஒப்புதல் கையொப்பம்

தமிழ்த்துறைத் தலைவர்,

தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்,

அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு -678104

# ஆய்வாளர் உறுதிமொழி

**த.சுஜாதா**
**Reg.No.8977/2015/Admn**
முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்),
தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்,
அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு -678104

கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்டத்திற்காக அளிக்கப்பெறும் **"சிலப்பதிகாரத்தில் கேரள நாட்டார் வழக்காறுகள்"** என்னும் இவ்வாய்வேடு, அரசுக் கல்லூரி, சித்தூர் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர்.நா.ஞானப்பழம் அவர்களை நெறியாளராகக் கொண்டு எனது சொந்த முயற்சியில் உருவானதாகும். இதற்கு முன் இப்பொருள் குறித்து கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகத்தில் எவ்வித முனைவர்பட்ட ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை என உறுதியளிக்கிறேன்.

ஆய்வாளர்,

**(த.சுஜாதா)**

ஒப்புதல் கையொப்பம்
**முனைவர். நா.ஞானப்பழம்**
இணைப் பேராசிரியர் & தலைவர் (மேனாள்)
தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்
அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு -678104

## நன்றியுரை

கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகத்தின் முனைவர்பட்டத்திற்காக “**சிலப்பதிகாரத்தில் கேரள நாட்டார் வழக்காறுகள்**” என்னும் தலைப்பில் ஆய்வு செய்ய அனுமதியளித்த கல்லூரி முதல்வர் அவர்களுக்கு என் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

“**சிலப்பதிகாரத்தில் கேரள நாட்டார் வழக்காறுகள்**” என்னும் தலைப்பில் தமிழ்த்துறையில் முனைவர்பட்ட ஆய்வினைச் செய்ய அனுமதியளித்த துறைத்தலைவர் இணைப்பேராசிரியர் முனைவர் க.முத்துஇலக்குமி அவர்களுக்கு என் பணிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னை முனைவர்பட்ட மாணவியாக ஏற்றுக்கொண்டு ஆய்வினை நிகழ்த்த வழி நடத்திய நெறியாளர் இணைப் பேராசிரியர் முனைவர்.நா.ஞானப்பழம் அவர்களுக்கு என் பணிவான நன்றிகளை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்விற்கு இணை நெறியாளராக இருந்து உதவி புரிந்த இணைப்பேராசிரியர் முனைவர் ப.முருகன் அவர்களுக்கு என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்விற்குத் தேவையான நூல்களைத் தந்து உதவிய நூலகப் பொறுப்பாளரான பேராசிரியர் முனைவர் க.கதிரவன் அவர்களுக்கு என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்விற்குத் தேவையான கருத்துக்களைத் தந்து உதவிய துறைப் பேராசிரியர்கள் முனைவர் க.முத்துலக்குமி, முனைவர். த.கவிதா, முனைவர் சு.பாத்திமா, முனைவர் ஆர்,.ரதி, முனைவர் ந.மனோகரன், முனைவர் க.சிவமணி, முனைவர் அ.விஜயன், முனைவர் வை.தர்மலிங்கம் ஆகியோருக்கு என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆய்விற்குத் தேவையான நூல்களைக் கொடுத்துதவிய சித்தூர் கல்லூரியின் பொதுநூலகர் சுரேகா.கே.ஆர் அவர்களுக்கும், மலையாள நூல்களைத்

தந்துதவிய சித்தூர் கல்லூரி மலையாளத் துறைப் பேராசிரியர் அஞ்சனா.வி.ஆர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் முனைவர்பட்ட ஆய்வுக்காலத்தில் என்னைப் பேணிய என் பெற்றோர்களுக்கும் மற்றும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் என் நன்றிகளை சமர்ப்பிக்கிறேன். மேலும் எனது சக ஆய்வாள நண்பர்களுக்கும் என் நன்றிகள்.

இந்த ஆய்வேட்டை தட்டச்சு செய்ய உதவிய அமல்ராஜ்.ஜோ அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவண்.

**த.சுஜாதா**

ஆய்வாளர்

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | |
|---|---|
| அகம் | -அகநானூறு |
| ஆய்ச் | -ஆய்ச்சியர் குரவை |
| இந்திரவிழவூர் | -இந்திரவிழவூர் எடுத்த காதை |
| உ.பா.ம | -உரை பாட்டு மடை |
| எம்.டி | - எம்.டி.வாசுதேவன் நாயர் |
| ஐங் | -ஐங்குறுநூறு |
| கலித் | -கலித்தொகை |
| குறள் | - திருக்குறள் |
| குறுந் | -குறுந்தொகை |
| குன்றக் | -குன்றக் குரவை |
| சிலப் | -சிலப்பதிகாரம் |
| தொல் | -தொல்காப்பியம் |
| தொல்.பொருள்.அகம் | - தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல் |
| நற் | -நற்றிணை |
| ப. | -பக்கம் |

| | |
|---|---|
| பக். | -பக்கங்கள் |
| ப.ஆ | -பதிப்பாசிரியர் |
| பதிற்று | -பதிற்றுப்பத்து |
| பா. | -பாடல் |
| புறஞ்சேரி | -புறஞ்சேரியிறுத்த காதை |
| புறத் | -புறத்திணை |
| புறம் | -புறநானூறு |
| மேலது | -மேலே குறிப்பிட்ட நூல் |
| வரந் | -வரந்தரு காதை |
| வேனிற் | -வேனிற் காதை |

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | தாள் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | இயல்- ஒன்று: தொன்மக்கதைகள் | 7 |
| 3. | இயல் – இரண்டு: வழிபாடு | 58 |
| 4. | இயல் – மூன்று: கலைகள் | 145 |
| 5. | இயல் – நான்கு: சடங்குகளும் நம்பிக்கைகளும் | 205 |
| 6. | முடிவுரை | 261 |
| 7. | துணைநூற்பட்டியல் | 271 |
| 8. | பின்னிணைப்பு: | |
| | 1.தகவலாளர் பட்டியல் | 280 |
| | 2.நிழற்படம் | 282 |

# முன்னுரை

## சிலப்பதிகாரத்தில் கேரள நாட்டார் வழக்காறுகள்

### முன்னுரை

பண்டைத்தமிழர்களின் வாழ்வியலை விளக்கிக் காட்டும் அரியதொரு காப்பியம் சிலப்பதிகாரம். ஏறத்தாழ ஈராயிரமாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களின் நாகரிகம் மற்றும் பண்பாட்டினை பரவலாக எடுத்துரைக்கும் நூல் அது. மனிதர்களுக்கும் இயற்கைக்குமான உறவு, அது சார்ந்த பல நம்பிக்கைகள், இறையாற்றலுடன் தம்மை இணைத்துக் கொள்ளும் பொருட்டு அவர்கள் கையாண்ட சடங்கு முறைகள், சடங்கு முறைகளோடு இயைந்து வளர்ந்த அவர்தம் கலைத் திறன்கள் என்று பல விடயங்களையும் ஆய்ந்து பார்ப்பதற்குரிய கொள்கலனாக அந்நூல் விளங்குகின்றது.

சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் சேரநாட்டைச் சார்ந்தவர். சேரநாடு துளுநாடு முதலான பகுதிகளை உள்ளிட்ட பண்டைய தமிழகத்தில் நிலவிய பண்பாட்டுக் கூறுகளை சிலப்பதிகாரப் பனுவல் வழி செவ்வனே உணர்ந்தறிய இயலுகின்றது.

அப்பண்பாட்டுக்கூறுகள் முற்காலத்தில் சேரநாடாக அறியப்பட்ட இன்றைய கேரள நாட்டார் மரபில் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. கால மாற்றத்தால் பல தாக்குதல்களுக்கு உள்ளான நிலையிலும் பண்டைய பண்பாட்டின் அறுபடாத தொடர்ச்சியாக அவை இன்றும் வழக்கத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. நாட்டார் மரபென்பது வாழையடி வாழையாகத் தழைத்து வருவது. மக்களின் வாழ்வியல் கூறுகளை வெளிக்காட்டும் அம்மரபின் தனித்துவத்தை விளங்கிக் கொள்ள எழுத்திலக்கியங்கள் பலவும் உதவுகிறன. எழுத்திலக்கியங்களின் தாயாக விளங்கும் நாட்டார் இலக்கியங்கள் காலப்போக்கில் அவரவர் மனநிலைக்கேற்றவாறு சில மாற்றங்களுக்குள்ளாவதுண்டு.

எனினும் அவற்றில் உண்மைத்தன்மை உறைந்து கிடப்பது கண்கூடு. அவற்றை அடியொற்றி எழுத்திலக்கியங்கள் எழுவது இயல்பே. சிலப்பதிகாரமும் அங்ஙனமே எழுந்திருக்க வேண்டுமென்பது அறிஞர்களின் கணிப்பு.

நாட்டார் கதையினை அடிப்படையாக் கொண்டு எழுந்த சிலப்பதிகாரத்தில் அது எழுந்த காலத்திற்குரிய பண்பாட்டுப் பதிவுகள் பரவலாகக் காணப்படுகின்றன. அப்பதிவுகளின் வரலாற்றுத் தொடர்ச்சியினை இன்றைய கேரள நாட்டார் வழக்காறுகள் தக்கவைத்திருப்பதனை கள ஆய்வுத் தரவுகளும், பி.எல்.சாமி, செல்லன் கோவிந்தன், சுதாகர் முதலான ஆய்வறிஞர்களின் கருத்துரைகளும் மெய்ப்பித்திருக்கின்றன. உலகமயமாக்கல் சூழலில் புதுப் புது வரவுகளைத் தம் பண்பாட்டு மரபிற்குள் உள்வாங்கிக் கொள்ளும் கேரள நாட்டார் பல பழைய வழக்காறுகளை கைவிட்டு விடாமல் போற்றிப் பாதுகாத்து வருவதனைக் கண்டுணரமுடிகின்றது. எனவே, சிலப்பதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பண்பாட்டுக் கூறுகளை இன்றைய கேரள நாட்டார் வழக்காறுகளுடன் இணைத்து ஆய்வு செய்வதன் வாயிலாக பல செவ்வியல் பண்பாட்டுக் கூறுகளை நம்மால் இனங்காண முடியும்.

பழந்தமிழ் இலக்கியங்கள் எடுத்துக் காட்டிய தமிழர்களின் வாழ்வியல் முறைகளை இன்றைய தமிழகத்தில் அதிகளவில் அடையாளங்காண இயலாத சூழல் நிலவுகின்றது. அந்நிலையில் கேரள நாட்டார் மரபில் அதற்கான இடம் அதிகமாகத் தென்படுவதை நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மற்றும் இனவரைவியல் ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. மலைப்பாங்கான சேரநாட்டு நிலவியல் தன்மை குறிப்பாக வடமலபார்ப் பகுதிகளின் முல்லை மற்றும் குறிஞ்சிநிலச் சூழல் பிற பண்பாட்டுக் கலப்பிற்கு அதிகமாக இடந்தராத சூழ்நிலையை உருவாக்கியுள்ளன. அதனால் இப்பகுதிகளில் பழந்தமிழ்ப் பண்பாட்டு மரபுகளின் தொடர்ச்சியினை இன்று வரை காணமுடிகின்றது. சிலப்பதிகாரம் பதிவு செய்த பண்பாட்டு விடயங்களை கேரள நாட்டார்

வழக்காறுகளுடன் இணைத்துக் காண வேண்டிய தேவை உருவாகியுள்ளது. எனவே பழந்தமிழ்ப் பண்பாட்டுக்கும் கேரளப் பண்பாட்டுக்கும் இடையே உள்ள உறவு நிலையைக் கண்டறியும் விதமாக இவ்வாய்வு அமைகின்றது.

**ஆய்வுத் தலைப்பு**

சிலப்பதிகாரம் என்னும் பழந்தமிழ்க் காப்பியம் எடுத்துரைக்கும் நாட்டார் வழக்காறுகளை அடிப்படையாகக் கொண்டு கேரள நாட்டார் வழக்காறுகளை அணுகுவதால் **“சிலப்பதிகாரத்தில் கேரள நாட்டார் வழக்காறுகள்”** என்பது ஆய்வுத் தலைப்பாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

சிலப்பதிகாரத்தில் பதிவாகியுள்ள பழந்தமிழ் நாட்டார் வழக்காறுகளை இன்றைய கேரள நாட்டார் வழக்காறுகளுடன் இணைத்துக் காண்பதன் வழி இன்றைய கேரள நாட்டார் பண்பாட்டிற்கும் பழந்தமிழ்ப் பண்பாட்டுக்கும் இடையே உள்ள உறவு நிலையினை அறிய முற்படுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வின் கருதுகோள்**

சிலப்பதிகாரம் எடுத்துரைக்கும் பழந்தமிழ் நாட்டார் வழக்காறுகள் இன்றைய கேரள நாட்டார் பண்பாட்டில் சிற்சில மாற்றங்களுடன் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்னும் கருதுகோள் இவ்வாய்வில் முன்வைக்கப்படுகின்றது.

**ஆய்வு எல்லை**

ஆய்வின் எல்லை கருதி இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரம் என்னும் காப்பியமும் கள ஆய்வுகள் வழி பெறப்பட்ட கேரள நாட்டார் வழக்காறுகளும் இவ்வாய்வின் முதன்மைச் சான்றாதாரங்களாக அமைகின்றன. சிலப்பதிகாரம் தொடர்பான பல்வேறு ஆய்வு நூல்கள், கேரள நாட்டார் வழக்காறுகள் குறித்த பல ஆய்வு நூல்கள், ஆய்வேடுகள், ஆய்வுக்கட்டுரைகள் ஆகியன இவ்வாய்வின் துணைமைச் சான்றாதாரங்களாகின்றன.

**ஆய்வு முன்னோடிகள்**

1. தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு – சாமி பி.எல்.
2. கோவிலன் சரித்திரம் – டாக்டர்.நசீம்தீன்.பி.
3. கண்ணகி வழிபாடு – கோவிந்தன் செல்லன்.
4. கண்ணகி கதைகள் – சுதாகர்.கு.

முதலான ஆய்வு நூல்களும்

1. கேரள நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் சிலப்பதிகாரத்தின் தாக்கம் – உமா மகேஸ்வரி.எஸ்,

என்ற முனைவர் பட்ட ஆய்வேடும் ஆய்வு முன்னோடிகளாக அமைகின்றன.

**ஆய்வு அணுகுமுறைகள்**

கள ஆய்வு அணுகுமுறை, பகுப்பாய்வு அணுகுமுறை, ஒப்பாய்வு அணுகுமுறை, விளக்கவியல் அணுகுமுறை ஆகிய அணுகுமுறைகள் இவ்வாய்வில் பின்பற்றப்படுகின்றன.

**ஆய்வேட்டின் கட்டமைப்பு**

**"சிலப்பதிகாரத்தில் கேரள நாட்டார் வழக்காறுகள்"** என்ற தலைப்பின் கீழ் அமையும் இவ்வாய்வேடு முன்னுரை முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாக கட்டமைக்கப்பெற்றுள்ளன.

**முன்னுரை**

முன்னுரையில் தலைப்பு விளக்கம், ஆய்வின் நோக்கம், கருதுகோள், ஆய்வு எல்லை, சான்றாதாரங்கள், முன்னிகழ்ந்த ஆய்வுகள், ஆய்வு அணுகுமுறைகள், இயல் விளக்கங்கள் ஆகியன இடம்பெற்றுள்ளன.

**இயல் - 1. தொன்மக்கதைகள்**

**"தொன்மக்கதைகள்"** என்னும் முதலாவது இயலானது சிலப்பதிகாரம் எடுத்துரைக்கும் கண்ணகி, இயக்கி, பூதம், காமன் முதலானவர்கள் குறித்த தொன்மக்கதைகள் கேரள நாட்டார் கதையாடலில் எங்ஙனம் இடம்பெற்றுள்ளன என்பதை ஆய்ந்து காணும் விதமாக அமைகின்றது.

**இயல் - 2. வழிபாடு**

**"வழிபாடு"** என்னும் இரண்டாவது இயலில் சிலப்பதிகாரம் பதிவு செய்த எடுத்துரைக்கும் கண்ணகி வழிபாடு, இயக்கி வழிபாடு, காமன் வழிபாடு, பூத வழிபாடு முதலான நாட்டார் வழிபாடுகள் தற்காலக் கேரள நாட்டார் வழிபாட்டில் எத்தகைய செல்வாக்கைச் செலுத்தியுள்ளன என்று விளக்கப் பெறுகின்றன.

**இயல் - 3. சடங்குகளும் நம்பிக்கைகளும்**

**"சடங்குகளும் நம்பிக்கைகளும்"** என்னும் மூன்றாவது இயலில் கேரள நாட்டார் வழக்காற்றில் இடம்பெறும் மங்கலப்பாட்டு, குமாரிபூசை, தாலப்பொலி, களமெழுத்து, குருதிப்பலி, மேலேரி, பொலிச்சுபாட்டு, பாணர்பாட்டு, தீயாட்டு, ஆகிய சடங்கு மற்றும் நம்பிக்கை சார்ந்த பண்பாட்டுப் பதிவுகள் பழங்காலத்திலிருந்தே நிலவி வருவன என்பதை சிலப்பதிகாரத்தில் காணலாகும் பண்பாட்டுப் பதிவுகளோடு ஒப்பு நோக்கி ஆராய்ந்துரைக்கும் முறை கையாளப்பெறுகின்றது.

**இயல் - 4. கலைகள்**

**"கலைகள்"** என்னும் நான்காவது இயலானது சிலப்பதிகாரத்தில் பதிவாகியுள்ள கொற்றவைக் கோலம், வெறிக்கூத்து, சாலினி தெய்வமேறல், குரவையாடல் என்பதான சடங்குக் கலைகளுக்கும் தற்காலக் கேரள நாட்டார் மரபில் காணப்படும் தெய்யம், திற,

கோலம், துள்ளல் போன்ற சடங்குக் கலைகளுக்கும் இடையே உள்ள உறவுகள் எத்தகையன என்பதை ஆராய்ந்து காணும் நிலையில் அமைக்கப்பெறுகின்றது.

**முடிவுரை**

முடிவுரையில் ஒவ்வொரு இயலிலும் கண்டறியப்பட்ட ஆய்வு முடிவுகள் தொகுத்துரைக்கப்பெற்றுள்ளன. ஆய்வேட்டின் இறுதிப்பக்கங்களில் துணைநூற்பட்டியல் இடம்பெற்றுள்ளது. பின்னிணைப்பாக தகவலாளர் பட்டியல், நிழற்படங்கள், ஆகியன இடம்பெற்றுள்ளன.

# இயல்- ஒன்று

# தொன்மக்கதைகள்

## தொன்மக்கதைகள்

கற்பனைத் திறன் மிக்க மனிதன் உரையாடப் பழகிய காலத்தில் இருந்தே கதை உரைத்தல் என்பது நிகழ்ந்திருக்க வேண்டும். தான் வாழும் சமூகத்தில் நிகழும் நிகழ்வுகளை உற்று கவனித்த மனிதர்கள் தம் விழைவுகளையும் வெறுப்புகளையும் கற்பனைத் திறனுக்கேற்றவாறு பொருத்தி கதை உருவாக்கினார்கள். அதனால் அக்கதைகளில் மெய்யும் பொய்யும் இரண்டறக் கலந்தன. மனிதன் தன் எண்ணங்களை வெளியிடும் பல்வேறு முறைகளில் கதை உரைத்தல் என்பதற்கு தனியிடமுண்டு. மனிதகுல வரலாற்றில் தொல்காலம் முதலே இருந்து வரும் ஒன்றாக இது காணப்படுகின்றது. **“கதை உரைத்தலில் பல வடிவங்கள் உண்டு. புராண மரபுக்கதைகள், புகழ்மரபுக்கதைகள், கதைப்பாடல் போன்ற பல வடிவங்களில் உள்ளது. இவை உரைநடை வடிவிலும், கவிதை வடிவிலும் இரண்டும் கலந்த வடிவிலும் இருக்கலாம்.”** (து.சீனிச்சாமி, தமிழில் காப்பியக் கொள்கை. ப.9) பழந்தமிழ்ச் சமூகத்தில் வாழ்ந்த கண்ணகி கோவலர் வாழ்வில் நிகழ்ந்த சில நிகழ்வுகள் மக்கள் மனதை ஈர்த்திருக்க வேண்டும். எனவே அவ்விருவர் குறித்த கதையாடல்கள் பல உருவாகின. இளங்கோவடிகள் தம் படைப்புத் திறனால் காப்பிய வடிவில் அவர்தம் வாழ்வியலை திறம்பட வடித்தார்.

உலக செவ்விலக்கியங்கள் யாவும் வாய்மொழி மரபிலிருந்தே பெறப்பட்டன. **“கிரேக்க நாடோடிப் பாடல்களின் தொகுப்பாக ‘இலியத்’ விளங்குவது போல, தமிழின் செவ்வியல் காப்பியங்களான சிலம்பும், மேகலையும் வெவ்வேறு வகையான மையக்கருத்துக்களை உட்கொண்டுள்ளன. கண்ணகியின் கதை தமிழ் மரபின் ஓர்**

**உயர்ந்த வகைக் கற்பு நெறியைக் காட்டுவதாகும்."** (பக்தவத்சல பாரதி, இலக்கிய மானிடவியல்,ப.192)

> **"தொன்மைதானே உரையொடு புணர்ந்த**
> **பழமை மேற்றே"** (தொல். செய்யூளியல் -538)

என்பார் தொல்காப்பியர். தொன்மை என்பது உரைவிரவிப் பழமையாகிய கதையைப் பொருளாகக் கொண்டு செய்யப்படுவது என்று கூறுவதன் மூலம் மனித சமுதாயத்தில் கதையாடல் என்பது மிகப் பழங்காலத்திலிருந்து நிலவி வருகின்ற ஒன்று என்று தெரியவருகின்றது. கதைகள் மனித சிந்தனையை வளப்படுத்தியிருக்கின்றன.

பழந்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் காப்பியத் தலைவி கண்ணகியைத் துறந்து கோவலன் கணிகையர் குலத்து மாதவியுடன் இன்பமாக வாழ்ந்தான். பிறகு பாண்டிய மன்னனால் கொலையுண்டான். அத்துன்பத்தை ஆற்றாது கர்ணகி தன் இடமுலையைத் திருகி எறிந்தாள். இத்தகு செய்தி சிலப்பதிகார காலத்திற்கு முன் தோன்றிய பழந்தமிழ் இலக்கியங்களிலும் காணப்பெறுகின்றன.

> **"கிளையை மன் எம்கேள் வெய்யோற்கென**
> **யாம்தற் றொழுதனம் வினவ காந்தன்**
> **முகைபுரை விரலிற் கண்ணீர் துடையா**
> **யாம் அவன் கிளைஞரே மல்லேம்; கேளினி**
> **எம் போல் ஒருத்தி நலன் நயந்து என்றும்**
> **வரூஉம் என்ப வயங்குபுகழ்ப் பேகன்**
> **ஒல்லென ஒலிக்குந் தேரொடு**
> **முல்லை வேலி நல்லூரானே"**
>
> (புறம்.பா. 144)

மேற்குறிப்பிட்ட புறநானூற்றுப் பாடலில் வையாவிக் கோப்பெரும் பேகன் என்ற வள்ளல் ஒருவன் தன் மனைவியாகிய கண்ணகியைத் துறந்து வேறொருத்தியுடன்

வாழ்ந்தான் என்ற கதைக்கூறு கோவலன் கண்ணகியைத் துறந்து, மாதவியிடம் வாழ்ந்தான் என்னும் கதையுடன் ஒத்துள்ளது.

**"எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்**
**குருகார் கழனியின் இதணத் தாங்கண்**
**ஏதிலாளன் கவலை கவற்ற**
**ஒருமுலை யறுத்து திருமா உண்ணி"** (நற். பா -216)

என்ற நற்றிணைப் பாடலில் திருமா உண்ணி பற்றிய செய்தி இடம்பெறுகின்றது.

தன் தலைவனைப் பிரிந்த துயரால் திருமா உண்ணி ஒரு முலையை அறுத்தெறிந்து, வேங்கை மரத்தடியில் நின்றாள் என்ற கதை கண்ணகியின் கதையுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது.

**"பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல்**
**ஒருமுலை யிழந்தாளோர் திருமாபத்தினி"**
(சிலப்.பதிகம்,4-5)

என்னும் சிலப்பதிகார அடிகளால், வேங்கை மரத்தடியில் நின்ற திருமாவுண்ணி, கண்ணகியே என்று அறியமுடிகின்றது. இன்றும் 'உண்ணி' என்னும் பெயர் உண்ணிநீலி, கொற்றி உண்ணி போன்ற பல்வேறு பெயர்களாக கேரளநாட்டில் வழங்கிவருகின்றது. 'ஒற்றை முலைச்சி' என்னும் தெய்வத்தையும் கேரளநாட்டார் வணங்கி வருகின்றனர்.

தொல்காப்பியச் சொல்லதிகார உரையில், தெய்வச்சிலையார், உருபுகள் பல வினையான் வந்து ஒரு வினை கொண்டு முடிதற்குக் காட்டிய வெண்பா ஒன்று, சிலப்பதிகார வரலாற்றைச் சுருங்கக் கூறுகின்றது.

**"காதலியைக் கொண்டு கவுந்தியொடு கூடி**
**மாதரிக்குக் காட்டி மனையி னகன்று போய்க்**
**கோதிலி றைவனது கூடற்கட் கோவலன் சென்**
**றேத முறுதல் வினை"** (தொல்.சொல்.100)

என்று சிலப்பதிகாரக் கதையினை எடுத்துக்காட்டியதிலிருந்து அக்கதை நாட்டு மக்களிடையே செல்வாக்கு பெற்றிருந்தது என அறியமுடிகிறது. அதனுடன் அக்கதை தமிழகம் மட்டுமன்றி கேரளா உள்ளிட்ட பல பகுதிகளிலும் வழங்கிவந்த நிலையில் பல மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது என்பதும் புலனாகின்றது.

முத்தமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரம் பெண்ணின் பெருமையைப் பேசக்கூடிய காப்பியம், தமிழிலுள்ள ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று. சேர முனியாகிய இளங்கோவடிகளால் எழுதப்பட்டது. காவிரிப்பூப் பட்டினத்தில், பெருங்குடி வாணிகர் மரபில் தோன்றிய கற்பில் சிறந்த கண்ணகி, அவள் கணவனாகிய கோவலன் என்பவர்களுடைய கதையினை உரைப்பது.

**"அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்**
**உரைசால் பத்தின் குயர்ந்தோ ரேத்தலும்**
**ஊழ்வினை யுருத்துவந் தூட்டும் என்பதூஉம்**
**சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்**
**சிலப்பதிகாரம் என்னும் பெயரால்**
**நாட்டுதும் யாம் ஓர்பாட்டுடைச் செய்யுள்"**

(சிலம்பு.பதிகம் பா,57-62)

அரசர் முறை செய்வதலில் சிறிது தவறினாலும் அவருக்கு அறக்கடவுளே கூற்றமாகும் என்றும், கற்புடைய மகளை, மக்களேயன்றித் தேவர், முனிவர் போன்றோர் போற்றுதல் இயல்பு என்றும், முன்செய்த தீவினை அதன் பயனை நுகர்விக்கும் என்றும் மூன்று கருத்துக்கள் கூறப்படுவதாலும், சிலம்பு காரணமாகத் தோன்றியதாலும், சிலப்பதிகாரம் என பெயர் இட்டு, காப்பியம் இயற்ற வேண்டும் என்று இளங்கோ, சாத்தனாரிடம் கூறினார்.

கண்ணகியின் கதையினை சாத்தனார் கூறக் கேட்டு, இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் முப்பது காதைகளில் படைத்துள்ளார்.

**கோவலன் கண்ணகி கதைச் சுருக்கம்**

பெருங்குடி வணிகரான மாசாத்துவான் மகன் கோவலனுக்கும், மாநாய்கன் மகள் கண்ணகிக்கும் திருமணம் முடிந்து இருவரும் இனிதே இல்லறம் நடத்தி வந்தனர். அவ்வேளையில் கணிகையர் குலத்தில் பிறந்த மாதவியின் ஆடலைக் கண்டு, அவள் அழகில் மயங்கி, அவளுடன் இல்லற வாழ்வை மேற்கொண்டான். மணிமேகலை என்னும் குழந்தைக்குத் தந்தையானான். காலப்போக்கில் செல்வமனைத்தையும் இழந்தான். அதனிடையில் மாதவியை பிறழ உணர்ந்ததன் காரணமாக கோவலன் மாதவியிடம் வெறுப்புற்றுப் பிரிந்தான். மீண்டும் கண்ணகியிடம் வந்து சேர்ந்தான்.

சிலம்பினை முதலாகக் கொண்டு பொருளீட்டி வாழும் எண்ணத்துடன் கோவலன், கண்ணகியுடன் மதுரையை அடைந்தான். வழித்துணையாக வந்த சமணத்துறவி கவுந்தியடிகள் கண்ணகியை ஆய்ச்சியர் குல மாதரியிடம் அடைக்கலம் கொடுத்தாள். கோவலன், கண்ணகியின் காற்சிலம்பொன்றை விற்றுவர மதுரைக்குச் சென்றான். அங்கு அரண்மனை பொற்கொல்லன் ஒருவனிடம் காற்சிலம்பினைக் காட்டினான். பொற்கொல்லன் தான் முன்பு திருடிய பாண்டிமா தேவியின் காற்சிலம்பை ஒத்திருந்ததால், தான் தப்பிக்க ஒரு வழி கிடைத்திடும் என்றெண்ணி, கோவலனை அக்கசாலை பள்ளியில் இருக்கவைத்து, பாண்டிய மன்னனிடம் அச்சிலம்பைக் காட்டி வருகிறேன் என்று கூறிச் சென்றான்.

மன்னனிடம் ‘தேவியின் காற்சிலம்பினைத் திருடிய கள்வன் என் சிறிய குடிலில் உள்ளான்’ என்று பொற்கொல்லன் கூறவும், ‘வினை விளை காலம் ஆதலால்’ பாண்டிய மன்னன் ஆராயாமல் ‘அக் கள்வனைக் கொன்று அச்சிலம்பினை இங்கு கொண்டு வருக’

என்று காவலாளிகளிடம் கூறினான். அக்காவலாளிகளில் ஒருவன் பாண்டிய மன்னனின் ஆணையின் படி, கோவலனை வாளால் வெட்டிக் கொலை செய்தான்.

கோவலன் கொலையுண்ட செய்தியினைக் கண்ணகி கேள்விப்பட்டதும், தலைவிரி கோலமாக சினத்துடன் பாண்டியன் அரண்மனைக்குச் சென்று, பாண்டியனுடன் வழக்குரைத்து தன் கணவன் கள்வன் அல்லன் என்று நிரூபித்தாள்.

தான் ஆராயாது செய்த செயலினால் மன்னன் வருந்தி உயிர் துறந்தான். இதனைக் கண்ட கோப்பெருந்தேவியும் 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என்று கூறி தானும் உயிர் துறந்தாள். இதனால் சினமடங்காத கண்ணகி தன் இடது கொங்கையை வலது கையால் திருகி எரிந்தாள். மதுரை நகரத்தை எரியுண்ணும் படிச் செய்தாள். பிறகு அங்கிருந்து மேற்கு நோக்கிச் சென்று சேரநாட்டிலுள்ள நெடுவேள் குன்றத்தில் நின்றாள். பதினான்கு நாள் பகல் கழிந்தபின் கோவலனுடன் விமானம் ஏறி தேவருலகம் புகுந்தாள்.

குன்றக்குறவர்கள் வேங்கை மரத்தினடியில் நின்ற கண்ணகி, கோவலனுடன் வானூர்தியில் ஏறிச் சென்றதைக் கண்டனர். அவளைத் தங்கள் குலத்தெய்வமாகிய வள்ளியாகவே கருதினர். இக்காட்சியினை, பேரியாற்றங்கரையில் மலைவளம் காண வந்திருந்த சேரன் செங்குட்டுவனிடம் எடுத்துரைத்தனர். அப்பொழுது சேரனுடன் இருந்த சாத்தனார், கண்ணகியின் வரலாற்றைக் கூற, சேர மன்னனின் மனைவி வேண்மாள், பத்தினித் தெய்வமாம் கண்ணகிக்கு கோயிலெழுப்ப வேண்டும் என்று கூறினாள். சேரனும், கண்ணகிக்கு இமயத்தினின்று கல்லெடுத்து, கங்கையில் நீராட்டிக் கனக விசயர் தலை மீதேற்றி, வஞ்சியில் கொண்டு வந்து, அவளுக்குக் கோயில் எடுத்து நடுகல் நட்டான். கண்ணகியின் தோழி தேவந்தி, அக்கோயிலுக்குப் பூசாரி ஆனாள். இது

சிலப்பதிகாரம் வழி நாம் அறிந்த கண்ணகி கதை. இக்கதை கேரளம், தமிழகம், இலங்கை முதலான பல பகுதிகளிலும் வழக்கிலிருந்து வருகின்றது. ஆனால் இளங்கோ எடுத்துரைத்த கதைபோல் அல்லாமல் பல திரிபுகளுடனும் வேறுபல புராணக்கதைகளைத் தன்னுள் உள்வாங்கிய நிலையிலும் வழங்கப்பட்டு வருகின்றது. குறிப்பாகக் கேரள நாட்டார் மரபில் கண்ணகி கதையானது பல்வேறு வடிவங்களாகத் திரிந்த நிலையில் வழங்கிவருகின்றது.

**விஷாரிக்காவில் கண்ணகி கதை**

கேரளத்தில் பந்தலாயினிக் கொல்லம் என்னுமிடத்திலுள்ள 'விஷாரிக்காவு' என்றறியப் படும் கோயில் ஒன்று உண்டு. அங்கு செட்டியார்களால் பாடப்படுகின்ற பாடலில் கண்ணகி கதை கூறப்படுகின்றது. தம்புரானுடைய (அரசன்) சிலம்பு ஒன்றைப் பருந்து திருடிக் கொண்டு போயிற்று. அச்சமயத்தில் விஷாரி (விஷம் இறக்குபவன்) ஒருவன் சிலம்பு விற்க வந்தான். இச்சிலம்பு பகவதியின் சிலம்பு என்று கூறப்படுகின்றது. அப்போது தம்பிரானுடைய நடை அடைத்திருந்தது. விளக்கு வைக்க வந்த வாணியன் விஷாரியைக் கொன்றுவிட்டான். அந்த வாணியன் மறுபிறப்பில் கோவலனாகப் பிறந்து ஊழ்வினையை அனுபவித்ததன் பலனாக கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டு இறந்தான். தம்புரானுடைய மனைவி கண்ணகியாகப் பிறந்தாள். அவளைக் கோவலன் தொடக்கூடாது என்று விலகியே இருந்தாள். அவளே பகவதி ஆனாள் என்று கூறப்படுகின்றது.

கோவலனின் முற்பிறப்புக் கதை மேற்கண்ட கதையில் பதிவாகியுள்ளது. சிலம்பைப் பருந்து எடுத்துச் சென்ற நிகழ்வை இக்கதை போன்றே காணப்படும் பஞ்ச தந்திரக் கதையுடன் ஒப்பிடலாம். பஞ்சதந்திரக் கதையில் வருகின்ற காக்கையை மாற்றிப்

பருந்து எனக் கூறியிருக்கலாம். பாம்புப் புற்றில் பருந்து சிலம்பைப் போட்டிருக்கலாம். அதை விஷாரி விற்க கொண்டு வந்திருக்கலாம். அதனைக் கண்ட வாணியன் கொன்றான் என்பதே இக்கதை கூறும் செய்தி. இதில் காற்சிலம்பினால் விஷாரி கொல்லப்பட்டான் என்பதில் மறைமுகமாக கண்ணகி கதை வழங்கப்படுவதனை அறியமுடிகிறது. சிலப்பதிகாரம் காட்டும் கோவலன், சங்கமன் என்னும் வணிகனைக் கொன்றான். நாட்டார் கதையில் வணிகன் விஷாரியைக் கொன்றான் என்று கதை மாற்றம் பெற்றுள்ளது.

***சிலம்பு வாணிபம்***

வடமலபாரில் ஸ்ரீகுறும்பபகவதியின் வழிபாட்டுச் சடங்கின் போது பாடப்பெறும் களம்பாட்டில் ‘சிலம்பு வாணிபம்’ முக்கிய பங்கு வகிக்கின்றது. கண்ணகி பொன்மகளாகவும், தேவியாகவும் இக்கதைப் பாடலில் சுட்டப்படுகின்றாள். தேவி தன் கணவனுடன் வடக்கும்சேர் வீட்டில் வாழ்ந்து வந்தாள். அவ்வீட்டில் படிப்படியாக வளமை குன்றி, வறுமை சூழ்ந்தது. இந்நிலையில் தன் பெற்றோர்களிடம் வாழ்ந்தபோதிருந்த செல்வச் செழிப்பினை எண்ணி வருந்துகின்றாள். அவள் தன் கணவனிடம் தன் திருச்சிலம்பினை விற்று வருமாறு கூறினாள். அதற்கு அவள் கணவன் மறுத்து,

**”நானோ வாணிகனுக்கு மகனாகப் பிறந்தவனல்ல**
**என்னை வணிககுலப்பெண் பெற்றதுமில்லை**
**எனக்கு வணிகத் தொழில் செய்து பழக்கமுமில்லை”**

(கிருஷ்ணன் மாஸ்டர். ஸ்ரீகுறும்ப சரித்திரம், சிலம்பு வாணிபம்,ப.117)

என்று இவ்வாறு கூறுகின்றான்.

இதைக் கேட்ட தேவி கோபமடைந்தாள். அதனால் தேவியின் கணவனும் சிலம்பு விற்பதற்காக மதுரைக்குச் செல்ல தயாராகின்றான். தனது பயணத்திற்குத் தேவையான

உடைகளைத் தருமாறு கேட்கின்றான். தேவியும் சிவனை வேண்டி தன் கணவனுக்கான உடைகளைப் பெற்றுக் கொடுத்தாள். தேவியின் கணவன் மதுரை நோக்கிப் பயணமானான். போகின்ற வழியில், தீய சகுனங்களைக் கண்டான். பாண்டிய நாட்டில் 'இட்டிநம்பி' என்னும் பொற்கொல்லனைச் சந்தித்து சிலம்புகளை விற்றுத்தருமாறு கூறினான். பொற்கொல்லனும் அதற்கு சம்மதித்தான். அவன் பாண்டியனின் அரண்மனைக்குச் சென்று 'இளவரசி பெருந்தோழியின்' சிலம்புகளைத் திருடிய கள்வனை நான் பிடித்து வைத்துள்ளேன் என்று மன்னனிடம் கூறினான். இதனை,

**"பாண்டிய ராஜனே**
**உங்கள் மகளாகிய 'பெருந்தோழி'க்காக**
**நான் செய்த நல்ல சிலம்பினை**
**திருடிய கள்வன் என் வீட்டு வாயிலில் உள்ளான்**
**என்னுடன் சேவர்களை அனுப்புங்கள்"**
(ஸ்ரீ குறும்பசரித்திரம்,சிலம்புவாணிபம்,கிருஷ்ணன்மாஸ்டர்,ப.136)

என்னும் மேற்கண்ட நாட்டார் பாடல் மூலம் பொற்கொல்லனின் சூழ்ச்சியால் தேவியின் கணவன் பொய்க்குற்றம் சாட்டப்பட்டான் என்று தெரிய வருகின்றது. இந்நிகழ்வு சிலப்பதிகாரத்தில் பொற்கொல்லனின் சூழ்ச்சியால் கோவலன் கள்வன் என குற்றம் சாட்டப்பட்டு, பாண்டிய மன்னனால் கொலை செய்யப்பட்டான் என்பதனோடு ஒத்துள்ளது.

தேவியின் கணவன் அரண்மனைக்கு அழைத்து வரப்பட்டான். பாண்டியனின் மகள் பெருந்தோழியிடம் பறிமுதல் செய்யப்பட்ட சிலம்பைக் காட்டி, அவளுடையதா என்று கேட்க, இச்சிலம்பு என்னைவிட உயர்ந்தவள் அணியத்தக்கது ஆகையால் இச்சிலம்பு என்னுடையவை அல்ல என்று கூறி மறுத்தாள். பெருந்தோழி கூறியதைக் கேட்ட `இட்டிநம்பி` எனும் பொற்கொல்லன், சிலம்பு விற்க வந்தவன் அழகானவனாக

இருப்பதால் அவன் அழகைக் கண்டு மயங்கிவிட்டாள் என்று கூறுகின்றான். மன்னனும் தன் மகள் மீது சினம் கொண்டு, மகளை வெட்டிக் கிணற்றில் இட்டுவிடுகின்றான். பின்னர் தச்சனை வரவழைத்து தேவியின் கணவனைக் கழுவில் ஏற்றிக் கொல்லுகின்றான். தேவி, கணவனுக்கு நிகழ்ந்ததைக் கனவில் காண்கிறாள். அதன் காரணத்தை `ஊர்வசி` என்னும் பெண்ணிடம் குறி கேட்கின்றாள். அவளும் தேவியின் கணவன் கொல்லப்பட்டதனைக் குறிபார்த்துச் சொல்லுகின்றாள். தேவியும் தன் கணவனைத் தேடிச் சென்றாள். அப்பொழுது பலா, மாமரம், புறா, பிராமணப் பெண், தேவகன்னிகை, மீனவர் ஆகியோரிடம் தன் கணவனைப் பற்றி விசாரிக்கின்றாள். அவளுக்கு கருணையுடன் பதிலுரைத்த பலா, புறா, தேவகன்னிகை ஆகியோருக்கு அருள் பாலித்தாள். அத்துடன் தன்னிடம் கருணை காட்டாத மாமரம், பிராமணப்பெண், மீனவன் ஆகியோரை சபிக்கின்றாள். இறுதியில் தேவி பாண்டிய நாட்டை அடைந்தாள். அங்கு கணவனின் சடலத்தைக் கண்டு, தன் மாய சக்தியால் கணவனை உயிர்ப்பிக்கின்றாள். பின்னர் கணவன் கூறியதன்படி தேவி, இட்டிநம்பியையும், பிற பொற்கொல்லர்களையும் கொன்றாள். கழுமரம் செய்த தச்சனையும் கொன்றாள். பாண்டிய மன்னனையும் அவனது போர் வீரர்களையும் கொன்றாள். கிணற்றில் தள்ளப்பட்ட பெருந்தோழியைக் காப்பாற்றினாள்.

தேவி வடக்கும்சேர் இல்லத்திற்குச் சென்று, பெருந்தோழியை தன் வலது பக்கத்தில் இளையவளாக இருத்தினாள். கணவனைத் தன் இருப்பிடத்திற்கு நேராக குடியமர்த்தினாள். தன் சிலம்பினை பூசை அறையில் வைத்தாள். பொற்கட்டிலில் கர்ணகி தெய்வமாகின்றாள் என்பதுடன் கதை முடிவடைகின்றது. இக்கதையில் குறிப்பிட்டுள்ள ‘இட்டிநம்பி’ என்னும் பொற்கொல்லன், ஊர்வசி என்னும் குறிசொல்லும் பெண், கழுமரம்

செய்த தச்சன் போன்றோர் சிலப்பதிகாரக் கதையில் சுட்டப்படவில்லை. பாண்டியனின் மகள் பெருந்தேவியின் சிலம்பு என்று இக்கதையில் குறிப்பிட்டுள்ளது சிலப்பதிகாரத்தினின்றும் வேறுபட்டதாகவே காணப்படுகின்றது.

**சூதரங்கு**

சூதரங்கு என்பது வடமலபார் பகுதியில் வழங்கப்படும் நாட்டார் கதைப் பாடலாகும். இக்கதை சி.எம்.எஸ்.சந்தேராவின் ‘கண்ணகியும் சீர்ம்பக்காவும்’ என்னும் நூலில் காணப்படுகின்றது.

கண்ணகியைத் 'தேவி' என்றும் கோவலனைத் 'தேவியின் கணவன்' என்றும் இக்கதையில் குறிப்பிடுகின்றனர். தேவி, தன் கணவனுக்காக, தென் கொல்லத்தில் சூதாட்டம் நடத்துகின்ற பெண்களின் வீட்டிற்குச் சென்று சூதாடி அவர்களைத் தோற்கடித்து கணவன் இழந்த நகைகளை மீட்டித் திரும்பி வருகின்றாள். அத்தேவியை 'ஸ்ரீ குறும்பா' என்றும் 'பொன்மகள்' என்றும் கேரளநாட்டார் அழைக்கின்றனர்.

பரமசிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றியவள் தேவி என்று கதையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவியின் கணவனுக்கு தென் கொல்லத்தில் நிறைய நண்பர்கள் உள்ளனர். அவர்களில் ஒருவன் பெண்களால் சூதாட்டம் நடத்தப்படுகின்ற வீட்டில் அடிமையாக்கப்பட்டிருந்தான். தேவியின் கணவனும் அவனை (நண்பனை) விடுவிக்க அருள்புரிய வேண்டுமென்று தேவியிடம் வேண்டினான். அதற்கிசைந்த தேவியும் கணவனை சூதரங்க வீட்டிற்கு அனுப்பிவைக்கின்றாள். தேவியின் கணவனும் சூதரங்க வீட்டினை அடைந்தான். அங்குள்ள பெண்களிடம் தன் நண்பனைத் தன்னுடன் அனுப்பும்படி கேட்டான். அதற்கு அப்பெண்கள் உன் நண்பனை உன்னிடம் அனுப்பவேண்டுமென்றால், நீ அணிந்துள்ள பொன் நகைகளைத் தரவேண்டும் என்று

கூறினர். தேவியின் கணவனும் அதற்கு இசைந்து, தன் நண்பனை மீட்பதற்காக தன் நகைகளை கழற்றிக் கொடுத்தான். தன் நண்பனையும் அழைத்து வடக்கும்சேர் இல்லத்தை அடைந்தான். நிகழ்ந்தவற்றை தேவி தன் கணவனிடம் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

தேவி ஒரு பிச்சைக்காரி வேடம் புனைந்து, சூதாட்டப் பெண்கள் இருக்கும் தென் கொல்லத்தை அடைந்தாள். அவர்களுடன் ஆற்றலுடன் சூதாடி வெற்றிபெற்று, கணவனின் நகைகளையும் அப்பெண்களின் செல்வத்தையும் எடுத்துக் கொண்டாள். அவர்களின் இல்லத்தையும் அழித்தாள். பிறகு தன் இல்லத்தை அடைந்து தன் கணவனிடம் நகைகளைக் கொடுக்கின்றாள் என்பதுடன் கதை முடிவடைகின்றது.

இக்கதை சிலப்பதிகாரக் கதையுடன் தொடர்பில்லை என்றாலும், பரத்தையரின் செயலைக் கண்டிக்கும் விதமாக அமைந்துள்ளது. கதையோட்டத்தில் பொன்மகள் என்று குறிப்பிடப்படுவதிலிருந்து இக்கதையைக் கண்ணகி கதை என்றே கருதலாம்.

**நல்லம்மப்பாட்டு**

'நல்லம்மப்பாட்டு' கேரளா பாலக்காடு மாவட்டம் சித்தூர் வட்டத்தில் வழங்கி வருகின்றது. இப்பாட்டில் கோவலன் கண்ணகி கதை எடுத்துரைக்கப்படுகின்றது. தென்கொல்லத்தில் வாழ்ந்து வந்தவள் காளி, வடகொல்லத்தில் வாழ்ந்து வந்தவன் கோவிலன். அவ்வேளையில் கரிமலையில் வாழுகின்ற ஐயப்பன் காளியைப் பெண்பார்க்க வந்தார். அதனை அறிந்த காளி வீட்டிற்குள் ஒளிந்திருந்தாள். அத்திருமணத்தில் காளிக்கு விருப்பமில்லை. அதன் பிறகு கோவிலனும் பெண் பார்க்க வந்தான். கோவிலனைக் கண்டதும் காளி அவனைத் திருமணம் செய்ய வேண்டும் என்று மனதில் எண்ணினாள். காளியின் பெற்றோர் திருமணப் பொருத்தம் பார்ப்பதற்கு சோதிடனை வரவழைத்தனர். காளி சோதிடனுக்கு கையூட்டு கொடுத்து, திருமணப் பொருத்தம் இல்லாவிடினும்

பொருத்தம் இருப்பதாகக் கூறவேண்டும் என்றாள். சோதிடனும் அவ்வாறே செய்தான். அதன்படி கோவிலனுக்கும் காளிக்கும் நல்லநாள் பார்த்து சுபமுகூர்த்தத்தில் திருமணம் முடித்தனர்.

திருமணம் முடிந்து காளி, கோவிலனுடன் புறப்பட்டுச் செல்லும்பொழுது, பெற்றோர் நிறைய வரதட்சணையினைக் கொடுத்தனர். ஏதோ காரணத்தால் காளியும் கோபம் கொண்டு, அட்டகாசம் செய்கின்றாள். பெற்றோரும் இதைக் கண்டு அஞ்சினர்.

காளியிடம், பெற்றோர்கள் நீ எப்பொழுது திரும்பி வருவாய் எனக் கேட்டதற்கு பதிலாக கீரியும், பாம்பும் ஒன்றாய் வாழும் காலம், கோழியும் குள்ளநரியும் சேர்ந்து வாழும் காலத்தில் நான் வருவேன் என்று கூறி, தனக்கு வரதட்சணையாகக் கிடைத்தவற்றை எல்லாம் கப்பலில் ஏற்றிக்கொண்டு வடகொல்லத்தை அடைந்தாள். அங்கு கோவிலனும், தேவியும், தேவியின் பரிவாரங்களுடன் வாழ்ந்து வந்தனர்.

தெண்டனும், முண்டனும், கண்டாகர்ணனும், வட்டத்தலச்சி, வசூரிமாலா போன்ற காளியின் பரிவாரங்கள் காளிக்கு எப்பொழுதும் காவலாக இருந்தனர். அப்பொழுது ஒரு நாள் கோவிலன் காளி உறங்குகின்ற அறைக்கு வந்தான். அங்கு காவல் புரியும் பரிவாரங்களை வெளியில் செல்லுமாறு கூறினான். கண் விழித்த காளி கோவிலனை பூப்பின் காரணம் கூறி வெளியேறுமாறு கூறினர். அன்று முதல் அவர்கள் விலகி வாழ்ந்தனர்.

கிழக்கு கொல்லத்தில் கோவிலனின் நண்பன் ஒருவன் இருந்தான். அவன் கோவிலனையும், காளியையும் விருந்துண்ண அழைத்தான். இருவரும் கிழக்கு கொல்லம் சென்றனர். அங்கு கோவிலனின் நண்பன், காளியிடம் தீய எண்ணத்துடன் நடந்து கொள்ள முயல்கின்றான். காளியும் அவனுடைய தீய எண்ணத்தைப் புரிந்து கொண்டு,

அவனிடம் ஒரு உபாயம் கூறுகின்றாள். என் கணவன் சிலம்பு விற்கப் பாண்டியநாடு செல்வார். அப்பொழுது நான் உன் விருப்பத்தை நிறைவேற்றுகின்றேன் என்று கூறினாள்.

சிறிது காலம் சென்றதும் கண்ணகி வறுமையால் வாடினாள். தன் காற்சிலம்பை கோவிலனிடம் கொடுத்து கொண்டு போய் விற்று வருமாறு கூறினாள். கோவிலன் சிலம்பு விற்க புறப்படுவதற்கு முன் தேவி உணவு பரிமாறுகின்றாள். அவ்வுணவில் கல், நெல், தலைமுடி, கரி, பூச்சிகள் கிடந்தன. அதனை உண்ணாமல் கோவலன், எழுந்து சிலம்பு விற்க புறப்பட்டான். பாண்டிய நாட்டை அடைந்தான். அங்கு பொற்கொல்லர் வாழும் தெருவில் சிலம்பினை விற்கச் சென்றான். அங்குள்ள ஒரு பொற்கொல்லன் அச்சிலம்பைக் கண்டான். பாண்டிய மன்னனுக்குத் தகுந்த காற்சிலம்பு என்று கூறி கோவிலனையும் அழைத்து பாண்டியன் அரண்மனைக்குச் சென்றான்.

பாண்டிமா தேவியின் காற்சிலம்பினைத் திருடிய கள்வன் இங்கு வந்துள்ளான். இவனுக்குத் தகுந்த தண்டனை அளிக்க வேண்டும் என்று பாண்டிய மன்னனிடம் பொற்கொல்லன் கூறினான்.

**'சிலம்புகள் செய்து வைத்தஅன்றே**
**திருட்டுப் போய்விட்டது**
**அன்று முதல் இன்று வரை**
**உணவும் உறக்கமும் இல்லை எனக்கு**
**மன்னவனே'**

என்ற நாட்டார் பாடலில் பொற்கொல்லன் சிலம்பு திருடிய நாள் முதல் உறக்கமும், உணவும் இன்றி தவிப்பதனை அறிய முடிகிறது.

பாண்டிய மன்னனும் கோவிலனை கழுமரத்தில் ஏற்றிக் கொல்ல ஆணையிட்டான். கோவிலனும் கொல்லப்பட்டான். இறந்த கோவிலனின் சங்கு, ஈரல் ஆகிய உடல் பாகங்களை கருடன் எடுத்துக்கொண்டு வடகொல்லத்தில் கர்ணகி வாழுகின்ற

திருமுற்றத்தில் இட்டது. இதனைக் கண்ட காளி, கோவிலனுக்கு ஏதோ நேர்ந்தது எனக் கூறி தண்டன், முண்டன், பூதகணங்கள் ஆகிய தன் பரிவாரங்களுடன் தன் கணவனைத் தேடிச் சென்றாள்.

காளி பாண்டியனின் அரண்மனையை அடைந்தாள். கோவிலனின் இறந்த உடலை காளி வாளால் தோண்டி எடுத்து, சிவபெருமானை வேண்டி உயிர்ப்பித்தாள். கோவிலனும் நடந்தவற்றைக் கூறினான். காளியும் போரிட்டு பாண்டிய நாட்டினை அழித்தாள். கொடுங்கல்லூருக்குச் சென்று அமர்ந்தாள். அச்சமயம் கிழக்கு கொல்லத்திலுள்ள கோவிலனின் நண்பன் கொடுங்கல்லூர் வந்தான். காளி கோபத்துடன் அவனை மேலே தூக்கி நிலத்தில் குத்தி உட்கார வைத்தாள். கோவிலனுக்கு தனியாக ஒரு கோயில் அமைத்து, காளியும் வடக்கு திசை நோக்கிக் கொடுங்கல்லூரில் கோயில் கொண்டாள். என்று நல்லம்மா கதைப்பாடல் கண்ணகி கோவலன் கதையைக் கூறுகின்றது. இக்கதையில் கண்ணகி என்னும் பெயருக்கு பதிலாக காளி, தேவி என்ற பெயர்கள் காணப்படுகிறது. கோவலனைக் 'கோவிலன்' என்று அழைக்கின்றனர். காளி கோவிலனுக்குத் திருமணம் நடைபெற்றதாகக் கூறினாலும் கண்ணகி கன்னியாகவே சுட்டப்படுகின்றாள். ஆனால் இளங்கோவடிகள் தம் காப்பியத்தில்

சிலப்பதிகாரம் மனையறம் படுத்த காதையில்,

**"வண்டு வாய் திறப்ப நெடுநிலா விரிந்த**
**வெண்தோட்டு மல்லிகை விரியல் மாலையொடு**
**கழுநீர்ப் பிணையல் முழுநெறி பிறழத்**
**தாரும் மாலையும் மயங்கிக் கையற்றுத்**
**தீராக் காதலின் திருமுக நோக்கிக்"**

( சிலப், மனையறம்படுத்த காதை, பா 32-36)

என்று கூறிய நிலையில் கோவலனும், கண்ணகியும் தாம்பத்ய வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்று கூறியுள்ளது.

மேற்கண்ட கதையாடலில் கதை நிகழ்வுகள் கேரளத்திலும், பாண்டிய நாட்டிலும் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது. கண்ணகியே சிலம்பை விற்க கோவலனை அனுப்புவதாக கதை நிகழ்வு அமைந்துள்ளது. கோவலனும், கண்ணகியும் கொடுங்கல்லூரில் கோயில் கொண்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கோவலனின் நண்பன் கிழக்கு கொல்லத்தைச் சேர்ந்தவன், அவன் கண்ணகியிடம் தகாத முறையில் நடந்துகொள்ள முயற்சித்தான் என்பது சிலம்பில் காணப்படாத ஒன்றாகும்.

**பகவதிப்பாட்டு**

கேரளா பாலக்காடு மாவட்டத்திலுள்ள திருப்பாளூர் என்னும் பகுதியில், 'பகவதிப்பாட்டு' பாடப்பட்டு வருகின்றது. கார்த்திகை முப்பதாம் தேதி முதல் மார்கழி மூன்றாம் தேதி வரை நடைபெறும் 'களம் பாட்டு' விழாவின் போது பகவதிப்பாட்டு பாடப்பெறுகின்றது.

பகவதிப் பாட்டு மூன்று நாட்கள் இரவு பகலாகப் பாடப்பெறும். இதனை ஏழு பகுதிகளாகப் பிரித்துப் பாடுகிறார்கள். பொன்மகன்பிறவி, மாலவெக்கல் (திருமணம்) கப்பல் வாணிபம், விருந்துண்ணல், சிலம்பு வாணிபம், கொன்று தோற்றல், மறுபிறவியும் சத்ருசம்காரமும் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய அக்கதைப் பகுதி கீழ்வருமாறு:

**பொன்மகன்பிறவி**

தெற்கும் கொல்லம், வடக்கும் கொல்லம் என்ற இரண்டு பட்டணங்களில் மிகப்பெருஞ் செல்வந்தர்களான வணிக குலத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்து வந்தனர். வடக்கும் கொல்லத்திலுள்ள நல்லச்சன் என்பவருக்கு பிள்ளைப்பேறு இல்லாததால் மன

வருத்தத்துடன் இருந்தார். அதனால் பதினாறு திருமணங்களை நடத்தி வைத்தார், தான தர்மங்கள் பல செய்தார். பலன் அளிக்காததால், பிரம்மா விஷ்ணு சிவன் ஆகிய மூவருக்கும் பொன்னும், பல பொருட்களும் காணிக்கையாகக் கொடுத்தார். அதன் பலனாக, பதினாறு வயது வரையான ஆயுளும், நற்குணங்களும் நிறைந்த மகன் கிடைப்பான் என்ற வரம் கிடைத்தது. அவர் மந்திரம் ஜெபித்த பழங்களை தன் மனைவியிடம் கொடுத்தார். நல்லச்சனின் மனைவியும் கர்ப்பம் அடைந்தாள்.

**மாலவெக்கல்**

வடக்கும் கொல்லத்து நல்லச்சனுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு பொன்மகன் என்று பெயர் சூட்டினர். அவன் ஏழாம் வயதில் கல்வி கற்கத் தொடங்கினான். குறைந்த காலங்களில் அனைத்து கலைகளையும் கற்றான். அதன் பிறகு தன் குலத்தொழிலாகிய வாணிபத்தில் ஈடுபட்டான். சீரற்ற முறையிலிருந்த ‘புத்தன் அங்காடி நெடுந்தெருவினை’ச் சீரமைத்து வாணிபம் செய்தான். வாணிபத்தில் நல்ல வளர்ச்சி அடைந்தான். அச்சமயத்தில் எடத்தெருவில் வசிக்கின்ற விலைமகளிர் பொன்மகனைத் தன்வயப்படுத்தி, அவனது அளவற்ற செல்வத்தினைப் பறித்தனர். தக்க சமயத்தில் பொன்மகனின் தாயாகிய நல்லம்மா பொன்மகனை விலைமகளிடமிருந்து மீட்டாள். பொன்மகனுக்கு திருமணம் செய்விக்கப் பெற்றோர் தீர்மானிக்கின்றனர்.

நல்லச்சன் தன் மகன் பொன்மகனுக்காக பெண் தேடி, நாடும், நகரமும் அலைந்து தெக்கும் (தெற்கு) கொல்லத்திற்கு வந்தார். தெக்கும் கொல்லத்திலுள்ள நல்லச்சனின் வளர்ப்பு மகளாகிய தேவியின் சிறப்புகளை அறிந்து, தன் மகன் பொன்மகனுக்குத் திருமணம் நிச்சயித்தனர். திருமணம் ஆடம்பரமாக நடந்தேறியது. மலைவழியாகப் பொன்மகனும், கடல் வழியாக தேவியும் வடக்கும் கொல்லத்திற்கு வந்தனர். கன்னிப்

பெண்ணைத் திருமணம் செய்தால் கன்னிக் கப்பல் ஓட்டவேண்டும் என்றும், கப்பல் ஓட்டி வந்தால் விருந்துண்ணச் செல்லவேண்டும் என்றும், விருந்துண்டபின் சிலம்பு விற்கப் போக வேண்டும், சிலம்பு விற்றுத் திரும்பினால், ஒரு கோவிலில் இருந்து வழிபட்டால் மானுடப் பிறவியிலிருந்து விடுதலை பெறலாம் என்றும் தேவி கணவனிடம் கூறினாள்.

பின்னாளில் நடக்கப் போகின்ற நிகழ்வினை பராசக்தியாகிய தேவி, பொன்மகனிடம் முன்னரே அறிவுறுத்துவதை இங்கு உணரலாம்.

**கப்பல் வாணிபம்**

மிகப்பெருஞ் செல்வனான பொன்மகன் கப்பல் வாணிபத்திற்காகப் புறப்பட்டான். அச்சமயம் கருவேடகர் என்ற கொள்ளைக்காரர்கள் பொன்மகனின் கப்பலை மூழ்கடித்து, கப்பலிலுள்ள செல்வங்களைக் கவர்ந்தனர். கடற் கொள்ளையரின் தாக்குதலால் மரணத்தருவாயில் இருக்கும் பொன்மகனை தேவி காப்பாற்றினாள். இவ்வாறு தங்கள் செல்வத்தினை இழந்தனர்.

**விருந்துண்ணல்**

பொன்மகனும் தேவியும், பொன்மகனின் இளமைக்கால நண்பன் வாழ்கின்ற கிழக்கும் கொல்லத்தில் விருந்துண்ணச் சென்றனர். அங்கு தேவியின் அழகில் மயங்கிய நண்பன், தேவியிடம் தகாத முறையில் நடந்து கொள்ள முயற்சி செய்தான். சினமடைந்த தேவி நண்பனைக் கொன்றாள். பொன்மகனின் வேண்டுதலால் நண்பனை மீண்டும் உயிர்ப்பிக்கின்றாள்.

**சிலம்பு வாணிபம்**

கிழக்கும் கொல்லத்திலிருந்து வடக்கும் கொல்லத்தை வந்தடைந்த தேவி, பொன்மகனுக்குத் தெரியாமல் அனைத்து அணிகலன்களையும் ஒளித்து வைத்தாள்.

அப்பொழுது தாமதமாக வடக்கும் கொல்லத்திற்கு வந்த பொன்மகன் உண்ணவும், உடுக்கவும், அணியவும் ஒன்றுமில்லாமல் தவிக்கின்ற மனைவியைக் காண்கின்றான். தேவியின் கட்டாயத்திற்கு இணங்கி, பொன்மகன் சிலம்பு விற்கப் புறப்படுகின்றான். நாடும் நகரும் கடந்து பாண்டிய நாட்டை அடைந்தான். அங்குள்ள கோவிக்கல் தட்டானிடம் (பொற்கொல்லன்) சிலம்பு விற்றுத் தருமாறு கூறுகின்றான். பாண்டியனின் அமைச்சனான கோவிக்கல் தட்டான் பொன்மகனிடம் ஆசை வார்த்தை கூறி, மதுரைக்கு அழைத்துச் சென்றான். முன்பு ஒருநாள் பாண்டிமாதேவியின் காற்சிலம்பைத் திருடிய கோவிக்கல் தட்டான் அப்பழியினை பொன்மகன் மீது சுமத்தினான். பாண்டியன் அரண்மனையில், பொன்மகன் நான் கள்வன் அல்ல என்று கூறினாலும் சந்தர்ப்ப சூழ்நிலை அவனைக் குற்றவாளியாக்கியது. பொன்மகனைக் கழுமரமேற்றி மழுவால் எறிந்து கொன்றனர்.

**கொன்றுதோற்றுதல்**

சிலம்பு விற்கச் சென்ற பொன்மகன் திரும்பி வராத காரணத்தால் தேவி தன் கணவனைத் தேடிச் சென்றாள். தேவி கொலைக்களத்தை அடைந்து பொன்மகன் கொல்லப்பட்டு கிடப்பதைக் கண்டாள். தன் தெய்வீக சக்தியால் தோற்றுதல் என்னும் செயலால் கணவனை மீண்டும் உயிர்ப்பிக்கின்றாள்.

தேவி தன் கணவனைக் கொன்றவர்களைப் பழிவாங்குவேன் என்று சபதம் செய்தாள். தண்டன், முண்டன், கண்டாகர்ணன், அச்சுமேதாளன் போன்ற வீரர்களுடன் சென்று, பாண்டிய மன்னன், கோவிக்கல் தட்டான், பாண்டிய மன்னனின் நண்பனாகிய தாருகாசுரன் ஆகியோரைக் கொன்று தேவி பழிதீர்க்கின்றாள். மதுரையிலிருந்து மலையாள நாட்டிற்கு வந்த தேவி, கணவன் பொன்மகனையும் அழைத்து வந்து இன்றைய

கொடுங்கல்லூர்க் காவில் குடியமர்த்தினாள். தானும் அங்கே குடிகொண்டாள். இங்ஙனம் தன் அவதார நோக்கம் நிறைவேறியதும் தேவி தேவலோகத்திற்குச் சென்றாள். என்பதுடன் பகவதிப் பாட்டு நிறைவடைகின்றது.

இக்கதையில் தேவியும், பொன்மகனும் கண்ணகி, கோவலன் என்னும் கதைமாந்தர்களுக்கு இணையாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். பொன்மகன் பாண்டிய நாட்டில் சிலம்பு விற்கச் சென்றதாகவும், அங்கு வைத்து கோவிக்கல் தட்டானின் சூழ்ச்சியால் பண்டிய மன்னன் பொன்மகனை கழுமரத்திலேற்றிக் கொன்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கதையின் தொடக்கம், கேரளத்தில் நடந்ததாகக் கூறப்பட்டுள்ளது. பொன்மகன் விலைமகளிடம் சென்று செல்வத்தை இழந்ததாகக் கூறுதல் சிலப்பதிகாரத்தில் கோவலன் கணிகையர் குலத்து மாதவியிடம் சென்று அளவற்ற செல்வத்தைத் தொலைத்தான் என்பதற்கு ஒப்பாகிறது. திருமணத்திற்கு முன்னரே கோவிலன் பரத்தையரை நாடிச் சென்ற நிகழ்வு இளங்கோ படைத்தளித்த கதையினின்றும் மாறுபடுகின்றது.

**பாலக்காட்டு கண்ணகி**

கேரளாவில் பாலக்காடு வட்டாரத்தில் ‘முத்தான்மார்’ என்றறியப்படும் தமிழ்ச் செட்டியார் இனத்தார் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் சோழநாட்டுப் பகுதியில் இருந்து குடி பெயர்ந்து வந்த இவ்வினத்தவருக்கு கண்ணகி குல தெய்வமாக விளங்குகின்றாள். அவர்கள் வாழ்ந்து வரும் பாலக்காடு நகரில் மூன்று கண்ணகி கோயில்கள் காணப்படுகின்றன. கண்ணகி வழிபாடு குறித்து நிலவி வரும் கதை பின்வருமாறு,பாண்டிய மன்னனுக்கு நீண்ட நாட்களாக குழந்தைச் செல்வம்இல்லாமல் இருந்தது அதனால் வழிபாடுகள் பல செய்ததன் பலனாக ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தையின் எதிர்காலத்தை அறிய ஒரு சோதிடனை வரவழைத்தார். அவரும் குழந்தை

பிறந்த நேரத்தை கணித்துப் பார்த்த நிலையில் அக்குழந்தையால் மன்னனுக்கும் பாண்டியநாட்டிற்கும் அழிவு வரும் என்று கூறினார். ஆதலால் குழந்தையை கொன்று விடுவதே நல்லது என்றார். ஆனால் மன்னனோ அக்குழந்தையைக் கொல்லாது அடர்ந்த காட்டிற்கு எடுத்துச் சென்று ஒரு பெட்டியில் வைத்து விட்டு வந்து விட்டார். சிறிது நேரத்தில் அவ்வழியே சென்ற ஒரு வணிகர் அப்பெட்டியைத் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றார். பெட்டியில் ஒரு பெண் குழந்தை இருப்பதைக் கண்டார். அதனை அன்புடன் வளர்த்து வந்தார். அப்பெண் குழந்தை திருமண வயதை அடைந்ததும் கோவலனுக்கு திருமணம் செய்து கொடுத்தார். இருவரும் பூம்புகாரில் இல்லறம் நடத்தி வாழ்ந்து வந்தனர். அச்சமயத்தில் மாதவி என்பவள் கோவலனை, தன் அழகால் மயக்கி சொத்துக்களை அபகரித்து அவனைப் புறக்கணித்தாள். அனைத்து செல்வங்களையும் இழந்த கோவலன் பூம்புகாரில் வாழ விருப்பம் இன்றி தன் மனைவி கண்ணகியை அழைத்துக்கொண்டு மதுரைக்குச் சென்றான். அங்கு ஒரு சிலம்பினை விற்று வாணிபம் செய்து வாழலாம் என்று எண்ணினான்.

கோவலன் மதுரைத் தெருவில் ஒரு பொற்கொல்லனைக் கண்டு தன் கையில் உள்ள சிலம்பினை விற்றுத் தருமாறு கூறுகின்றான். அச்சிலம்பினைக் கண்ட பொற்கொல்லன் நாளை வந்தால் சிலம்பிற்கான விலையைத் தருவேன் என்று கூறினான். கோவலனும் அவ்வாறே செய்ய பொற்கொல்லன் சிலம்பினை வாங்கி பாண்டிய மன்னனிடம் காட்டினான். பாண்டிமா தேவியின் சிலம்பு திருடிய கள்வன் என்னிடம் உள்ளான் என்று கூறினான். அதைக் கேட்ட மன்னனும் தீர விசாரிக்காமல் கோவலனை சிறை செய்யுமாறு கூறினார்.கோவலன் கொல்லப்பட்டான். நிகழ்ந்ததை அறிந்த கண்ணகி பாண்டியனின் அரண்மனையை அடைந்தாள். தன்னுடைய காற்சிலம்பு ரத்தினங்களால் ஆனது என்று கூறினாள். அதைக் கேட்ட பாண்டியன் தன் தவறை

உணர்ந்தான். கண்ணகியிடம் பொறுத்தருளுமாறு வேண்டினார். சினமடைந்த கண்ணகி தன் பத்தினி தன்மையால் மதுரையை தீக்கிரையாக்கினாள். மன்னன் மடிந்தான். கண்ணகி மூத்தான்மாருடன் மங்களாபுரம் வழி கேரளத்தில் குடி கொண்டாள் என்று கதை முடிவடைகின்றது.

பாலக்காட்டிலுள்ள மூத்தான்மார் கண்ணகி மரபில் வந்தவர்கள் என்று நம்புகின்றனர். கண்ணகி பாண்டியன் மகளாகப் பிறந்து ஒரு வணிகரின் வளர்ப்பு மகளாக வளர்ந்து வந்ததாகக் கதை மாற்றம் பெற்றுள்ளது.

**தாருகவதம் பாட்டு**

தென் மலபாரில் மண்ணான் இனத்தார் பாடிவருகின்ற தாருகவதம் பாட்டில் தாருகன் கதையுடன் கர்ணகி கதையும் இடம்பெற்றுள்ளது. தாருகாசுரன் முனிவர்களை பலவாறு துன்புறுத்தி வந்தான். முனிவர்கள் சிவபெருமானிடம் தாருகாசுரனால் தாங்கள் அனுபவிக்கின்ற துன்பத்தினைக் கூறினார்கள். பன்னிரெண்டு வருடத்திற்குள் தாருகனைக் கொன்று அவன் தொல்லையிலிருந்து விடுவிப்பேன் என்று கூறினார். ஏழாம் நாள் சிவனின் திருநெற்றியிலிருந்து ஓர் அழகான பெண் குழந்தை தோன்றியது. அக்குழந்தையைத் தங்க மஞ்சத்தில் கிடத்தி ‘அதிர்ஷமுள்ள மகளே, நீ வளர்ந்து தாருகனைக் கொன்று வருக’ என்று வரம் கொடுத்து கடலில் செலுத்தினர். கடலில் இருந்து சங்கெடுக்கும் மீனவர்கள் அத்தங்க மஞ்சத்தைக் கண்டனர். மீனவர் தலைவன் அக்குழந்தையை வீட்டிற்குக் கொண்டு வந்து வளர்த்தினார். அந்நாள் முதல் அவர் குடும்பம் அழியத் தொடங்கியது. அதனால் மீனவர் தலைவன் அக்குழந்தையை மீண்டும் தங்க மஞ்சத்தில் கிடத்தி கடலிலேயே விட்டுவிட்டார். அது கொல்லம் கடற்கரையை அடைந்தது.

அந்நாளிலே மக்கட் செல்வமின்றி மனவருத்தத்துடன் இருந்த கொல்லத்து அரசன் அக்குழந்தையை எடுத்து வளர்த்தார். அப்பெண் குழந்தை பதினாறு நாட்களில் பதினாறு வயதுப் பெண்ணாக வளர்ந்தாள். அவளை க்ஷேத்ரபாலகனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார். அவ்வேளையில் அவர்களுக்கு வறுமை நேரிட்டது. அதனால் க்ஷேத்ரபாலன் தேவியின் சிலம்பினை விற்பதற்காக பாண்டிய நாட்டிற்குச் சென்றார். பாண்டிய மன்னன் க்ஷேத்ரபாலனைக் கொன்று அச்சிலம்பை தனதாக்கிக் கொண்டார்.

இதனை அறிந்த தேவி பாண்டிய மன்னனைக் கொன்று பழிதீர்த்தாள். திரும்பி வரும் வழியில் தாருகனின் கொடுஞ்செயல்களை மக்களிடமிருந்து அறிந்துகொண்டாள். தேவி நேரடியாக தாருகனின் கோட்டைக்குச் சென்றாள். தாருகனைப் போருக்கு அழைத்தாள். இருவருக்கும் கடும்போர் நடந்தது. இறுதியில் தேவி தாருகனை கழுத்தறுத்து கொன்றாள். குடல் மாலையைக் கழுத்திலிட்டு கைலாயத்தை அடைந்து, சிவபெருமானின் முன் நின்று வணங்கினாள். இவ்வாறு தாருகனை அழிப்பதற்காக நெற்றிக் கண்ணில் தோன்றிய தேவி சிவனுடன் ஐக்கியமானாள் என்று தாருகவதம் கதை கூறுகின்றது.

சிலப்பதிகாரத்தில், வழக்குரை காதையில் வாயில் காவலன் சீற்றத்துடன் வாயிலை அடைந்த கண்ணகியின் வரவினை அரசனுக்கு அறிவிக்கின்ற பொழுது ‘தாருகன் பேருரங் கிழித்த பெண்ணும் அல்லள்’ (சிலப், ,வழக்குரைக்காதை, பா . 40) என்று கூறுகின்றான்.

தாருகனை அழித்த துர்க்கையுடன், கண்ணகி தொடர்புபடுத்தி பேசப்பட்டுள்ளாள். கேரள நாட்டார் பாடலில் தாருகனை அழித்த தேவி கண்ணகி என்று மறைமுகமாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் தேவியின் கணவன் சிலம்பு விற்க மதுரைக்குச் செல்லுதலும், அங்கு பாண்டிய மன்னனால் அவன் கொல்லப்படுதலும் கோவலன், கண்ணகியின்

கதையாகவே கொள்ளலாம். தேவி பாண்டிய மன்னனைக் கொல்லுதல் சிலப்பதிகாரக் கதையிலிருந்து முற்றிலும் வேறானது.

கேரள நாட்டார் கதையாடலில் காளி தாருகனைக் கொன்றழித்த கதையும், சிலப்பதிகாரக் கண்ணகி கதையும் இரண்டறக் கலந்த நிலையில் மேற்கண்டவாறான ஒரு புதிய கதையாடல் சூழல் உருவாகியுள்ளது. அந்நிலையில் கண்ணகி கோவலனின் பெயர்கள் மாற்றம் பெறுகின்றன. சிலப்பதிகாரம் படைத்துக்காட்டிய பொற்கொல்லன் என்னும் பாத்திரம் கேரள நாட்டார் கதையில் இடம்பெறாத நிலையில் பாண்டிய மன்னனே சேத்திரபாலனைக் கொல்வதற்குத் துணிவதாக கதை மாற்றம் பெறுகின்றது. பாண்டிய நாட்டுக்கும் சேர நாட்டுக்கும் இடையிலான பகை உணர்வுகள் மேலோங்கியிருந்த காலத்தில் கேரள நாட்டார் பாடலில் இத்தகைய மாற்றங்கள் உருவாகியிருக்க வேண்டும் என்று கருதலாம்.

**மணிமங்கத்தோற்றம்**

கண்ணகி கதையை காளியுடன் தொடர்புபடுத்துகின்ற ஒரு கதைப்பாடல் 'மணிமங்கத்தோற்றம்'. இக்கதைப் பாடல் மத்திய திருவிதாங்கூர் பகுதிகளில் பாடப்பட்டு வருகின்றது. கண்ணகியை ‘மணிமங்கை’ என்றும் கோவலனை 'பாலகன்' என்றும் குறிப்பிட்டுள்ளது. மணிமங்கை திருமணம் முடிந்து தன் கணவன் பாலகனுடன் திருவாழூரில் வாழ்ந்து வருகின்றாள். அப்பொழுது வறுமை அவர்களை வாட்டியது. வேறு வழியின்றி மணிமங்கை வேறு நாடு சென்று தன் காற்சிலம்புகளை விற்று வருமாறு கூறுகின்றாள்.

பாலகன், மணிமங்கையின் பொற்சிலம்புகள் இரண்டினையும் வாங்கி, மதுரைக்குச் செல்லப் புறப்பட்டான். அப்பொழுது தீய சகுனங்கள் தோன்றின. மதுரைக்குச் செல்வதற்குப் பதிலாக பாலகன் வழிதவறி சோழநாட்டை அடைந்தான். சோழநாட்டுப்

பொற்கொல்லனை அழைத்து சிலம்பு விற்பது குறித்து கூறினான். அப்பொழுது சோழநாட்டுப் பொற்கொல்லன் பாண்டிய நாட்டு மன்னனின் கோப்பெருந்தேவிக்கு இச்சிலம்பினை விற்றால் தக்க பிரதிபலம் பெறலாம் என்று ஆசைகாட்டி பாண்டிய நாட்டிற்கு அழைத்துச் சென்றான். அவ்வாறு போகின்ற வழியில் ஒரு மலங்குறத்தியிடம் மதுரைக்குச் செல்ல வழி கேட்கின்றான். அதற்கு பதிலாக மலங்குறத்தி, பாண்டிய நாட்டிற்கு நீங்கள் செல்ல வேண்டாம் என்று விலக்குகின்றாள். பொற்கொல்லன் குறத்தியிடம் கோபம் கொண்டான். இருப்பினும் குறத்தி கூறிய வழியில் சென்று இருவரும் பாண்டிய நாட்டை அடைந்தனர்.

பொற்கொல்லன் பாண்டிய மன்னனிடம் அரண்மனை வாயிலில் பாலகனை நிறுத்தி, வாயில் காவலரிடம் பாலகனை பாதுகாக்குமாறு கூறிவிட்டு, பாண்டிய மன்னனின் அரண்மனைக்குச் சென்றான். மன்னனிடம் பாண்டிமாதேவியின் காற்சிலம்பைத் திருடிய கள்வன் அரண்மனை வாயிலில் உள்ளான் என்று கூறினான். பொற்கொல்லனின் சூழ்ச்சியினை அறியாத பாண்டிய மன்னன், பாலகனை தங்கள் குல யானையால், குத்தி கொலை செய்யுமாறு ஆணையிட்டான். யானை, பாலகனைக் கொல்லாமல் தன் பிடறியின் மீது ஏற்றி இருத்தியது. அச்சமயம் அங்கு வந்த கோப்பெருந்தேவி கள்வன் அல்ல, பாலகனைக் கொன்றால் பாண்டியநாடு அழிந்துவிடும் என்றும் மனம் கலங்கினாள். பாலகன் மணிமங்கையின் கணவன் என்றும், மணிமங்கை பத்ரகாளிதேவி என்றும் கூறினாள். தேவி கோபமடைந்தால் மதுரை நாடு பாழ்படும் என்றாள். ஆனால் மன்னன் பாண்டிமாதேவியின் சொல்லை அலட்சியம் செய்தான். பொற்கொல்லனின் பேச்சைக்கேட்டு மன்னன் பாலகனைக் கொல்ல சிறுதச்சனை வரவழைத்தார். தச்சனும் பாண்டிமாதேவி கூறியபடியே பாலகன் கள்வன் அல்லன் என்று

கூறினான். அதை மறுத்த மன்னன் சூலத்தில் ஏற்றிக் கொல்லுமாறு சிறுதச்சனிடம் கூற, சிறுதச்சன் பாலகனை சூலத்தில் ஏற்றிய பின், தன்னையே வெட்டி உயிர் மாய்க்கின்றான்.

பாலகன் இறந்ததைக் கேட்ட மணிமங்கை, எல்லோரிடமும் விடைபெற்று கணவனைக் காணப் புறப்பட்டாள். பத்ரகாளியின் அருளால், காளியின் பூத கணங்களில் ஒரு பூதத்தின் மேல் ஏறி மதுரை நோக்கி பயணம் செய்தாள். வழி நெடிகிலும் சபித்துக் கொண்டே சென்றாள். சூலத்தின் மேல் இறந்து கிடக்கின்ற கணவனைக் கண்டு வருந்தினாள். மணிமங்கையின் வேண்டுதலுக்கிணங்க ஆதித்யதேவன் நிழல் கொடுக்க, இந்திரன் ஊசியும் நூலும் கொடுத்தார், பிரம்மன் ஆயுளையும் கொடுத்தார். மணிமங்கை தன் கணவனின் உடலை மடியில் வைத்து ஊசியும் நூலும் எடுத்து தைத்தாள். உடலின் மீது நீர் தெளித்ததும் உறங்கி எழுவது போல பாலகன் உயிர் பெற்று எழுந்தான். தனக்கு நேர்ந்தவற்றை மணிமங்கையிடம் தெரிவித்தான். பொற்கொல்லனின் சதியால் நான் இறந்தேன், பாண்டிய மன்னன் கொலை செய்ய ஆணையிட்டான். பெருந்தேவி அதனைத் தடுத்தாள், சிறுதச்சன் (மரவேலை செய்பவன்) மீது எந்தத் தவறும் இல்லை என்றான்.

இதைக் கேட்ட மணிமங்கை தன் வாளால் சிறுதச்சனை உயிர்ப்பித்தாள். பிறகு வள்ளிக்காவு, கொடுங்கல்லூர், முடிதூக்கு, பனயத்தார் காவு போன்ற இடங்களில் குடியமர்ந்தாள். அங்கு பாலகனுக்கு ஒரு இருப்பிடமும் அமைத்தாள் என்ற நாட்டார் கதை மரபில் கண்ணகி மணிமங்கையாகிய தேவியாகவும் கோவலன் பாலகனாகவும் சித்திரிக்கப்படுகின்றனர். இக்கதையில் மணிமங்கையாகிய தேவிக்கே முதன்மையிடம் தரப்பட்டுள்ளது. அது இளங்கோ படைத்த கண்ணகி பாத்திரத்திற்கு நிகராக அமைகின்றது. சிலப்பதிகாரக் கதையிலிருந்து பல இடங்களில் கதைச்சூழல் விலகிச் செல்வதையும் உணரமுடிகின்றது.

தன் கணவனைக் கொன்ற பாண்டியனைக் கொன்று, பழிதீர்ப்பேன் என்றும் ஏழாவது நாள் படையுடன் வருவேன் என்றும் பாண்டிய மன்னனிடம் தேவி அறிவித்தாள். அங்ஙனமே வேதாளத்தின் மீது அமர்ந்து படையுடன் புறப்பட்டு பாண்டியனின் அரண்மனையை அடைந்தாள். பாண்டியமன்னன் கண்ணகியைப் பார்த்து, பாலகனுக்கு நிகரான பொன்னும், நாடு, நகரமும் அளிக்கின்றேன் என்னை விட்டு விடு என்று கெஞ்சினான். பாண்டியனின் வேண்டுதலுக்கு செவி சாய்க்காமல், பாண்டியனை சூலத்தில் ஏற்றி, நாந்தகம் என்னும் வாளால் வெட்டிக் கொன்றாள். பாண்டிய மன்னனின் துண்டிக்கப்பட்ட தலை பொற்கொல்லனின் முன் விழுந்தது. பெருந்தேவியின் ஒரு மார்பினையும் அறுத்தெறிந்தாள். பாண்டிய நாட்டினை தன்னுடன் வந்த ஏழு வீரர்களுக்குத் தானமாகக் கொடுத்தாள். பிறகு மதுரையில் 'மதுரை மீனாட்சி' என்ற பெயரில் குடியமர்ந்தாள் என்று கூறப்பட்டுள்ளது.

மணிமங்கையாகிய தேவி தன் கணவனைக் கொலை செய்யத் தூண்டிய பொற்கொல்லனை கொல்வதற்காக (வாரிசியர்) கோவிலில் பூக்கட்டுகின்ற ஒரு சாதாரணப் பெண் வடிவத்தில் புறப்பட்டாள். பொற்கொல்லனின் வீட்டை அடைந்து. பொற்கொல்லனைக் கண்டவுடன் அழுதுகொண்டு, எனக்கு குழந்தைகள் இல்லாத காரணத்தால், ஒரு ஜோதிடனை வரவழைத்து காரணம் கேட்டபோது, பொற்கொல்லனின் சாபம் உண்டு என்றும், அதை தீர்ப்பதற்கு பன்னிரெண்டாயிரம் பொற்கொல்லர்களுக்கு (ஐந்து பலம்) தங்கம் தானம் அளிக்க வேண்டும் என்று கூறினார். என்று, மணிமங்கை (தேவி) பொற்கொல்லனிடம் கூறினாள். பொற்கொல்லன் தங்கம் தருவீர்களானால் நான் அதை ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கொடுப்பேன் எனறுரைத்தான். உடனே தேவி ஒரு பிடி மணலினை அள்ளி பொற்கொல்லனின் கையில் கொடுத்தாள், அது தங்கமாக

மாறியது. தங்கம் தானம் கொடுப்பதற்காக புத்தன் அங்காடிப் புதுத்தெருவில் ஒரு கட்டிடம் அமைந்துத் தருமாறும் கேட்டுக் கொண்டாள். தானத்திற்காக அங்கு வந்த பொற்கொல்லரை புதிய கட்டிடத்துக்குள் உட்கார வைத்து விட்டு தேவி வெளியில் வந்து நின்று அட்டகாசித்தாள். இதைக் கேட்ட பொற்கொல்லர்கள் அலறினர். பொற்கொல்லர்களின் தலையினை வெட்டி தேவி சிறுதட்டானுக்கு தானம் அளித்தாள். சிறுதட்டான் என்னை மன்னித்து, விட்டுவிடுங்கள் என்று கெஞ்சியும் தேவி அவனது தலையையும் வெட்டினாள்.

கேரள நாட்டார் கதைமரபின் ஒரு பகுதியாகிய 'மணிமங்கத் தோற்றம்' பகுதியில் கண்ணகியைக் காளியுடன் தொடர்புபடுத்திக் கூறியுள்ளனர். கணகி மணிமங்கையாகவும் கோவலன் பாலகனாகவும் அறியப்படுகின்றனர். சேர, சோழ, பாண்டிய நாடுகளைக் குறிப்பிட்டிருப்பினும், கதை முழுவதும் பாண்டிய நாட்டிலேயே நடந்ததாக சித்திரிக்கப்பெற்றுள்ளது. பாலகனைக் கொல்ல சூழ்ச்சி செய்த பொற்கொல்லனையும், பாலகனைக் கொல்ல ஆணை பிறப்பித்த பாண்டிய மன்னனையும் மணிமங்கை கொன்று வஞ்சம் தீர்க்கின்றாள். மணிமங்கை ,கோவலனை கடவுளர்களின் அருளால், ஊசி நூலினால் தைத்து மீண்டும் உயிர்ப்பிக்கின்றாள். இக்கதை சிலப்பதிகாரக் கதையிலிருந்து பல நிலைகளில் மாறுபட்டு காணப்பெறுகின்றது.

**ஆற்றுக்கால் பகவதி**

திருவனந்தபுரத்தில் இருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் ஆற்றுக்கால் பகவதி கோயில் அமைந்துள்ளது. ஆற்றங்கரையில் அமைந்த கோயிலாக விளங்குவதால் இதனை "ஆற்றுகால் பகவதி கோயில்" என்று அழைக்கின்றனர். இப் பகவதி தாருகனை அழித்து வேதாளத்தின் மீது அமர்ந்திருக்கும் காளியாக காட்சி தருகின்றாள். பகவதியின்

உருவம் கொடுங்கலூர் பகவதியின் உருவ அமைப்பை ஒத்துள்ளது. கண்ணகியின் மறு உருவமாக இங்குள்ள அம்மனைக் கருதுவதுண்டு. ஆற்றுக்கால் பகவதி கோயிலில் கொண்டாடப்பட்டு வரும் விழாக்களில் ”பொங்காலா” மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். இவ்விழா மாசி மாதம் கார்த்திகை நாள் முதல் பூரம் நாள் வரை பத்த நாட்கள் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ் விழாவின் தொடக்கமாக கொடுங்கலூர் பகவதியை பாடி அழைத்து ஆற்றுக்கால் கோவிலில் குடி அமர்த்துகின்றனர். அதன் பிறகு ’தோற்றம் பாட்டு’ பாடப்படுகின்றது.

**தோற்றம் பாட்டு**

ஆற்றுகால் பகவதி கோயிலின் முன்னர் தென்னை ஓலை வேய்ந்த குடிசையில் மண் திட்டு அமைப்பர். அத்திடலில் ’தோற்றம் பாட்டு’ கலைஞர்கள் அமர்ந்து ’தோற்றம் பாட்டு’ பாடுகின்றனர். அப்பாட்டில் கண்ணகி கதை இடம் பெறுகின்றது. அந்நிகழ்வு பத்து நாட்கள் வரை நீண்டு செல்லும். முதல் நாளில் பாடப்படும் பாடலில் கோவலனாகக் கருதப்பெறும் பாலகன் என்ற பாத்திரத்தின் பிறப்பு பற்றிய கதை இடம்பெறும். இரண்டாவது நாள் இடம்பெறும் பாடலில் கண்ணகியாகக் கருதப்பெறும் கன்னியின் பிறப்பு, அவளுக்கும் பாலகனுக்கும் நிகழவிருக்கும் திருமண ஏற்பாடு முதலான கதை நிகழ்வுகள் எடுத்துரைக்கப்படுகின்றன. மூன்றாவது நாள் பாடலில் கோவலனாகிய பாலகன், கண்ணகியாகிய கன்னி ஆகிய இருவருக்கும் நிகழும் திருமண வைபவம் கூறப்படுகின்றது. இதனை ’மாலவெக்கல்’ என்று சுட்டுகின்றனர். நான்காம் நாள் பாலகன் சிலம்பு விற்கச் செல்லுவதாகக் கதை நகர்கின்றது. ஐந்தாம் நாள் பாடலில் பாலகனை கள்வன் என்று குற்றம் சாட்டுகின்ற கதைக்கூறு இடம்பெறுகின்றது. ஆறாவது நாள் பாண்டிய மன்னனால் கோவலனாகிய பாலகன் கொலை செய்யப்படும் நிகழ்வு

பாடல் வாயிலாகக் காட்டப் பெறுகின்றது. ஏழாவது நாள் பாடலில் 'கொன்று தோற்றுதல்' நிகழ்வினைப் பாடுகின்றனர். எட்டாவது நாள் பொற்கொல்லனை தேவி அழித்தலும் ஒன்பதாவது நாள் கன்னியாகிய கண்ணகி பாண்டியனிடம் நீதி கேட்ட சிறப்பும் அவனை அழித்தலுமாகிய செயல்நிலைகள் பாடல் வழிக் காட்டப்பெறுகின்றது. இறுதியாக பத்தாவது நாளில் பிணிப்பாட்டு பாடுதலாகிய நிகழ்வுடன் தோற்றம்பாட்டு நிறைவுறுகின்றது. பின் கண்ணகியை கொடுங்கலூருக்கு பாட்டுப் பாடி வழி அனுப்பி வைத்தல் என்னும் சடங்கு நிகழ்த்தப்படுகிறது .

தென் கேரளத்தில் பத்ரகாளி கோயில்களில் நடைபெறும் விழாக்களையொட்டி தோற்றம் பாட்டு பாடுவது வழக்கம். அப்பாடல்களில் கண்ணகி கதை வழங்கப்படுகின்றது. அவற்றில் கதையின் உள்ளடக்கம் மாறுவதில்லை. கதை மாந்தர்களின் பெயர்களிலும் கதை அமைப்பிலும் சிற்சில மாற்றங்கள் காணப்படுகின்றன. ஆனால் அக்கதைகள் அனைத்தும் சிலப்பதிகாரம் கதையினின்றும் மாறுபட்டு நாட்டார் மரபில் வழங்கி வருகின்றன. அவற்றை ஆராயும் விதமாக இவ்வாய்வு அமைகின்றது.

**கன்னி - பாலகன் கதை**

தோற்றம் பாட்டு வழி அறிய வரும் கண்ணகி கதையானது கீழ்கண்டவாறு: வட கொல்லத்தின் அரசனாகிய மாராயர் என்பவருக்கு சில காலம் குழந்தைப் பேறு இல்லாமல் இருந்தது. அவர் சிவபெருமானிடத்தில் வேண்டி வரம் பெற்ற நிலையில் அவருடைய மனைவியாகிய மாருதி ஒரு மகனைப் பெற்றாள். அவனுக்கு பாலகன் என்றும் பெயரிட்டனர். ஒரு சோதிடனை வரவழைத்து பாலகனின் எதிர்காலத்தைக் கணித்தனர். அவர், பாலகன் சகலகலா வல்லவனாகத் திகழ்வான், செய்யாத குற்றத்திற்காக கள்வன் எனும் பெயர் பெற்று கொலை செய்யப்படுவான் என்று கூறினார். பாலகனின் நிலை

இவ்வாறு இருக்க, தென் கொல்லத்தில் நாராயணர் என்னும் ஒரு சிவபக்தர் வாழ்ந்து வந்தார். அவருக்கு குழந்தை இல்லாததால் சிவபெருமான் தன் மகள் காளியை வளர்ப்பு மகளாகக் கொடுத்தார் . அவள் பிறக்கும் பொழுதே இரண்டு கால்களிலும் சிலம்புடன் பிறந்தாள். காளி 'கன்னி' என்னும் பெயரில் அறியப்பட்டாள். கன்னி திருமண வயதை அடைந்தாள். அச்சமயம் பாலகனுக்குப் பெண் பார்ப்பதற்காக மாராயர் தென்கொல்லத்தை அடைந்தார். அங்கு காளியின் அழகினை கண்டார். அக்கணமே அவர் மயங்கி விழுந்தார். காளி அவரது மயக்கத்தை தெளிவித்தாள். மாராயர் தன் மகன் பாலகனுக்கு ஏற்றவள் இக்கன்னி எனக் கருதினார். கன்னியின் வீட்டில் திருமண ஏற்பாடு நிகழ்ந்தது. அதைக் கண்ட தேவி, தேவலோகத்தில் பிறந்த எனக்கு மானிடப்பிறவியான ஒருவன் கணவனா என தந்தையிடம் கூறிச் சிரித்தாள். பெற்றோரின் விருப்பத்திற்கு இணங்க கன்னிக்கும் பாலகனுக்கும் திருமணம் நடக்கிறது.

திருமணம் முடிந்தபின் இருவரும் வடக்குக் கொல்லத்திற்குச் சென்றனர். மலை வழியாக பாலகனும் கடல் வழியாக கன்னியும் பயணம் செய்தனர். கன்னி பொன்கிடாரம் என்னும் மணி கப்பலில் பொன் சூரல் (பிரம்பு) கட்டிலில் படுத்து இருந்தாள். அப்பொழுது எதிராக ஒரு கப்பல் வந்தது. அது தேவியின் கப்பலுக்கு அருகில் வந்தது. அவ்வாறு வந்த கப்பலில் ஒரு மனிதன் இருந்தான். தேவியின் தோழிகள் அவனைப் பார்த்து நீ யாரெனக் கேட்டனர். அதற்கு அவன் நான் பாலகனின் நண்பன். அவன் திருமணத்திற்குச் சென்று கொண்டிருக்கின்றேன் என்று கூறினான் . திருமணம் முடிந்து விட்டதே என தோழிகள் அறிவித்தனர். பாலகனின் மனைவி இக்கப்பலில் உள்ளாள் என்று கூறினர். உடனே பாலகனின் நண்பன் தான் கொண்டு வந்த மோதிரத்தை தேவியின் கைகளில் கொடுக்க முனைந்தான். அவனின் தவறான நோக்கத்தை புரிந்து கொண்ட கன்னி, மோதிரத்தை

கடலில் தவற விட்டாள். பிறகு தன் சூலத்தால் அம் மோதிரத்தை எடுத்தாள். இதைக் கண்ட பாலகனின் நண்பன் தேவியை 'திருடி' என்று அழைத்தான். மட்டுமன்றி கரை வாணிபத்திற்கு உன் கணவன் வந்தால் அவனை பொய் குற்றம் சுமத்தி கொன்று விடுவேன் என்றும் கூறினான். அதற்கு பதிலாக தேவி உன்னை உன் குலத்தோடு அழிப்பேன் என்று சபதம் செய்தாள்.

தேவியும் பாலகனும் வடகொல்லத்தை அடைந்தனர். தேவி பாலகனிடம் தம் குலத் தொழிலாகிய வாணிகம் செய்ய புறப்படுமாறு கூறினாள். பாலகனும் வாணிபத்திற்கு புறப்பட்டான். தேவி பாலகனிடம் தன் காற்சிலம்பினையும் விற்று வருமாறு கூறினாள். அப்போது பாலகனின் கால் விரல் இடறியது. இதனை அபசகுனமாக பாலகன் உணர்ந்தான். நான் வாணிபம் செய்துவிட்டு திரும்பி வரமாட்டேன் என்று கூறினான். இதனை ஏற்கனவே அறிந்த தேவி சிரித்தாள்.

பாலகன் சிலம்பு விற்க மதுரைக்குப் பயணம் செய்தான். மதுரை செல்வதற்கான வழியினை எதிர்ப்பட்டவரிடமெல்லாம் விசாரித்து அறிந்த நிலையில் மதுரையை அடைந்தான். அங்கு ஒரு பொற்கொல்லனிடம் தன் மனைவியின் சிலம்பினைக் காட்டி அதனைத் தகுந்த விலைக்கு விற்றுத் தருமாறு வேண்டினான். அப்பொற்கொல்லன் ஏற்கனவே பாண்டிய மன்னனுடைய மனைவியான பெருந்தேவியின் சிலம்பினைத் திருடி இருந்தான். அவ்வேளையில் அவன் பாலகனின் கையில் உள்ள சிலம்பினைக் கண்டான். அச்சந்தர்ப்பத்தைத் தனக்கு சாதகமாக்கிக் கொள்ள எண்ணினான். இது சாதாரண சிலம்பல்ல மன்னனால் மட்டுமே இதற்கான விலை தர முடியும் என்று கூறியவாறு பாலகனை தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

பொற்கொல்லன் பாலகனை தன் வீட்டில் தங்க வைத்த நிலையில் பாண்டிய மன்னனை சந்தித்தான். மன்னனிடம் பெருந்தேவியின் சிலம்பினைத் திருடிய கள்வன் என் வீட்டில் உள்ளான் என்று கூறினான். உடனே மன்னன் கள்வனை அழைத்து வரக் கூறினான். மன்னனின் சேவகர்கள் பாலகனை கைதியாக அழைத்துச் சென்றனர். பாலகன் தான் நிரபராதி என்று கூறி செய்வதறியாது திகைத்தான். பலன் இல்லை. மன்னன் பெருந்தேவியை அழைத்து பாலகன் கொண்டு வந்த சிலம்பினைக் காட்டி இது உன்னுடையதா என கேட்க பெருந்தேவியும் என்னுடையவை அல்ல என்று கூறினாள். உடனே பொற்கொல்லன் கோபமடைந்து என் மனைவி என்னிடம் இவ்வாறு எதிர்த்துக் கூறினால் நான் கொன்று விடுவேன் என்று கூறினான். இதைக் கேட்ட மன்னன் தன் சுயமரியாதைக்காக பெருந்தேவியின் கண்களைக் குருடாக்கி பாழும் கிணற்றில் தள்ளி விட்டான்.

தன் மனைவியைக் கொன்றது மட்டுமல்லாமல் பாலகனையும் மழுவெறிந்து கொல்லுமாறு மன்னன் தச்சனிடம் ஆணையிட்டான். தச்சன் மழுவினால் ஓங்கி வெட்ட பாலகன் இறந்து விடுகின்றான். அவ்வுடலை காகமும் கழுகும் தின்னாமல் காவல் காக்குமாறு தச்சன் ஒரு வண்ணானிடம் கூறினான். அவ்வண்ணானும் அதன்படியே காவல் காத்தான். பாலகனின் உடலைத் தேடி பத்ரகாளி வருவாள். அவளிடம் உன் கூலியை வாங்கிக்கொள் என்று தச்சன் வண்ணானிடம் கூறிச் சென்றான்.

வடகொல்லத்தில் வாழ்ந்து வரும் கன்னி தன் கணவனுக்கு நேர்ந்ததை கனவில் கண்டாள். உடனே தந்தையாகிய பரமசிவனிடம் சென்று தன் கணவனை உயிர்ப்பிக்க வரம் வாங்கி வந்தாள். எனக்கு மக்கள் இல்லாத காரணத்தால் நானே என் கணவனைத் தேடிச் செல்வேன் என்று கூறியவாறு அவள் தன் கணவனைக் கண்டடைவதற்காக

பாண்டிய நாடு சென்றாள். அப்போது ஒரு வயதான பெண்மணியின் வேடமணிந்து சென்றாள்.

மதுரைக்குச் செல்கின்ற வழியில் கோயில் புறா ,பலா மரம், மாமரம் ,பூவாலி பசு, சிறு பாணன் போன்றவர்களிடம் என் கணவனைப் பார்த்தீர்களா என்று செட்டவாறே சென்றாள். அந்நிலையில் தன்மேல் இரக்கம் கொண்டவர்களுக்கு நல்ல வரத்தையும் அல்லாதவர்களுக்கு சாபத்தையும் அளித்தாள். மீன் பிடிக்கும் சிறுபாணன் மட்டும் பத்ரகாளி என்று உணர்ந்து வணங்கினான். அதனால் கொடுங்கலூர் கோயிலின் வடக்கு வாயிலில் முரசு கொட்டும் உரிமை உனக்கு அளிக்கிறேன் என்று வரம் அளித்தாள். அவள் பாலகனின் இறந்த உடலைத் தொட்டு நீர் தெளித்து மந்திரம் ஜெபித்து உயிர்ப்பித்தாள். இதற்கு "கொன்று தோற்றுதல்" என்று பெயர்.

மேற்கண்ட நிகழ்வினை நினைவுறுத்தும் வகையில் ஆற்றுகால் கோவிலில் துக்கநாள் அனுசரிப்பதுண்டு. மறுநாள் காலை பகவதி கோயிலை சுத்தம் செய்தபின் கோவிலின் நடை ஏழு மணிக்கு திறக்கும். சாதாரண நாட்களில் கோவில் நடை ஐந்து மணிக்கே திறக்கப்படுன்றது.

தேவி தன் கணவனைக் கொன்றவர்களைப் பழிவாங்க பொற்கொல்லனின் வீட்டிற்கு சென்றாள். அங்கு அவன் மனைவியிடம் அவனைப் பற்றி விசாரித்தாள். பாலகனின் மனைவியாகிய கன்னி நிச்சயமாக இங்கு வருவாள் எனக் கருதி பொற்கொல்லன் ஒளிந்திருக்கின்றான் என்பதனை கன்னி புரிந்து கொண்டாள். அவள் தன் கையில் உள்ள தங்கத்தைக் பொற்கொல்லனின் மனைவியிடம் காட்டி ஒரு பலிக்கல் செய்து தருமாறு கூறினாள். அவளும் உடனே பொற் கொல்லனை வரவழைத்தாள். தேவியின் கையில் உள்ள தங்கத்தைக் கண்டதும் பேராசையால் பொற்கொல்லன்

பலிக்கல் செய்து தர சம்மதித்தான். அப்போது தேவியாகிய கன்னி பொற்கொல்லனைக் காட்டிற்கு அழைத்துச் சென்று தன் பள்ளி வாளால் வெட்டி வீழ்த்தினாள்.

கன்னியாகிய தேவி தன் கணவனைக் கொன்ற பாண்டிய மன்னனிடம் நீதி கேட்க வந்தாள். தேவியின் தோற்றத்தைக் கண்ட மன்னன் அஞ்சினான். என்னை மன்னித்து விடுங்கள் என்னைக் கொல்ல வேண்டாம் என்று கெஞ்சினான். அதைக் கேட்காமல் தேவியும் மன்னனை தன் வாளால் வெட்டிக் கொன்றாள். கிணற்றில் வீழ்த்தப்பட்ட பெருந்தேவி எத்தவறும் செய்யாதவள். எனவே அவளை கண்ணகி மீண்டும் உயிர்பித்தாள். முத்தாரம்மனாக மக்களால் வணங்கப்படுவாய் என்று வாழ்த்தினாள். கோவலனின் உடலுக்கு காவல் நின்ற வண்ணானுக்கு இக்கதையினை பாடுகின்ற வரமும் அளித்தாள். மீண்டும் காளி கைலாயத்தை அடைவதாக பாடல் முடிவடைகின்றது கடைசி நாள் அன்று 'பிணிப் பாட்டு' பாடப்படுகின்றது. இப்பாட்டு நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் அனைத்து நலன்களும் கிடைக்க வேண்டும் என்னும் வேண்டுதலுக்காகப் பாடப்படுவதாகும் .

**பத்திரகாளிப் பாட்டு**

தென்கேரளத்திலுள்ள சில பத்திரகாளிக்காவுகளில் (கோயில்களில்) பறையர் இனத்தார் "பத்ரகாளிப் பாட்டு" பாடி வருகின்றனர். இதில் சிலப்பதிகாரக் கதையின் சில நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அறுவடை முடிந்த பங்குனி மாதம் முதல் வைகாசி மாதம் வரை சடங்கு முறையிலமைந்த இப்பாட்டு பாடப்படுகின்றது. இவர்களுடைய பாட்டில் இடம்பெறுகின்ற கதை பின்வருமாறு:

பங்கிஅச்சன், திருதேவி என்பவர்களுக்கு பாலகன் என்பவன் மகனாக பிறக்கின்றான். பாலகனின் பெற்றோர் புன்செய் நிலங்களுக்கு உரிமையாளர்களாக

விளங்கினர். பாலகனின் மனைவி மாயக்காளி என்று அழைக்கப்படுகின்றாள். இவள் சங்கரனின் திருக்கண்ணிலிருந்து தோன்றியவள். தாருகனை அழிக்கப் பிறந்தவள். பாலகன் மாயக்காளி வாழ்ந்து வரும் நாட்டை அடைந்தான். அங்கு மாயக்காளிக்கும் பாலகனுக்கும் திருமணம் நிகழ்ந்தது. எனினும் தாம்பத்திய வாழ்க்கை நடைபெறவில்லை. ஏனென்றால் பாலகன் மாயக்காளியின் அருகில் சென்றபோது தீயின் வெப்பமும் ஊசியினால் குத்துவது போன்ற உணர்வும் தோன்றியது. அதனால் பாலகன் மாயக்காளியை விட்டு விலகிச் செல்ல தீர்மானித்தான். அப்பொழுது மாயக்காளி தன் திருவாழியை(மோதிரம்) பாலகனுக்குக் கொடுத்தாள். ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் வடக்கு நோக்கி இத்திருவாழியை எறிய வேண்டும் என்று கூறினாள்.

பாலகன் மலைநாடு கடந்து பாண்டியநாட்டை அடைகின்றான். அங்கு ஒரு பொற்கொல்லனின் மனைவி பாலகனை, கண்ணைக் காட்டி அழைத்து, தன் வயப்படுத்துகின்றாள். பாலகனும் அப்பெண்ணுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தான். வெளியூர் சென்று திரும்பி வந்த பொற்கொல்லன் தன் மனைவி பாலகனுடன் இணைந்து வாழ்வதைக் கண்டான். ஆத்திரமடைந்த பொற்கொல்லன் பாலகனைக் கழுவில் ஏற்றுவதற்காகக் கொண்டு சென்றான். அப்போது பாலகன் தன் விரலில் அணிந்திருந்த திருவாழியை வடக்கு நோக்கி எறிந்தான். அது கொடுங்கலூரிலுள்ள வடக்கு வாயிலில் விழுந்தது. அச் சமயத்தில் பாலகன் கழுவில் ஏற்றி கொல்லப்பட்டான்.

தன் கணவனுக்கு ஆபத்து ஏற்பட்டதை உணர்ந்த மாயக்காளி பொற் கொல்லனின் மனைவியிடம் சென்று நிகழ்ந்தவற்றைக் கேட்டு அறிந்தாள். பாலகனின் இறந்த உடலைக் கண்டாள். பொற்கொல்லனின் மனைவியை கழுவிலேற்றினாள். அதன் பின் காளி தன் தெய்வீக சக்தியால் சில மருந்துகளை கொடுத்து பாலகனை உயிர்ப்பித்தாள். உயிர்பெற்ற

பாலகனிடம் காளி நான், உன்னைத் தொடர்ந்து வருகின்றேன் நீ முன்னே செல் ஒருபோதும் என்னை திரும்பிப் பார்க்காதே என்று கூறினாள். பாலகனும் திரும்பி பார்க்காமல் சிறிது தூரம் நடந்தான். பிறகு காளி தன் பின்னால் நடந்து வருகின்றாளா என்று சந்தேகித்து திரும்பிப் பார்த்தான். அதனால் மாயக்காளி தன் கோவிலின் வெளியே வடக்குப் பகுதியில் பாலகனை சங்கிலியால் கட்டி வைத்தாள் என்று கதை முடிகின்றது.

மேற்சுட்டிய கதையில் கண்ணகி கோவலன் கதாபாத்திரங்களுக்கு இணையாக பாலகன், மாயக்காளி என்ற பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளனர். இக்கதையின் சில நிகழ்வுகள் சிலப்பதிக்காரக் கதையுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. கதையில் பாலகன் வணிக குலத்தில் பிறந்தவன் என்று குறிப்பிடப்படவில்லை. மாறாக வேளாண் தொழில் செய்யும் தம்பதியினருக்குப் பிறந்தவனாகப் படைக்கப்பட்டுள்ளான். கண்ணகியை பலரும் காளியாக உருவகித்துப் பார்க்கும் சூழலில் மேற்கண்ட கதையில் வரும் பெண் மாயக்காளி என்றே அறிமுகப்படுத்துகின்றாள். சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகியைப் பிரிந்து மாதவியுடன் சில காலம் வாழ்ந்தான் என்ற கதைக்கூறு பாலகன் பொற்கொல்லனின் மனைவியுடன் வாழ்ந்தான் என்பதுடன் ஒத்துள்ளது. மேலும், பாலகன் பொற்கொல்லனால் கொல்லப்பட்டான் என்றும் பொற்கொல்லன் மாயக்காளியால் கொல்லப்பட்டான் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்ஙனம் பல நிலைகளில் மாயக்காளியின் கதையை உணர்த்தும் பத்திரகாளிப்பாட்டு சிலப்பதிகாரத்தின் கதைப்போக்கோடு ஒத்திருப்பதைக் காணமுடிகின்றது.

**கோவிலன் சரித்திரம்**

இடுக்கி மாவட்டத்தில் மன்னான் பழங்குடியினரிடையே கோவலன்- கண்ணகி கதை வழங்கப்பட்டு வருகின்றது. கூத்துக் கலை வடிவிலான அப்பாடல் 'கோவிலன்

சரித்திரம்' என்னும் பெயரில் அறியப்படுகிறது. அதில் கண்ணகி- கர்ணகியாகவும், கோவலன்- கோவிலன் என்னும் பெயரிலும் அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். கண்ணகியின் பிறப்பு பற்றிக் கூறுகையில், பாண்டிய மன்னனுக்கும், அவன் மனைவி கொப்புலிங்கிக்கும் காளியே மகளாகப் பிறக்கின்றாள், என்பதன் அடிப்படையில் இக்கதை நிகழ்வு அமைகின்றது. இக்கதை கூத்து அமைப்பில் பாடப்பட்டுள்ளது.

சிவனும் பார்வதியும் பூலோகத்தில் பிச்சை எடுத்த வேளையில், வர்ணமாலை என்பவளிடம் பிச்சை கேட்கின்றனர். அதற்கு அவள், பிச்சைப்பாத்திரத்தில் மண்ணை அள்ளி இடுகின்றாள். சிவன் கோபத்தால், உன் செல்வம் அனைத்தும் மண்ணாகட்டும் என்று சாபமிடுகின்றார். வர்ணமாலையும், தன் தவறை உணர்ந்து சிவனிடம் மன்னிப்புக் கேட்கின்றாள். சிவனும் மன்னித்து, இழந்த செல்வத்தையும், குழந்தை வரத்தினையும் அளிக்கின்றார். வர்ணமாலை ஆண் குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தையே கோவிலன் என்ற பெயரில் அறியப்படுகின்றான். இச்செய்தி நாடெங்கிலும் பரவியது.

பாண்டிய மன்னன் அப்பொழுது குழந்தை இல்லாத வருத்தத்தில் இருந்தான். அதற்கு வர்ணமாலை ஒரு உபாயம் கூறினாள். சிவனை வேண்டி தவமிருக்கும்படி வேண்டினாள். மன்னனும் தவம் இருந்தான். அப்பொழுதும் குழந்தைப் பேறு கிடைக்கவில்லை. இதனால் கோபமடைந்த பாண்டியன் அங்குள்ள காளி கோயிலை மூடினான். அச்சமயம் வெங்கலம் உருக்கி வியாபாரம் செய்கின்ற ஏழைக் கம்மாளனும் உடன் வந்த அறுவரும் காளி கோயிலின் வழியே வருகின்றனர். மன்னன் ஏழைக் கம்மாளனிடம் இங்கு வியாபாரம் செய்யக்கூடாது என்று கூறியும் கம்மாளன் வியாபாரம் செய்தான். இதனை அறிந்த அரசன் கம்மாளனுடன் வந்த அறுவரையும் கொன்றுவிடுகின்றான். கம்மாளன் உயிர் பிழைப்பதற்காக, காளி கோயிலுக்குள்

ஒளிந்துகொண்டான். மன்னனும் கம்மாளனைக் கண்டுபிடித்து, தன் வாளால் வெட்டிக் கொன்றான். இதனால், கோபமடைந்த காளி, தன்னிடம் அடைக்கலம் புகுந்த கம்மாளனைக் கொன்றதால், நானே உனக்கு மகளாகப் பிறந்து பழிவாங்குவேன் என்று கூறினாள்.

பாண்டியன் மனைவி கொப்புலிங்கிக்கு பெண் குழந்தை பிறந்தது. கணியன்மார் சோதிடம் பார்த்து, இக்குழந்தையால் மன்னனுக்கும், மதுரைக்கும் அழிவு நேரிடும் என்று கூறினர். அப்பெண்குழந்தை பிறக்கும் பொழுதே ஒரு காலில் மணிச்சிலம்புடனும், மறுகாலில் முத்துச் சிலம்புடனும் பிறந்தாள். இக்குழந்தையை பேழையில் வைத்து மண்தோண்டிப் புதைக்குமாறு கூறினர். மன்னனும் அக்குழந்தையைப் பேழையில் வைத்து ஆற்றில் விடுகின்றார். அச்சமயம் முத்துச் செட்டி, பாக்கு விற்கும் செட்டி, வாள் வர்த்தகம் செட்டி என மூவரும் ஆற்றில் மிதந்து வரும் பேழையைக் கண்டனர். வாள் வர்த்தகச் செட்டி அப்பேழையை எடுத்து திறந்தார். அக்குழந்தைக்கு 'கர்ணகி' என்று பெயரிட்டு வளர்த்தினார். கண்ணகியை கோவிலனுக்கு மணம் முடித்தனர்.

கோவிலன் மதுரையில் நடக்கின்ற மாதவியின் ஆடல் குறித்து அறிகின்றான். மாதகியின் (மாதவி) ஆடல் நிகழ்ச்சியைக் காணச் செல்கின்றான். முன் வரிசையில் அமர்ந்து பார்க்கின்றான். மாதவி மாலையைச் சுழற்றி எறிகின்றாள், இம்மாலை யார் கழுத்தில் விழுகின்றதோ அவரை நான் என் கணவனாக அழைத்துச் செல்வேன் என்று கூறினாள். அம்மாலை கோவலன் கழுத்தில் விழுந்தது. மாதகி கோவிலனின் அனைத்துச் செல்வங்களையும் பறித்துக் கொண்டு, வாழைத் தோப்பில் தள்ளிவிடுகின்றாள். என்ன செய்வது என்றறியாது தவித்துக் கொண்டிருந்த வேளை தன் நண்பனைக் கண்டான், நண்பனுடன் வண்டியூர் வருகின்றான். இதனை அறிந்த வர்ணமாலை கோவிலனை

அழைத்து வந்து உணவு பரிமாறுகின்றாள். அதன் பிறகு கர்ணகி, கோவிலனிடம் மாதவிக்குக் கொடுக்க வேண்டிய கடனைத் தீர்க்க மதுரை செல்லலாம் என்று கூறுகின்றாள். இருவரும் மதுரைக்குச் செல்கின்றனர். ஆய்ச்சியர் மனையில் தங்கினர். சிலம்பை விற்றுக் கடனைத் தீர்க்கலாம் என்று கோவிலன் கூறினான். திருகாணி இல்லாத சிலம்பு விற்பதற்காக மதுரையில் பொற்கொல்லர் வசிக்கும் இடத்திற்குச் சென்றான். செல்லும் வழியில் தீய சகுனம் தோன்றியது.கோவலன் அதனைப் பொருட்படுத்தவில்லை.

கோவிலன், மதுரையில் வன்னியத் தட்டானை சந்திக்கின்றான். காற்சிலம்பினைக் காட்டி அதற்கான பணம் தருமாறு கேட்க, வன்னித்தட்டான் தன்னிடமிருந்து திருட்டுப் போன சிலம்பு இது தான் என்று கூறினான். பாண்டியனிடம் அழைத்துச் செல்கின்றான். கோவிலனை சிலம்பினைத் திருடிய கள்வன் என்றே கூறுகின்றான். பாண்டியனும் அதனை நம்பினான். பாண்டியனின் மனைவி கொப்புலிங்கி அச்சிலம்பைக் காலில் அணிந்ததும் சிலம்பு அதன் பத்தினித் தன்மையால் சுட்டது. இது என் காற்சிலம்பு இல்லை என கொப்புலிங்கி கூறினாள். பாண்டியனும் வன்னித் தட்டானை வரவழைத்தான். அவன் தான் கூறியது உண்மை என்றே வாதிட்டான். கோவிலனை பாம்பின் மீதும், யானையின் மீதும் சத்தியம் செய்விக்கின்றான். கோவிலனை யானையால் கொலைப்படுத்த முயல்கின்றான். யானையும் கொல்லாமல் இருப்பதைக் கண்டு, பாண்டியன் வன்னித்தட்டானின் சொல் கேட்டு வாளால் வெட்ட ஆணையிட்டான். கோவிலன் கொலையுண்டான்.

கர்ணகி தீ நிமித்தங்களைக் கண்டாள். அதனை, ஆய்ச்சியரிடம் கூறி, கோவலனைப் பற்றி விசாரித்து வரும்படிக் கூறினாள். ஆய்ச்சியர் மோர் விற்கச் சென்று அங்கு கோவிலன் கொலையுண்ட செய்தியினை அறிந்து வந்து கர்ணகியிடம் கூறினர்.

உடனே கர்ணகியும் கோவலன் கொலை செய்யப்பட்ட இடத்திற்கு வந்தாள். கர்ணகி பொன்னாலான நூலினால் ஊசி கொண்டு தைத்து கோவலனை உயிர்ப்பிக்கின்றாள். கோவலன் எழுந்து, வந்தது யார் மாதகியோ, கர்ணகியோ என்று கூற கர்ணகி சினமடைந்து கோவலனைத் தைத்த நூலினை உருவி விடுகின்றாள். கோவலனும் இறந்து விடுகின்றான். கர்ணகி கோவலன் இறந்த செய்தியினை மாதகிக்கு அறிவிக்கின்றாள்.

கோவிலன் இறந்ததனை அறிந்ததும் மாதகி அங்கு (மாதவி) வந்தாள். கர்ணகி, கோவலனின் உடலை எரித்தாள், மாதகியும் அதில் வீழ்ந்து உயிர் துறந்தாள். அதன் பின் கர்ணகி, பாண்டியனிடம் வழக்குரைத்து அரண்மனையை எரியூட்டுகின்றாள். இத்துடன் இக்கதை முடிவடைகின்றது.

மன்னான் பழங்குடியினரின் கதைப்பாடலில் கண்ணகி பாண்டியனின் மகளாக குறிப்பிடப்பட்டுள்ளாள். காளியே கர்ணகியாக பிறந்துள்ளாள் என்றும், அத்தெய்வீகத் தன்மையினை வெளிப்படுத்தும் விதமாக கர்ணகி பிறக்கும் போதே காற்சிலம்புகளுடன் பிறந்ததாகவும் கதையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்செய்தி சிலப்பதிகாரக் கதையிலிருந்து மாறுபட்டுக் காணப்படுகின்றது. ஆய்ச்சியர் மோர் விற்கச் செல்லும் பொழுது கோவிலன் பாண்டியனால் கொல்லப்பட்டதை அறிதல், கோவிலனின் இறந்த உடலை ஊசி, நூலினால் தைத்தல், கோவிலன் உயிர்பெறல், மாதவி கோவிலனுடன் தீப்பாய்தல் போன்றவை நாட்டார் கதை போக்கிற்கேற்ப மாறுதல்களுடன் அமைந்துள்ளது. மதுரை தீக்கிரையான செய்தியும், கர்ணகி தெய்வமான நிலையும் இக்கதையில் கூறப்படவில்லை. எனினும் சிலப்பதிகாரக் கதையின் மையக்கருத்தான கண்ணகியின் சிலம்பு இந்நாட்டார் கதையிலும் இடம்பெற்றுள்ளது.

**வசூரிமாலா**

பாண்டிய மன்னனின் **“செங்கோல் வளையக் கோவலன் கொலைப்பட்ட நாள் முதல், பாண்டிய நாட்டில் மழை வளம் குறைந்து, வறுமை எய்தி வெப்பு நோயும், (தொழுநோய் என்பார் அடியார்க்கு நல்லார்) குருவும் (கொப்புளம்) நாட்டு மக்களை பாதித்தது. கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லராயிரவரைக் கொன்று களவேள்வியால் சாந்தி செய்தான். அதனால் நாடு வளம் பெற மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கின.**” என்று சிலப்பதிகார உரைபெறு கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது. மாவினால் ஆயிரம் பொற்கொல்லர் உருவம் செய்து பலியிட்டான் என்றும் கூறப்படுகின்றது. இந்தச் சடங்கு முறைகள் கேரளப் பகுதிகளிலுள்ள சில கோயில்களில் இன்றும் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

'குரு' என்பது வெம்மையால் ஏற்படுகின்ற கொப்புளம் என்றும், அம்மை நோய் என்றும் சிலர் கூறுவர். தமிழகத்தில் அம்மை நோய் வராமலிருக்க மாரியம்மனை வேண்டுவர். கேரளத்தில் அம்மை நோயை வைசூரி என்று அழைப்பர். காளி, கண்டாகர்ணன், வைசூரிமாலா ஆகிய தெய்வங்கள் அம்மை போன்ற தொற்று நோயை வரவழைப்பவர்களாகவும், அந்நோயை வராமல் தடுப்பவர்களாகவும் திகழ்கின்றனர் என்று கேரள மக்களால் நம்பப்படுகின்றது.

கொடுங்கல்லூர் பகவதி கோயிலின் மேற்குப் பகுதியில் வடக்கு நோக்கிய நிலையில் வசூரிமாலா என்னும் தெய்வம் ஒரு முக்கிய பிரதிட்டையாக அமைந்துள்ளது. மேற்கூரையின்றி சிறிய மதிலால் சூழப்பட்டுள்ளது. இக்கோயிலில் இத்தெய்வம் நான்கடி உயரமுள்ள கருங்கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. மஞ்சள் பொடியாலும் நல்லமிளகாலும் இச்சிலை முழுக்காட்டப்பட்டுள்ளது. வைசூரி என்பதற்கு அம்மை நோய் என்று பொருள்.

அம்மை நோய்க்குரிய தெய்வம் வைசூரி மாலா என்பது நமக்குத் தெளிவாகின்றது. இங்கு சிறப்பு பூசையாக குருதி வழிபாடு நடக்கின்றது. இதை நடத்துபவர்கள் அடிகள். குருதி என்பது மஞ்சளும், சுண்ணாம்பும் சேர்ந்த கலவையாகும். அது குருதி போல் காட்சி அளிப்பதால் குருதி என்கின்றனர்.

வசூரிமாலையின் பிரதிபட்டைக்கு முன் சற்று கிழக்காக ஒரு வாழைத்தண்டினை நிறுத்தி அதில் குருதி பலி நடத்துகின்றனர். இக்குருதி பலி இரவு ஒன்பது மணிக்கு மேல் நடைபெறும்.

இரவு குருதிபலி நடைபெறுவதற்கு முன்னதாகவே மாலை நேரத்தில் கோயிலை சுத்தம் செய்து, பிரதிட்டையில் மஞ்சள் குழைத்த கலவையினை பூசுவர். குருதி பூசைக்குப் பின் அம்மஞ்சளை பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்குவர். குருதி தர்ப்பணம் முடியும் வரை செண்டை, கொம்பு, குறுங்குழல். இலைத்தாளம், நாதஸ்வரம், தகில் போன்ற வாத்திய கருவிகள் இசைக்கப்படும்.

**வசூரிமாலா தொன்மம்**

காளி - தாருக யுத்தத்தில், தாருகனின் மனைவி மனோதரி, பார்வதியிடம் இருந்து வரத்துடன் பெற்ற வியர்வைத் துளிகளை காளியின் உடம்பில் வீசுகின்றாள். காளிக்கு உடம்பில் வைசூரி நோய் பரவியது. இதனை அறிந்த சிவன் சினமடைந்து மனோதரியை சபித்தார். மனோதரி கண், மூக்கு, முளை, கால்கள் போன்ற உடல் பாகங்களை இழந்து, அகோரமாகக் காட்சியளித்தாள். சிவனின் கண்டத்திலிருந்து காது வழியாகக் கண்டாகர்ணன் தோன்றினார். காளியின் வைசூரியை தன் நாவால் நக்கி குணப்படுத்தினார். காளி சிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றியதால், கண்டாகர்ணனுக்கு சகோதரி உறவு ஆகின்றாள். அதனால் கண்டாகர்ணன் தன்

சகோதரியின் முகத்தை நாவால் தொடவில்லை. இதன் காரணத்தால் காளியின் முகத்தில் அம்மைத் தழும்பு காணப்படுகின்றது என்று மக்கள் நம்புகிறார்கள். காளி வைசூரி மாலாவை மன்னித்து ஏற்றுக் கொண்டாள். அதன் காரணமாக காளி கோவிலுக்கு அருகிலேயே வைசூரிமாலாவும் குடியமர்த்தப்பட்டாள் என்று நம்பப்படுகிறது.

**பூதனும் திரையும்**

கேரளத்தில் மலபார்ப் பகுதிகளாக அறியப்படும் பாலக்காடு, திருச்சூர், மலப்புறம் வட்டாரங்களில் 'பூதனும் திரையும்' என்னும் சடங்குக்கலை பண்டைக் காலந்தொட்டு நிகழ்த்தப்பெறுதலுண்டு. பகவதி கோயில்களில் நடைபெறும் விழாக்களுக்கு முன்னோடியாக இச்சடங்குக்கலை நிகழ்த்தப்பட்டு வருகின்றது. கேரள நாட்டுப்புறப்பகுதிகளில் கோயில் விழாவிற்கான கொடியேற்றப்பட்டவுடன் பல்வேறு கலை வடிவங்கள் நிகழ்த்தப்படுகின்றன. அவை சடங்குகளுடன் பின்னிப்பிணைந்து காணப்படுவன. அவற்றுள் ஒன்றாக 'பூதனும் திரையும்' என்னும் கலை வடிவமும் அமைந்துள்ளது. மண்ணான், பறையன், பாணன் போன்றோர் பூதன் மற்றும் திரை வேடம் அணிந்த நிலையில் ஒவ்வொரு வீடாகச் செல்வர். மக்களுக்கு ஆசியும் வழங்குவர்.

கேரள நாட்டார் மரபில் பூதம் பற்றிய பல்வேறு தொன்மங்கள் வழங்கி வருகின்றன. அவற்றில் ஒன்று பூதத்தைப் பொற்கொல்லன் ஏமாற்றிய கதையாகும். இக்கதை கர்ணகி கதையுடன் தொடர்புடையதாக நம்பப்படுகிறது. கண்ணகிக்கு சிலம்பு செய்கின்ற வேளையில் பொற்கொல்லன் தங்கத்தைத் திருடாமல் இருப்பதற்காக ஒரு பூதத்தை காவல் வைத்தனர். சிலம்பு செய்த பின் கண்ணகியிடம் சிலம்பினைக் கொடுப்பதற்காக பூதம் சென்றது அப்பூதத்தைப் பின்தொடர்ந்து பொற்கொல்லனும் சென்றான். பொற்கொல்லன் செல்கின்ற வழியில் கால் இடறி ஆற்றில் விழுந்ததாக நடித்தான். பொற்சிலம்பிற்கு

பதிலாக பித்தளைச் சிலம்பினை மாற்றி வைத்தான். பிறகு கண்ணகியும், பூதமும் உண்மையை அறிந்தனர். தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த பூதம் சினம் கொண்டு ஒவ்வொரு வீடாக பொற்கொல்லனைத் தேடி நடப்பதாக நாட்டார் நம்புகின்றனர். அதனால் தான் பூதம் ஊர் முழுவதும் சுற்றுகிறது என்று கூறுகிறார்கள்.

கண்ணகியைக் காளி என்றும் நாட்டார் மரபில் வழங்குவதுண்டு. இங்கு 'திரை' என்பது காளியாகக் கருதப்படுகின்றது. எனவே காளிகோயில் விழாவிற்கு நாள் குறித்தாகிவிட்டது என்பதனை நாட்டு மக்களுக்கு அறிவிக்கும் விதமாக 'திரையும் பூதனும்' ஊர் சுற்றி வருகின்றார்கள் என்பது தான் உண்மை.

**பனயனார்க்காவு இயக்கி**

தென்கேரளத்திலுள்ள பனயனார்க்காவு இயக்கி குறித்த கதையாடலில், சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் இயக்கியர் குறித்த தொன்மக் கூறுகள் தென்படுகின்றன. அதற்கான சான்றாக கீழ்வரும் கதையினைக் காணலாம். ஒரு பெண் தன் கணவனால் கொலை செய்யப்பட்டபின் இயக்கியாக மாறினாள். காட்டு வழியில் செல்பவரைக் கொன்று இரத்தம் குடிப்பதையே வாடிக்கையாகக் கொண்டாள். அவளைக் கத்தனார் என்பவர் தன் மந்திர சக்தியினால் கட்டுப்படுத்தி பனயனார்க்காவில் குடியமர்த்தினார்.

திருவனந்தபுரத்திலிருந்து பத்மனாபபுரத்திற்கு போகின்ற வழி ஒரு காட்டு வழியாக இருந்தது. அதில் மனித நடமாட்டம் அதிகம் இருக்காது. அவ்வழியிடையில் ஒரு இயக்கி இருந்ததாகவும், அது அவ்வழியே செல்பவர்களை தன் அழகினால் மயக்கி, ஆசை வார்த்தைகள் பேசி, அவர்களைக் கொன்று விடும் என்றும் அங்குள்ள மக்கள் நம்பினார்கள். இதனால் துன்பமடைந்த மக்கள் மந்திரவாதியிடம் சென்று இயக்கியைக் கட்டுப்படுத்துமாறு கூறினர். ஒருவராலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

கிறித்துவ மதத்தைச் சேர்ந்த கத்தனார் என்பவர் இவ் இயக்கியை தன் மந்திரத்தால் கட்டுப்படுத்த நினைத்தார். இயக்கி இருக்கும் காட்டிற்குச் சென்றார். அங்கு இயக்கி அழகிய பெண் உருவத்தில் தோன்றினாள். கத்தனாரிடம் சுண்ணாம்பு கேட்டாள். கத்தனாரும் ஓர் ஆணியில் சுண்ணாம்பு கொடுத்தார். அதனை வாங்கியதும் மந்திரத்தால் ஆணியை இயக்கியின் தலையில் இறக்கினார். இயக்கி கத்தனாருக்கு அடிபணிந்து அவர் பின்னே சென்றாள்.

கத்தனார் இயக்கியை அழைத்துக் கொண்டு தன் மாமன் வீட்டிற்குச் சென்றார். அங்கு முதியவளாகிய ஒரு மாமி இருந்தாள். அவளுக்குத் துணையாக அழகான பெண் உருவிலிருந்த இயக்கியை தங்க வைத்தார். ஒருநாள் மாமி இயக்கியின் தலைமுடியை ஒழுங்குபடுத்தும் பொழுது, தலையில் இருக்கும் ஆணியைக் கண்டாள். அவ் ஆணியைப் பறித்து எறிந்தாள். உடனே அப்பெண் தன் சுய உருவமாகிய இயக்கியின் தோற்றமடைந்தாள். மாமி இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்தாள். இதனை அறிந்த கத்தனார் இயக்கியைத் துரத்திச் சென்றார். அதற்குள் இயக்கி நெடுந்தூரம் நடந்து 'மாணார்' என்னும் ஆற்றங்கரையை அடைந்தாள், ஆற்றைக் கடந்தாள். கத்தனாரும் தன் மந்திர ஆற்றலால் ஆற்றைக் கடந்தார். இயக்கியிடம் 'அங்கேயே தங்கிவிடு இல்லையென்றால் உன்னை எரித்துவிடுவேன்' என்று கட்டளையிட்டார். இயக்கியும் அந்த இடத்திலே தங்கினாள். அன்றிலிருந்து ஒருவரையும் துன்புறுத்தாமல் அமைதியாகவே காட்சியளிக்கின்றாள்.

இப்பொழுதும் கத்தனாரை ஜாதி, மத பேதமின்றி அனைவரும் வழிபடுகின்றனர். பனயனார்க்காவிலும் இவ்வியக்கி துணைத் தெய்வமாக வழிபடப்பட்டு வருகின்றாள். ஆடவரைத் தன் அழகினால் மயக்கி, அழிக்கின்ற இயக்கியை கோவிலில்

குடியமர்த்தியபின் அமைதியே வடிவானவளாகக் காட்சியளிக்கின்றாள். அனைவருக்கும் ஆசியளிக்கும் தாய்த்தெய்வமாக விளங்குகின்றாள். இக்கதை காட்டும் இயக்கியைப் போன்றே சிலப்பதிகாரத்திலும் சில இயக்கியர் குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன. மதுரைக்குச் செல்லும் வழியில் கோவலன் சில இயக்கியரைச் சந்திக்க வேண்டிய சூழல் உருவானது. அவ்வியக்கியரில் தன் அழகினாலும் பேச்சுத்திறனாலும் ஆடவரை மயக்கிக் கொல்லுகின்ற இயக்கியரும் சாந்த சொரூபமாக விளங்கிய நிலையில் பிறரை துன்புறுத்தாத இயக்கியரும் இடம்பெற்றிருந்தனர். அத்தகு இயக்கியரை நினைவுறுத்தும் விதமாக கேரள நாட்டார் மரபில் காணலாகும் சில இயக்கியரின் தொன்மக் கதைகள் காணப்படுகின்றன.

**சோற்றானிக்கரை இயக்கித் தொன்மம்**

இந்தியாவில் பொதுவாக எல்லா இடங்களிலும் இயக்கி குறித்த நம்பிக்கை இருந்து வருகின்றது. கேரளத்தில் இயக்கி கதைகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று சுந்தர இயக்கி, இரண்டு இரத்த இயக்கி. சுந்தர இயக்கி மோகமும் காமமும் உடையவளாகவும், இரத்த இயக்கி இரத்தம் குடிப்பவளாகவும் அச்சம் தருபவளாகவும், மனிதர்களை அழிப்பவளாகவும் காணப்பெறுகின்றாள். இயக்கி, பாலை, பனை மரங்களில் வசிப்பதாகக் கருதுகின்றனர். இத்தகைய இயக்கியிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஒரே வழி காளி வழிபாடு என்ற நம்பிக்கையும் கேரள மக்களிடையே காணப்படுகின்றது.

சோற்றானிக்கரையிலிருந்து பதினெட்டு கிலோமீட்டர் தெற்கே தலையோலப்பறம்பு என்னுமிடத்தில் வெட்டுகாட்டிரி என்ற பெயரில் ஒரு மனை (நம்பூதிரியின் வீடு) இருந்தது. அம்மனையில் துப்பன் என்ற பெயருடைய ஒரு நம்பூதிரி வாழ்ந்து வந்தார். இவர் வேதங்களை முழுமையாகக் கற்றவர். கதகளி எங்கு

நடைபெற்றாலும் அங்கு காணச் செல்வார். கதகளியின் போது பாடுவார். ஒருநாள் பக்கத்து ஊர்க் கோயிலில் கதகளி நடத்துகிறார்கள் என்று துப்பன் அறிந்தார். கதகளியினைக் காணச் செல்லவேண்டும் என்று முடிவெடுத்தார். வீட்டிலுள்ள கோவிலில் பூசை முடிந்தபின் இரவிலே தான் கதகளி காணப் புறப்பட்டார். போகின்ற வழியில் தன்னிடமுள்ள 'தேவி மகாத்மியம்' என்னும் புத்தகத்தைத் தன் குருநாதரிடம் கொடுத்துவிட்டு செல்லலாம் என்று நினைத்தார். புத்தகத்தை கையில் எடுத்துக்கொண்டு துப்பன் விரைவாக நடந்தார். காட்டு வழியாக ஒற்றையடிப் பாதையில் நடந்தார். கதகளி காணும் ஆசையில் களைப்பையும் பொருட்படுத்தவில்லை. ஒரு ஆற்றையும் வஞ்சியின் மூலம் கடந்து, மீண்டும் நெடுந்தூரம் நடந்தார். அங்கு ஒரு ஆலமரத்தின் அடியில் ஒரு அழகிய பெண் நிற்பதைக் கண்டார். அவள் ஒரு குழந்தையைத் தோளில் சுமந்தபடி நின்றாள். துப்பன் அவளை வியப்புடன் நோக்கி, நீ யார்? இந்த இரவில் இக்காட்டில் நீ தனியாக நிற்கக் காரணம் என்ன? என்று கேட்கின்றார். அதற்குப் பதிலாக அப்பெண் என் பெயர் காமாட்சி, நான் கோவிலுக்குப் பக்கத்திலுள்ள ஒரு குடிசையில் வாழ்ந்து வருகின்றேன். நான் என் குழந்தையைக் கர்ப்பமாக இருந்த போதே என் கணவர் என்னை விட்டுவிட்டு போய்விட்டார். அவர் ஒரு கதகளிப் பைத்தியம், அதனால் கதகளி நடக்கின்ற இந்த இடத்திற்கு வந்திருப்பார் என்று, நினைத்து நான் அவரைத் தேடிச் செல்கின்றேன் என்று கூறினாள். துப்பனும் அந்தப் பெண்ணும் பேசிக்கொண்டே சென்றார்கள். வழியில் தன் குருநாதர் இல்லத்தைக் கண்டதும் துப்பன் தன் கையிலுள்ள புத்தகத்தைக் கொடுத்துவிட்டு வருகிறேன் என்று கூறினார்.

துப்பன் தன் இல்லத்திற்கு வருவதற்கு முன்னரே, துப்பன் ஒரு ஆபத்தில் சிக்கியுள்ளான் என்பதைக் குருநாதர் புரிந்து கொண்டார். துப்பன் தன் குருநாதரிடம்

புத்தகத்தைக் கொடுத்தார். உடனே குருநாதர் உன்னுடன் வந்தது யார் உள்ளே அழைத்து வா, எனக்குப் பார்க்க வேண்டும் என்று கூறினார். மீண்டும் துப்பனிடம் என் தோளைத் தொட்டுக் கொண்டே உன்னுடன் வந்த பெண்ணைப் பார் என்று கூற, துப்பன் அக்காட்சியைக் கண்டவுடன் மயக்கமுற்று விழ்ந்தான். அப்பெண்ணின் தோற்றம் பூதாகரமான உடம்பும், நீண்ட கைகளும், வாள் போல் வளைந்த பற்களும், செம்மையான நீண்ட தலைமுடியும், தீப்பொறி பறக்கின்ற கண்களும் என்று அச்சமூட்டுகின்ற தோற்றத்தில் காணப்பட்டது.

துப்பனின் மயக்கநிலை தெளிந்ததும், குரு துப்பனிடம் உன்னை சோற்றானிக்கரை அம்மன்தான் காப்பாற்றுவார் என்று கூறினார். மந்திரம் சொல்லி ஏழு கற்களைக் கையில் கொடுத்து துப்பனை அனுப்பினார். துப்பனும் அக்கற்களை இயக்கியின் மீது வீசியபடியே ஓடினான். வழியிடையில் சோற்றானிக்கரை அம்மனின் பக்தன் வசிக்கும் பள்ளிப்புறத்து மனையை அடைந்தான். அங்கு பிரம்ம முகூர்த்தத்தில் பெரியவர் ஒருவர் குளித்து முடித்து, துண்டால் தலையைத் துடைத்துக்கொண்டிருந்தார். நடந்தவற்றை துப்பன் பெரியவரிடம் கூறினான். பெரியவர் தன் துண்டை துப்பனின் கையில் கொடுத்து சோற்றானிக்கரை பகவதி கோயிலுக்குள் சென்று விடு, உன்னை இயக்கியால் ஒன்றும் செய்ய முடியாது தைரியமாகச் செல் என்று கூறினார். துப்பனும் கோயிலை அடைந்து உயிர் தப்பினான்.

சோற்றானிக்கரையம்மன் இயக்கியை வாளால் வெட்டி தன் பக்தனைக் காப்பாற்றினாள். இயக்கி முக்தி பெற்றாள். இயக்கியின் சாபம் தீர்ப்பதற்காக பள்ளிப்புறத்து மனையிலுள்ள திருமேனி (நம்பூதிரி) இயக்கியை கணயனூர் மகாதேவ சிவ ஆலயத்தில் குடியமர்த்தினார். தினமும் பூசை நடத்த ஏற்பாடு செய்ததாகவும் நம்பப்படுகிறது. மனிதனுக்கு துன்பம் தருகின்ற இயக்கி, தெய்வ அருள் பெற்று,

எல்லோராலும் தெய்வமாக வழிபடப்பட்டு வருகின்றாள். இங்கு நாட்டார் மரபில் காணப்பட்ட 'தாக்கணங்கு' குறித்ததொரு கதை மரபு காலப்போக்கில் சைவ சமயம் பெருமரபோடு இணைந்திருப்பதைக் காணமுடிகின்றது.

**தொகுப்புரை**

தமிழ் செவ்விலக்கிய ஆய்வுகளில் தொன்மங்களும் பழமரபுக் கதைகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் கதை ஓர் உயர்ந்த வகைக் கற்பு நெறியையும் வீர உணர்வினையும் வெளிக்காட்டுகின்றது.

கண்ணகி கதை வாய்மொழியாக வழங்கப்பட்ட பின்னரே காப்பியமாக இயற்றப்பட்டிருக்க வேண்டும் கண்ணகி கதையானது தமிழகத்தில் மட்டுமின்றி கேரளத்தின் அனைத்து நிலப்பரப்புகளிலும் மிகுதியாக வழங்கப்பட்டு வருகின்றது. கண்ணகி கதை காலந்தோறும் மாற்றங்களுக்குட்பட்டு வழங்கப்பட்டு வந்துள்ளது என்பதனை கேரள நாட்டார் கதை பாடல்கள் தெளிவுறுத்துகின்றன.

கண்ணகிக்கு சேரன் செங்குட்டுவன் வஞ்சியில் கோயில் எடுத்ததாக சிலப்பதிகாரம் கூறுகின்றது. அதன் விளைவாகவே கேரள நாட்டார் மரபில் கண்ணகி பற்றிய கதைகள் பரவலாக வழங்கி வருகின்றன.

கேரள நாட்டார் கண்ணகியை வீரமங்கையாகவும் பத்தினித் தெய்வமாகவும் கருதுவதனை அறிய முடிகிறது.

கேரள நாட்டார் கதைப்பாடலில் கண்ணகியை நல்லம்மா, பொன்மகள், கர்ணகை, காளி, தேவி என்னும் பல்வேறு பெயர்களில் அழைக்கிறார்கள். கோவலன் நல்லச்சன், பொன்மகன், கோவிலன், பாலகன் என்னும் பெயர்களில் அறியப்படுகின்றான்.

கேரள நாட்டாரிடையே வழங்கி வருகின்ற கண்ணகி கதைகள் சிலப்பதிகாரக் கதையிலிருந்து மாறுபட்டு காணப்படுகிறது. சிலப்பதிகார கதையின் நிகழ்வு சேர சோழ

பாண்டிய நாட்டில் நிகழ்ந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கேரள நாட்டார் கதைப்பாடலில் கதை நிகழ்வு கேரளத்தில் தொடங்கி கேரளத்தில் நிறைவு பெறுவதாகக் காணப்படுகிறது.

ஒரு பெண் தன் கணவனுக்கு நேர்ந்த அநீதியை தட்டிக் கேட்கக் கூடிய தன்மை கேரள நாட்டார் பழ மரபுக் கதைகளில் மாற்றமின்றி தொடர்ந்து வருகின்றது.

கோவலன் சிலம்பினை விற்பதற்கு முயற்சி செய்யும் நிகழ்வு அனைத்து கதைகளிலும் ஊடுருவிக் கிடக்கின்றது.

கேரள நாட்டார் கதைகளில் பாண்டிய மன்னனின் பொற்கொல்லன் சிலம்பு திருடிய நிகழ்வு பதிவாகியுள்ளது.

கேரள நாட்டார் கண்ணகியை காளியின் அம்சமாகவே கருதுகின்றனர். காளி தாருகக் கதையுடன் கண்ணகி கதையை இணைக்கின்றனர். காளி, தாருகன் என்னும் தீமையை அழித்து உலகில் நன்மையை நிலை நாட்டுபவளாகக் காணப்படுகின்றாள்.

கதை சொல்பவரின் வட்டாரச் சூழலும் மொழியும் அவரது கதைகளோடு கலந்து கொள்வதனைக் காணமுடிகின்றது..

ஆடவர்களை தன் அழகால் மயக்கி துன்பம் செய்கின்ற வனசாரினி என்னும் இயக்கியினை சிலப்பதிகாரம் குறிப்பிட்டுள்ளது. அங்ஙனமே கேரள நாட்டாரிடையே இயக்கி பற்றிய தொன்மம் பரவலாகக் காணப்படுகின்றது. இயக்கியை சைவ வைணவ மதங்களுடன் இணைந்த தாய்த்தெய்வமாகவும் கருதுகின்றனர்.

சிலப்பதிகாரத்தில் மூன்று காண்டங்களிலும் பூதம் பற்றிய செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. புகார் நகரத்திற்கு பூதம் எங்கனம் காவலாகியது எனும் தொன்மமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கேரள நாட்டாரிடையே பூதம் பற்றிய தொன்மம் இன்றும் வழங்கி வருகின்றது. பூதங்களைக் காவல் தெய்வங்களாகவும் காளியின் பரிவாரங்களாகவும் கருதி வழிபட்டு வருகின்றனர்.

# இயல் – இரண்டு

## வழிபாடு

## வழிபாடு

பழங்கால மனிதன் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தினான். இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டான். அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்க, இயற்கையை வழிபட ஆரம்பித்தான். இதனடிப்படையில் இயற்கை வழிபாடுகளும், விழாக்களும் தோற்றம் பெற்றன. **"இயற்கையின் ஆற்றல்களாகிய கதிரவன், மதி, மழை, மின்னல் முதலான பொருட்களைக் கண்டு ஏற்பட்ட வியப்பு, அச்சம், அதிர்ச்சி என்னும் உள்ளத்து உணர்வுகளே சமயம் தோன்றக் காரணமாயின."** (டா.சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.222) இதன் அடிப்படையிலேயே பஞ்சபூதங்களையும் வழிபடக்கூடிய மரபு தோன்றியிருக்க வேண்டும்.

இயற்கையினை தன் வயப்படுத்தும் முயற்சியாக பலிகளும், விழாக்களும் தோற்றம் பெற்றன. காலப்போக்கில் இயற்கைப் பொருள்களுக்கு உருவம் கொடுத்து வழிபடத் தொடங்கினர். சிக்மண்ட் பிராய்டு அவர்களும் 'இயற்கையிடமும் மரணத்திற்குப் பின்வரும் நிலையிலும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம்' என்கிறார். இயற்கைப் பொருளில் ஆவி உறைவதாக புராதன மனிதன் நம்பினான்.

**"புராதன சமுதாயம் அழிந்தவுடன் தோன்றிய இனக்குழு அமைப்புகளும் வர்க்கம், அரசு ஆகியவற்றின் தோற்றமும் எல்லாம் வல்ல வலிமைமிக்க தெய்வங்களை உருவாக்கின. இவ்வாறு தோன்றிய தெய்வங்களும் ஆவி என்ற பொருளை உடையனவாய் கற்பனை செய்யப்பட்டன. இத்தெய்வங்களின் ஆவி, பிற ஆவிகளை விட உயர்வாக மதிக்கப்பட்டு 'தெய்வீக ஆவி, புனித ஆவி' என்றழைக்கப்பட்டன."** (ஆ.சிவசுப்பிரமணியன், மந்திரமும் சடங்குகளும், ப.28) இவ் ஆவிகள் மலைகளிலும்,

மரங்களிலும், நீர் நிலைகளிலும் தங்குவதாக மக்கள் நம்புகின்றனர். இவை மக்களை வருத்தும் போது 'தாக்கணங்கு' என்று கூறுகின்றனர்.

இயற்கையைக் கட்டுப்படுத்த, மக்களை நோய்வாய்படுத்த, நோய் நீக்கி நலம்பெற, மானுட நடத்தைகளை ஒழுங்கமைக்க, உளநோய்களை நீக்க, சமூகத்திற்கு மறுமலர்ச்சியூட்ட வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

**"தெய்வ வழிபாடுகளை அல்லது ஆசாரங்களைக் கடைபிடிப்பதால் மனிதர்கள் சில குறிப்பிட்ட நன்மைகளை அடைய முடியும் என்று எல்லா வரலாற்றுக் காலகட்டங்களையும் சேர்ந்த மனிதர்கள் நம்பிவந்துள்ளனர். உடல் நலமும், நோயற்ற நீண்ட வாழ்வும் பெறுவதற்காகவும், தங்கள் கால்வழி தொடர்ந்து நீடித்து நிலைக்க, குழந்தைப் பேற்றுக்காகவும், செல்வவளம் பெறுவதற்காகவும், ஆடு மாடுகள் பெருகுவதற்காகவும், இறந்த பின்னர் வேறுலகம் போய்ச் சேர்வதற்காகவும் அல்லது நரகத்திற்கு போய்ச் சேராமல் இருப்பதற்காகவும் மீண்டும் பிறவாமல் இருப்பதற்காகவும் இந்த வழிபாடுகள் நிகழ்த்தப்படுகின்றன."** (தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல்: சில அடிப்படைகள்,ப.398) இத்தகு தெய்வ வழிபாடுகள் பழந்தமிழகத்தில் எவ்வண்ணம் நிகழ்ந்தன என்பதை சங்க இலக்கியமும், சிலப்பதிகாரமும் மணிமேகலை முதலான காப்பியங்களும் பதிவு செய்து காட்டுகின்றன.

வழிபடு தெய்வங்களின் இயல்புகள், மனிதர்களிடம் அத்தெய்வங்களுக்குள்ள உறவுகள் ஆகியன குறித்து சிலப்பதிகாரம் பல தரவுகளைத் தந்திருக்கின்றது. அவற்றை நேரடியாக உணர்ந்தறியும் விதமாக கேரள நாட்டார் தெய்வங்களுக்கான வழிபாடுகள் காணப்படுகின்றன. அதனால் ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுப் பழமை மிக்க வழிபாட்டு மரபுகளின் அறுபடாத தொடர்ச்சியினை இன்றும் காண்பதற்கான வழிவகை

கிடைத்திருக்கின்றது. எனவே அவற்றை ஆய்ந்து காணும் விதமாக இவ்வாய்வு அமைகின்றது.

**இயற்கை வழிபாடு**

பண்டைத்தமிழர்கள் இயற்கையின் ஆற்றல் மீது பக்தி கொண்டு அதனை வழிபட்டுள்ளனர். மலை, கடல், ஆறு, மரம், ஞாயிறு, திங்கள், விலங்குகள் முதலியனவற்றை வணங்கியுள்ளனர் என்பதனை பழந்தமிழ் இலக்கியங்கள் தெளிவுறுத்துகின்றன.

> **"அணங்கொடு நின்றது மலை"** (நற்.165:3)
> **"காடும் காவும் கவின் பெறு துருத்தியும்"** (முருகு.223)
> **"மன்ற மராஅத்த பேஎம் முதிர் கடவுள்"** (குறுந்.87:10)
> **"பெருங்கடற் தெய்வம் நீர்நோக்கித் தெளித்து"** (கலி.131:1)
> **"ஞாயிற்றுப் புத்தேன்"** (கலி.108:13)
> **"திங்கள் புத்தேன்"** (புறம்.27:14)

முதலான சங்க இலக்கியப் பதிவுகள் பண்டைத் தமிழர் சமய மரபில் இயற்கை வழிபாடு மேலோங்கி இருந்ததைத் தெளிவுபடுத்துகின்றன.

**சிலப்பதிகாரம் காட்டும் இயற்கைசார் வழிபாடு**

பழந்தமிழர்கள் சூரியன், சந்திரன் முதலான இயற்கை சக்திகளுக்கும் நாகம், யானை முதலிய விலங்கினங்களுக்கும் கோயில் அமைத்து வழிபட்டார்கள் என்பதற்கான சான்றுகள் சிலப்பதிகாரத்திலும் காணப்படுகின்றன.

> **"……… வெள்யானைக் கோட்டம்**
> **புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம் பகல்வாயில்**
> **உச்சிக் கிழான்கோட்டம் ஊர்க்கோட்டம் வேற்கோட்டம்**
> **நிக்கந்தக் கோட்டம் நிலாக்கோட்டம் புக்கெங்கும்"**

(சிலப்.கனாத்திறம் ,9-13)

என்ற பாடலடிகளில் சூரியனுக்காக எடுக்கப்பட்ட கோயிலை 'உச்சிக்கிழான் கோட்டம்' என்றும் சந்திரனுக்காக எடுக்கப்பட்ட கோவிலை 'நிலாக்கோட்டம்' என்றும் இளங்கோ கூறிச்செல்கின்றார். அங்ஙனமே யானை, நாகம் முதலியவற்றுக்காக எடுக்கப்பட்ட யானைக்கோட்டம், நாகர்கோட்டம் முதலானவற்றையும் குறிப்பிடுவது சுட்டத்தக்கது. இயற்கை வழிபாட்டின் இன்றியாமையினை சிலப்பதிகாரத்தின் மங்கல வாழ்த்துப்பாடல் மூலமாகவும் அறிந்து கொள்கின்றோம்.

**"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும் "**

(சிலப்.மங்கலவாழ்த்துப் பாடல்,1:1)

**"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்"**

(சிலப்.மங்கல வாழ்த்துப் பாடல்,1:4)

**"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்"**

( சிலப்.மங்கல வாழ்த்துப் பாடல்,1:7)

என்ற வாழ்த்துப்பாடலை அனைவரும் அறிவர். மேற்சுட்டிய இயற்கை வழிபாட்டு முறைகள் இன்றுவரை மக்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட கேரள நாட்டார் வழிபாட்டு முறைகளிலும் இயற்கை வழிபாட்டு நெறிகள் இரண்டறக் கலந்து காணப்படுகின்றன.

**சூரிய வழிபாடு**

பூமியில் உயிர்கள் வாழ்வதற்கான ஆற்றல் தரும் கிரகமாக சூரியன் உள்ளது. தொல்காப்பியம் சூரியனை 'கொடிநிலை' என்று சுட்டுகிறது.

சங்க இலக்கியமாகிய நற்றிணையில்,

**"முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி**
**ஏமுற விளங்கிய சுடரினும்"** (நற்.283:6-7)

எனும் பாடலடிகள், பலரும் வணங்குமாறு கடலின் மேல் தோன்றிய ஞாயிறு என்று குறிப்பிட்டுள்ளது. இதனால் சங்ககால மக்கள் சூரியனை வழிபட்டிருந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

**"இந்தியாவில் சூரியனுக்கென்றே ஒரு சில ஆலயங்கள் உள்ளன. இவற்றுள் முக்கியமானது ஒரிசாவில் 'கொனார்க்' 'கயாவில் தட்சிணார்க்கா,' ஆந்திராவில் 'அரசவல்லி,' குஜராத்தில் 'மொதேரா,' அஸ்ஸாமில் சூர்ய பஹார், மத்திய பிரதேசத்தில் உனாவோ, கேரளாவில் 'ஆதித்யபுரம்' ஆகியனவாகும்.**

**சூரியன் ஏழு குதிரைகள் பூட்டிய 'காலம்' என்ற ஒற்றைச் சக்கரத் தேரில் பவனி வருபவராகப் புராணங்கள் கூறுகின்றன. ரத சாரதியாக காசியப முனிவரின் மகன் அருணன் விளங்குகிறார். இவருக்கு இடுப்பிற்கு கீழ் அங்கங்கள் கிடையாது என நம்புகின்றனர். 'சௌர' மதத்தினர் சூரியனை வணங்குகிறார்கள். மார்க்கண்டேய புராணம் சூரிய வழிபாடு பற்றி விளக்கியுள்ளது."** (தெய்வீகா, சூரிய வழிபாடு, இணையம்)

சிலப்பதிகாரம் 'உச்சிக்கிழான் கோட்டம்' என்று சூரியனின் கோவிலைக் குறிப்பிட்டுள்ளதால் பழந்தமிழர்கள் சூரியனுக்கு கோயிலெடுத்து வழிபட்ட செய்தி உறுதிப்படுகின்றது. அவ்வழிபாடு இன்று வரை கேரளா முதலான பல இடங்களிலும் தொடர்ந்து கொண்டிருப்பதைக் காண்கின்றோம்.

**கேரளத்தில் சூரிய வழிபாடு**

கேரளாவிலுள்ள கோட்டையம் மாவட்டம் இரவி மங்கலம் என்னும் இடத்தில் 'ஆதித்யனார் கோவில்' உள்ளது. இவ்வூர் சூரியனின் பெயரால் 'ஆதித்யபுரம்' என்றே அழைக்கப்படுகிறது. அங்குள்ள கோயிலில் ஒரு வட்டவடிவமான கருவறை உள்ளது. அங்கு சூரியனின் சிலை உள்ளது, அது கல்லால் ஆனது. மேற்கு நோக்கிய நிலையில்

காணப்படுகின்றது. எண்ணெய் அபிஷேகம் செய்தால் ஒரு துளி கூட இல்லாமல் வற்றிவிடும். சூரிய பகவானுக்கு நான்கு கைகள் உள்ளன. பின் வலது கையில் சக்ராயுதமும், பின் இடது கையில் சங்கும் காணப்படுகின்றன. முன் இரு கைகளும் தவமுத்திரையுடன் காட்சியளிக்கின்றன. இங்கு நவகிரகங்கள் இல்லை. கார்த்திகை, சித்திரை மாதங்களில் வரும் ஞாயிற்றுக்கிழமை சிறப்பானது. எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் வழிபாடு நடைபெறுகின்றது. சிவப்பு சந்தனம் முக்கிய வழிபாடாக உள்ளது. கண்நோய், தோல் நோய் போன்ற அனைத்து நோய்களையும் சூரிய பகவான் தீர்ப்பார் என்று நம்புகிறார்கள்.

உலகின் பல பாகங்களிலும் சூரிய வழிபாடு இன்றும் இருந்து வருகின்றது. காயத்ரி மந்திரம் சூரியனை வழிபடுவதற்கான மந்திரம். அறிவியல் முறைப்படி சூரிய ஒளியிலிருந்து மனிதனுக்குத் தேவையான வைட்டமின் 'டி' கிடைக்கிறது.'சூரிய குளியல்' என்பது இதற்குச் சான்றாகும். கிராமங்களில் காலையில் சூரியனை வணங்கும் வழக்கம் இன்றும் தொடர்கின்றது எனலாம்.

**மழையின் இன்றியமையாமை**

உலக உயிர்கள் வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளில் ஒன்று நீர். உலக நாகரீகங்கள் அனைத்தும் நதிக்கரை நாகரீகங்களே. கிணறு, குளம், ஏரி, ஆறு என பல நீர் நிலைகள் இருப்பினும், இவைகளுக்கெல்லாம் ஆதாரமாக இருப்பது மழை தான். எனவே, இளங்கோவடிகள் சிலப்பதிகார மங்கல வாழ்த்தில் 'மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்' என்று மழையினைப் போற்றுகின்றார். இதனைத் திருவள்ளுவர்,

**"வான் நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று"** (திருக்குறள், வான்சிறப்பு,11)

என்னும் குறளில் மழையானது உலக உயிர்களுக்கெல்லாம் அமிழ்தம் போன்றது என்று மழையை சிறப்பித்துள்ளார்.

**"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை"** (திருக்குறள் .உழவு, 14)

என்னும் குறள் உலகம் ஏர்த்தொழிலின் பின் நிற்கின்றது, அதனால் உழவே சிறந்த தொழில் என்று உழவின் பெருமையை எடுத்துரைத்துள்ளது. உழவர்களின் உழைப்பைப் பயனாக்குவது மழை. தேவையான அளவு பெய்யும் மழை பயிர்களைச் செழிக்கச் செய்து, அவர்கள் வாழ்வை வளப்படுத்துகிறது. பெய்யவேண்டிய பருவத்தில் மழை பெய்யத் தவறினால் உழவர்கள் அதனை எதிர்பார்த்துப் புலம்புவார்கள். கேரளத்தில் நிகழ்த்தப்பெறுகின்ற பூரக்களியின் ஒரு பகுதியாகிய 'பள்ளுக்களி'யில் பள்ளனும், பள்ளியும் மழையைப் பற்றிப் பாடுகின்றனர்.

**பூரக்களிப்பாட்டில் மழை**

வடமலபாரில் கொண்டாடப்பட்டு வரும் பூரவிழாவில் காவுகளிலும், கழகங்களிலும் பூரவிழாவின் ஒரு பகுதியாகப் பூரக்களி (பூரவிளையாட்டு) நிகழ்த்துகிறார்கள். கார்த்திகை நாள் முதல் பூரம் நாள் வரையில் இப்பூரவிழா நிகழ்த்தப்படுகின்றது. விழாவின் இறுதி நாளான பூரம் நாளன்று 'பள்ளுகளி' நிகழ்த்துகிறார்கள். சிவனும் பார்வதியும் பள்ளன், பள்ளியாக வயலில் வேலைசெய்வது 'பள்ளு' களியின் அடிப்படையாக அமைந்துள்ளது. உழவுத் தொழிலுக்கு அடிப்படை மழை நீர். அம்மழையைப் பெய்விக்க மன்னர்கள் இந்திரனை வேண்டினர் என்ற ஒரு கதை நாட்டுப்புற மக்களிடையே நிலவிவருகின்றது.

சேர சோழ பாண்டியர் என்னும் மூன்று அரசர்களும் இந்திரனைக் கண்டு விதைகளும், மழையும் தங்களுக்கு தருமாறு வேண்டினர். இந்திரனும் அதனைக் கொடுத்தார். அதனால் தான் இவ்வாறு மழை பொழிகின்றது என்று நாட்டார் பாடலொன்று குறிப்பிடுவதுண்டு.

பூரக்களியின் போது நாட்டார் பாடுகின்ற ஒரு பள்ளுப் பாடல் கீழ்வருமாறு,

**"அப்பொழுதே தேவராஜன் அருளக்கேட்டு**
**மண்டி வந்தான் எண்திசையும் உள்ள மேகம்**
**எழுவதோடு இரண்டும் ஒன்றாக வணங்கும் நேரம்**
**அருள் செய்தான் அவர்களுக்கு தேவராஜன்"**

(டா.எம்.வி.விஷ்ணுமூர்த்தி, நாட்டறிவுப்படனங்கள்,ப.26)

இவ்வாறு தேவேந்திரனின் அருளால் மழை பெய்ததாகவும், அதனால் வயல்களில் மழை நீர் நிறைந்தது. மீன்கள் துள்ளி விளையாடின என்று பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டார் பாடல்களில் மழைத் தெய்வத்தை வழிபட்டு, விவசாயம் செழித்ததாக சித்திரிக்கப்பட்டுள்ளது.

**மரவழிபாடு**

இயற்கைப் பொருட்களிலும், பௌதீகப் பொருட்களிலும் ஆவிகள் உறைந்துள்ளன என்றும் அவை ஆற்றல் மிகுந்தனவாக உள்ளன என்றும், மனித வாழ்விற்கு காரணமாக அமைகின்றன எனவும், தொல்பழங்கால மக்கள் நம்பினர். ஆல், கடம்பு போன்ற மரங்களில் கடவுள் உறைந்திருந்ததாக பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

**"அணங்குடைக் கடம்பின் முழு முதல் தடிந்து"** (பதிற்றுப்பத்து, 8:5)

என்னும் அடிகளில் பகைவர்களது, அணங்கு வீற்றிருக்கக்கூடிய கடம்பு மரத்தினை நெடுஞ்சேரலாதன் வெட்டி வீழ்த்தினான் என்று குறிப்பிட்டுள்ளது. இதன் மூலம் கடம்ப மரத்தில் அணங்கு உறைந்திருந்ததை தெளிவுறுத்துகிறது.

**"ஆல் அமர் கடவுள் அன்னநின் செல்வம்**
**வேல் கெழு குருசில்! கண்டேன் ஆதலின்** (புறம்.199: 9-10)

மேற்கண்ட பாடலடிகள், ஆலமர் செல்வன் சிவபெருமானின் பெருஞ்செல்வம் போல பாண்டிய நன்மாறனின் செல்வம் என்று குறிப்பிட்டுள்ளது. ஆலமரத்தின் அடியில் சிவபெருமான் வீற்றிருக்கிறார் என்பதும், சிவபெருமானுடன் ஆலமரமும் வழிபடப்பட்டது என்பதும் உணரத்தக்கது.

**கந்து வழிபாடு**

இயற்கை வழிபாடாகிய மரவழிபாட்டுடன் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்னும் மூன்றையும் தொடர்புபடுத்திக் காணமுடியும்.

**"கொடிநிலை கந்தழி வள்ளி என்னும்**
**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்** (தொல், புறம். 3: 85)

என்னும் நூற்பா இங்கு கவனிக்கத்தக்கது.

**"கொடிநிலை- காட்டில் அடர்ந்து வளர்ந்த மரங்களின் மீது இயற்கையாகவே கொடிகள் சுற்றிப் படர்ந்து நெடிது உயர்ந்து சென்றிருப்பது இயல்பு. இதனைக் கண்ட அக்கால மக்கள் மன உணர்வில், அப்போது அவர்களுக்குக் கிடைத்த பட்டறிவிலும் நூலறிவிலும் கொடி சுற்றிப் படர்ந்துள்ள மரங்களின் மீது தெய்வத் தன்மை பொருந்தி இருப்பதாக மதித்துக் கடவுளுக்குச் சமமாகக் கருதினர்.**

**கொடியால் படரப்பட்ட மரம் காய்ந்த பின்னும் அந்த மரத்தின் அடிப்பகுதியிலும் தெய்வம் குடிகொண்டிருப்பதாக மதித்து வழிபட்டனர். இதுவே கந்து வழிபாடாக மாறியது"** (தினமணி.com)

தெய்வமாக வணங்கிய மரம் காய்ந்த பின்னும் அதனை தெய்வமாகவே கருதி வழிபடுகின்றனர். மரம், கொடி, உலர்ந்த மரத்தின் துண்டு ஆகியன தெய்வமாக வழிபட்டு

வந்ததனை அறியமுடிகிறது.**"ஊரின் நடுவே அமையும் மன்றம், அம்பலம், பொதியில் ஆகிய இடங்களில் கந்து (மரத்துண்டு) ஒன்றினை நிறுவி தெய்வமாக வணங்கப்பட்டது. இது சித்திர வேலைப்பாடுடன் அமைந்ததால் 'எழுது எழில் அம்பலம்'** (பரி.18:28) **எனப்பட்டது. ஊருக்குப் புதிதாய் வருபவர் தங்குவதும், அங்கு மகளிர் வந்து வழிபாடு செய்வதும் உண்டு** (பட்டினப்,246:4) **மரத்திலிருந்து தறித்து எடுக்கப்பட்ட தூண் போன்ற உருவத்தில் தெய்வம் உறைவதாக எண்ணப்பட்டது. இதுவே கந்து வழிபாடாக இருந்தது. அதிலிருந்தே கற்சிலை தோன்றியது."** (பக்தவத்சல பாரதி, இலக்கிய மானிடவியல்,ப.182)

சிலப்பதிகாரத்தில் கண்ணகி வேங்கை மரத்தடியில் தெய்வமாகி நின்றதனைப் , பற்றிய தரவுகள் கிடைக்கின்றன.

> **"மலை வேங்கை நறுநிழலின் வள்ளி போல்வீர்"** (சிலப்.குன்றக், 3)
> **"நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழோர்**
> **தெய்வம் கொள்ளுமின்"** (சிலப்.குன்றக்கு.13- 14)
> **"கான நறுவேங்கைக் கீழாள் கணவனோடும்**
> **வானக வாழ்க்கை மறுதரவோவில்லானே"** (சிலப்.குன்றக்.22- 23)

என்னும் பாடலடிகளில், வேங்கை மரத்தினடியில் நின்ற கண்ணகியைக் குறமகளிர் தங்கள் குலதெய்வமாகிய வள்ளியாகவே நினைத்து வணங்கினர். இதன் மூலம் வேங்கை மரத்தின் அடியில் நின்ற கண்ணகியும், வேங்கை மரமும் தெய்வமாகவே கருதப்பட்டது என உணரமுடிகின்றது. அன்றிலிருந்து கேரள மக்கள் வேங்கை மரத்தினை வீட்டு உபயோகங்களுக்குப் பயன்படுத்தாமல் கோயில் பயன்பாடுகளுக்கு மட்டுமே பயன்படுத்தி வருவதும் உளங்கொளத்தக்கது.

குன்றக்குரவையில், வேலன் வெறியாடலின் போது வெறியயர் களத்திற்கு வருகின்ற முருகனை 'ஆலமர் செல்வன் புதல்வன்'(சிலப்.வஞ்சி காண்டம், 16வது அடி)

என்று குறிப்பிட்டுள்ளது. ஆலமரத்தின் அடியில் வீற்றிருக்கும் சிவபெருமானின் மகன் என்பதில் சிவபெருமானும், ஆலமரமும் தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளது. இன்றும் ஆலமரம் வழிபாட்டுடன் தொடர்புடைய மரமாகவே மக்களால் எண்ணப்பட்டு வருகின்றது.

சிலப்பதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது. அதாவது கண்ணகி தெய்வமாக நின்ற வேங்கை மரத்தடியும் தெய்வமாகவே கருதப்பட்டது. அதுபோல கேரளத்திலும் தெய்வத்தோடு தொடர்புடைய மரங்களும், தெய்வமாகவே கருதப்பட்டு வருகின்றன.

'காவு' என்னும் சொல் மரக்கூட்டம் என்று பொருள்படும் (டா.எம் .வி.விஷ்ணு நம்பூதிரி,ஃபோக்லோர் நிகண்டு,ப.100). மரவழிபாட்டிலிருந்தே காவுகள் தோன்றியது எனலாம். பகவத் கீதையில் 'மரங்களில் அரசமரமும் நானே' (அத்தியாயம் 10 :26) என்று ஸ்ரீகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார். மரத்தை தெய்வமாக எண்ணியதன் அடிப்படை இதன்மூலம் புலனாகின்றது.

"கேரளத்தில் குறிப்பிட்ட சில மரங்களில் குறிப்பிட்ட தெய்வங்கள் வாழ்வதாக நம்பப்படுகின்றன. பேய், பூதங்கள் வசிக்கின்ற மரங்கள் பாலை எனவும், எமதர்மனுடன் தொடர்புடைய 'குளிகனி'ன் இருப்பிடம் செண்பகமரம் எனவும், வேப்ப மரத்தில் காளி உறைவதாகவும் நம்பப்படுகிறது. செண்பக மரத்தில் இரும்பு விளக்கு பதித்து வைக்கின்ற வழக்கமும் உண்டு. கோயில்களிலும், பள்ளியறைகளிலும், எட்டிமரம், வில்வமரம், ஆலமரம் போன்றவை காணப்படுகின்றன. சில கோயில்களில் 'தலவிருட்சங்கள்' காணப்படுகின்றன. இது மரவழிபாட்டின் தொடர்ச்சியே எனலாம். வடமலபாரில்

தெய்யாட்டங்கள் பொது இடங்களிலுள்ள மரத்தினடியில் நிகழ்த்தப்படுகின்றன. காலிச்சன் தெய்யம் எட்டி மரத்தினடியில் நிகழ்த்துவது. இதற்குச் சான்றாகும்.

தமிழகத்தில் ஆல், வேம்பு,கடம்பு போன்ற மரங்கள் தெய்வமாக வழிபடப்பட்டு வருகின்றன. கேரளத்திலும் 'காவுகள்' என்ற பெயரில் மரங்களை பாதுகாத்து வருகின்றனர். குறிப்பாக 'பாம்புக்காவுகள்' இதற்குத் தக்க எடுத்துக்காட்டாகும். கேரளாவில் பாம்புக்காவுகளிலுள்ள மரங்கள், செடி, கொடிகள் போன்றவற்றை ஒரு வகையிலும் அழிக்க மாட்டார்கள் இதன் மூலம் இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள நெருக்கமான தொடர்பினை அறியலாம். அதனுடன் சிலப்பதிகாரம் குறித்துக் காட்டிய **"புகர்வெள்ளை நாகர்தங் கோட்டமாகிய"** நாகர் கோயில்கள் கேரளத்தில் அதிகமாகவே காணப்படுகின்றன. அவையே தற்காலத்தில் 'பாம்புக்காவுகள்' என்றறியப்படுகின்றன. பாம்பு வழிபாட்டுடன் தொடர்புடைய நாக களங்கள். புள்ளுவன் பாட்டு முதலிய விடயங்களும் குறிப்பிடத்தக்கன. அவை கேரள நாட்டார் மரபில் தனியிடம் பிடித்திருக்கின்றன.

**பூதவழிபாடு**

பூதவழிபாடு மிகத் தொன்மையான ஒரு வழிபாடாகும். இது இயற்கை வழிபாட்டிலிருந்து முகிழ்த்ததாக இருக்கலாம். 'பூதம்' என்பதற்கு ஒரு தேவதாசி என்று அபிதான சிந்தாமணி பொருள் தருகின்றது. 'பூதங்கள் இறைவன் ஆணையால் திக்குகளைக் காக்க நியமிக்கப்பட்டவை.' அவை ஒவ்வொரு திசைக்கும் ஒவ்வொரு நிற பூதங்கள் என, கிழக்கு- வெள்ளைநிற பூதம், தென்கிழக்கு- பொன்னிற பூதம், தெற்கு- கறுப்புநிற பூதம், தென்மேற்கு- சிவப்புநிற பூதம், மேற்கு- பச்சைநிற பூதம், வடமேற்கு-

புகை வடிவமான நிறம், வடக்கு- கடும் சிவப்பு நிறம் என ஃபோக்லோர் நிகண்டு குறிப்பிட்டுள்ளது. (டா.எம்.வி விஷ்ணு நம்பூதிரி ஃபோக்லோர் நிகண்டு,ப. 294:878 )

**சிலப்பதிகாரத்தில் பூத வழிபாடு**

சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள மூன்று காண்டங்களிலும் பூதங்கள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. புகாரில் முதுகுடிப் பெண்டிர் பூதத்தினை வழிபடுதலும், பட்டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கம் என்னும் பகுதிகளிலுள்ள வீரர்கள் ஒருவருக்கொருவர் போட்டியிட்டுத் தங்கள் தலையைத் தானே பூதத்திற்கு பலியிட்டு வழிபட்டதனையும், ஐவகை மன்றங்களில் ஒன்றான சதுக்கப்பூதம் குற்றம் புரிந்தவர்களைத் தண்டித்து நீதியை நிலைநாட்டுவதனையும் அறிய முடிகின்றது. மதுரைக் காண்டத்தில் வருணப் பாகுபாட்டில் அமைந்த, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற சமுதாய அமைப்பில் நால்வகைப் பூதங்களின் தோற்றமும், அவற்றின் செயல்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. வஞ்சிக்காண்டத்தில், சதுக்கப் பூதம் இருந்தது என்பதுடன் அதற்கு சோமயாகம் நடத்தப்பெற்றது என்று கூறப்பட்டிருப்பதும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியதாகின்றன.

**நாளங்காடிப்பூதம்**

புகார் நகரில் சித்திரை மாதம் சித்ரா பௌர்ணமியன்று இந்திர விழா நடந்தது. புகார் நகரம் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என இருபகுதிகளை உடையது, அவ்விரு பாக்கங்கட்கும் இடையே சோலையின் மரங்களே கால்களாகக் கட்டப்பெற்ற நாளங்காடி என்னும் கடைத்தெரு உள்ளது. அங்குள்ள நாளங்காடிப் பூதத்தின் வாயிலிலுள்ள பலிபீடத்தில் மறக்குடி மகளிர் பூவும், புகையும் எடுத்தனர். அவற்றுடன் பொங்கல், நிணங்கலந்த சோறு, அவரை, துவரை முதலிய வேகவைத்த தானியங்கள், எள்ளுருண்டை போன்றவற்றைப் படைத்தனர். துணங்கைக் கூத்தும், குரவைக் கூத்தும் ஆடி,

தெய்வமேறபட்டு எங்கள் மன்னன் ஆளுகின்ற பெருநிலம் முழுவதும் பசியும், பிணியும், பகையும் நீங்கி, மழையும் வளமும் பெருக வேண்டும் என வாழ்த்தினர். இதனை கீழ்வரும் பாடலடிகளால் அறியலாம்.

**”சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென**
**வெற்றிவேன் மன்னற்கு உற்றதை ஒழிக்கெனத்**
**தேவர் கோமா னேவலிற் போந்த**
**காவற் பூதத்துக் கடைகெழு பீடிகைப்**
**புழுக்கலும் தோலையும் விழுக்குடை மடையும்**
**பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து**
**துணங்கையர் குரவைய ரணங்கெழுந் தாடிப்**
**பெருநில மன்ன னிருநில மடங்கலும்**
**பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி**
**மாதர் கோலத்து வலவையினுரைக்கும்**
**மூதிற் பெண்டி ரோதையிற் பெயர”** (சிலப்.இந்திர விழவூர்-பா.62-75)

என்றவாறு நாளங்காடி பூதத்திற்கான வழிபாட்டு முறைகள் கூறப்பட்டுள்ளன.

**பூதம் பற்றிய தொன்மம்**

சிலப்பதிகாரத்தில் புகார் நகரிலுள்ள நாளங்காடிப்பூதம் பற்றிய ஒரு தொன்மம் காணப்படுகின்றது. முன்னொரு காலத்தில் அவுணரால் வந்த துன்பத்திலிருந்து அமராபதியை முசுகுந்தமன்னன் காத்தான். அதற்குக் கைம்மாறாக முசுகுந்தன் என்னும் வேந்தனுக்கு வரும் துன்பத்தை ஒழிப்பாய் என தேவேந்திரன் இட்ட கட்டளையால், தேவலோகத்திலிருந்த பூதம் புகார்நகரில் வந்து தங்கியது. அந்நாள் முதல் மக்கள் தரும் பலியை ஏற்றுக்கொண்டு, புகாருக்கும் அரசருக்கும் காவலாகியது.

மருவூர்ப்பாக்கத்திலுள்ள மறத்தினை உடைய வீரர்களும், பட்டினப்பாக்கத்திலுள்ள படைக்கலமுடைய வீரர்களும், நாளங்காடிப் பூதத்தின் பெரிய பலிபீடத்தின்முன் சென்று, வலிமை உடைய எங்கள் அரசருக்கு உறும் துன்பத்தை ஒழித்து, வெற்றி தருகவெனத்

தம்மையே பலியாகக் கொடுத்தனர். வலிமையின் எல்லையாகக் கருதப்படுவார் என்று வஞ்சினம் கூறி, நாளங்காடி பலிபீடத்தின்முன், போர்க்களத்திலே பகைவர் அஞ்சும் கண்களைக் கொண்ட தம் பசுந்தலையை, வேந்தன் வெற்றிகொள்க என்று கூறி, பலியாக அரிந்துவைத்திருக்கின்றனர். அதற்கான சான்று கீழ்வருமாறு,

**"மருவூர் மருங்கின் மறங்கொள் வீரரும்**
**பட்டின மருங்கிற் படைகெழு மாக்களும்**
**முந்தச் சென்று முழுப்பலி பீடிகை**
**வெந்திறல் மன்னற் குற்றதை யொழிக்கெனப்**
**பலிக் கொடை புரிந்தோர் வலிக்கு வரம் பாகென**
**சூர்த்துக் கடைசிவந்த சுடுநோக்குக் கருந்தலை**
**வெற்றி வேந்தன் கொற்றங் கொள்கென**
**நற்பலி பீடிகை நலங்கொள வைத்தாங்கு"**

(சிலப்.இந்திரவிழவூர்,பா76-86)

இவ்வடிகள் மூலம் நாளங்காடிப் பூதத்திற்குத் தன்னையே பலியாக அளித்து வழிபாடு நிகழ்ந்ததை உணரமுடிகிறது.

**சதுக்கத்து பூதம்**

புகார் நகரில் ஐவகை மன்றம் இருந்ததாக சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. ஐவகை மன்றங்களில் ஒன்று தான் பூதச்சதுக்கம். இங்குள்ள பூதத்தின் செயல்களை பின்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

**"தவமறைந் தொழுகுந் தன்மை யிலாளர்**
**அவம்மறைந் தொழுகும் அலவற் பெண்டிர்**
**அறைபோ கமைச்சர் பிறன்மனை நயப்போர்**
**பொய்கரியாளர் புறங்கூற் றாளரென்**
**கைகொள் பாசத்துக் கைப்படு வொரெனக்**
**காத நான்கும் கடுங்குர லெழுப்பிப்**
**பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும்"** (சிலப்.இந்திரவிழவூர்,பா.128-134)

தவவேடத்தில் மறைந்து நின்று கூடாவொழுக்கத்தில் ஒழுகும் தவத்தன்மையில்லாதவர், நெறிமுறைதவறிய அமைச்சர், தீயநெறியில் வாழும் பெண்டிர்,

பிறர் மனைவியை விரும்புபவர், பொய்சாட்சி கூறுபவர், புறம் கூறுபவர் போன்றவர்களை அவ்வூர் நாற்காத அளவு கேட்கும்படி தனது உரத்த குரல் எழுப்பி தன் கையிலுள்ள கயிற்றால் கட்டி நிலத்தில் புடைத்து உண்ணும். இங்ஙனம் தவறு செய்தவர்களை தண்டித்து புகாரின் நீதியை நிலைநாட்டுவதற்காக பூதச்சதுக்கத்தில் பூதம் அமைந்துள்ளதாக இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார்.

அடைக்கல காதையில் மாடலமறையோன் கோவலனை நோக்கி, அவனது நற்பண்புகளைக் கூறுமிடத்து, சதுக்கப்பூதத்தைப் பற்றிய ஒரு செய்தி இடம் பெறுகின்றது.

புகாரில் கற்புடைய ஒருமங்கை வாழ்ந்துவந்தாள். அந்நகரில் வாழ்ந்துவந்த கீழ்மகன் ஒருவன் அவளைப் பற்றி தவறான செய்திகளை அவளுடைய கணவனிடம் கூறினான். குடும்பத்தில் பிளவை உண்டாக்கினான். பொய்சாட்சியும் கூறினான். அன்றிரவே, பொய்சாட்சி கூறுவாரைப் பாசத்தால் பிணித்து, புடைத்துண்ணும் சதுக்கப்பூதத்தின் கையில் அவன் அகப்பட்டான். அவனது தாய் அது கண்டு கதறினாள். இதனைக் கண்ட கோவலன் பூதத்திடம் விரைந்து சென்று என் உயிரை எடுத்துக் கொண்டு இம்மகனது உயிரைத் தருவாயாக என்று வேண்டினான். அதற்கு அப்பூதம் இக்கீழ்மகனுடைய உயிருக்கு ஈடாக உனது நல்லுயிரைக் கொண்டு பரகதி இழக்கமாட்டேன். உன் எண்ணத்தைக் கைவிடுக என்று கூறி, அக்கயவனைப் புடைத்துண்டது.

**“நரகனுயிர்க்கு நல்லுயிர் கொண்டு**
**பரகதி இழக்கும் பண்பீங் கில்லை”** (சிலப். அடைக்கலக்காதை- 84-85)

என்னும் இப்பாடலடிகள் சதுக்கப்பூதம் நல்லோருக்கு தீமை செய்யாது என்பதை அறியமுடிகிறது. இதனை 'நன்னெடும்பூதம்' என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

**நால்வகைப் பூதங்கள்**

அழற்படுகாதையில் நால்வகை வருணப்பூதங்களின் இயல்புகள் கூறப்பட்டுள்ளன. கோவலன் கொலையுண்டதால் கண்ணகி, பாண்டியன் அவையில் வழக்குரைத்தாள். பாண்டியன் செங்கோல் முறை தவறியதால் உயிர் துறந்தான். எனினும் சினம் தணியாக் கண்ணகி அரசுடன் மட்டும் அமையாது, மதுரை நகரினையும் அழிப்பேன் என்று வஞ்சினம் கூறி, மதுரை நகரத்தினை மும்முறை வலமாகச் சுற்றி வந்து, துயரமுற்று, தன் இடப்பக்கத்து முலையினைக் கையினால் திருகி வட்டித்து எறிந்தாள். தீக்கடவுளை மதுரை மீது ஏவினாள். அதன் பயனாக மதுரை மூதூரினை எரி பற்றி உண்ணத் தொடங்கியது. நால்வகை வருணப்பூதங்களும், பிறவும் நகரை விட்டு விலகிப் போயின என்பதான பதிவினை மதுரைக் காண்டத்தில் காண்கின்றோம். நால்வகைப் பூதங்கள் என்பன ஆதிபூதம், அரசபூதம், வாணிகபூதம், வேளாண்பூதம் ஆகியனவாகும். அவற்றைப் பற்றிய சில விடயங்களை இளங்கோ கூறிச்செல்வதுண்டு.

**ஆதிபூதம்**

> **"முத்தீ வாழ்க்கை முறைமையின் வழாஅ**
> **வேத முதல்வன் வேள்விக் கருவியோடு**
> **ஆதிபூதத்து அதிபதிக் கடவுளும்"** (சிலப். அழற்படுகாதை – 34-36)

என்று அழற்படுகாதை எடுத்துரைப்பதன் மூலம் ஆதிபூதம் பற்றிய குறிப்பு கிடைக்கின்றது.

ஆதிபூதம் எனப்படுவது பிராமணபூதம் என்று அரும்பத உரை கூறியுள்ளது. (பக்கம்- 229) பசுமையான முத்துக் கோத்த வடங்கள் அணிந்தவன் முத்தீ வாழ்க்கையினை உரிய மரபினின்றும் வழுவாது பேணி ஒழுகி வருபவனாகிய ஆதிபூதமாகிய கடவுள் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

**அரசபூதம்**

> **“பவளச் செஞ்சுடர் திகழொளி மேனியன்**
> **ஆழ்கடல் ஞால மாள்வோன் தன்னின்**
> **முரைசொடு வெண்குடை கவரி நெடுங்கொடி**
> **உரைசால் அங்குசம் வடிவேல் வடிகயிறு**
> **எனவிவை பிடித்த கையினனாகி”** (சிலப்.அழற்படுகாதை – 51-55)

எனும் மேற்குறிப்பிட்ட பாடல் அடிகளால் அரசபூதத்தின் தோற்றத்தை உணரமுடிகின்றது. இவ்வரசபூதம் பகை மன்னர்களை புறமுதுகிட்டு ஓடுமாறு செய்வதுடன், இம்மண்ணகத்தை செங்கோல் ஆட்சி செய்து நீதியினை நிலைநிறுத்துகின்ற பாண்டியனைப் போன்றது. இவ்வுவமை வாயிலாக அரசபூதம் எவ்வாறு பாண்டியநாட்டின் காவலனாக செயல்புரிந்தது என்பதனை அறியலாம்.

**வாணிகபூதம்**

> **“செந்நிறப் பசும்பொன் புரையும் மேனியன்**
> **மன்னிய சிறாப்பின் மறவேல் மன்னவர்**
> **அரைசுமுடி யொழிய அமைத்த பூணின்**
> **வாணிக மரபின் நீள் நிலம் ஓம்பி**
> **நாஞ்சிலும் துலாமும் ஏந்திய கையினன்”** (சிலப்.அழற்படுகாதை- 62-66)

என்னும் பாடலின் வாயிலாக வாணிக பூதத்தினுடைய தோற்றப்பொலிவு விளக்கம் பெறுகின்றது. செந்நிறப் பசும்பொன் போன்ற உடல் வண்ணத்தினை உடையவன், அரசனுடைய முடி ஒன்று தவிரப் பிறவற்றையெல்லாம் பூண்டிருப்பவன், வணிக மரபினால் இவ்வுலகினைக் காத்துக் கலப்பையும், துலாக்கோலும் கையில் ஏந்தியவன். உழவுத் தொழிலைச் செய்து உலகிற்கு உதவும் குற்றமற்ற வாழ்க்கையினை உடையவன். சிவபெருமானின் திருமேனியைப் போன்று ஒளி பொருந்தியவன் என்றவாறு வாணிகப் பூதத்தைப் பற்றிய வருணனை அமைகின்றது. இதன்மூலம் வணிகபூதத்தின் இயல்பினையும், செயல்களையும் அறியமுடிகிறது.

**வேளாண்பூதம்**

> **“மண்ணுறு திருமணி புரையும் மேனியன்**
> **ஒண்ணிறக் காழகஞ் சேர்ந்த உடையினன்**
> **ஆடற் கமைந்த அவற்றொடு பொருந்திப்**
> **பாடற் கமைந்த பது துறை போகிக்**
> **கலிகெழு கூடற் பலிபெறு பூதத்**
> **தலைவன் என்போன்”** (சிலப்.அழற்படுகாதை- 97-102)

என்றவாறு வேளாண் பூதத்தின் தோற்றத்தையும், இயல்பினையும் இளங்கோ எடுத்துரைக்கின்றார்.

ஆடல் பாடல்களில் ஒப்பற்றுத் திகழ்ந்த கூடல் நகரிலே பலிபெறுகின்ற பூதத் தலைவனாகிய வேளாண்பூதம் வீற்றிருந்தது. அது நீல மணி போன்ற மேனியைக் கொண்டது. கருமையான உடையினை அணிந்திருந்தது. தனது உழவுத் தொழிலால் உலக மக்களைத் தாங்கும் திறன் பெற்றிருந்தது. அப்பூதத்துடன் பிற பூதங்களும் கண்ணகி முன் தோன்றிய நிலையில் 'இந்நாட்டு மன்னன் நீதி தவறிய நாளிலே, இந்நகரினை எரி உண்ணும் என்பதனை யாம் முன்னரே அறிந்துள்ளோம்' என்று உரைத்தன. பிறகு அந்நான்கு பூதங்களும் வெவ்வேறிடங்களை நோக்கிச் சென்றன என்று கூறுவதோடு அமையாது அப்பூதங்களின் வடிவங்களையும் அவற்றின் கைகளிலுள்ள தொழிற் கருவிகளையும் அழற்படுகாதை சிறப்புற எடுத்துக்காட்டுகின்றது. இத்தகு பதிவுகள் வாயிலாக பழந்தமிழர்கள் பூதங்கள் தொடர்பான வழிபாடுகளை மேற்கொண்டிருந்தார்கள் என்பதும் அவற்றை வழிபடுவதன் வழி பல துன்பங்களிலிருந்து விடுபடமுடியும் என்று நம்பிக்கையினை வளர்த்திருந்தார்கள் என்பதும் பெறப்படுகிறது,

**வஞ்சிப்பூதம்**

சோழ பாண்டிய நாட்டார் பூதவழிபாட்டில் நம்பிக்கை கொண்டிருந்ததைப் போலவே பண்டைய சேரநாட்டாரும் பூதவழிபாட்டில் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதை வஞ்சிக்காண்டம் வழி அறிகின்றோம். வஞ்சிக்காண்டம், நடுகல் காதையில்

மாடலன், செங்குட்டுவனுக்கு யாக்கை நிலையாமையினை அறிவுறுத்தும் போது சதுக்கப் பூதங்களைப்பற்றி எடுத்துரைக்கின்றான்.

**"சதுக்கப் பூதரை வஞ்சியுள் தந்து**
**மதுக்கொள் வேள்வி வேட்டோ னாயினும்"**

(சிலப்.நடுகல்காதை- 145-150)

எனும் அடிகள் இங்கு கருதத்தக்கது. சேரநாட்டு வஞ்சியில் சதுக்கப்பூதங்கள் இருந்தன என்பது மேற்கண்ட பாடலடிகள் மூலம் புலனாகின்றது. அப்பூத வழிபாடு எவ்வாறு நிகழ்ந்தது என்பதை சிலப்பதிகாரம் விரிவாக எடுத்துரைக்கவில்லை. எனினும் பண்டைய கேரளத்தில் பூதவழிபாடு இருந்ததை அந்நூல் வழி அனைவரும் அறிவர்.

**கேரளத்தில் பூதவழிபாடு**

பரசுராமன் கேரளத்தில் நாகங்களையும், பூதங்களையும் பிரதிட்டை செய்ததாக கேரளோத்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன. பூதம் நிதி காப்பவராகவும், பல அற்புதங்களை நிகழ்த்துபவராகவும் மக்கள் நம்பி வருகின்றனர். பூதங்கள் வெட்டிய கிணறு, குளம் போன்றவையும் பூதங்கள் உருவாக்கிய கோவில்களும் இருப்பதாக மக்கள் கருதுகின்றனர். மீவியல் ஆற்றலுடைய இப்பூதங்களின் வேடம் அணிந்து ஆடினால் மனிதர்களுக்கு வருகின்ற துன்பங்கள் விலகும் என்று கேரள மக்கள் நம்புகிறார்கள். பூதங்களில் வெள்ளை, சிவப்பு, கறுப்பு நிறப் பூதங்கள் சிவபூதங்கள் என்று அறியப்பெறுகின்றன.

கேரளக் கோயில்களில் பூதத்தினை துணை தேவதையாகக் கருதி வழிபாடு நடத்தி வருகின்றனர். கேரளத்தில் பூத வழிபாடு இருப்பினும், வடமலபாரில் காணப்பெறும் பூதவழிபாடு மிகச் சிறப்பான ஒன்றாகும். இங்கு நிகழ்த்தப் பெறும் தெய்யக்கோலத்தில்

பூத வழிபாடு நிலைநிற்பதாக அறிஞர்கள் கூறுகின்றனர். பூதம் தெய்யம்,திற போன்ற நிகழ்த்து கலைகளில் காணப்பெறும் சடங்குகள், நம்பிக்கைகள் போன்றவற்றில் வேறுபாடு இருப்பினும் இவற்றிற்கிடையே சில ஒற்றுமைகளும் உண்டு. புலையர்கள் என்ற இனத்தாரால் பூதத்திற்குரிய தெய்யக் கோலம் புனைந்து ஆடப்படுகின்றது.

கொல்லம் மாவட்டத்திலுள்ள அச்சன்கோவிலில் பரசுராமன் நிறுவியதாகக் கருதப்பெறுகின்ற மிகத் தொன்மையான சாஸ்தா (அய்யப்பன்) வின் பிரதிட்டை உள்ளது. சாஸ்தாவின் துணை தெய்வங்களாக மாடன், கருப்பன், சங்கிலி பூதத்தான் போன்ற பூதகணங்களின் பிரதிட்டைகளும் உள்ளன. சங்கிலி பூதத்தானின் பாதங்களில் இரண்டோ, மூன்றோ சங்கிலிகள் கட்டப்பட்டுள்ளன. பிறரைத் துன்புறுத்தாமல் இருக்க அய்யப்பன் பூதத்தைக் கட்டி வைத்திருப்பதாக நம்புகின்றனர். தினசரி பூசையும் நடத்தப்பெறுகின்றது. (கொட்டாரத்தில் சங்குண்ணி, ஐதீகமாலை,ப.)

கண்ணூர் பய்யனூர் முருகன் கோயிலில் ஒரு இலஞ்சித் தரை உண்டு (மகிழமரம்) அங்கு ஒரு பூதத்தான் சிலை பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. அங்குள்ள மகிழமரம் எப்பொழுதும் பூத்துக் குலுங்கும், ஆனால் ஒருபோதும் காய்க்காது. ஏனென்றால் பூதத்தானின் தவம் கலைந்து விடக்கூடாது என்பதற்காக மரம் காய்ப்பதில்லை என்று மக்கள் நம்புகின்றனர்.

கேரளத்தில் காணப்பெறும் பூதவழிபாடு சிலப்பதிகாரம் வழி அறியலாகும் வழிபாட்டிலிருந்து மாற்றமடைந்து இன்றும் நடைபெற்று வருகின்றது. கேரளத்தில் மலப்புறம், பாலக்காடு, திருச்சூர் மாவட்டங்களின் சில பகுதிகளில் உள்ள, காளிக்காவுகளிலும், பகவதி காவுகளிலும் 'பூதனும், திரையும்' என்னும் சடங்குக் கலை நிகழ்த்தப்பட்டு வருகின்றன. கேரள நாட்டுப்புற மக்கள் தாருகனை அழித்த காளியைத்

தங்கள் தெய்வமாக வணங்கி வருகின்றனர். பூதனும், திரையும் காளி தாருக வதையுடன் தொடர்புடையன. திரையை காளியாகவும், பூதனை காளியின் பூதகணங்களில் ஒருவராகவும் கருதுகின்றனர். திரை என்பது அரைவட்ட வடிவிலான பலகைகளால் ஆன கிரீடம் போன்றது. இதனைத் தலையில் வைத்து, அதன் இருபக்கமும் கட்டி வைத்திருக்கும் கயிற்றை இருகைகளால் பிடித்து கொண்டு திரை வேடம் கட்டியவர் ஆடுவர். இது வீடு, காவு, நடைபாதை, வயல்வரப்புகள் என்று பல இடங்களிலும் அரங்கேறுகின்ற ஒரு நாட்டார் நடனமாகும்.

சமூகத்தின் அடித்தட்டு மக்களாகிய மண்ணான், பறையன், பாணன் போன்றோர் பூத வேடம் அணிகின்றனர். பூதவேடம் தரித்த நிலையில் தலையில் கிரீடம் அணிந்துவிட்டால், அவரை பூத தெய்வமாகவே நினைத்து வழிபடுவர்.

அறுவடை முடிந்த தை, மாசி, பங்குனி மாதங்களில் பூரம், வேலா, தாலப்பொலி போன்ற கோயில் விழாக்கள் நடைபெறும் அவ்விழாக்களில் 'பூதனும் திரையும்' கட்டி ஆடுவர். எத்தனை வேடங்கள் இருப்பினும் 'திரையும், பூதனும்' என்னும் வேடங்களே காளிக்கு மகிழ்ச்சியைத் தரவல்லது என்று கேரள நாட்டுப்புற மக்கள் நம்புகின்றனர்.

பன்னிரண்டு முதல் பதினைந்து வரையுள்ள இளைஞர்கள் பூதம் வேடமிட்டு ஆடுவர். இக்கலைகளைத் தங்கள் வீட்டு முற்றத்திலேயே, பெரியோர்கள் முன்னிலையில் பயில்கின்றனர். திரைக்கும், பூதத்திற்கும் 'மெய்வழக்கம்' தேவை (உடலசைவு). உடலசைவுகளின் துணைகொண்டு ஒரு வகையான நடனம் ஆடுவர். மயிலாட்டம், சிலம்பாட்டம், கோழியங்கம் முதலிய நடனங்களைப் பூதம் வேடமிடுபவர் பயிலவேண்டும். துடி கொட்டுவதற்கான பயிற்சியும் தேவை.

வண்ணான் பூதம், பறையப்பூதம், பாணப்பூதம், நாயாடிப்பூதம் என்னும் பலவகை பூதம் வேடம் புனைபவர்கள் இருப்பினும் திரையுடன் சேர்ந்து ஆடுவது மண்ணான் பூதம் ஆகும்.

**வண்ணான்** (மண்ணான்) **பூதம்**

வண்ணான் இனத்தவர் திரை, பூதம் முதலான வேடங்கள் தரித்த நிலையில் ஆடுவர். வண்ணான் இனத்தவர் பூதம் வேடமிட்டு ஆடுதலால் 'வண்ணான் பூதம்' என்று அழைப்பர். இவர்களின் குலத்தொழில் மந்திரவாதமும், மருத்துவமும் ஆகும். அக்குலத்தைச் சார்ந்த பெண்கள் சலவைத் தொழில் செய்வர்.

**பறையர் பூதம்**

பறையர் இனத்தைச் சேர்ந்தவர்களும், பூதம் வேடம் தாங்கி ஆடுகின்றனர். திரையுடன் சேர்ந்து ஆடுவதில்லை. இதனைப் 'பறப்பூதம்' என்று அழைப்பர். இவர்களும் மந்திரவாதத்தில் சிறந்தவர்களாக விளங்குகின்றனர்.

**பிறபூதங்கள்**

பாணர்களும் பூதவேடம் பூணுவர். அவை 'பாணப்பூதம்' எனப்படும். நாயாடி இனத்தைச் சார்ந்தவரும் பூதம் வேடம் பூணுவதுண்டு. அது 'நாயாடிப் பூதம்' என வழங்கப்பெறும்.

**பூதம் பற்றிய தொன்மம்**

பூதன், திரை ஆகிய நாட்டார் நிகழ்த்துக்கலைச் சடங்குகள் காளி, தாருக வதைக் கதையுடன் தொடர்புடையன. பிரம்மாவிடமிருந்து வரம் பெற்ற தாருகன் என்னும் அசுரன், தேவர்களையும் மக்களையும் துன்புறுத்தினான், தேவர்கள் கைலாயத்திற்குச் சென்று சிவபெருமானிடம் முறையிட்டனர். கோபமடைந்த சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து காளி தோன்றினாள். சிவபெருமானின் ஆசிபெற்று காளி பூமியை

அடைந்தாள். தாருகனைப் போரில் கொன்றாள். மிகுந்த சினத்துடன் காளி வருவதைக் கண்ட சிவபெருமான் காளியை அமைதிப்படுத்துவதற்காகப் பூதகணங்களை அனுப்புகிறார் என்றதொரு கதை கேரள நாட்டார் மரபில் இடம்பெற்றிருக்கின்றது. பூதங்களின் ஒவ்வொரு செயல்களையும் கண்டு, காளியின் சினம் தணிந்ததாகக் கருதுகின்றனர். தாருகவதம் முடிந்து வந்த காளியைச் சித்திரிப்பதற்கு திரை வேடமிடுவர். அமைதிப்படுத்த வந்த பூதத்தை சித்திரிப்பதற்கு பூதவேடம் தரிப்பர். அதனுடன் ஆட்டக்கலையும் நிகழ்த்துவதுண்டு.

**விரதம் இருக்கும் முறை**

பொதுவாக பூதவேடம் கட்டுபவர்கள் 7 நாட்கள் விரதம் மேற்கொள்வர். பறையர் பூதம் கட்டுபவர்கள் 41 நாட்கள் கடும் விரதம் மேற்கொள்வர்.

**ஒப்பனை**

மண்ணான் இனத்தவர்களின் வீட்டில் முன்னோர்களை வழிபடுவதற்கான ஒரு தரையினை அமைத்திருப்பார்கள். அங்கு வைத்துதான் இவர்கள் பூதவேடம் புனைகிறார்கள். அன்று குத்துவிளக்கு ஏற்றி, சிறப்பு பூசையும் நடைபெறும்.

பூதவேடம் புனையும் போது மிகப் பெரிய கண்களுடன் நாக்கை வெளியே நீட்டிய பெரிய பொய்முகம் (முகமூடி) அணிவர். 'பொய்முகம்' என்பது முள்முருங்கை, பலா போன்ற மரங்களின் பலகையினால் உருவாக்கப் பெறுகின்றது. அப்பலகையில் சிவப்பு, வெள்ளை, கறுப்பு வண்ணங்கள் தீட்டப்பட்டிருக்கும். கறுத்த தாடியும் காணப்பெறும். நெற்றிக்கு சற்று மேலாக நாகங்கள் செதுக்கப்பட்டிருக்கும். காதில் காதணியும் அணிந்து, பூதவேடமணிந்தவர்கள் மிக அழகான உடை அலங்காரத்துடன் காட்சியளிப்பர்.

பலவித வண்ணங்களாலான பாவாடை, சிற்றாடை, கண்ணாடி, அரைமணி, அரைப்பட்டை, மார்த்தாலி, மார்முலை, மேல்சட்டை, தாயத்து, சிலம்பு, கழல் போன்ற அணிகலன்களையும் அணிந்திப்பர். பூதவேடமணிந்தவர்களின் ஒருகையில் பிரம்பும் மறுகையில் பரிச்சையும் காணப்பெறும். அந்நிலையில் அவர்கள் அச்சந்தரும் தோற்றத்துடன் திகழ்வர்.

கோயிலில் விழாக் கொண்டாடத் தீர்மானித்துவிட்டால் பூதவேடம் அணிய உரிமை உடைய மண்ணான் இனத்தவர் வீட்டில், துடி என்னும் இசைக்கருவியை இசைப்பர். இது பூதவேடம் அணியப் போவதை மக்களுக்கு அறிவிப்பதாகும். பூதவேடம் அணிந்துவிட்டால் மக்கள் அவ்வேடமிட்டவரை பூதமாகவே கருதுவர். அவர் முதலில் முன்னோர்களையும் இஷ்ட தேவதைகளையும் வணங்கியபின் நாட்டுமக்களை காண்பதற்காகப் புறப்பட்டுச் செல்லுவார். பின் கிராமத்திலுள்ள ஒவ்வொரு வீடாகச் சென்று வாழ்த்துவது வழக்கம். முதலில் அங்குள்ள நிலப்பிரபுக்களின் வீடுகளுக்கும், உயர்ந்த வகுப்பினர் வீடுகளுக்கும் செல்வர். பூதனும், திரையும் வீட்டு முற்றத்தை அடைந்தவுடன் குத்துவிளக்கேற்றி வரவேற்பர். தலைவாழை இலையில் நெல், பச்சரிசி, தேங்காய், பணம் போன்றவற்றை வைப்பர். துடியின் தாளத்திற்கேற்ப பூதனும், பறையின் தாளத்திற்கேற்ப திரையும் அடிபெயர்த்துவைத்து விளையாடுவர். பின் அரிசியைத் தூவி வீட்டிலுள்ளவர்களை வாழ்த்துவர். பூதன் கோவலனுக்குத் தீங்கிழைத்த பொற்கொல்லனைத் தேடி நடப்பதாக நம்பப்படுகிறது. விழாநாளின் மாலையில் பூதனும் திரையும் கோயிலின் முன்வந்து நடனம் ஆடுகின்றனர். கோயிலுக்குள் செல்வதில்லை, தெய்வத்தை வணங்கி வீடுதிரும்புவர்.

பாலக்காடு ஷொர்ணூருக்கு அடுத்த கூனத்தரையில் உள்ள ஆரியங்காவு 'பூதன் களி'யின் முக்கிய இடமாகத் திகழ்கின்றது. இங்ஙனம் சிலப்பதிகாரம் பதிவு செய்த பூதவழிபாட்டு முறைகள் காலச் சுழற்சியில் பலவகை மாற்றங்களுக்குள்ளான நிலையில் கேரள நாட்டார் மரபில் இன்றும் நிலைபெற்றிருக்கின்றது என்பது மேற்கண்ட கள ஆய்வுத் தரவுகள்வழி உறுதிப்படுகின்றது.

**இயக்கி வழிபாடு**

தாய்த்தெய்வ வழிபாட்டுமுறைகளில் இயக்கி வழிபாடு சிறப்பான ஒன்றாகும். இவ்வழிபாடு ஆரியர் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னரே இந்தியத் தொல்குடி இனத்தவரால் வழிபடப்பெற்றவை. அக்காலத்தில் நாட்டுப்புற மக்களால் வழிபடப்பெற்ற, நாட்டுப்புறத் தன்மை மிகுந்து விளங்கிய வழிபாடாக இது விளங்குகின்றது. இத்தெய்வம் வடநாட்டில் 'யக்ஷி' என்றழைக்கப்படுகின்றது. கேரளத்திலும் 'யக்ஷி' என்றே அறியப்படுகின்றது. தமிழ்நாட்டில் 'இயக்கி' என்ற பெயரில் வழங்கப்படுகின்றது.

இயக்கனாகிய ஆண் தெய்வவழிபாட்டை விட, இயக்கியாகிய பெண் தெய்வ வழிபாடே சிறந்துவிளங்குகின்றது. **“இந்தியாவில் வேத காலத்திற்கு முன்பிருந்து நாட்டுப்புற மக்களால் வழிபடப்பெற்ற இத்தெய்வங்களை வேதசமயமும், பௌத்த, சமண சமயங்களும் தங்கள் தெய்வங்களாக ஏற்றுக் கொண்டதன் காரணம், இத்தெய்வங்களுக்கு நாட்டுப்புற மக்களிடையேயும், பிறரிடமும் இருந்த செல்வாக்கே ஆகும்”** (வெ.வேதாச்சலம், இயக்கி வழிபாடு. ப.14) எனினும் இத்தெய்வங்களை மூலத்தெய்வங்களின் காவல் தெய்வங்களாகவே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

**”பௌத்த மதத்தினைச் சார்ந்த ஸ்தூபம், சைத்தியங்கள் ஆகியவற்றில் கி.மு.இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்பே இயக்கர், இயக்கி உருவங்கள் வாயில்**

**தோரணங்களிலும், வாயிலிலும் காவல் பணிபுரியும் நிலையில் இடம்பெற்றுள்ளன. சமண சமயத்தில் இருபத்தி நான்கு தீர்த்தங்கரர்களை இருபத்தி நான்கு இயக்கனும், இயக்கியும் காக்கின்றனர் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் சிற்பமாக வடிக்கின்ற ஒரு மரபு இருந்துள்ளது. வைதீக மதத்தினைச் சார்ந்த குகைக்கோயில்களிலும், கட்டிடக் கோயில்களிலும், கங்கையும், யமுனையும் பெண்வடிவில் வாயிலில் நிற்பது போன்ற அமைப்பு காணப்படுகின்றன. இவை பௌத்தர்களின் ஸ்தூபங்களிலும், வாயிலிலும் இயக்கியர் நிற்பதனைப் பின்பற்றிச் செய்யப்பெற்ற முறையே ஆகும்"** (வெ. வேதாச்சலம், இயக்கி வழிபாடு,ப.15) என்று அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தென்னிந்தியாவில் அமராவதி, நாகார்ச்சுன கொண்டா, பெத்தபன்பூர் போன்ற இடங்களில் கல்லினாலும், சுடுமண்ணாலும் செய்யப்பெற்ற இயக்கியரின் உருவங்கள் கிடைத்துள்ளன. இவைமிகுந்த தெய்வத்தன்மை பொருந்திய பெருந்தெய்வங்களைப் போன்றல்லாமல் மானுடத்ததோற்றம் போல அமைந்து இருகரங்களுடன் காட்சியளிக்கின்றன. பிற்காலத்தில் இந்நிலை மாறிக் காணப்பெறுகின்றது. இவைமரத்தோடு தொடர்புபடுத்தப்பெற்று அம்மரத்தின் அடியிலும், மரக்கிளைகளைப் பற்றி நிற்கும் நிலைகளிலும் காணப்பெறுகின்றன.

இயக்கி வழிபாடு முன்காலங்களில் எந்த ஒரு சமயத்தையும் சாராது நாட்டுப்புற மக்களால் வழிபடப்பட்ட ஒன்றாகும். இவ்வழிபாடு படிப்படியாக பெருமதங்களில் புகுந்து சிறப்பாக வழிபடும் நிலைக்கு மாறியுள்ளது. **"வைதீக சமயத்தில் வளமையைக் குறிக்கும் இலக்குமியின் உருவமும், வழிபாடும் மௌரியர் காலத்தில் சிறப்புடன் வழிபடப்பெற்ற இயக்கி ஒன்றிலிருந்து உருவானதே ஆகும். இதற்கு எடுத்துக்காட்டாக ஆந்திராவில் அமராவதியில் கிடைத்துள்ள இயக்கியின் உருவமும் வடநாட்டில் பாசர் என்ற இடத்தில்**

**தாமரையில் நிற்கும் இயக்கியின் உருவமும் வைதீக சமயத்துத் திருமகளின் முன்னோடியாக விளங்குகின்றன."** (வெ.வேதாச்சலம், இயக்கி வழிபாடு,ப.15)

பழந்தமிழ் இலக்கியங்களில் மக்களால் வழிபடப்பெற்று வந்த மிகப்பழமையான பெண் தெய்வங்களை சூலி, சூர்மகள், சூரரமகளிர், வரையரமகளிர், கடல்கெழு செல்வி, கானமர் செல்வி, பாவை, அணங்கு என்றழைத்தனர். இவை இயக்கி என்ற பெயரில் அல்லாத இயக்கியின் தன்மைகளுடன் விளங்கும் தெய்வ வழிபாடாக விளங்கியது. இத்தெய்வங்கள் இயக்கி வழிபாட்டிலிருந்து உருவ மாற்றம் பெற்றவையே. இயக்கியை வளமைத் தெய்வமாகவும் தாய்த் தெய்வமாகவும் வழிபட்டனர். இயக்கியர் காடு, மலை, நீர்நிலை, மரம், குகை போன்றவற்றைத் தங்கள் இருப்பிடமாகக் கொண்டுள்ளனர் என மக்களால் நம்பப்படுகிறது. மக்களுக்கு நல்லனவற்றையும், தீயனவற்றையும் செய்யக் கூடிய தெய்வங்களாகக் கருதப்பட்டனர். இயக்கியர் நினைத்த நேரத்தில், நினைத்த உருவத்தினை எடுக்கும் வல்லமை உடையவர் என்று நம்பப்பட்டது. மக்களை அச்சுறுத்துபவர்களாகவும், அவர்களுக்கு வேண்டிய உதவி செய்பவர்களாகவும் இத்தெய்வங்களைக் கருதினர்.

***சிலப்பதிகாரத்தில் இயக்கி***

சிலப்பதிகாரத்தில் இருவகையான இயக்கி வழிபாடு காணப்படுகின்றன. 1)நாட்டுப்புற மக்களிடையே தொன்று தொட்டு இருந்து வந்த இயக்கியர்களின் தன்மைகளைப் பெற்ற தெய்வங்கள். அவை பாவை, வழியிடைக் காணும் கானுறைத் தெய்வம், வரோத்தமை போன்றவை. 2) இயக்கி என்ற பெயரிலேயே அழைக்கப் பெற்ற பூங்கண் இயக்கி எனும் பெயருடைய தெய்வம். சிலப்பதிகாரத்தில் காணப்பெறுகின்ற இயக்கி பற்றிய குறிப்பு தென்னிந்தியாவில் கிடைக்கும் குறிப்புகளில் பழமையானதாகும்.

**பாவை**

பண்டைக்காலத்தில் பெண் உருவத்தினை ஓவியமாக வரைந்தும்,பல்வேறு பொருள்களில் உருவாக்கியும் பாவை என்ற பெயரில் வழிபடும் வழக்கம் இருந்ததாக பழந்தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. மணல், வண்டல் மண், தாது, பொன், பதவு, தெற்றி, கோரை போன்ற பல பொருள்களில் இப்பாவையைச் செய்திருக்கின்றனர். இதனை மகளிர் விளையாட்டுப் பொருளாகவும் பயன்படுத்தி வந்தனர் என்று அறிய முடிகிறது.

புகாரில் உள்ள ஐவகை மன்றங்களில் பாவை என்ற பெண் உறையும் மன்றம் ஒன்று இருந்தது என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. அப்பாவை அரசு தவறிழைத்தாலும், அறங்கூறு அவையத்தில் நீதி நெறி தவறினாலும், அதனை நாவினால் எடுத்துக் கூறாது அதற்காகக் கண்ணீர் விட்டு அழும் தன்மை உடையது.

இப்பாவை வழிபாடு சங்க இலக்கியங்களில் கூறப்பெற்றுள்ள பாவை வழிபாட்டின் தொடர்ச்சி எனலாம்.

**"அரைசு கோல் கோடினும் அறங்கூ றவையத்து**
**உரைநூல் கோடி ஒருதிறம் பற்றினும்**
**நாவொடு நவிலாது நவைநீ ருகுத்துப்**
**பாவைநின் றழூஉம் பாவை மன்றமும்"**

(சிலப்.இந்திரவிழா.பா.135-138)

வஞ்சினமாலையில், கண்ணகி தான் பிறந்த ஊர்ப்பெருமையினைக் கூறுகையில், புகார் நகரிலிருந்த பத்தினிப் பெண்டிர் எழுவரின் வரலாற்றினைக் கூறுகின்றாள்.

**"பொன்னிக்கரையின் மணற்பாவை நின் கணவனாம்"** (சிலப்.வஞ்சினமாலை.7)

**"ஆடகப்பூம்பாவை அவள் போல்வார்"** (சிலப்.வஞ்சினமாலை.பா.34)

என்ற கண்ணகி கூற்றில் 'மணற்பாவை,' ‘பூம்பாவை’ போன்ற தெய்வப் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பாவைகளைப் போற்றுகின்ற மரபு சிலப்பதிகார காலத்தில் இருந்ததை உணரலாம்.

**வரோத்தமை**

மலைப்பகுதியில் இருந்த உத்தமி என்ற பொருளிலேயே ‘வரோத்தமை’ என்ற பெயர் பெற்றிருத்தல் வேண்டும் என்று கருதுகின்றனர். மனிதனுக்கு துன்பம் செய்யாத இயக்கியாக இவ்வியக்கி சித்திரிக்கப் பெற்றுள்ளாள். கோவலனிடம் மதுரைக்குச் செல்லுகின்ற வழியினை மறையோன் கூறுகையில் ‘வரோத்தமை’ என்னும் இயக்கியின் தன்மையினையும், செயல்களையும் கூறுகின்றான். சிலம்பாற்றங்கரைப் பக்கத்தில், மணமலர்கள் விரித்த கோங்கமரத்தின் அடியில் வரோத்தமை என்ற பெண் தெய்வம் இருக்கின்றாள். அவள், கார்மேகம் போன்ற கூந்தலை உடையவள், தொடிவளை அணிந்த தோளினை உடையவளாகக் காட்சி தருவாள். அவ் இயக்கி தெய்வம் கேட்கின்ற மூன்று வினாக்களுக்குப் பதிலளித்தால் பிலத்திற்கான வழியைத் திறந்துவிடுவாள். பதிலளிக்காவிட்டால் துன்பமேதும் செய்யாமல் உங்களை வழி அனுப்புவாள், என்று வரோத்தமை பற்றிய தகவல்களை மாடலன் வழியாக அறியமுடிகின்றது.

வரோத்தமை என்னும் இயக்கியின் தோற்றத்தையும், அவள் வழியிடைச் செல்வோர்க்கு துன்பமளிக்காதவள் என்பதனையும் கீழ்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

> **”தொடி வளைத் தோளி ஒருத்தி தோன்றி**
> **இம்மைக் கின்பமும் மறுமைக் கின்பமும்**
> **இம்மையு மறுமையு மிரண்டு மின்றியோர்**
> **செம்மையில் நிற்பதுஞ் செப்புமின் நீயிர்இவ்**
> **வரைத்தாள் வாழ்வேன் வரோத்தமை என்பேன்”**

(சிலப். காடுகாண்,பா.111-115)

**"உரையீ ராயினும் உறுகண் செய்யேன்**
**நெடுவழிப் புறத்து நீக்குவல் நும்மெனும்"**

(சிலப்.காடுகாண்.பா.124 – 125)

என்னும் அடிகள் இங்கு நோக்கத்தக்கது. இவ்வியக்கியை குறிஞ்சி நிலத்தின் தொல்குடி தெய்வமாகக் கருதலாம்.

**வனசாரினி**

இளங்கோ காட்டும் வனசாரினி என்னும் இயக்கி தெய்வம், காட்டு வழியாகச் செல்பவர்களைத் துன்புறுத்தும் தன்மை கொண்ட வழியிடைத் தெய்வமாகும். இத்தெய்வம் கானுறை தெய்வம், வனசாரினி, ஆரஞர்தெய்வம் என்ற பெயர்களில் அறியப்படுகின்றது. காட்டுவழியில் செல்பவர்கள் முன் அவர்களுக்கு அச்சம் தோன்றாதவாறு அழகான உருக்கொண்டு துன்பம் செய்யும் தன்மை உடையது.

காடுகாண் கதையில், கண்ணகியும், கவுந்தியடிகளும் மதுரைக்குப் பயணம் செய்த களைப்பினால், வழியின் ஒரு புறத்தில் இருக்க, கோவலன் நீர் வேட்டையினால் ஓர் பொய்கைக்கரையை அடைந்தான். அப்பொழுது அங்குள்ள கானுறைத் தெய்வம் மாதவியின் தோழி வசந்தமாலை வடிவில் தோன்றியது. கோவலனின் பாதங்களில் வீழ்ந்து வணங்கியது. அறிவினை மயக்கும் தெய்வம் இக்காட்டில் உண்டு என்ற மறையோன் கூற்றை உணர்ந்த கோவலன், பாய்கலைப்பாவையாகிய கொற்றவை மந்திரத்தை ஓதினான். அதைக் கேட்ட கானுறை தெய்வம் அஞ்சி, 'யான் இவ்வனத்தின் கண் திரியும் இயக்கி, உனக்கு மயக்கம் செய்ய எண்ணினேன் என்னை மன்னித்துவிடு'

என்று கூறி உன் மனைவியிடத்தும், கவுந்தியடிகளிடமும் நான் செய்த தவறைக் கூறாதே என்று கூறி வருந்தி மன்னிப்பு கேட்டு அவ்விடத்தை விட்டு சென்றது.

**"கோவலன் நாவிற் கூறிய மந்திரம்**
**பாய்கலைப் பாவை மந்திரம் ஆதலின்**
**வனசாரிணியான் மயக்கஞ் செய்தேன்"**

(சிலப்.காடுகாண்காதை,பா.196-198)

என்னும் அடிகள் இங்கு கவனிக்கத்தக்கது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இயக்கி, அழகான உருவம் கொண்டு காண்போரை மயக்கி,துன்புறுத்தக் கூடியது. கொற்றவை மந்திரத்தை உச்சரித்தால் இவ்வியக்கி பிறரை துன்பம் செய்யாது என்ற நம்பிக்கை நிலவி வந்ததை இங்கு அறியமுடிகிறது.

**பூங்கண் இயக்கி**

பூப்போன்ற கண்களை உடையதால் 'பூங்கண் இயக்கி' என்று அழைக்கப்பட்ட ஓர் இயக்கியினை இளங்கோ எடுத்துரைப்பதுண்டு. மதுரையில் புறஞ்சேரி மூதூரில் இருந்த துறவிகள் தங்களது தவத்திற்கு இடையூறு வராதவாறு துணை நிற்கும் என்ற நம்பிக்கையில் இத்தெய்வத்தை வழிபட்டிருக்கலாம். சிலப்பதிகாரத்தில் மதுரைக் கோட்டைக்கு வெளியே அகழியினை ஒட்டியிருந்த பகுதி 'புறஞ்சிறைமுதூர்' என்று அழைக்கப்பெற்றது. அறந்தரும் துறவிகள் தங்கி வாழும் இருக்கையாக அது விளங்கியது. இம்மூதூரில் 'பூங்கண் இயக்கி' என்ற ஒரு இயக்கி கோயில் இருந்தது. மதுரையில், ஆயர்பாடியில் இருந்த மாதரி என்ற ஆயர் முதுமகள் மதுரைக் கோட்டைக்கு வெளியே வந்து மாலைக்காலத்தில் இக்கோயிலிலிருந்து பூங்கண் இயக்கியை வழிபட்டாள். பாற்சோறு படைத்து வழிபாடு செய்தாள் என்று அடைக்கலக்காதை பாடலடிகள் உணர்த்துகின்றன.

**"அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய**
**புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப்**
**பால்மடை கொடுத்துப் பண்பின் பெயர்வோள்**
**ஆயர் முதுமகள், மாதிரி என்போள்"**

(சிலப்.அடைக்கலக்காதை,பா.115-118)

என்னும் அடிகள் மேற்கண்ட கருத்தினை வலியுறுத்துகின்றன.

மதுரைப் புறஞ்சிறை முதூரில் இருந்த பூங்கண் இயக்கியை அறவோர் மட்டுமின்றி, திருமாலை வணங்குகின்ற மாதரியும், ஆயர் குலத்தைச் சார்ந்த பெண்களும் வழிபட்டுள்ளனர்.

**கேரளத்தில் இயக்கி வழிபாடு**

சிலப்பதிகாரம் எடுத்துரைத்த இயக்கி வழிபாடு கேரளத்தில் திருவனந்தபுரம் முதல் காசர்கோடு வரை இன்றும் பரவலாகக் காணப்படுகின்றது. யட்சி தெய்வங்கள் அழகிய தோற்றத்துடன் ஆடவரை மயக்கும் தன்மை கொண்டவள் என்றும் பல்வேறு ஆற்றல்களுடன் மனிதர்களை துன்புறுத்தும் தன்மை உடையது என்றும் கேரள மக்களால் நம்பப்படுகிறது. எனவே அதற்குத் தக்கதான வழிபாடு செய்யும்போது அதன் துன்புறுத்தலிலிருந்து தப்பித்துவிடலாம் என்றும் நம்புகின்றனர். தெய்வம் சார்ந்த மந்திரங்களுக்கு யட்சிகள் கட்டுப்படும் என்ற நம்பிக்கையும் நிலவிவருகின்றது.

கேரளத்தில் வழங்கிவரும் இயக்கி கதைகளில் இரண்டு வகை உண்டு. அவை சுந்தர இயக்கி, இரத்த இயக்கி என்றவாறு அறியப்படுகின்றன. சுந்தர இயக்கி காமமும், மோகமும் உடை யவள். இரத்த இயக்கி அச்சம் தருபவள்; இரத்தம் குடிப்பவள் என்ற நம்பிக்கைகளின் அடிப்படையில் அவ்வியக்கிகள் அறியப்படுகின்றனர். இவ்வியக்கிகள் ஆண்களை ஆசைகாட்டி மயக்கிய நிலையில் அவர்களை தன்வயமாக்கி அழிக்கும் ஆற்றலுடையவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்கள் பாலை மரம், பனை மரம்

போன்றவற்றில் வசிப்பதாக மக்கள் எண்ணுகின்றனர். காளி வழிபாட்டின் மூலம் இயக்கிகளிடமிருந்து தங்களைப் பாதுகாக்க முடியும் என்று கேரள மக்கள் நம்புகின்றனர். அதற்கென்று ஒரு கதையும் வழங்கப்படுகின்றது. அக்கதை கீழ்வருமாறு.

ஓர் இயக்கி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நம்பூதிரியாக ஆசை காட்டி மயக்கி தன் மாளிகைக்கு அழைத்துச் சென்றாள். மறு நாள் காலையில் பக்கத்திலுள்ள பனை மரத்தடியில் நம்பூதிரிகளின் எலும்புகளையும், உடலின் எச்சங்களையும் இட்டு விடுவது வழக்கம். ஒரு நம்பூதிரி தன் கையில் தேவியின் சகஸ்ரநாம புத்தகத்தை ஏந்தியவாறு வழியில் சென்றார். அவ்வழியே வந்த இயக்கி அழகான ஒரு பெண் உருவத்தில் வந்து மயக்கினாள். நம்பூதிரியின் கையிலிருந்த தேவியின் சகஸ்ரநாம புத்தகத்தை பலமுறை மாற்றி வைக்கக் கூறினாள். ஆனால் அவர் புத்தகத்தை கையிலிருந்து மாற்றவில்லை அதனால் இயக்கியால் அவரைக் கொல்ல முடியவில்லை. நம்பூதிரியும் உயிர் பிழைத்தார். தான் கண்ட மாளிகை, அழகிய பெண் அனைத்தும் இயக்கியின் மாயை என்று அவர் தெரிந்து கொண்டார். என்ற கதையின் மூலம் இரத்த இயக்கியரின் செயல்பாடுகளாக மக்களால் நம்பப்படும் சில விடயங்கள் தெரியவருகின்றன.

கேரளத்தில் மரத்தின் அடியிலும், காவுகளிலும் கோயில்களிலும் இயக்கியை வழிபட்டு வருகின்றனர். பல கோயில்களிலும் இயக்கித்தரை உண்டு. பாலை மரத்தின் அடியில் ஒரு கல் பிரதிட்டை செய்து, இயக்கி வழிபாடு நடத்துகின்றனர். காவுகளிலும், கோயில்களிலும் துணைத்தெய்வமாகவும் வழிபடுகின்றனர்.

பத்தனந்திட்டா மாவட்டத்தில் கவியூர் மகாசிவன் கோவில் உள்ளது. அங்கு `மகாயக்ஷி`யைத் துணைத்தெய்வமாக பிரதிட்டை செய்துள்ளனர். அங்கு இயக்கி மேற்கு நோக்கிய நிலையில் வெள்ளை உடை அணிந்து, இடது கையில் கண்ணாடியும், வலது

கையால் நெற்றியில் திலகமிடுவது போலவும் காட்சியளிக்கின்றாள். பௌர்ணமியன்று சிறப்புவழிபாடு செய்கின்றனர். திருவனந்தபுரம் ஶ்ரீ பத்மநாபசுவாமி கோவிலில் மூலக்கருவறையின் தென்மேற்கு மூலையில் இயக்கியைச் சித்திரமாகத் தீட்டியுள்ளனர். இதனை காஞ்சிரம்காட்டு இயக்கி என்றும், மோட்சம் கிடைப்பதற்காக நரசிம்மமூர்த்தியை தியானித்து வருவதாகவும் மக்கள் நம்புகின்றனர்.

தாய்த்தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடைய இவ்வியக்கி வழிபாடு கேரளத்தில் சமணசமயம் பரவியபோது கேரள மக்களால் வழிபடப்பட்டது என்றே கொள்ளலாம். இத்தொல் திராவிடமரபு கேரளத்தில் இன்றும் நிலைத்து நிற்கின்றது என்பது சிறப்பான ஒன்றாகும்.

**இயக்கிப்பாட்டு**

கேரளாவின் இயக்கி வழிபாட்டில் 'இயக்கிக்களம்' அமைக்கப்படுகின்றது. இயக்கிக்களம் அமைத்து நிகழ்த்தப்பெறும் வழிபாட்டில் ‘தெய்யம்பாடிகள்’ என்று அறியப்பெறுவோர் யட்சி குறித்த பாடல்களைப் பாடி வழிபாடு நிகழ்த்துகின்றனர். அப்பாடல்கள் வழி யட்சிகள் பற்றிய நம்பிக்கைகளை அறியமுடிகின்றது. சான்றுக்கு ஒரு பாடல் கீழ்வருமாறு,

**”அந்தரயக்ஷி வருமென்று சொல்லி நான்**
**சுந்தரயக்ஷிக்கு களமிட்டு துள்ளினேன்**
**சுந்தரயக்ஷி வருமென்று சொல்லி நான்**
**அந்தரயக்ஷிக்கு களமிட்டு துள்ளினேன்.**
**ஒன்றாம் மாதத்தில்**
**கர்ப்பத்தைக் கலைக்கின்ற**
**உன் பாவங்களை நான் அறிவேன்**
**குத்தி உதிரம் குடித்தவள் இவளோ**
**குடல் மாலை அணிந்தவள் இவளோ.**
**ஆற்றின் கரையிலும், ஓடைக்கரையிலும்**

**சீழ்க்கை அடித்து நடந்தவள் இவளோ,**
**போகவேண்டும் நீ போர்க்களம் தன்னில்**
**அந்தி, மதியம், சாயுங்காலம் என**
**வந்து எதிர்க்கின்ற தேவதைகளே**
**நான் தரும் பலி பூசைகளெல்லாம்**
**ஏற்றிடுங்கள் சுகம் சமம்"**

(Prof.வி.ஆனந்த குட்டன் நாயர், கேரள பாஷா கானங்கள், பாகம்2,ப.25)

மேற்குறிப்பிட்ட பாடலில் குறிப்பிடப்படும் சுந்தர இயக்கி, அந்தர இயக்கி என்னும் இயக்கிகளுக்கு களம் அமைத்து பாடி வழிபடுகின்றனர். கர்ப்பிணிப் பெண்களைத் துன்புறுத்தாமல் இருக்க இயக்கிகளுக்கு பலி, பூசைகள் செய்வதனையும் அறிய முடிகின்றது. இயக்கி மட்டுமல்லாமல் இயக்கர்களுக்கும் வழிபாடு நிகழ்த்தப்பெறுவதுண்டு.

**யட்ச கானம்** (இயக்கி கானம்)

காசர்கோடு மாவட்டத்தில் 'யக்ஷகானத்திற்குத்' தனிச் சிறப்பு உண்டு. குபேரன் இயக்கர்களின் அரசனாகக் கருதப்படுகின்றான். **"சிவபெருமான் திரிபுரத்தை எரித்த பின்னும் சினம் அடங்காதவராகக் காட்சியளித்தார். அதனால் குபேரன் இயக்க கணங்களை அழைத்து பல வேடங்கள் புனைந்து சிவனைச் சுற்றி ஆடிப்பாடுகின்ற சடங்கினைச் செய்தார். இதனால் சிவனின் கோபமும் தணிந்தது. இதன் நினைவாக யக்ஷகானம் நிகழ்த்தப்பெற்று வருகின்றது".** (டா.எம்.வி.விஷ்ணு நம்பூதிரி, ஃபோக்லோர் நிகண்டு,ப.332) என்ற கருத்து யட்சகானம் தோன்றியதற்கான காரணத்தைக் கற்பிக்கின்றது.

**துள்ளல்**

'துள்ளல்' என்பது தென்கேரளத்தில் அறுவடை முடிந்த பின் காளிக் காவுகளில் நடத்தப்பெற்று வருகின்ற ஒரு சடங்குக் கலை. இது பலவகையாக அமைகின்றது. பெண்களை பிடித்திருக்கும் தீயசக்திகளை விரட்டுவதற்காக 'இயக்கித் துள்ளல்'

நிகழ்த்துகின்றனர். 'கணகன்' இனத்தவர் இதனை நிகழ்த்துகின்றனர். காவுகளில் படையணி நிகழ்த்தும்போது யக்ஷி துள்ளலும் கந்தர்வன் துள்ளலும் நடைபெறுகின்றது.

**காமன் வழிபாடு**

காமன் வழிபாடு என்பது மிகத் தொன்மையான ஒன்றாகும். காமனைப் பற்றிய செய்திகள் புராணங்களிலும் பழந்தமிழ் இலக்கியங்களிலும் காணப்பெறுகின்றன. காமன் அனங்கன், உருவிலாளன், மன்மதன், வசந்தன், மாறன் போன்ற பல பெயர்களில் அறியப்பெறுகின்றான். காமன்விழாவானது இளவேனில் பருவத்தை வரவேற்பதற்காக கொண்டாடப்படுகின்றது. பங்குனி மாதத்தின் இறுதி அல்லது சித்திரை மாதத்தின் தொடக்கத்தில் வசந்தவிழா என்னும் காமன் விழா கொண்டாடப்பெற்றதாக சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இதனை 'வில்லவன் விழா' என்றும் அழைக்கின்றனர்.

கலித்தொகையில்,

**"மல்கிய துருத்தியுள் மகிழ் துணைப் புணர்ந்தவர்**
**வில்லவன் விழவினுள் விளையாடும் பொழுது"** (கலி. 35: 13-14)

என்ற அடிகள் காமன் விழாவினை வில்லவன் விழா என்று குறிப்பிடுகின்றது.

அகநானூற்றில்,

**"……………………………………பேறியாற்று**
**உருவ வெண்மணல் முருகு நாறு தண்பொழிற்**
**பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்"** (அகம்.137: 8-9)

எனப் பேரியாற்றங்கரையில் நடந்த காமன் விழாவினை 'பங்குனி முயக்கம்' என்று சுட்டுகின்றது. இதனால் பங்குனி மாதத்தில் காமன் விழா நடைபெற்றது என்பது தெளிவாகின்றது.

வேதகாலமுதலே மன்மதன் என்ற கருத்துருவாக்கம் இருந்து வந்துள்ளது. சிலப்பதிகார காலத்திலும் காமன் வழிபாடு இருந்தது.இன்றும் இந்தியாவின் பல பகுதிகளிலும் வேறு வேறு பெயர்களில் இவ்விழாக் கொண்டாடப்பட்டு வருகின்றது. குறிப்பாக வடகேரளத்தில் 'பூரவிழா' என்ற பெயரில் கன்னிப்பெண்கள் கொண்டாடும் விழாவாக அமைந்துள்ளது. அப்பெண்களுக்கு எதிர்காலத்தில் நல்ல கணவன் கிடைப்பான் என்ற நம்பிக்கையே இவ்விழாவின் அடிப்படையாகும். அனைத்து உயிர்களும் இன்புற்று வாழ்வதற்காக இவ்விழா கேரளத்தில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

**சிலப்பதிகாரத்தில் காமன் வழிபாடு**

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் வேனிற்காதை, இளவேனிலின் இளவரசனான மன்மதனை இயற்கை வரவேற்பதனை எடுத்துரைத்துள்ளது. இவ்விளவேனிற்காலம் கோவலனைப் பிரிந்த மாதவிக்கு எவ்வாறு துன்பத்தினை அளித்தது என்பதனையும் விவரித்துள்ளது. சிலப்பதிகாரத்தில் காமனின் இயல்புகள் பலவாறு எடுத்துரைக்கப்பட்ட நிலையில் காமவேள் கோட்டம் இருந்ததனையும், மக்கள் காமனை வழிபட்டிருந்தனர் என்பதனையும், காமனுக்கு விழாக் கொண்டாடி சிறப்பு செய்தனர் என்பதனையும் அறியமுடிகின்றது.

மதுரை, உறந்தை, வஞ்சி, புகார் போன்ற பேரூர்களை ஆட்சி செய்யும் மன்னனாகிய மாரனின் துணைவனான இன் இளவேனில் புகார் நகரினை அடைந்தான் என்பதனை,

**"மன்னன் மாரன் மகிழ்துணை யாகிய**
**இன்னிள வேனில் வந்தனிவ ணென"** (சிலப். வேனிற்.6-7)

என்றவாறுபாடலடிகள் தெளிவுறுத்துகின்றன.

**"மன்னுயிரெல்லாம் மகிழ்துணை புணர்க்கும்**
**இன்னிளவேனில் இளவர சாளன்"** (மேலது,56-57)

என்ற கடிதக் கூற்றுவழி மாதவி கோவலனுக்கு எழுதிய முதல் கடிதத்தில் உலக உயிர்களுக்கெல்லாம் இன்பத்தைத் தருகின்ற இளவேனிலாகிய இளவரசன் வந்துவிட்டான் என கோவலனைப் பிரிந்த மாதவி தன் ஆற்றாமையினை வெளிப்படுத்துகின்றாள்.

புகார் காண்டத்தில் இடம்பெறும் மனையறம் படுத்த காதையில், வணிக குலத்தில் பிறந்த கண்ணகியும், கோவலனும் திருமணம் முடிந்தபின் எழுநிலை மாடத்தின் நிலாமுற்றத்திற்குச் செல்கின்றனர். அங்கு, காம உணர்வினைத் தூண்டுகின்ற காமன், மணம் கமழ்கின்ற மலர்க்கணைகளுடன் வீற்றிருக்கின்றான். என்பதனை,

**"விரைமலர் வாளியொடு வேனிற்வீற் றிருக்கும்**
**நிறைநிலை மாடத்தரமிய மேறிச்"**
(சிலப்.மனையறம் படைத்த காதை, பா. 26- 27)

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன. இதனால் காமன் தன் மலர் அம்புகளால் காம உணர்வைத் தூண்டுபவன் என்பதனை அறியமுடிகின்றது.

மாலைநேரம் கழிந்து வெண்பிறை தோன்றிய நிலாமுற்றத்திலே, மாதவி, மலரமளியில் ஊடலும் கூடலும் கோவலற்கு அளித்து இன்புறுகின்றாள். அவளைப் போன்றே கணவரோடு கூடிய மகளிர் பலரும், களி துயில் அடைந்தனர். அப்பொழுது இரவு முடிந்து வைகறை பொழுதுவரை மலரம்பும், கரும்பு வில்லும் ஏந்திய மன்மதன், மகரக் கொடியுடன் நடுயாமத்திலும் உறங்காது திரிகின்றான். ஆதலால் புகார் நகரக் காவல் இவ்வாறு சிறந்து விளங்கியது என்று இளங்கோ கூறுகின்றார். இதனை,

**"அரையிருள் யாமத்தும் பகலும் துஞ்சான்**
**விரைமலர் வாளியொடு கரும்புவில் லேந்தி**

**மகர வெல்கொடி மைந்தன் திரிதர**
**நகரங் காவல் நனிசிறந் ததுவென்”**

(சிலப்.அந்திமாலை சிறப்பு,பா. 81- 84)

என்று காட்டுகின்றார். இங்கு காமனின் ஆயுதங்களாகிய மலர் அம்பும் கரும்பு வில்லும் குறிப்பிடப்பட்டுள்ளன. மகரக் கொடியினை உடையவனாகவும் அவன் குறிப்பிடப்படுகின்றான்.

வெள்ளிமலையில், வித்யாதரர் நகரத்தில் காமதேவனுக்கு விழாக் கொண்டாடும் ஓர் வித்யாதரவீரன், புகார் நகரில் இந்திரவிழாக் கொண்டாடப் பெறுவதைத் தன் காதலியிடம் கூறுகின்றான். இருவரும் புகாரினை வந்தடைந்து விழாவினைக் கண்டு மகிழ்ந்ததாகக் கடலாடு காதையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**”வெள்ளி மால்வரை வியன்பெருஞ் சேடிக்**
**கள்ளவிழ் பூம்பொழிற் காமக்கடவு க்குக்**
**கருங்கயல் நெருங்கண் காதலி தன்னொடு**
**விருந்தாட் டயருமோர் விஞ்சை வீரன்”** (சிலப்.கடலாடுகாதை,1-4)

இப்பாடல் மூலம் வித்யாதரர்களும் காமனை வழிபடுகின்ற தன்மையினை அறிந்து கொள்ளலாம்.

புகார் நகரில் இந்திர விழாவின் போது மாதவி ஆடிய பதினோராடலில் காமன் பேடு என்னும் கூத்தினை, ஆடியதாகக் கூறப்பட்டுள்ளது. வாணனின் மகள் ’உழையின்’ காரணமாகக் காமனின் மகன் அநிருத்தனை வாணன் சிறைவைத்தான். அவனை சிறையிலிருந்து மீட்க மாயோன் குடக்கூத்து ஆடினான். மீட்டபின் காமன் பேடு என்னும் கூத்தினை ஆடினான்.

**”ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்**
**காமன் ஆடிய பேடி ஆடலும்”** (சிலப்.கடலாடுகாதை, 56-57)

மேற்கண்ட பாடலடிகள் மூலம் காமன் பேடிக்கூத்து ஆடியதை உணர முடிகின்றது.

**பங்குனி முயக்கத்துப் பனியர சியாண்டுளன்”**

(சிலப்.ஊர்காண் காதை,111-112)

**”தென்வைன் பொதியில் தென்றலோடு புகுந்து**
**மன்னவன் கூடல் மகிழ்துணை தழூஉம்**
**இன்னிள வேனில் யாண்டுளன் கொல்லென்று”**

(சிலப்.ஊர்காண்காதை,பா.115 -117)

என்னும் பதிவுகள் கவனிக்கத்தக்கது. இங்கு இளவேனில் கால அரசனாகிய காமன் எப்பொழுது வருவான் என்று எண்ணுகின்ற பெண்களையும், பங்குனி மாத இறுதியில் நெடுவேள்வில்விழா நடத்துவதையும் அறிகின்றோம். இன்றும் கேரளத்திலும் வேறு பல இடங்களிலும் பங்குனிமாதம் இறுதியில் காமன்விழா நடத்தப்பெறுகின்றது.

கண்ணகி கோவலனைப் பிரிந்திருந்த காலத்தில், கண்ணகியின் உற்ற தோழியும், சாத்தன் கோயில் வழிபாடு செய்யும் உரிமை பெற்றவளுமாகிய தேவந்தி எனப்படுபவள், கண்ணகியிடம் சென்று கணவனைப் பெறுவாயாக என வாழ்த்தினாள். புகார் நகரில் காவிரி கடலோடு கலக்கும் இடத்திலுள்ள கடற்கரைப் பகுதியில் சோமகுண்டம், சூரிய குண்டம் என்னும் பெயரை உடைய இரண்டு பொய்கைகள் உள்ளன.அவற்றில் மூழ்கி மன்மதன் கோயிலுக்குச் சென்று மன்மதனை வணங்கினால், இவ்வுலகத்திலும் தம் கணவனைப் பிரியாது இன்பத்துடன் வாழ்வார், மறுஉலகத்திலும் போக பூமியில் பிறந்து கணவரோடு ஒன்றாக, இன்பமாக வாழ்வார். அவற்றில் நாமும் ஒரு நாள் நீராடுவோம் என்று தேவந்தி, கண்ணகியிடம் கூறினாள். அதைக் கேட்ட கண்ணகி ’அங்ஙனம் துறை மூழ்கித் தெய்வம் தொழுதல் எங்களுக்கு இயல்பன்று’ என்று கூறி மறுக்கின்றாள்.

**”கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றில்**

**மடலவிழ்நெய்தலங் கானல் தட முள**
**சோமகுண்டம் சூரியகுண்டம் துறைமூழ்கிக்**
**காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு**
**தாமின் புறுவ ருலகத்துத்தையலள்**
**போகம் செய் பூமியினும் போய்ப்பிறப்பர்"**

(சிலப்.கனாத்திறம், பா 57- 62)

என்ற பாடலடிகள் மூலம் சிலப்பதிகார காலத்தில் காமன் கோட்டம் இருந்தது என்பதும், காமனை வழிபட்டால் கணவனுடன் இன்புற்று வாழலாம் என்ற நம்பிக்கை மக்களிடையே இருந்தது என்பதனையும் அறிய முடிகின்றது.

கோவலன், மாடலமறையோனிடம் தான் கண்ட கனவினைக் கூறும்போது, மாதவி தன் மகள் மணிமேகலையை போதிதர்மனாகிய புத்தர் பெருமானிடத்து அளிக்கின்றாள். அப்பொழுது காமக்கடவுளாகிய காமன் தன் மலரம்புகளை வெறுநிலத்தில் எறிந்து செயலற்று, ஏக்கம் கொள்கின்றான் என்று தனது கனவுக் காட்சி குறித்து விளக்கியமைகின்றான்.

**"மாமலர் வாளி வருநிலத் தெறிந்து**
**காமக் கடவுள் கையற் றேங்கு**
**அணிதிகழ் போதி அறவோன் றன்முன்**
**மணிமேகலையை மாதவி அளிப்பவும்"** (சிலப்.அடைக்கல. 101-104)

இங்கு மணிமேகலை துறவு மேற்கொள்ளுதலால் அனைத்து உயிர்களுக்கும் காம உணர்ச்சியைத் தருகின்ற காமக்கடவுள் வருந்துவதனைச் சிலப்பதிகாரம் எடுத்துரைக்கின்றது.

சிலப்பதிகாரத்தில் புகார் காண்டத்திலும், மதுரைக் காண்டத்திலும் காமன் பற்றிய செய்திகள் காணப்பெறுகின்றன. அக்காண்டங்கள் வழி காமன் கோட்டம், காமன் வழிபாடு, காமனின் செயல்கள், காமன் பற்றிய நம்பிக்கைகள் போன்றவற்றை அறிந்துகொள்ள முடிகின்றது. காமனுக்கு விழா எடுப்பது பல இடங்களில் இன்றளவும்

நடைபெற்று வருகின்றது. மதுரையில் ஆண்டுதோறும் பங்குனி மாதம் நெடுவேள் வில்விழா என்ற பெயரில் காமன் விழா நடைபெறுகின்றது. சிலப்பதிகாரத்திலும் 'நெடுவேள்வில் விழா' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. காமன்விழா வடகேரளத்தில் 'பூரவிழா' என்னும் பெயரில் கொண்டாடி வருகின்றனர். ஒவ்வொரு வருடமும் காமன் வரவேண்டும் என்று கன்னிப் பெண்கள் காமனை வழிபட்டு விழாவின் முடிவில் வழியனுப்புகிறார்கள். இவ்வழிபாடு மூலம் பெண்களுக்கு நல்ல கணவன் கிடைப்பான் என்ற நம்பிக்கையும் மக்களிடையே காணப்படுகின்றது. இதைத்தொடர்ந்து ஆண்களின் பூரக்களியும் நடைபெறும்.

**கேரளத்தில் காமன் விழா**

காமன்விழா வடகேரளத்தில் ஒரு சடங்கியல் வழிபாட்டு மரபாகக் கொண்டாடப் பெற்று வருகின்றது. இவ்விழாவினை ஆண்டுதோறும் பங்குனி மாதத்தில் கார்த்திகை நாள் முதல் பூரம் நாள் வரை ஒன்பது நாட்கள் கொண்டாடுகின்றனர். இதனைப் பூரவிழா என்றும் அழைப்பர். வடகேரளத்தில் பூரவிழா பிற இடங்களில் நிகழும் விழாவிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது.

கன்னிப்பெண்கள் (பூப்படையாத) காமதேவனை நினைத்து, மலர்களாலும், மண்ணாலும், பசுஞ்சாணியாலும் உருவம் செய்து பலவித மலர்களால் பூசை செய்கின்றனர். விழாக் கொண்டாடப்படுகின்ற ஒன்பது நட்களிலும் புதிதாக ஒரு காமன் உருவம் செய்து வீட்டின்முற்றத்திலோ, பூஜை அறையிலோ வைத்து வழிபாடு செய்வர். வீட்டின் கிணற்றடியிலும் காமனை நினைத்து மலர் பூசை செய்வர். ஒன்பதாம் நாள் பூசை செய்த அனைத்து மலர்களையும் கூடையில் இட்டு, காமனின் ஒன்பது உருவங்களையும் எடுத்துக் கொண்டு வீட்டிலுள்ள பலாமரத்தின் அடியில் வைத்து காமனை வழியனுப்புவர்.

வழியனுப்பும்போது பாடலும் பாடுகின்றனர். ‘காமா, காமா, இப்பொழுது போய் அடுத்த வருடம் இதே வேளையில் வேகமாக வரவேண்டும் காமா’ என்று பாடுகின்றனர். இது சிலப்பதிகாரம் காட்டிய காமன் விழாவின் தொடர்ச்சியே என்பது உறுதியாகின்றது.

காமனின் உருவம் பெரும்பாலும் மண்ணால் செய்யப்படுகின்றது. கண்களுக்கு குன்றின்மணியும், இடையில் ஆபரணமாக முள்முருங்கையின் விதைகளும், உபயோகிக்கின்றனர். வீட்டிலும், சுற்றுப்புறங்களிலும் உள்ள எருக்கு, அரளி, செண்பகப்பூ போன்ற பூக்களை மாலையாகவும், பூசைக்காகவும் பயன்படுத்துகின்றனர்.

பூரம் நாளன்று பூர அடையும், பூரக்கஞ்சியும் காமனுக்குப் படைப்பர். பூரவிழா பெண்களுக்குரிய விழா. இது ’வனிதோத்ஸ்வம்’ என்றழைக்கப்படுகின்றது. பூரம் நாளன்று ’பூரக்களியும்’ நிகழ்த்தப்பெறுகின்றது. களி என்றால் விளையாட்டு என்று பொருள். பூரக்களி இளைஞர்களின் விளையாட்டாகும்.

உத்தர கேரளத்தில் காவுகளிலும், பகவதி கோயில்களிலும் பூரக்களி நடத்தி வருகிறார்கள். களரிப்பயிற்றின் பாரம்பரியத்தை இதில் காணமுடிகின்றது. பூரக்களி’ காமனின் தகனத்தை’ அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பெறுவதாகும்.

**பூரக்களியின் தொன்மம்**

கேரளத்தில் நிகழ்த்தப்பெறும் பூரக்களியின் தொன்மம் பின்வருமாறு: சிவபெருமான் தியானத்திலிருதார். பார்வதி சிவபெருமானின் அருள்வேண்டி, மலர்களால் பூசை செய்து வந்தாள். இதனைக் கண்ட மன்மதன், சிவபெருமானுக்கு பார்வதியிடம் மோகம் தோன்ற சிவபெருமானின் மீது மலரம்புகளை எய்தான். சிவபெருமானின் தவம் கலைந்தது. சினம் கொண்டு நெற்றிக் கண்ணால் காமனை எரித்து சாம்பலாக்கினார். இதை அறிந்த காமனின் மனைவி ரவி சிவபெருமானிடம் தன் கணவனை உயிர்ப்பித்து

தருமாறு அழுது முறையிட்டாள். ரதிதேவியின் கண்ணீரைக் கண்ட சிவபெருமான் காமனை உயிர்ப்பிக்க ஒரு உபாயம் கூறுகின்றார். ரதியும் தேவலோக மங்கைகளும் சேர்ந்து மலர்களால் காமனின் உருவம் செய்து, பங்குனி மாதம் கார்த்திகை நாள் முதல் பூரம் நாள் வரை ஒன்பது நாட்கள் விரதம் மேற்கொண்டு, வழிபாட்டுடன் ஆடலும், பாடலும் நிகழ்த்த வேண்டும். அவ்வாறு செய்தால் காமதேவன் மீண்டும் பிறப்பான் என்று சிவபெருமான் அருள்புரிகின்றார். பதினெட்டு தேவதைகள் பூரமாலைப் பாட்டு பாடி ஆடினார்கள். காலமாறுதலால் இக்கலை இன்று பதினெட்டு ஆண்கள் ஆடும் ஆடலாக விளங்குகின்றது.

தமிழகத்திலும் காமன் விழா கொண்டாடப்படுவதுண்டு. மாசிமாதம் பௌர்ணமி நாளே காமன் பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. சிவபெருமான் காமனை எரித்த கதையினை அடிப்படையாகக் கொண்டு இவ்விழா நிகழ்த்தப்படுகின்றது.

ஒவ்வொரு வருடமும் மாசிமாதம் மூன்றாம் நாள் நிலாப்பிறை பார்த்து தெருவின் முக்கியமான பகுதியில் கொடிக்கம்பம் ஒன்றை நட்டு கொடியேற்றுவர். பச்சைவண்ணக்கொடியில் மீன் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். கொடிக்கம்பத்தின் பக்கத்தில் பேக்கரும்பு, சித்தகத்தி, கொட்டாமணக்கு, காதோலை, கருகமணி போன்ற பொருட்களை வைக்கோலால் ஒன்றாகக் கட்டி ஊன்றி வைக்கிறார்கள். இதன் மேல் எருவாட்டி ஒன்றும் தொங்கவிடப்படுகிறது. இவை மன்மதனின் உருவமாகவும், உடமையாகவும் கருதப்படுகிறது. இப்பொருட்களுக்கு பௌர்ணமி வரை பூசை செய்கின்றனர்.

தமிழகத்தில் காமன் பண்டிகையின் முதல்நாள் இரவு காமனை எரித்து, இரண்டாம் நாள் இரவு ஒப்பாரி வைத்த பின், மூன்றாவது நாள் இரவு மன்மதனை எரித்த சாம்பலை

ஆற்றில் கரைப்பர். இறப்புச் சடங்குகளும் செய்வர். அன்று இரவு மன்மதன் உயிர்த்தெழுவதாக ஓர் ஐதீகம் உண்டு.

காமன் பண்டிகை மதுரை, கும்பகோணம், தஞ்சை, திருச்சி, தேவகோட்டை, சென்னை போன்ற ஊர்களில் கொண்டாடப்பட்டு வருகின்றது. (பா.ஆனந்தகுமார், இலக்கியமும் பண்பாட்டு மரபுகளும்,ப.114) தமிழகத்தில் பெரும்பாலான கிராமங்களில் ஒவ்வொரு வருடமும் காமன் பண்டிகை கொண்டாடப்பெற்று வருகின்றது. அது சிவன், காமனை எரித்த கதை என்றறியப்பட்ட நிலையில் 'காமதகனம்' என்னும் பெயரில் நிகழ்த்தப்பெற்று வருகின்றது.

**தாய்த்தெய்வ வழிபாடு**

மிகப்பழங்காலத்தில் தாய்த்தெய்வ வழிபாடு உலகில் உள்ள பல நாடுகளிலும், பல இனக்குழு மக்களிடையிலும் பரவலாக இருந்து வந்த வழிபாடாகும். தாய் தெய்வத்தைத் தாயாகவும், கன்னியாகவும் உருவகப்படுத்திக் கூறுவது மிகப் பழங்காலத்திலிருந்தே மரபாக உள்ளது. சக்தி என்பது தாய்த்தெய்வம், ஆரியர் தம் வழிபாட்டில் பெண் தெய்வ வழிபாடு இருப்பினும், திராவிடர்களின் சமயப்பண்பாட்டில்தான் பெண் தெய்வத்திற்கு உயர்ந்த இடம் அளிக்கப்பட்டிருந்தது. ஆரியர்கள் போரையே விரும்பி ஆண் தெய்வத்திற்கு உயர்வளித்தனர். திராவிடர்கள் வேளாண்மையை விரும்பிப் போற்றியவர்கள். அதனால் வளமைத் தெய்வமான பெண் தெய்வத்திற்கு முதன்மை கொடுத்தனர். இவ்வழிபாடு சிந்து வெளி நாகரீக காலத்திலிருந்தே தொடங்கியது என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இன்று சக்தி ஆராதனை இந்தியாவில் அதிலும் கேரளம், வங்காளம் போன்ற மாநிலங்களில் அதிகமாக வழிபட்டு வருகின்றது.

தொல்காப்பியம் பாலைக்கு நிலத்தைக் குறிப்பிடவில்லை. ஆனால் வெட்சித் திணைக்குரிய துறையாக 'கொற்றவை நிலை'யினை வகுத்துள்ளது.

**"மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த**
**கொற்றவை நிலையு மத்திணைப் புறனே"** (தொல்.பொருள்.59)

என்ற பதிவு கவனிக்கத்தக்கது. மறவர்கள், போர்த்தெய்வமாகிய கொற்றவைக்கு நேர்த்திக்கடன் செலுத்தும் போது 'கொற்றவை நிலை' கூறப்படுகின்றது. தாய்த் தெய்வங்களில் கொற்றவை புராதனக் கூறுகளைக் கொண்டிருக்கிறாள். கொற்றவை பழையோள், காடமர் செல்வி, காடுகிழாள், ஐயை பாலைக்கிழத்தி போன்ற பெயர்களால் அழைக்கப் பெறுகின்றாள். சிலப்பதிகாரத்தில் கொற்றவையை அமரி, குமரி, கவுரி, சமரி, சூலி, நீலி, ஐயை, செய்யவள், ஆய்கலைப்பாவை என பல்வேறு பெயர்களாலும் குறிப்பிடுவதுண்டு.

பகைவர்களை எதிர்த்துப் போரிடச் செல்லும் வீரர்கள் வெற்றி வேண்டி கொற்றவையை வணங்கிச் செல்லுதலை 'கொற்றவை நிலை' என்று தொல்காப்பியம் குறித்துள்ளது.

புறப்பொருள் வெண்பாமாலையில் கொற்றவையின் நிலையை,

**"ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்**
**கூளி மலிபடைக் கொற்றவை- மீளி**
**அரண் முருங்க ஆகோள் கருதி னடையார்**
**முரண் முருங்கத் தான் முந்துறும்."** (புறப்பொரு.வெ.மாலை,பா.19)

ஆளிக் கொடியினையும், பசுங்கிளியினையும் பாய்கலை ஊர்தியினையும் உடைய கொற்றவை ஒரு மறவீரன் பகைவர்களின் ஆநிறையை கைப்பற்ற நினைத்து படையைத் திரட்டுவதற்கு முன்பாகவே அவள் எழுந்தருள்வாள் என்று மேற்குறிப்பிட்ட பாடல் எடுத்தியம்புகின்றது.

பாலை நிலத்தின் தெய்வம் கொற்றவை. வெற்றித் தெய்வமாகிய கொற்றவையின் நட்சத்திரம் பரணி. **"காடுகெழு செல்விக்குப் பரணி நாள் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடுவதொரு வழக்கு"** (தொல்.செய்.149) என்று பேராசிரியர் உரை விளக்கம் தந்துள்ளார். இளங்கோவடிகளும் கொற்றவையை சிறப்புச் செய்ய 'வேட்டுவவரி' என்ற ஒரு காதையை அமைத்துள்ளார். கொற்றவையைப் போர்க்குரிய தெய்வமாகவும், வெற்றி தரும் தெய்வமாகவும் போற்றியுள்ளார்.

**சிலப்பதிகாரத்தில் கொற்றவை நிலை**

**"கள்விலை யாட்டி மறுப்பப் பொறாமறவன் கைவில் ஏந்திப்**
**புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரை கருதிப் போகும் போலும்**
**புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரை கருதிப் போகும் காலைக்**
**கொள்ளுங் கொடி யெடுத்துக் கொற்றவையும்**
**கொடுமரமுன் செல்லும் போலும்"**

(சிலப்.வேட்டுவவரி, உரைபாட்டுமடை, 13)

மறவன் ஒருவன் தன் பழைய கடனைக் கொடுக்காததால், கள்விற்கும் பெண் அவனுக்குக் கள் கொடுக்க மறுக்கின்றாள். அதைப் பொறுக்காத வீரன் கையில் வில்லினை ஏந்தி, புள் நிமித்தம் தனக்குச் சாதகமாக அமைய, பகைவர்களின் ஆநிறையைக் கவர்வதற்காகச் சென்றான். அவ்வாறு போகும்போது, கொற்றவை தன்னுடைய ஆளிக்கொடியை உயர்த்தி, அவ்வீரனின் வில்லின் முன் செல்வாள் என்று மேற்குறிப்பிட்ட பாடல் அடிகள் கொற்றவை நிலையினை எடுத்துக்காட்டுகின்றது.

**கொற்றவையின் தோற்றம்**

**"மதியின் வெண்தோடு சூடுஞ் சென்னி**
**நுதல்கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்**
**பவள வாய்ச்சி தவளவாள் நகைச்சி**
**நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து**
**அரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்**

**துளையெயிற் றுரகக் கச்சுடை முலைச்சி**
**வளையுடைக் கையில் சூல மேந்தி**
**கரியின் உரிவை போர்த்தணங் காகிய**
**அரியின் உரிவை மேகலை யாட்டி**
**சிலம்புங் கழலும் புலம்புஞ் சீறடி**
**வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை**
**இரண்டுவே றுருவில் திரண்ட தோள் அவுணன்**
**தலைமிசை நின்ற தையல்”** (சிலப்.வேட்டுவவரி,பா.54-66)

என்னும் பாடலடிகளில் சென்னியில் பிறையை அணிந்தவள், இமையாத நெற்றிக் கண்ணினையும் உடையவள், பவளம் போன்ற வாயினையும், ஒளி பொருந்திய புன்னகையினையும் உடையவள், நஞ்சினை உண்டதால் கறுத்த கண்டத்தினை உடையவள், வாசுகி என்னும் பாம்பினை நாணாகப் பூட்டி மேருமலையினை வில்லாக வளைத்தவள், பாம்பினைக் கச்சாக அணிந்தவள், கையில் சூலம் ஏந்தியவள், யானையின் தோலைப் போர்த்தி, சிங்கத்தின் தோலை மேகலையாக உடுத்தவள். வலப்பக்கத்து வீரக்கழலும் இடது பக்கம் சிலம்பும், வெற்றியைத் தரும் வாளினையும் கையில் ஏந்தியவள். மகிடாசுரனின் தலைமீது நின்றவள். என சிவபெருமானின் செயல்களை கொற்றவையின் மீது ஏற்றிக் கூறுகின்றார்.

**”சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்**
**செங்கண் அரிமால் சினவிடைமேல் நின்றாயால்”**

(சிலப்.உரைபாட்டுமடை,9)

என்ற பாடலில் சங்கினையும், சக்கரத்தினையும் கைகளில் ஏந்தியவள் என கொற்றவையைத் திருமாலுடன் இணைத்துக் கூறியுள்ளார். கொற்றவை திருமாலுக்குத் தங்கை, சிவபெருமானுக்குக் கிரியா சக்தி. எனவே இருவர் செயல்களும் கொற்றவை மேல் ஏற்றிப் புகழப்படுகின்றன.

**சாலினியின் கொற்றவைக் கோலம்**

சிலப்பதிகாரத்தில், வேட்டுவவரி என்பது ஒரு சிறிய காதையாக இருப்பினும், அக்காதை எடுத்துரைக்கும் நிகழ்வுகள் எயினர்களின் வாழ்வியலைச் சித்திரிக்கின்றது. அவற்றில், கொற்றவையின் தோற்றம், தெய்வமேறுதல், சாலினியின் வாக்குரைத்தல் ஆகியன முக்கிய இடம்பெறுகின்றன. கொற்றவையின் தோற்றத்தினை கீழ்வரும் பாடல் அடிகள்

**"இட்டுத் தலையெண்ணும் எயின ரல்லது**
**சுட்டுத் தலைபோகாத் தொல்குடிக் குமரியைச்**
**சிறு வெள்ளரவின் குருளைநாண் சுற்றிக்**
**குறுநெறிக் கூந்தல் நெடுமுடிகட்டி**
**இளை சூழ் படப்பை இழுக்கிய ஏனத்து**
**வளை வெண்கோடு பறித்து மற்றது**
**முளை வென் திங்க ளென்னச் சாத்தி**
**மறங்கொள் வயப்புலி வாய்பிளந்து பெற்ற**
**மாலை வெண்பல் தாலிநிரை பூட்டி**
**வரியும் புள்ளியு மயங்கு வான்புறத்து**
**உரிவை மேகலை உடீஇப் பிரிவொடு**
**கருவில் வாங்கிக் கையகத்துக் கொடுத்துத்**
**திரிதரு கோட்டுக் கலைமே லேற்றிப்"** (சிலப்,வேட்டுவவரி,பா. 20-32)

என்று காட்டுகின்றன.

எயினர்கள், பகைவர் தலையை அறுத்துப் பலிபீடத்தில் இடுகின்ற பழக்கத்தினை உடையவர்கள். இத்தகைய எயினர் குடியில் பிறந்த குமரிப் பெண்ணொருத்தி கொற்றவைக் கோலம் புனைந்தாள். அப்பெண் நீண்ட கூந்தலை சிறிய வெள்ளைப் பாம்பு போன்ற ஒரு கயிற்றால் சுற்றிக் கட்டினாள். தோட்டப் பயிரை அழித்த பன்றியின் வளைந்த வெண்மையான பல்லினைப் பறித்து, அதனைப் பிறைத் திங்கள் போல் தலையில் சாத்தினாள். புலியின் பற்களைத் தாலியாகக் கழுத்தில் கட்டிக் கொண்டாள்.

வரிகளும், புள்ளிகளும் உடைய புலித்தோலை அரையில் மேகலையாக உடுத்திக் கொண்டாள். வயிரவில்லைக் கையில் ஏந்திக் கொண்டு, முருக்குண்ட கொம்பினை உடைய கலைமானின் மீது அமர்ந்து கொண்டாள்.சாலினி என்ற எயினர் குடிப்பெண் கொற்றவைக் கோலம் புனைகின்றாள். தெய்வமேறப்பட்டு வாக்குரைக்கின்றாள் என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டுச் செல்வதை கவனிக்க வேண்டியுள்ளது. **"ஆதியில் இது தாய்த்தெய்வ மரபுக்கு ஆளாகியபோது கொற்றவை-சாலினி உறவு நிலையில் ஒரு நிகழ்த்து கலையாக, சடங்கு மரபாகக் காட்சி அளிக்கின்றது. கொற்றவையின் கோலம் பூண்டு விலங்கினத்தின் சூழலைத் தன் வடிவமாகப் பூணுதல் யாவும் இயற்கையை வெற்றி கொண்டதன் வெளிப்பாடாக ஆகிறது."** (பக்தவசல பாரதி,இலக்கிய மானிடவியல்.ப-211) என்ற கருத்தும் உளங்கொளத்தக்கது. அதாவது தாய்வழிச் சமூகத்தின் நீட்சியை சாலினியின் கொற்றவைக் கோலம் உணர்த்துகின்றது.

வேட்டுவவரியின் தொடக்கத்திலேயே, சாலினி எயினர்கள் குடியிருப்பின் நடுவே உள்ள ஊர் மன்றத்தில் தெய்வமேறி வாக்குரைக்கின்றாள்,

**"கலை அமர் செல்வி கடன் உணின் அல்லது**
**சிலைஅமர் வென்றி கொடுப்போள் அல்லள்"**
(சிலப்பு, வேட்டுவவரி,பா.16-17)

'கொற்றவைக்கு நேர்ந்த கடனைச் செலுத்தாத வரையில் உங்கள் வாழ்வில் வெற்றியடைய மாட்டீர்கள்' என்று வாக்குரைக்கின்றாள்.

சிலப்பதிகாரத்தில் கொற்றவை வைதீக நெறிக்குள் இழுக்கப்பட்ட நிலையினை,

**"இரண்டு வேறு உருவின் திரண்ட தோள் அவுணன்**
**தலைமிசை நின்ற தையல்"** (சிலப்.வேட்டுவவரி,பா. 65-66)

என்ற பதிவு காட்டுகின்றது. இவ்வடிகளில், இரண்டு உருவினை உடைய மகிடாசுரனின் தலையை துண்டித்து அதன் மீது நின்ற பெண்ணே என்று வர்ணிப்பதிலிருந்து அதனை அறிந்து கொள்ள முடிகிறது.

**சாலினி வருவதுரைத்தல்**

வேட்டுவவரியில் கொற்றவையின் பூசாரியாக சாலினி இருந்தாள். கோவலனும், கண்ணகியும் மதுரை நோக்கிப் பயணம் செய்தபோது ஏற்பட்ட களைப்பினால் ஐயைக் கோட்டத்தில் இளைப்பாறினர். அப்போது சாலினி தெய்வமேற்பட்டு கண்ணகியைப் பார்த்து, கொங்கச்செல்வி, குடமலையாட்டி, தென்தமிழ்ப்பாவை எனக்கூறி உலகமெல்லாம் போற்றும் திருமாமணியாக வருவாய் என வாக்குரைத்தாள். இச்செயல் எயினர் குலத்தின் பெண் பூசாரியாகிய சாலினி, உயர்குலமாகிய வணிககுலக் கண்ணகியைப்பார்த்து வருவதுரைத்த நிகழ்வாக அமைகின்றது. இந்நிகழ்வு அணங்காற்றலுடைய சாலினியைக் காட்டுகிறது. மேலோர் மரபொன்று கீழோர் மரபால் அறிவிக்கப்படுதல் தமிழ் மரபின் ஒரு தனித்துவம் ஆகும்.

**பெண் பூசாரிகள்**

ஆண் பூசாரிகளுக்கு முன்பு பெண் பூசாரிகள் இருந்தார்கள் என்பதற்கு சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. பழமுதிர்ச்சோலையில் குறமகள் முருகாற்றுப்படுத்திய செய்தியைத் திருமுருகாற்றுப்படை கூறுகிறது.

**"குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்**
**முருகு இயம்நிறுத்து முரணினர் உட்க**
**முருகு ஆற்றுப்படுத்த உருகெழு வியல் நகர்** (திருமுருகு,242-244)

என்று குறமகள் நிகழ்த்திய முருக வழிபாடு அச்சம்தரக்கூடியதாக இருந்தது. இவர்களை தேவராட்டியர் எனவும் அழைப்பர், இவர்கள் நடத்திய வெறியாடல் பின்னாளில் வேலன் இனத்தாரால் நடத்தப்பட்டது.

சிலப்பதிகாரத்தின் வரந்தருகாதையில் தேவந்தியும், கண்ணகி கோட்டத்தில் பெண்பூசாரியாக நியமிக்கப்படுகின்றாள். அதனை,

**"பூவும் புகையும் மேவிய விரையும்**
**தேவந்திகையைச் செய்கென் றருளி"** (சிலப்.வரந்தருகாதை,பா.153-154)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. மாடலமறையோன், தேவந்தியிடம் நித்தமும் கண்ணகிக்கு சந்தனம் முதலியன சாத்தி, மலரால் அர்ச்சித்து, நறும்புகை எடுத்து பூசை செய்ய வேண்டும் என்று எடுத்துரைப்பதிலிருந்து தேவந்தி பெண்பூசாரியாக்கப்பட்டாள் என்றறியப் பெறுகின்றது.

சிலப்பதிகாரத்தின் வேட்டுவவரி கொற்றவை, சாலினி ஆகியோரின் அதீத ஆற்றல்களை விளக்குகிறது. சங்ககாலத்தில் பெண்களுக்கும் சமயச்சடங்குகளுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்ததை அகவல்மகள், சாலினி ஆகியோரின் தொன்மங்கள் கூறுகின்றன. சாமியாடியாகவும், சடங்குப்பூசாரியாகவும், வருவதுரைக்கும் ஆற்றல் பெற்றவர்களாகவும் விளங்கிய இத்தகைய பெண் மாந்தர்கள் பின்னாளில் ஆண்மையச் சமூகத்தில் அத்தகைய பங்குபணிகளிருந்து ஒதுக்கப்பட்டார்கள். தேவராட்டி எனும் பெண் மதகுருவும், வெறியாட்டுச் சடங்கை நடத்திய குறமகள் பூசாரியும் அவர்களுடைய அடையாளங்களைப் பின்னாளில் இழந்து போனதைத் தமிழ்ச் செவ்வியல் தொன்மங்கள் மிக நன்றாகவே பதிவு செய்துள்ளன. (பக்தவத்சலபாரதி,பண்டைத் தமிழரின் தொன்மங்கள்-195) தாய்வழி சமூகத்தின் தொடர்ச்சியினை இன்றும் கேரளத்தில் உள்ள மருமக்கள் தாயம் வழி உணரமுடிகிறது. சங்க நூல்களுள் சேரநாட்டு நூலான

பதிற்றுப்பத்து மருமக்கள் தாயமுறையை விளக்கும் நூலாகும். சேரர்களின் தாய்த்தாய முறையை இது விவரிக்கிறது. தாய்வழி சமூகத்தில் பெண்கள் பல்வேறு நிலைகளில் தலைமையேற்றிருந்தனர். குறிப்பாக குடும்பத்தில் பலருக்கும் தலைமை ஏற்று வழிநடத்தும் வகையில் முதுபெண்டிர் இருந்துள்ளனர். தாய்வழியாகவே, குலத்தொடர்ச்சியும் வம்சாவளியும் குறிக்கப்பெற்றன.

பெண்குழந்தை தனக்கு பிறக்க வேண்டும் என்று கடவுளிடம் வேண்டும் குறவனைப் பற்றி சேரநாட்டு நூலான ஐங்குறுநூறு பின்வருமாறு விளக்குகின்றது.

**"குன்றக் குறவன் கடவுள் பேணி**
**இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்**
**ஆயரி நெடுங்கண் கவிழச்**
**சேயதால் தெய்ய நீ பிரியும் நாடே"** (ஐங்.257)

சேரநாட்டுக் காப்பியமான சிலப்பதிகாரத்திலும் தாய்வழிச் சமூகத்தின் தொடர்ச்சியைக் காணமுடிகிறது. பாண்டிய மன்னனின் மனைவி கோப்பெருந்தேவியைக் 'குலமுதற்தேவி' (சிலம்பு.கொலைக்களக் காதை,பா-136) என்று அவளுடைய குலத்தின் முதன்மையான தேவி என்பது அதன் பொருள். கண்ணகியைக் 'குலக்கொம்பர்' (சிலப்.மங்கல வாழ்த்து, பா.25) என்று குறிப்பிட்டது பெண்வழியாக குலத்தைக் காட்டும் தாய்வழித் தலைமையின் சொல்லாடலே ஆகும்.

கட்டுரைக்காதையில், மதுரையை எரித்த கண்ணகியின் முன் மதுராபதி தெய்வத்தை வர்ணிக்கும் பொழுது,

**"கொற்கைக் கொண்கன் குமரித் துறைவன்**
**பொற்கோட்டு வரம்பன் பொதியிற் பொருப்பன்**
**குல முதற் கிழத்தி"** (சிலப். கட்டுரை காதை,பா.11-13)

என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடலில் வரும் 'குலமுதற்கிழத்தி' என்ற சொல் தாய்வழிச் சமூகத்தைக் காட்டுகிறது. பாண்டியனுடைய குலத்திற்கு முதல் உரிமை உடைய குலதெய்வமாக மதுராபுரி தெய்வம் விளங்கினாள். சேர நாட்டில் அயிரை மலையில் இருந்த தெய்வம் 'அயிரை' (பதிற்று.88:12) எனப் பெயர் பெற்றது.

**"உருகெழு மரபின் அயிரை மண்ணி**
**இருகடல் நீரும் ஆடினோ னாயினும்"**

(சிலப்.நடுகற்காதை,பா. 145-146)

சேரநாட்டிலுள்ள அயிரை மலையில் உள்ள கொற்றவை என்னுந் தெய்வத்தை நீராட்டி வழிபட்டவன் சேரன் செங்குட்டுவன். கொற்றவைக்குரிய பெயரே அயிரை என்பதும் தெளிவாகின்றது.

**"நிறம்படு குருதி புறம்படி னல்லது**
**மடையெதிர் கொள்ளா வஞ்சுவரு மரபிற்**
**கடவுளயிரை நிலைஇக"** (பதிற்று.79:16-18)

அயிரை மலையிலுள்ள கொற்றவை வீரர்களின் இரத்தம் பலியாக அளிக்கப்பட்டாலன்றி வேறு படையலை ஏற்றுக் கொள்ளாது.

**கொற்றவை வழிபாடு**

பகைவரின் ஆநிறையைக் கவர்தல் வேண்டி வீரன் வெட்சி மாலையினை சூட, அதனைக் கொற்றவையும் விரும்பினால். பகைவரின் ஊரைச் சூழ்ந்த காட்டினில் கரிக்குருவி தனது கொடிய குரலால் அவர்களுக்கு வரப்போகும் கேட்டினை உணர்த்தும் என்பது பழங்கால நம்பிக்கையாக இருந்தது.

கேரளத்தில் பெண் தெய்வங்களைக் காளியாக அல்லது காளியின் அம்சமாகவே கருதுகின்றனர். காளி, சாமுண்டி, பகவதி, பத்ரகாளி போன்ற தெய்வங்கள் தாய்த் தெய்வங்களே. "காளியும் சிவனும் வேதகாலத்திற்கு முன்பே இருந்த திராவிட மூலத்

தெய்வங்கள் என்று 'கில்பர்ட் ஸ்லேட்டர்' கருதுகிறார். கொற்றவை அல்லது காளி வழிபாடு ஆரியர் வருகைக்கு முன்னரே இங்கு நிலவியிருந்தது. கோயில்கள் இல்லாமல் மரத்தினடியில் நடுகற்களாக கொற்றவையை வழிபடும் வழக்கம் இன்றும் கேரளத்தில் காணப்படுகின்றது. இன்று காவுகள் என்றழைக்கப்பெறும் கோயில்கள் அனைத்தும் காடுகளில் உருவாக்கப்பட்டவையே. ஆரியமயமாக்கப்பட்டபோது காவுகள் கோயில்களாக உருமாற்றம் பெற்றன. கொற்றவை அல்லது காளி துர்க்காவாக மாற்றப்பட்டாள். ஆரியர்களின் வேள்வி வழிபாட்டிற்குள் கொற்றவையும், சிவனும் குடியேறினர். பலிவழிபாடுகளும், தாந்திரீக முறைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆரியர்களும் திராவிடமயமாக்கப்பட்டனர். ஆரியர்களின் வசதிக்கேற்ப சில தெய்வங்களை, அம்மன் வழி பெருமரபுத் தெய்வங்கள் என்றும் ஏனைய தெய்வங்களை சிறுமரபுத் தெய்வங்கள் என்றும் ஒதுக்கி விட்டார்கள்."

வேதகாலத்திற்கு முற்பட்ட பழங்காலத்து தாய் தெய்வ வழிபாட்டில், பழந்தமிழரின் கொற்றவை வழக்கமும், இந்து சமயத்தின் சக்தி வழிபாடும், காளி வழிபாடும், சைனரின் பத்மாவதி வழிபாடும், பௌத்தர்களின் தாராதேவி வழிபாடும் கலந்துள்ளன. பௌத்தர்கள் தாராதேவியைத் தாய்த்தெய்வமாக மட்டுமின்றி, நாகதேவதையாகவும் கருதுகின்றனர். **"கொடுங்கல்லூர் பகவதியின் ஸ்தோத்திர மாலையில் தாராதேவியின் பெயரும் காணப்படுகின்றது. ஆதலால் பகவதி வழிபாட்டில் பௌத்தர்களின் தாராதேவி வழிபாடும் சேர்ந்துள்ளது. தாய்த்தெய்வங்களான பௌத்தர்களின் தாரையும், சமணர்களின் பத்மாவதியும் கண்ணகி தெய்வத்துடன் சக்தி வழிபாடாகக் கருதப்பட்டு, நாகதேவதையாக இணைக்கப்பட்ட போது கண்ணகிக்கு பகவதி என்ற பெயர் வழங்கியிருக்க வேண்டும்."**

(பி.எல்.சாமி, தாய்த்தெய்வ வழிபாடு,ப-55) என்ற கருத்தினையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியதாகின்றது.

**கண்ணகி தெய்வம்**

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் கோவலனால் சாதாரண மானுடப் பெண்ணாகப் பாராட்டப்பெற்ற கண்ணகி, செங்குட்டுவனால் தெய்வமாக வழிபடக்கூடிய அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளாள்.

**"அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்**
**உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்**
**ஊழ்வினை யுருத்துவந் தூட்டும் என்பதூஉம்"**
(சிலப்.பதிகம், 55-57)

என்னும் சிலப்பதிகாரத்தின் உறுதிப்பொருள்களில் ஒன்றான உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல் என்ற உறுதிப்பொருள் காப்பியத்தின் தொடக்கம் முதல் இறுதிவரை பொருந்தி வருகின்றது. இளங்கோவடிகள் கண்ணகியை அறிமுகப்படுத்தும்போது **"போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும், தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும் மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக் காதலாள் பெயர் மன்னுங் கண்ணகியென் பாள்மன்னோ"** (சிலப்.மங்கல வாழ்த்துப் பாடல்- 26-29) என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.இவ்வாறு கண்ணகியைத் திருமகளோடும், அருந்ததியோடும் ஒப்பிட்டு, மாதரார் தொழுதேத்தும் படியான பெருங்குணங்களை உடையவள் என்று குறிப்பிடுகின்றார். எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாகப் பத்தினிக் கடவுள் வழிபாட்டினை சிறப்பிக்க, சமணத்துறவி கவுந்தியடிகள் வாயிலாக கண்ணகியின் பெருமையினைப் புகழ்ந்துரைக்கின்றார்.

கவுந்தியடிகள் மாதரியிடம் கண்ணகியை அடைக்கலமாகக் கொடுக்கும்போது,

**"இன்துணை மகளிர்க் கின்றி யமையாக்**

**கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது**
**பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்"**

(சிலப்.அடைக்கலம்-142-144)

என்று வியந்துரைப்பதைப் பார்க்கின்றோம்.

தம் கணவர்க்கு இனிய துணையாகப் பொருந்திய பெண்களுக்கு கற்பாகிய கடனை மேற்கொண்ட கண்ணகியாகிய தெய்வமேயன்றி வேறு தெய்வம் ஒன்று இல்லை என்று கூறுகின்றார். இக்கூற்றின்வழி கண்ணகி பின்னர் கற்புத் தெய்வமாகப் போற்றப்படவிருப்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

'வேட்டுவவரி'யாகிய காதையில் கோவலன், கண்ணகி, கவுந்தி என்னும் மூவரும் ஐயைக்கோட்டத்தின் ஒரு பக்கத்திலே இளைப்பாறி இருந்தனர். அப்பொழுது வேட்டுவக்குடியில் தெய்வத்திற்கு வழிபாடு செய்யும் உரிமையுடைய சாலினி என்பவள் தெய்வமேறப் பெற்று வாக்குரைத்தாள். அக்கோயிலின் ஒருபுறத்திலே தன் கணவனுடன் இருந்த கண்ணகியைப் பார்த்து,

**"இவளோ, கொங்கலச் செல்வி குடமலை யாட்டி**
**தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து**
**ஒருமாமணியாய் உலகிற் கோங்கிய**
**திருமா மணியெனத்"** (சிலப்.வேட்டுவவரி-47-50)

என்றெல்லாம் கண்ணகி தெய்வநிலைக்கு உயர்த்தப்படவிருப்பதை அறிவிக்கின்றாள். இப்பகுதி கண்ணகியை தெய்வ நிலைக்கு ஏற்றிக் கூறும் முதற் கட்டமாகும். சாலினி கண்ணகியை தெய்வமாகவே கூறுவதால் **"இவள் துர்க்கையாகவே பிறந்தாள்"** (வேட்டுவவரி, ப-313) என்று அரும்பத உரையாசிரியர் கூறுகின்றார்.

கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேட்ட கண்ணகி, மிக்க சினங்கொண்டு, தன்னிடம் இருந்த மற்றொரு சிலம்புடன் புறப்பட்டு மதுரையின் வீதி வழியே சென்று,

அங்குள்ள மகளிரை நோக்கிப் பலவாறு புலம்புகின்றாள். அப்பொழுது கண்ணகியைக் கண்ட மக்கள்,

**"செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம்பொருட்டால்**
**வம்பப் பெருந்தெய்வம் வந்த திதுவென் கொல்**
**ஐயரி யுண்கண் அழுதேங்கி யரற்றுவாள்**
**தெய்வமுற்றாள் போதுற் தகைய ளிதுவென்கொல்"**

(சிலப், ஊர்சூழ்வரி- 23-26)

என்று வருந்துகின்றனர்.

செம்பொன்னாலாகிய ஒரு சிலம்பினை தனது கையில் ஏந்தி நமக்கு தீங்கு விளைவிப்பதற்காகப் புதிய பெரிய தெய்வம் வந்துற்றது, இனி என்ன விபரீதம் ஏற்படுமோ என்று கண்ணகியை ஒரு புதிய தெய்வமாகவே எண்ணி அஞ்சினர்.

பாண்டியனின் அரண்மனைக் காவலன் கண்ணகியின் தோற்றத்தை, பாண்டியன் முன் அறிவிக்கும்போது,

**"அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்**
**பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி**
**வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை யல்லள்**
**அறுவர்க் கிளைய நங்கை இறைவனை**
**ஆடள்கண் டருளிய அணங்கு சூருடைக்**
**கானகம் உகந்த காளி தாருகன்**
**பேருரங் கிழித்த பெண்ணும் அல்லள்"** (சிலப்.வழக்குரை- 34-40)

என்று கொற்றவையின் தெய்வத் தன்மைகளுடன் கண்ணகியைத் தொடர்புபடுத்திக் கூறுகின்றான்.

குன்றக்குறவர்கள் கண்ணகியை எவ்வாறு எதிர்கொண்டனர் என்பதனை,

**"மலைவேங்கை நறுநிழலின் வள்ளிபோல்வீர் மனநடுங்க**
**முலையிழந்து வந்துநின்றீர் யாவிரோ? என முனியாதே"**

(சிலப்.குன்றக்குரவை -3-4)

என்று இளங்கோ குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

எங்கள் குன்றத்தில் மலைவேங்கையின் குளிர்ந்த நிழலில் வீற்றிருக்கும் எம் குலதெய்வம் வள்ளி போல் நீங்கள் விளங்குகின்றீர். ஆனால் முலையிழந்து நிற்கும் உங்களைப் பார்க்கும்போது எங்கள் உள்ளம் நடுங்குகின்றது. நீங்கள் யார்? என்று குன்றக்குறவர்கள் வியப்புடனும் நயந்தும் வினவுகின்றனர். அதற்கு பதிலுரையாக, அப்பத்தினித் தெய்வம் சினம் தணிந்தவளாகக் காட்சியளித்த நிலையில் 'மணம் மிக்க மதுரையையும் அதனுடைய அரசனையும் அழிக்கும் பழைய தீவினை நேர்ந்தபோது, என் கணவனையும் அம்மதுரையிலேயே இழந்துவிட்ட தீவினைக்குரியவள் நான்' என்று கூறினாள். கண்ணகியின் ஊழ்வினையினை குறவர்கள் புரிந்துகொள்ள முடியாமல் கேட்டுக்கொண்டிருந்தனர். அச்சமயம் தேவர்கள் மலர்மாரி பொழிய கண்ணகி, கோவலனுடன் வானவூர்தியில் ஏறி வானுலகம் சென்றாள்.

பத்தினி தெய்வத்தின் சிறப்பை அறிந்த அங்குள்ள குறவர்கள் **"இவள் போலும் நம் குலக்கு ஓர் இருந்தெய்வம் இல்லை"** (சிலப்.குன்றக்குரவை,பா.-9) ஆதலின் சிறுகுடியீரே! சிறுகுடியீரே என்று தம்மினத்தவரை அழைத்து இக்கற்புடையாளைத் தெய்வமாக ஏற்றுக் கொள்ளுங்கள், வேங்கை மரத்தின் நிழலிலே ஒப்பற்ற தெய்வமாக வைத்து, பூப்பலி செய்து வழிபடுங்கள். எனப் பலவாறாகக் கூறிப் புகழ்ந்தனர்.

**"ஒருமுலை இழந்த நங்கைக்குப்**
**பெருமலை துஞ்சாது வளஞ்சுரக் கெனவே"**

(சிலப்.குன்றக்குரவை-பா.21-22)

என்ற பாடலடிகள் வழி கண்ணகியை குறவர்கள் அனைவரும் தங்கள் குல தெய்வமாகவே வணங்கினார்கள் என்பதனை அறியலாம். கண்ணகி ஒரு வேங்கை மரத்தடியில்

தெய்வமாக்கப்படுகிறாள். பிறகு குறவர்கள் பழங்காலம் முதலாக வழிபட்டு வரும் செழிப்புத் தெய்வமாக அவள் மாற்றப்பட்டாள்.

சேரன் செங்குட்டுவன் மலைவளம் காணவிரும்பி தன் தேவி வேண்மாளுடன் வஞ்சிநகரினின்றும் புறப்பட்டுச் சென்று பேரியாற்றங்கரையிலுள்ள மணற் குன்றிலே தங்கியிருந்தான். அச்சமயம், குன்றக்குறவர்கள் கண்ணகி, கோவலனுடன் வானவூர்தியில் ஏறிச் சென்ற செய்தியினைத் தங்கள் நாட்டு அரசனாகிய செங்குட்டுவனிடம் தெரிவிக்கின்றனர். அப்பொழுது அங்கு செங்குட்டுவனோடிருந்த தமிழாசிரியராகிய சாத்தனார், மதுரையில் கோவலன் கொலையுண்டதும் கண்ணகி அரசன் முன் வழக்குரைத்து வென்று, மதுரையை எரித்ததும், பாண்டியன் தேவியுடன் அரசு கட்டிலில் துஞ்சியது முதலான செய்திகளை விரித்துரைத்தார். இதனைக்கேட்ட வேண்மாள்,

**"நம் அகல்நாடு அடைந்தவிப்**
**பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்"** (சிலப்.காட்சிக் காதை-113-114)

நம் அகன்ற நாட்டை அடைந்த இப்பத்தினிக் கடவுளைப் போற்றுதல் வேண்டும் என்று வேண்டுகிறாள். அதற்கிணங்க செங்குட்டுவன் கண்ணகியைப் பிரதிட்டை செய்து வழிபடுவதற்கு இமயமலையில் கல் கொண்டுவரக் கருதி வஞ்சி நகரை அடைகின்றான். கண்ணகியை முதன்முதலில் தெய்வமாகக் கண்டவர்கள் குன்றக்குறவர்களே. அவர்கள் கண்ணகியைத் தம் குலதெய்வமாகிய 'வள்ளிக்கு' இணையாகப் போற்றுவதை குன்றக்குரவையில் காணமுடிகின்றது.

வாழ்த்துக்காதையில் பார் தொழுதேத்தும் பத்தினியாகிய கண்ணகி, சிலம்பு, மேகலை, வளை, பொன்தோடு போன்ற அணிகலன்கள் பலவற்றோடு மின்னற்கொடி போன்று சேரன் செங்குட்டுவனுக்கு வானத்தில் காட்சியளிக்கின்றாள். வானத்திலே

காட்சியளித்த கண்ணகியின் தெய்வீகத்தன்மையினைக் கண்ட செங்குட்டுவன், வியந்த நிலையில்

**”என்னேயிஃ தென்னேயிஃ தென்னேயிஃ தென்னேகொல்**
**பொன்னஞ் சிலம்பிற் புனைமேகலை வளைக்கை**
**நல்வயிரப் பொற்றோட்டு நாவலம் பொன்னிழை சேர்**
**மின்னுக் கொடியொன்று மீவிசும்பில் தோன்றுமால்”**

(சிலப்.வாழ்த்துக்காதை, உ.பா.மடை-12)

என்று பலவாறு கூறி பரவசப்படுகின்றான். பாண்டிய மன்னனையும் கண்ணகி அருளிய நிலையைக் காண்கின்றோம்.

கண்ணகி பார் தொழுதேத்தும் பத்தினியாக வலம்படுதானை மன்னவனை சிலம்பில் வென்ற சேயிழையாக விளங்குகின்றாள். என்பதனை,

**”கொங்கையாற் கூடற்பதி சிதைத்துக் கோவேந்தைச்**
**செஞ்சிலம்பால் வென்றாளைப் பாடுதும் வம் எல்லாம்”**

( சிலப்.வாழ்த்துக்காதை, உ.பா.மடை-14)

என்று வஞ்சிமகளிரின் வாழ்த்துப் பாடல் மூலம் அறியமுடிகிறது.

வரந்தரு காதையில், மாடலன் பத்தினிக் கடவுளின் பூசனை முதலியவற்றிற்கான வழிமுறைகளைக் கூறுகின்றான். பத்தினிக்கடவுளுக்குப் பூ முதலானவற்றால் நாள்தோறும் வழிபாடு நிகழ்த்துமாறு தேவந்தியை நியமிக்கின்றான். அவனும் பத்தினிக்கடவுளை மும்முறை வலம்வந்து வணங்கினான். அப்பொழுது ஆரிய அரசரும், கொங்கர், மாளவவேந்தர், இலங்கை அரசர் கயவாகு ஆகியோர் அங்குவந்து, பத்தினிக்கடவுளை நோக்கி 'நாங்கள் எங்கள் நாட்டில் செய்யும் வேள்வியிலும் வந்து அருள்செய்க' என்று வணங்கி வேண்டினர். அச்சமயம் 'தந்தேன் வரம்' என்ற குரல் உருவானது, அது கேட்ட செங்குட்டுவனும், அரசர்களும் மிக்க மகிழ்ச்சியடைந்தனர்.

இவ்வாறு தமிழ்நாட்டில் மட்டுமின்றி, பிறநாடுகளிலும் கண்ணகி தெய்வமாகக் கொண்டாடப்படுகின்றாள் என்பதனை அறியமுடிகின்றது.

பத்தினிக் கடவுளாகிய கண்ணகி தேவந்திமேல் தோன்றி இளங்கோவடிகளின் துறவின் வரலாற்றைச் சொல்லுகின்றாள். இதனை,

**"அகலிடப் பாரம் அகல நீக்கிச்**
**சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்து**
**அந்தமி லின்பத் தரசாள் வேந்தென்று"** (சிலப்.வரம்தரு காதை,180-183)

இந்நிலத்தினை ஆளுகின்ற சுமையை நீக்கி முடிவில்லா இன்பத்தினை உடைய வீட்டுலக அரசினை ஆளும் மன்னவன் ஆனாய் என்று அடிகளுக்கு அருளுகின்றாள்.

சிலப்பதிகாரத்தின் தலைவி கண்ணகி, வணிக குலத்து மகளாகத் தோன்றி, அனைவரும் வழிபடும் பத்தினித் தெய்வமாக உயர்ந்த நிலையினை சிலப்பதிகாரம் உணர்த்துகின்றது. சோழநாட்டிலே பிறந்து, பாண்டிய நாட்டிலே அறத்தை நிலைநாட்டி, சேரநாட்டிலே பத்தினித் தெய்வமாகப் போற்றப்பட்டவள் கண்ணகி. சாதாரண குடிமகளாகிய கண்ணகி தெய்வநிலைக்கு உயர்த்தப்பெற்று சேரன்செங்குட்டுவனால், உலக மக்களுக்கான தெய்வமானாள். வீரரை சிறப்புச் செய்யும் மரபாகிய நடுகல்விழா, இளங்கோவடிகள் காலத்தில் பெண்மையைச் சிறப்புச் செய்யும் விழாவாக அமைந்துள்ளது. இமயக்கல்- கங்கையில் நீராடி, கண்ணகி திருவுருவாய் வஞ்சி மாநகரப் பத்தினிக் கோட்டத்தில் பொலிவுற்றது. வைதீக மாடலன், சாத்தனை வழிபடும் தேவந்தி, சேரன்செங்குட்டுவன், மேலும் பல்வேறு அயல்நாட்டு மன்னர் ஆகியோர் சமயக் காழ்ப்பின்றி பத்தினி வழிபாட்டில் ஒருசேரத் திகழ்ந்தனர். அன்றிலிருந்து இலங்கை முதலான பல இடங்களிலும் பத்தினி வழிபாடு தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

அந்நிலையில் கேரளச் சூழலில் கண்ணகி வழிபாடு எவ்வாறு நிலவி வருகின்றது என்பதை ஆய்ந்து காணும் விதமாக இவ்வாய்வு அமையவுள்ளது.

**சிலப்பதிகாரம் காட்டும் கண்ணகி வழிபாடு**

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயிலெழுப்பி வழிபட்ட நாளில் பல நாடுகளிலிருந்தும் மன்னர்கள் வந்தார்கள் என்பதனை சிலப்பதிகாரம் தெளிவுறுத்துகின்றது.

**"வலமுறை மும்முறை வந்தனன் வணங்கி**
**உலக மன்னவன் நின்றோன் முன்னர்**
**அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்**
**பெருஞ்சிறைக்கோட்டம் பிரிந்த மன்னரும்**
**குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்**
**கடல் சூழிலங்கைக் கயவாகு வேந்தனும்**
**எந்நாட்டாங்கண் இமயவரம்பன் இந்**
**நன்னாட் செய்த நாளணி வேள்வியில்**
**வந்தீகென்றே வணங்கினர்"** (சிலப். வரந்.155-164)

என்ற பதிவு நோக்கற்பாலது. எனவே எல்லா நாட்டு மக்களும் வழிபடும் தெய்வமாக கண்ணகி காட்டப்படுகின்றாள் என்று தெரிந்து கொள்கின்றோம்.

**கேரள நாட்டார் மரபில் கண்ணகி**

கேரள நாட்டார் மரபில் கண்ணகி வழிபாடு பலவாறாகப் பரவிக்கிடக்கின்றது. கேரளத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் பகவதி கோயில்கள் இடம்பெற்றுள்ளன. பெரும்பாலும் அக்கோயில்களில் பெண்களே பூசாரிகளாக விளங்குகின்றனர். பங்குனிமாத பரணிநாள் விழாவானது கொடுங்கல்லூரில் நிகழும். அப்போது இப்பூசாரிகள் சிவந்த ஆடையினை உடுத்திய நிலையில் வாளைக் கையிலேந்தியவாறு அவ்விழாவிற்குச் செல்வது வழக்கம். ஆண் பூசாரிகளும் காணப்படுவர். அவர்களும் பெண்களைப் போலவே மார்புக்கச்சுடன் கூடிய சிவந்த ஆடையை உடுத்து வாளேந்திச்

செல்வர். ஆபரணங்கள் அணிந்து தங்களை அலங்கரித்துக் கொள்ளும் இருபால் பூசாரிகளும் காலில் சிலம்பினை கட்டாயமாக அணிந்திருப்பர். அவ்வாறு கொடுங்கல்லூர் கோயிலுக்குப் புறப்படுவதற்குமுன் தத்தம் ஊர்க் கோயில்களில் 'நல்லம்ம-நல்லச்சன்' பாட்டு என்ற கதைப்பாடலை பாடுவதான ஒரு சடங்கினைச் செய்வது வழக்கம். அக்கதைப் பாடல் கண்ணகி- கோவலன் கதையுடன் தொடர்புடையதாகும். கதைப்பாடல் பாடுவதற்கு குறைந்தது இரண்டு நபர்கள் தேவைப்படுவர். குரலெடுத்துப் பாடும்போது பக்கத்துணையாக இசைக்கருவிகளும் இசைக்கப் பாடுதல் மரபு. இத்தகு நிகழ்வுகள் வழி கேரள மக்கள் கண்ணகியை கொற்றவையாகக் கருதி வழிபடுகின்ற சூழல் புலப்படுகின்றது.

**"கேரளத்துக் கண்ணகி கோயில்கள் பாலக்காட்டில் மூத்தான் தரையில் உள்ள கண்ணகி கோயில் எனும் ஒன்றைத் தவிர மற்றைய கோயில்கள் அனைத்தும் கண்ணகி கோயில்கள் என அழைக்கப்படவில்லை. 'காவு'கள் என்ற பெயரில் 'ஸ்ரீ குறும்பக்காவு, சீர்ம்பக்காவு என்றே வழங்கி வருகின்றன."** (முனைவர்.செல்லன் கோவிந்தன், கண்ணகி வழிபாடு- தென்னகத்திலும் இலங்கையிலும்,ப.67) கண்ணகியின் பெயரிலேயே அழைக்கப்படக்கூடிய ஒரு கோயில் பாலக்காட்டுப் பகுதியில் உள்ளது.

**கொடுங்கல்லூர் பகவதி கோயில்**

கேரளத்திலுள்ள பகவதி கோயில்களில் மிகவும் புராதனமானதும், புகழ்பெற்றதுமான கோயில் கொடுங்கல்லூர் குறும்ப பகவதி கோயில். இது ஒரு கண்ணகி கோயில் என்று பலராலும் நம்பப்படுகின்றது. இக்கோயில் எப்பொழுது நிறுவப்பெற்றது என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கவில்லை. கொடுங்கல்லூர் மிகப் புராதனமான நகரம். மிகவும் புகழ்பெற்ற துறைமுகமாக விளங்கிய முசிறீஸ் இன்றைய

கொடுங்கல்லூர் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். **"வால்மீகி இராமாயணத்தில் முசிறிப்பத்தனம் என்றும், அசோகரது கல்வெட்டுக்களில் முசிறீஸ் என்றும் டாலமியின் பூகோள விவரணத்தில் முசிறீஸ் என்றும், தமிழ் இலக்கியங்களில் (அகநானூறு-149, புறம் -343) முசிறி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 'முசிறி` புராதன இந்தியாவின் நுழைவு வாயிலாகத் திகழ்ந்துள்ளது என்பதனை 'கேரள சரித்திரம்' என்னும் நூலில் ஸ்ரீதரமேனோன் என்பவர் குறிப்பிட்டுள்ளார். சிலப்பதிகாரம் இதனை வஞ்சி என்று குறிப்பிட்டுள்ளது. பிரம்மாண்டபுராணம் 'ஸ்ரீகோடரிபுரி' என்று அழைக்கிறது."** (குஞ்ஞிக்குட்டன் இளையது ,கொடுங்கல்லூர் சேத்திர இதிகாசம். ப. 10) இதற்கு 'கோடிலிங்கபுரம்' என்ற வேறு பெயரும் உண்டு.

**"பரசுராமன் 192 கோயில்களைக் கேரளத்தில் நிறுவினார் என்று பலரும் கருத்துரைக்கின்றனர். அதில் 64 சிவாலயங்களும், 64 விஷ்ணு கோயில்களும், 64 தேவி கோயில்களும் உண்டு. தேவி ஆலயங்களில் முக்கியமானவை நான்கு ஆலயங்கள். தெற்கே கன்னியாகுமரியில் பாலாம்பிகையும், வடக்கே கொல்லூரில் மூகாம்பிகையும் கிழக்கே பாலக்காட்டில் ஹேமாம்பிகையும், மேற்கே கொடுங்கல்லூரில் லோகாம்பிகையும் வீற்றிருக்கின்றனர். இச்செய்தி கேரளமகாத்மியம், கேரளோத்பத்தி போன்ற நூல்களில் காணப்படுகின்றன. இவற்றில் கொடுங்கல்லூர் பகவதியே மூத்தபகவதியாகப் போற்றப்பெறுகின்றாள்."** (ஜெயமோகன்,(மொழிபெயர்ப்பு) கொடுங்கோளூர் கண்ணகி, ப.8)

சேரன் செங்குட்டுவன் வஞ்சி நகரில் கண்ணகிக்கு கோயில் எடுத்தது குறித்து சங்க நூலான எரிக்காட்டூர் தாயங்கண்ணனார் பாடிய அகநானூற்றுப் பாடலில் குறிப்பு காணப்படுகின்றது,

**"சுள்ளி அம் பேரியாற்று வெண்நுரை கலங்க**
**யவனர் தந்த வினை மாண் நன்கலம்**
**பொன்னொடு வந்து கறியொடு பெயரும்**
**வளங்கெழு முசிறி ஆர்ப்பு எழ வளைஇ**
**அருஞ்சமம் கடந்து, படிமம் வவ்விய**
**நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்"** (அகம்-149)

செங்குட்டுவன் தெய்வத்தன்மை பொருந்திய கண்ணகியின் உருவச்சிலை செய்தல் பொருட்டுக் கல் எடுப்பதற்காக ஆரிய மன்னரை எதிர்த்து தோல்வியுறச் செய்து இமய மலையிலிருந்து கல்லெடுத்து கங்கையாற்றில் நீராட்டினான் என்ற செய்தி பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்தின் பதிகத்தில் காணமுடிகின்றது.

மேற்சுட்டிய அகநானூற்றுக் கவிஞர் பாண்டிய மன்னன் முசிறியை வென்று கண்ணகியின் பொற்சிலையை எடுத்து மதுரைக்குக் கொண்டு சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார். இதன் அடிப்படையில் பார்க்கும் போது இன்றைய கொடுங்கல்லூர் ஆலயத்திற்கு 1 கி.மீ தெற்கே காணப்படுகின்ற சிறிய கோவிலான குறும்பக்காவு உள்ள இடத்தில் இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இக்கோயில் ஒரு மரத்தின் அடியில் கருங்கல் தரையில் அமைந்துள்ளது. அங்குள்ள அழகான தேவியின் சிலை மஞ்சள் பொடியால் முழுக்காட்டப்பட்டுள்ளது. இதனை 'குறும்பா அம்மா' என்று அழைக்கிறார்கள். அக்கோயிலுக்கு மேற்கூரை இல்லை, கருங்கல் தரையைச் சுற்றி இரும்புக் கம்பிகளாலான வேலி அமைத்துள்ளனர். தினசரி பூசை இல்லை. வருடத்திற்கு ஒரு முறை தாலப்பொலியின் போது குருதிப்பலி நடைபெறுகின்றது. கொடுங்கல்லூர் தாலப்பொலி விழாவின் போது, தேவியின் திடம்பு இக்கோயிலிருந்து தான் புறப்படுகிறது. பிறகு அது ஊர்வலமாகக் கொண்டு வரப்படுகின்றது.

வஞ்சிமாநகரம் என்றழைக்கப்பெறும் கொடுங்கல்லூர் சேர மன்னர்களின் தலைநகராக விளங்கியது. இக்கொடுங்கல்லூர் திருச்சூர் மாவட்டத்திலிருந்து 40 கி.மீ.

தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. கொடுங்கல்லூரின் மையப்பகுதியில் கொடுங்கல்லூர் பகவதி கோயில் அமைந்துள்ளது. இதனை ஸ்ரீ குறும்பக்காவு, சீர்ம்பக்காவு என்றும் அங்கு வீற்றிருக்கின்ற அம்மனை ஸ்ரீ குறும்ப பகவதி, சீர்ம்ப பகவதி என்றும் அழைக்கின்றனர். C.M.S.சந்தேரா என்பவர் 'கண்ணகியும் சீர்மக்காவும்' என்ற நூலில் கண்ணகியும் சீர்ம்பாவும் (ஸ்ரீ குறும்பா) ஒன்றே என நிறுவுகின்றார்.

**கோயில் அமைப்பு**

கொடுங்கல்லூர் கோயில் வளாகத்தில் பத்ரகாளி முக்கிய பிரதிட்டையாக விளங்குகிறாள். இப்பொழுதுள்ள மூலக்கருவறை வடக்கு நோக்கி அமைந்துள்ளது. வடக்கு நோக்கிய தெய்வம் மிகவும் சக்தி வாய்ந்த தெய்வமாக மக்களால் கருதப்பெறுகின்றது. இச்சிலை சுமார் நான்கடி உயரம் காணப்பெறுகின்றது. வருக்கைப் பலாவினால் ஆன இச்சிலை மிக அழகாக வடிவமைக்கப் பெற்றிருக்கின்றது. தாருக வதத்திற்குப்பின் காட்சி அளித்த விஸ்வரூபத்தினை இச்சிலை சித்திரிக்கின்றது. இக்கோயிலின் மையப்பிரதிட்டை மூலக்கருவறையின் அருகில் உள்ள, கிழக்கு நோக்கிய சிவப்பிரதிட்டை ஆகும். இப்பிரதிட்டை கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இதன் முன் நந்தி உருவம் அமைக்கப்பெறவில்லை. மூலக்கருவறையின் சுவரினை ஒட்டி மேற்காக நீண்டிருக்கும் அறையில், வடக்கு நோக்கி ஏழு மாதர்கள் வீற்றிருக்கின்றனர். இச்சிலைகள் வருக்கைப் பலாவினால் ஆனது. பீடத்துடன் நான்கடி உயரம் உடையன. **"அறுவர்க்கு இளைய நங்கை – பிடாரியும் அல்லள்"** (சிலப்.வழக்குரை-37) என்ற சிலப்பதிகார அடிகள் பிராம்மி, மகேஸ்வரி, வைஷ்ணவி, கௌமாரி, இந்திராணி, வாராஹி, சாமுண்டி என்ற ஏழு கன்னியர், தாருகன் வதைக்காகப் படைக்கப்பெற்றவர்கள் என்பதை நினைவுறுத்துகிறது.

கேரளத்தில் காளி வழிபாடு தாருகன் வதத்தோடு தொடர்புடையது. சிலப்பதிகாரத்தில் கண்ணகி காளியாகவும், துர்க்கையாகவும் விளங்குகிறாள். கண்ணகி வழிபாடு கேரளம் முழுவதும் வழிபடப்பெற்று வருகின்றது. தெய்யம், திற, தோற்றம், பான, படையணி, கலம்கனிப்பு, பூரக்களி, முடியேற்று, களமெழுத்து போன்ற பெயர்களில் நிகழ்த்து கலையாகவும், சடங்கு மரபாகவும் வழிபடப்பெற்று வருகின்றது. காளி கருமை நிறம் உடையவள்.

கொடுங்கல்லூர் காளி சிவப்புப் பட்டு உடுத்து சர்வ அலங்காரத்துடன் வீற்றிருக்கின்றாள். வலது காதில் சிங்கத்தின் உருவமும், இடது காதில் யானையின் உருவமும் காதணியாக அணிந்துள்ளாள். எல்லா அணிகலன்களும் பொன்னாலானவை, இச்சிலையில் உள்ள எட்டு கைகளில் எட்டு வகையான ஆயுதங்களைத் தாங்கியுள்ளாள். அவை, சூலம், வாள், தாருகனின் தலை, நாகம், சிலம்பு, வட்டகம், மணி, கட்வாகம் என்பனவாகும். வலது கால் மடித்து இடது கால் தூக்கியிட்டபடி தரையிலிருந்து ஒரு அடி உயரத்தில் அமர்ந்துள்ளாள். வாயிலுள்ள கோரப் பற்கள் கொற்றவையின் தோற்றத்தை நினைவுபடுத்துகின்றது. தலையில் உயரமான கிரீடம் அணிந்துள்ளாள். இச்சிலைதான் கொடுங்கல்லூர் பத்ரகாளியாகவும், துர்க்கையாகவும், குறும்ப பகவதியாகவும் இன்று கேரள மக்களால் வழிபடப்பெற்று வருகின்றது.

திவாகர நிகண்டில் பகவதிக்குரிய பெயர்களாக துர்க்கை, கொற்றவை, ஐயை, நீலி, பாலைக்கிழத்தி, குமரி, நாராயணி போன்றவை காணப்பெறுகின்றன. (திவாகர நிகண்டு.ப.77) கொடுங்கல்லூர் பகவதிக்குப் பாடப்பெறும் ஸ்தோத்திராஞ்சலியில் கண்ணகியை மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளது.

**”விதவாரூபையாம் தூமவதியை நான் தொழுகின்றேன்**

**திங்கள் சூடும் பகவானின் பத்தினியை நான் தொழுகின்றேன்”**

(நா.வானமாமலை,மக்களும் மரபும் – 38)

என்னும் வரிகளில் கண்ணகியை விதவை என்றும் பத்தினி என்றும் மறைமுகமாகக் குறிப்பிடுவதை உணரமுடிகின்றது.

”தமிழ்நாட்டில் மாரியம்மனை வழிபடுவது போல கேரளத்தில் பகவதியை வழிபடுகின்றனர். ஜமதக்னி முனிவரின் மனைவியாகிய ரேணுகாதேவியோடு தொடர்பு படுத்தி மாரியம்மனைக் கூறுவர். கேரளக் காளி கோயில்களில் வசூரிமாலை என்ற பகவதி உண்டு. வசூரி என்றால் மலையாளத்தில் அம்மை நோய் என்று பொருள். ‘வசூரிமாலை’ அம்மை நோய்க்கான தெய்வம்.

குறும்பக்காவுகளில், நாகவழிபாடு, நாகக்களம் வரைதல் போன்றவை பகவதி வழிபாட்டில் நாக வழிபாடு கலந்தமையினைக் காணமுடிகின்றது. சைனர்களின் நாக தேவதையான பத்மாவதி பகவதி வழிபாட்டில் நாககாளியாக இரண்டறக் கலந்துள்ளது என்பதனையும் அறிய முடிகின்றது.”

சிலப்பதிகார காலத்திற்கு முன்னர் தெய்வங்களின் உருவ வழிபாடன்றி அடையாளங்களை, வழிபட்டிருந்தனர் என்பதை சிலப்பதிகாரம் வாயிலாக அறிய முடிகின்றது. சிலப்பதிகாரத்தில் இந்திரனுக்கு வச்சிராயுதமும், முருகனுக்கு வேலாயுதமும் குறியீடுகளாகக் கூறப்பட்டுள்ளன. இவை முறையே வச்சிரக் கோட்டம், வேல் கோட்டம் என்று வழங்கப்பட்டுள்ளது.கோயில்களைக் ‘கோட்டம்’ என்று இன்றும் கேரளத்தில் வழங்கி வருகின்றார்கள். வடமலபாரில் கண்ணூருக்கு அருகில் முழுப்பிலாங்காடு என்னும் ஊரில், ஸ்ரீ குறும்பக்காவில் மூன்று கோட்டங்கள் உள்ளன. அவை கண்டாகர்ணன் கோட்டம், இளைய பகவதி, மூத்த பகவதிக்கான கோட்டங்கள் என்பன. பகவதி

கோட்டங்களில் பகவதி சிலைக்கு பதிலாக பகவதியின் குறியீடாக வாள் உள்ளது. இதனை,

**"உட்குடைச் சீறு ரொருமகன் ஆனிரை கொள்வுற்ற காலை**
**வெட்சி மலர் புனைய வெள்வாள் உழத்தியும் வேண்டும் போலும்"**

(சிலப்.வேட்டுவவரி, 1-2)

**"கேரளத்தில் கண்ணகி காளியாகவே வணங்கப்படுகிறாள். இன்றும் கேரளக் காளி கோயில்களில் பகவதியின் அடையாளமாக சிலம்பும், வாளும், பீடமும் வைத்து வழிபட்டு வருகின்றனர். பார்வதியின் அம்சமான காளி கோயில்களில் தாருகனை வதம் செய்த காளியாகவே வழிபடப்படுவதனால் சிலம்பு வழிபாடு காணப்படுவதில்லை"** (செல்லன் கோவிந்தன், கண்ணகி வழிபாடு தென்னகத்திலும் இலங்கையிலும்,ப.8) கண்ணகியின் குறியீடாக சிலம்பும் பீடமும் வாளும் கருதப்படுகின்றது.

**இரகசிய அறை**

இரகசிய அறை என்றழைக்கப்பெறும் மூலப்பிரதிட்டைக் கருவறை மிகச்சிறியது. இக்கோயிலின் மேற்கூரை செம்புத் தகடுகளால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இரகசிய அறையின் மேற்கு வாயிலில் ஒரு சிறிய மரக்கதவு உள்ளது. இக்கதவு தாழிட்டு மூடப்பட்டுள்ளது. இந்த மூலக்கருவறையில்தான் ஆதிசங்கரர் தேவியைப் பிரதிட்டை செய்ததாகவும், அவர் வழிபட்ட விலைமதிப்பற்ற நவமணிகளாலான மேரு சக்கரம் உள்ளதாகவும் மக்கள் நம்புகின்றனர். இப்பொழுதுள்ள வடக்கு நோக்கிய கருவறைக்குள் இந்த மூலக்கருவறையின் மேற்கு வாயிலும், அதன் முன் உள்ள பலிபீடமும் உள்ளே அமைந்துள்ளது. இக்கருவறைக்குள் அப்பலிபீடமே முக்கியமாக பிரதிட்டை. இதனை அடுத்து வடக்கு நோக்கி தேவியின் சிலை நிறுவப்பட்டுள்ளது. இப்பலிபீடம் ஒரு

முக்கியமான தாந்ரீக பதிட்டை. இதன் மீது பொன்னாலான கோளகையும், ஒளிச்சூழ்கையும் உள்ளன. **”தினமும் காலையில் திருநடை திறந்ததும், வாடிய மலர்கள் நீக்கம் செய்யப்பட்டு, நீராட்டுக்கு முன்பாக ரகசிய கருவறைக்குள் இருக்கும் தேவியின் வல்லமையை தாந்ரீகச் சடங்குகள் மூலம் இந்த பலிபீடத்தில் நிறுவிய பிறகுதான் பூஜைகள் தொடங்கப் பெறுகின்றன. இரவு பூசைக்குப் பிறகு பலிபீடத்திலிருந்து தேவியின் வல்லமையை மீண்டும் மூலப்புள்ளிக்கே திருப்பி அனுப்பப்படுகிறது, பிறகுதான் திருநடை மூடப்படுகிறது”** (வி.ஆர்.சந்திரன். கொடுங்கோளூர்க்கண்ணகி, ப.15)

முன்காலங்களில் அம்மனுக்குப்’பஞ்சமகாரம்’ முறைப்படி பூசை செய்யப்பட்டது. தலைமைப் பூசாரி ’அடிகள்’ என்றழைக்கப்பெறுகின்றார். மது, மாமிசம், மாவு, முத்திரை, மங்கை இவை ‘பஞ்சமகாரம்’ எனப்படும். அடிகள் தினமும் அதிகாலையில் தாந்ரீக முறையிலான பூசைகள் செய்து திரும்பிவிடுவர். அதன் பிறகு காலையில் பொதுமக்கள் தரிசனத்திற்காக கோயில் திறக்கப்படும். இப்பொழுது இவ்வழக்கம் இல்லை என்று கூறுகிறார்கள்.

**பண்டாரத்தரை**

பகவதி கோயிலின் கிழக்காக நூறு மீட்டர் தூரத்தில் அடிகள் தங்கியிருக்கும் இடத்திற்கு அருகில் கல்லாலான தரை உள்ளது. இது மேற்கூரை இன்றி நான்கு சுவர்களோடு கூடிய ஒரு அறையாகும். இதன் வாயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இதில் ஒரு இரகசிய வழி உண்டு. அவ்வழியாக வந்தால் கோயில் கருவறையை அடையலாம். கொடுங்கல்லூர்க்காவின் புகழ் பெற்ற அஸ்வதி காவுதீண்டலுக்குப் பிறகு ஏழு நாட்கள் பக்தர்கள் கோவிலுக்குள் செல்ல அனுமதி இல்லை. அந்நாட்களில் அடிகளும்

உதவியாளர்களும் சேர்ந்து இரகசிய சுரங்க த்தின் வழியாக நுழைந்து கோவில் கருவறையை அடைந்து யாமபூஜைகளை நடத்துவர். இப்பொழுது இச்சுரங்கம் மூடப்பட்டுள்ளது. கிழக்கு வாசல் வழியாக வந்து பூசை நடத்துகின்றனர். இக்கோவிலில் நடக்கும் தாலப்பொலி விழாவின் போது யானை ஊர்வல நிகழ்வினை கிழக்குப் பகுதியிலுள்ள இரகசிய வழியின் மேல் செல்ல அனுமதிப்பதில்லை.

**பள்ளிமாடம்**

கோயிலின் உள்சுற்றுச்சுவரை ஒட்டி வடக்குப் பக்கத்தில் கிழக்கு நோக்கிய ஒரு சிறிய மண்டபம் உள்ளது. இம்மண்டபம் சற்று உயரமானது. இதற்குப் 'பள்ளிமாடம்' என்று பெயர். இங்கு பங்குனி மாதம் நடைபெறும் பரணி விழாவின் போது, பக்தர்களுக்கு ஆசி அளிக்கும் பொருட்டு தேவி எழுந்தருளுவதாக நம்பப்படுகிறது. பக்தர்கள் மஞ்சள், நல்லமிளகு, பணம், கோழி முதலானவற்றை இந்த மாடத்தின் மீது வீசுகின்றார்கள்.

**மலையன் தட்டான்**

தட்டான் (பொற்கொல்லன்) மாசி மாதம் பரணி நாளின் முந்தைய நாள் கொடுங்கல்லூர் வலிய தம்புரானிடம் (அரசன்)பரணி விழாத் தொடக்கத்திற்கான சில சடங்குகள் செய்வதற்கு அனுமதி வாங்குவார். கொட்டும், வாத்தியங்கள் முழங்க தட்டான் காலையில் எட்டு மணிக்கு காவிற்கு வருவார். அதற்குள் காவிலுள்ள திருநடையையும், துணை தெய்வங்களின் நடையையும் அடைத்து, அங்குள்ள அனைவரும் விலகி நிற்பர்.

தட்டான் மணி இசைத்து காவினை மூன்று முறை வலமாகச் சுற்றி வந்து வடக்கு வாயிலிலுள்ள கோழிக்கல்லில், பட்டும் (சிவந்த துணி) தங்கத்தாலியும் வைத்து வணங்குவர். இதன் பிறகு கோவிலை சுத்தம் செய்து காவின் திருநடை திறந்து, அதுவரை நிறுத்திவைத்திருந்த பூசைகளை மீண்டும் தொடருவர்.

குன்னம்குளம், எடமுக்கு குடும்பி இனத்தில் உள்ள மூப்பன் இனத்தவருக்கு பரணிவிழாவிற்கான கொடிக்கூறை கட்டுவதற்கான உரிமை வழங்கப்பட்டிருந்தது. அது இன்றும் தொடர்ந்து வருகின்றது. நீண்ட கொடியின் வால்பகுதி இரண்டாகப் பிளந்து, கறுப்பு, சிவப்பு, வெள்ளை நிறங்களில் காட்சிதரும். அதில் யானையின் உருவமும் பதித்திருப்பார்கள்.

**ரேவதி விளக்கு**

பரணி விழாவின் தொடக்கமாக ரேவதி நாளன்று மாலையில் கொடுங்கல்லூர்க் காவு முழுவதும் தீபங்களால் அலங்கரிக்கப்படுகின்றது.

**கொடுங்கல்லூர் பரணி**

கொடுங்கல்லூர் பரணி தென்னிந்தியா முழுவதும் அறியப்படுகின்ற ஒரு விழாவாகும். கொடுங்கல்லூர் பகவதிக் காவில் கொண்டாடப்படும் விழாவினை 'மீனபரணி' (பங்குனி மாத பரணி) என்றும் அழைப்பர். கேரளக் கோயிலில் நடைபெறும் பெரும்பான்மையான விழாக்களுக்கு நெற்றிப்பட்டம் கட்டிய யானைகளும் பஞ்சவாத்தியங்களின் இசையும் இடம்பெறுவது வழக்கம். ஆனால் கொடுங்கல்லூர் பரணி விழாவின்போது, நெற்றிப்பட்டம் கட்டிய யானைகளோ, பஞ்சவாத்தியங்களோ எதுவும் இல்லை. சாதி, இன வேறுபாடுகளின்றி அனைவரும் ஒன்றிணைந்து இவ்விழாவினைக் கொண்டாடுகின்றனர்.

கொடுங்கல்லூர் பரணிக்கு கம்பத்தில் கொடியேற்றுவதில்லை. ஆனால் கோயிலைச் சுற்றிக் காணப்படுகின்ற அரசமரங்கள், பாலைமரங்கள் போன்றவற்றில் கொடிகளைக் கட்டுவர். கும்பபரணி (மாசி-பரணி) யில் கொடிகள் உயர்த்திவிட்டால் மீனபரணி வரை உள்ள நாட்களை விழா நாட்களாகக் கொண்டாடுவர்.

**பரணிப்பாட்டு**

கொடுங்கல்லூர் பரணி விழாவிற்குச் செல்பவர்கள் பரணிப்பாட்டு பாடுவது வழக்கம். இதனை 'தெறிப்பாட்டு' என்றும் அழைப்பர். பாடுபவர்கள், கணவனோடு கூடும் இன்பத்தை இழந்த கண்ணகிக்கு ஆண், பெண் கலவியைப் பற்றி ஆபாசமாகப் பாடுவதைக் கேட்பதில் விருப்பமுண்டு என்று கூறுகின்றனர். கோழிக்கல் மூடுகின்ற திருவோண நாளில் தொடங்குகின்ற பரணிப்பாட்டு அஸ்வதி நாளில் முடிவடைகின்றது. இப்பாட்டு இல்லாமல் பரணிவிழா நிறைவு பெறாது என நம்புகின்றனர். **"இதற்குச் சான்றாக இடைக்காலத்தில் வடநாட்டில் எழுதப்பட்ட `காலவிவேகா` என்ற நூலில் 'சபரோத்ஸ்வம்' என்ற விழாவைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்த விழாவிற்குச் செல்பவர்கள் ஆண், பெண் உறுப்புக்களைப் பற்றியும் சேர்க்கையைப் பற்றியும் சைகைகளோடு வெளிப்படையாகப் பாடுவதைப் பற்றி இந்த நூல் கூறியுள்ளது."** (P.L.சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, ப.85) இவை ஒரு தந்திர வழிபாட்டுப் பழக்கம் என்பது தெளிவாகின்றது.

**பாலக்கா வேலனும் அஸ்வதி காவு தீண்டலும்**

காவு தீண்டுதல் என்னும் சடங்கிற்கு தொடக்கமிடுபவர் வேலன் என்னும் இனத்தைச் சேர்ந்த ஒருவர். திருச்சந்தனக் காப்பு முடிந்ததும் காவின் கிழக்குப் பகுதியிலுள்ள ஒரு உயர்ந்த தரை (நிலபாடு தரை)யில் அரச தோரணையுடன் வீற்றிருப்பார். வேலன் அஸ்வதி பூஜைக்கு முன்பே வலியதம்புரானிடம் அனுமதிபெற்று மாலையும், தொப்பியும், புதிய வேட்டியும் அணிந்து காவு தீண்டலுக்குத் தயாராக இருப்பார்.

திருச்சந்தனக் காப்பு முடிந்தவுடன் தம்புரன் பட்டுக்குடை உயர்த்துவார். உடனே பாலக்கா வேலன் காவின் வெளிப்புறத்தில் உள்ள செம்புத் தகட்டினை கம்புகளால் தட்டிக்கொண்டே ஓடுவார். அதைத்தொடர்ந்து, சாமியாடிகளும் தேவி பக்தர்களும் கோயிலைச் சுற்றி செம்புத் தகட்டினைக்கம்புகளால் அடித்து, ஒலி எழுப்பிக் கொண்டே மும்முறை வலமாக ஓடுவர். இது கண்கொள்ளாக் காட்சியாக அமைகின்றது.

சாமியாடிகள் சிவப்பு நிற ஆடையினை உடுத்து, தலையில் வாளால் வெட்டி, குருதி சிந்துகின்ற காட்சி, நமக்கு அச்ச உணர்வை ஏற்படுத்துகின்றது. சிவப்பு என்பது வளமையைக் குறிப்பது. இதில் தாருகன் கதையும், கண்ணகி கதையினையும் இணைத்துக் கூறப்படுகின்றன.

வேலன் இனத்தார் ஒரு காலகட்டத்தில் இக்கோவில் நிகழ்வுகளுடன் மிகுந்த தொடர்புடன் இருந்திருக்க வேண்டும் என்பதன் தொடர்ச்சியே காவு தீண்டல் நிகழ்ச்சி. இதில் தொல்திராவிட மரபு பிரதிபலிக்கின்றது.

**"கண்ணகி வழிபாட்டிலிருந்து பகவதி வழிபாடு தோன்றியது. அதனுடன் சக்தி வழிபாடு, காளி வழிபாடு ஆகியனவும் பகவதி வழிபாட்டில் சேர்ந்தன. ஆனால் நாக வழிபாடு, பத்மாவதி தேவதை வழிபாடு, தாரதேவி வழிபாடு போன்றவை பிற்காலத்தில் கண்ணகி வழிபாட்டுடனோ, பகவதி வழிபாட்டுடனோ கலந்திருக்கலாம். அவ்விதமாகக் கலந்ததற்குத் தமிழ்நாட்டு இலக்கியங்களிலும், சிற்பக்கலையிலும் சான்றுகள் தென்படவில்லை. கேரளத்தில் இந்த மாற்றம் சிலப்பதிகாரக் காலத்துக்குப் பின் தோன்றி இருக்கலாம்,"** என்று பி.எல்.சாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**திருச்சந்தனக்காப்பு**

அஸ்வதி நாளன்று வருடத்தில் ஒருநாள் நடைபெறுகின்ற பூசைக்காக உபயோகிக்கின்ற விளக்குகள், பூஜை பாத்திரங்கள் பிரத்தியேகமாக பாதுகாக்கப்படுகின்றன. திருச்சந்தன பூஜை தொடங்கிவிட்டால் தெறிப்பாட்டு

பாடுவதில்லை. தாருகனுடன் போரிட்டபோது காளிக்கு ஏற்பட்ட காயங்களுக்கு மருந்தாக சிலையின் மீது மஞ்சள் பொடியில் இளநீர், பனிநீர் போன்றவற்றைச் சேர்த்து குழைத்து பூசுகின்றனர். இவை உடலுக்கு குளிர்ச்சியைத் தரக்கூடியவையாகவே உள்ளது. (குஞ்சுக்குட்டன் இளையது, கொடுங்கல்லூர் க்ஷேத்ர இதிகாசம், ப.110)

தாருக வதத்திற்காகப் புறப்படும் தேவியின் வல்லமையை கூட்டுவதற்காக சாக்தேய பூசை நடத்துகிறார்கள். மூடு வெட்டிய இளநீர், மது, கடும் இனிப்புப்பாயசம், இளநீரில் மஞ்சள் குழைத்தல், மாமிசம், நீரில் மீன் உருவத்தை வரைந்து தர்ப்பணம் செய்தல், மீன், தெறிப்பாட்டு, மைதுனம், இச்சாக்தேய பூஜையினை அடிகள் நடத்துகின்றனர். மது, மாமிசம், மீன், மாவு, மைதுனம் இவை 'பஞ்சமகாரம்' என அழைக்கப்படும்.

**பரணி விழா**

பரணி நாளன்று காலையில் ஒரு பூசை மட்டுமே நடத்துகிறார்கள். 'வரியரிசி'யால் பாயசம் செய்து தேவிக்குப் படைக்கின்றனர். இது போர்முடித்து வந்த தேவிக்கு பத்திய உணவு என்று நம்புகிறார்கள். பரணியன்று காவின் திருநடை அடைக்கப்பட்டு, ஆறாம் நாளாகிய பூயம் நாளில் திருநடை திறக்கப்படும். இந்த ஆறு நாட்களிலும் இரகசியமாக யாம பூஜைகள் நடத்தப்பெறும். இதனை அடிகள் ஒருவரும் உதவியாளர்களுமாக சேர்ந்து நடத்துகின்றனர்.

**கண்ணகியும் விஷாரிக்காவும்**

கண்ணகி கதைக்கும் விஷாரிக்காவு தொடர்பான கதைக்கும் இடையே தொடர்புண்டு என்று பி.எல்.சாமி கூறுகின்றார். **"விஷாரிக்காவில் மிக முக்கியமும் வியப்புக்குரியதுமாகக் காணப்படுவது செட்டியார்கள் என்னும் சாதியினர் செய்யும் சடங்காகும். மிகக் குறைவாக உள்ள இந்த இனத்தார் மாகி என்ற ஊருக்கு அருகில்**

**தெல்லிச்சேரியிலும் உள்ளனர். இவர்கள் மலையாளமே பேசுகின்றனர். தமிழோ பிற மொழிகளோ அறியாதவர்கள் விஷாரிக்காவு உற்சவம் இந்த செட்டியார் இனத்தவருக்கு ஓலை கொடுத்து அழைத்த பிறகுதான் தொடங்கும். முதல் ஓலை இவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. இந்தச் செட்டியார்கள் விஷாரிக்காவிற்கு வந்து செட்டிப் பறம்பு என்ற இடத்துச் சத்திரத்தில் தங்கி விழாவை மந்திரங்கள் சொல்லித் தொடங்குகின்றனர். இவர்களுக்கு அனுப்பும் ஓலை 'வலிய வீட்டு சுப்பிரமணியன்' என்னும் முகவரியுடன் எப்போதும் அனுப்பப்படும். யானையின் மீது உற்சவத்தின் போது எடுத்துச் செல்லும் கொடுவாளை இந்தச் செட்டியார்கள் செலவில் செய்து கொண்டு வருகிறார்கள். இந்தச் செட்டியார்கள் தலையில் சிவப்புத் துணியால் தலைப்பாகை கட்டி மந்திரப் பாட்டைச் சொல்லி உற்சவ ஊர்வலத்தில் செல்கின்றனர். செல்லும்போது 'கோழி நடே நடே' என்று கத்திச் செல்வதும் உண்டு."** (நா.வானமாமலை,மக்களும் மரபுகளும், ப.32)

தமிழ் சிறிதும் தெரியாத இந்தச் செட்டியார்கள் மலையாள எழுத்தில் தமிழ் மந்திரத்தை எழுதி வைத்து அதை விஷாரிக்காவு உற்சவ ஊர்வலத்தில் சொல்லுகின்றனர். இந்த மந்திரப் பாட்டில் கண்ணகியின் கதை வழங்கப்படுகின்றது. விஷாரிக்காவில் இது தமிழ்ப்பாட்டு என்றறியாது, ஏதோ ஒரு மொழியில் பாடப்படுவதாக கூறுகின்றனர். இப்பாட்டு 'விருத்தம்' என்று செட்டியார்களால் அழைக்கப்பெறுகின்றது. இப்பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

**"ஆதி முதல் காவேரிப் பூம்பட்டினத்து**
**ஆயிரவர் வங்கி சத்தில்**
**அரிய கண்ணகை அம்மன் ஆகவே தான்**
**பிறந்து அதிரூபமான பொழுது**
**தீதிலா கோவிலருடன் பாரியாளாகவும்**
**சிறிது காலம் சென்றபின்**
**திங்கள் முகமாய் வந்து தனிக்காக**
**மதுரையில் சிலம்பு கூறினாளில்**

**நீதியரசனென்றான பாண்டியன் வாசரில்**
**நிகரிற்ற மழுவரசனாம்**
**நிந்தின புறக்கவே பாண்டி நாடெத்தி நீ**
**நீறாயெரித்த சோதி**
**ஆதிகாலத்திலும் மகிமையாய் நீ வந்த**
**அதியமும் ஆரறிவாரோ**
**ஆனைக்குளம் வளர்பகவதி அம்மையே**
**ஆனந்த மகமாயே”**

(பி.எல்.சாமி,தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு,ப.57)

முதல் பாடலில் காவிரிப்பூம்பட்டினத்தில் ஆயிரம் செட்டியார் வம்சத்தில் பிறந்தவள் கண்ணகி என்றும், கோவலனின் மனைவியாக சிறிது காலம் வாழ்ந்து, மதுரையில் சிலம்பு விலை கூறிய நாளில், நீதியரசனாகிய பாண்டியன் வாயிலில் நிந்திக்கப்பட்டு, மதுரையை நீறாய் எரித்துச் சோதியானாள் என்று கூறப்பட்டுள்ளது. இதில் கண்ணகி கதையை மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளனர்.

கண்ணகியைக் கண்ணகை அம்மன் என்றும், பாண்டிய மன்னனை நீதியரசன் என்றும் அழைக்கின்றனர். மழுவரசன் என்பது கோவலனை மழுவால் வெட்டியவனைக் குறிக்கும். கோவலன் என்னும் பெயர் கோவிலர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலம்பில் குறிப்பிட்டுள்ள கோவலன், கண்ணகி என்னும் பெயர்களே இப்பாடலிலும் இடம்பெற்றுள்ளன. இக்கோயில் வணிகர் குலத்துடன் தொடர்புடையது என்பதில் ஐயமில்லை.

**”அக்ரசாலக் குளவளர் பகவதி அம்மையும்**
**ஆனைத் தளியில் தேவரும்**
**திக்கெல்லாம் புகழ்வரும் கொல்லத்து**
**பகவதி திசவரக்கல் பகவதி**
**தினந்துதி கொண்டாடும் புத்தூரில் அம்மையும்**
**பலக்கல்ம் வாழு நமக்கு**
**அக்கினியிடம் பொருள் அரிச்சேத்திர**
**பாலனும் அடிபணிந்தருளும்**

**ஆனைக் குளங்கரை பகவதி அம்மையே**
**ஆனந்த மகமாயே”**

(பி.எல்.சாமி,தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு,ப.57)

என்ற பாடலில் பகவதியாக மாறிய கண்ணகி கோயில் இருக்கும் முக்கிய ஊர்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. இப்பாடல் மூலம் அறியவரும் ஸ்ரீகுறும்பக்காவு பகவதியும், கொடுங்கல்லூர் பகவதியும் கேரளத்தில் முக்கியமான தெய்வங்களாகும்.

**”காரொத்த கூந்தலும் குப்பியும் தொங்க**
**லும் கமல முகவதன னழகும்**
**கயல்விழி கண்களும் முத்து மூக்குத்தியும்**
**காதினொடுபுழையினழகும்**
**பாரொத்த பூ முலை கழுத்தணி பதக்கமும்**
**மங்கல னாணினழகும்**
**வஞ்சீரி செங்கையும் சுற்றிடை தன்னி**
**லொரு மாந்தளிர்பொட்டிலழகும்**
**சீரொத்ததொந்தியும் பாத சலங்கையும்**
**செம்பவள மேனி னழகும்**
**தேவியின் பாதமே நண்ணுமடியேனுமே**
**சிந்தித்து வந்த கரிமம்**
**நேராப்ப வாகவே இந்தருள் பொறுத்**
**தருள் நேமி அபிராமி கவுரி**
**நல்ல நாக மேவிய அனைவரது ஆனந்த**
**மான பொழினீ”** (மேலது,57)

என்று வரும் பாடலில் (கேரளத்தில் காணப்பெறும் பகவதி வர்ணனையாகவோ, காளி வர்ணனையாகவோ இல்லாமல்) கண்ணகி வர்ணனையாகவே குறிப்பிடப்பெற்றுள்ளது.

கருமையான கூந்தலும், கண்ணாடி வளையலும், காதில் தொங்கலும், தாமரைப் பூப்போன்ற முக அழகும், அழகான கண்களும், முத்து மூக்குத்தியும், கழுத்தில் அணிந்த அணிகளின் அழகும், பெண்ணின் நாணமாகிய அழகும், வலிமையான கைகளும், சிறுத்த இடையும், மாந்தளிர் போன்ற பொட்டும் நிறத்தின் மங்கல நாணின் அழகும், அழகுடைய வயிறும், பாதச்சிலம்பும், செம்பவளத்தின் நிறமுடைய மேனியழகும் உள்ள தேவீ. உன்

பாதங்களை வணங்குகின்ற எல்லா பக்தர்களுக்கும் அருள் செய்ய வேண்டும். இவ்வாறு கண்ணகியின் வர்ணனையில் கண்ணகி தேவியாகவும், கௌரியாகவும், அபிராமியாகவும் கூறப்பட்டுள்ளது. விழாநாளன்று நள்ளிரவில் அம்மனுக்குக் கொடுக்கப்படும் குருதி பலியை உண்ண, கொடுங்கல்லூரிலிருக்கும் மூத்த பகவதி,விஷாரிக்காவில் உள்ள ஒரு கிணற்றின் வழியாக வந்து இளைய பகவதியுடன் களத்தில் சேர்ந்து, ஆடுவதாகக் கூறுகின்றனர். இவர்களுடன் இணைந்து பூதங்களும், பேய்களும் ஆடிய நிலையில்,பலியினை உண்ணுவது வழக்கம் என்று மக்களால் நம்பப்படுகின்றது.

**பிஷாரிக்காவு**

பிஷாரிக்காவு வடமலபாரில் மிக முக்கியமான ஒரு பகவதி கோயிலாக விளங்குகின்றது. இக்கோயிலில் வீற்றிருக்கும் தெய்வத்தை பந்தலாயினிக் கொல்லம் பிஷாரிக்காவு பகவதி என்று குறிப்பிடுவர். இக்கோயில் கோழிக்கோடு மாவட்டத்தில் கொயிலாண்டி தாலூக்கில், கொல்லம் என்னும் இடத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்தக் கோயில் தோன்றியதைப் பற்றி ஒரு தொன்மம் மக்களிடையே வழங்கி வருகின்றது. தெக்கன் கொல்லத்தில் உள்ள வணிகர்களுக்கும் அந்நாட்டு அரசனுக்கும் வரி செலுத்துவதன் பேரில் பிரச்சனை ஏற்பட்டது. வணிகர்கள் வரி செலுத்த மறுத்ததால், அரசன் வணிகர்களை நாட்டை விட்டு வெளியேறும்படி உத்தரவிட்டார். எட்டு வணிகக் குடும்பங்களும் தங்கள் அனைத்து உடமைகளுடன் வடதிசையாக நீர் வழி யாத்திரை நடத்தினர். தங்கள் வளர்ச்சிக்குக் காரணமான பகவதியை நாந்தகம் என்ற வாளில் குடிகொள்ளச் செய்து (ஆவாஹித்து) எடுத்துக்கொண்டு வந்தனர். அப்போது ஒரு இடத்தில் புலியும், பசுவும் ஒரு நீர்க் கரையில் ஒற்றுமையாகத் தண்ணீர் குடிப்பதைக் கண்டனர். அந்த இடத்தில் அவர்கள் நாந்தகம் என்னும் வாள் மூலமாக எடுத்துக்கொண்டு

வந்த பகவதிக்குக் கோயில் கட்டி வழிபட்டனர். தாங்கள் வாழ்ந்த இடமாகிய கொல்லத்தின் நினைவாக அந்த இடத்திற்குக் கொல்லம் என்று பெயரிட்டனர்.

விஷாரிக்காவு பகவதி கோயில் வழிபாட்டில் கண்ணகி கதை இன்றும் வழங்கப்பட்டு வருகின்றது. மக்கள் கொடுங்கல்லூர் பகவதியை மூத்த பகவதியாகவும், விஷாரிக்காவு பகவதியை இளைய பகவதியாகவும் வழிபட்டு வருகின்றனர். இளைய பகவதி மிகவும் சக்தி வாய்ந்தவளாக கருதப்படுகின்றாள். இளைய பகவதி வடக்கு நோக்கி வீற்றிருக்கின்றாள். பொதுவாக வடக்கு நோக்கிய தெய்வம் மிக சக்தி வாய்ந்ததாக நம்பப்படுகின்றது.

விஷகாரியாகிய வைசியன் நிறுவிய கோவில் ஆனதால் 'விஷகாரிக்காவு' என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. விஷஹாரிக்காவு மருவி 'பிஷாரிக்காவு' என ஆயிற்று. விஷஹாரி என்றால் விஷவைத்தியன் என்று பொருள். இன்றும் தெக்கன் கொல்லத்தில் வாழ்ந்துவருகின்ற பலரும் பிஷாரிக்காவு திருவிழாவின் போது தவறாது வந்து கலந்து கொள்கிறார்கள்.

பிஷாரிக்காவில் பத்ரகாளி சப்தமாதர்களான ஏழு கன்னியருடன் வீற்றிருப்பது சிறப்பு. அடுத்த அறையில் நாந்தகம் (வாள்) வைத்துள்ளனர். சிவன் கிழக்கு நோக்கிய நிலையிலும், அம்மன் வடக்கு நோக்கிய நிலையிலும் வீற்றிருக்கின்றனர். அம்மனின் கருவறைக்கு முன் சிவனின் கருவறை உள்ளதால் வெளியில் இருந்து பார்த்தால் தேவியைக் காணமுடியாது. பெண்களுக்கு கிழக்கு வாயிலாக செல்ல அனுமதியில்லை. தெற்கு வாயிலாகச் செல்லலாம். கோவில் பூசாரி பிடாரர் என்று அழைக்கப்பெறுகின்றனர். பிடாரர் என்றால் சாக்தேய பிராமணர் என்று கூறுகின்றனர். பகவதியின் இடது பக்கமாக வேறொரு அறையில் பகவதியின் அற்புத சக்தியுள்ள 'நாந்தகம்' என்னும் வாள் காணப்பெறுகின்றது.

முன்காலங்களில் விஷாரிக்காவு பகவதி கோயிலில் பூசை நடத்தியவர்கள், கோயிலை நிறுவிய வணிக குலத்தவர். அவர்கள் நாயர் இனமாக மாறிய பிறகு நம்பூதிரிகள் பூசைசெய்து வந்தனர். அத்துடன், இவர்களின் தினசரி பூசையால் பகவதி மிக சக்தி வாய்ந்தவளாகவும் போர்க்குணம் உடையவளாகவும் காணப்பட்டாள். அதனால் பக்தர்கள் கோவிலுக்குள் செல்வதற்கு அஞ்சினர். அதை உணர்ந்த வணிகர்கள் நம்பூதிரியின் பூஜையை நிறுத்தி மூசாது என்பவர்களை பூசை செய்ய ஏற்படுத்தினர். பகவதியும் அமைதியாகக் காட்சியளித்தாள். இப்பொழுது சாக்தேய முறைப்படி வழிபாடு நடத்தப்படுகிறது. கோழிக்கோடு, திருவளையநாடு பகவதி கோயிலை அடுத்துள்ள ‘மூசாது’ என்பவர்கள் தான் விஷாரிக்காவிலுள்ள பூசாரிகளாவர்.

**காளியாட்டம்**

விஷாரிக்காவில் நடைபெறுகின்ற விழா காளியாட்டம் என்று அழைக்கப்பெறுகின்றது. இது வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும். மாசி மாதம் கொடியேற்றி, பங்குனி மாதத்தில் ஒரு நாள் காளியாட்டம் நடைபெறும். காளியாட்டம் பிற கோவில்களிலுள்ள காளியாட்டத்திலிருந்து மாறுபட்டது. மூங்கில் நட்டு, அதன் மேல் கொடியேற்றுகிறார்கள். காளியாட்டம் எட்டு நாட்கள் நடைபெறும். முதல் ஆறு நாட்கள் ஸ்ரீபலித் திடம்பு யானையின் மீது ஊர்வலமாகக் கொண்டுவரப்படுகின்றது. ஏழு, எட்டாவது நாட்களில் நாந்தகமாகிய வாள் ஊர்வலமாகக் கொண்டு வரப்பெறுகின்றது. பிடியானையின் மீது மட்டுமே நாந்தகம் ஊர்வலமாகக் கொண்டு வருகிறார்கள். அது முகமதியர்களின் யானையாகவே இருப்பது குறிப்பிடத்தக்கது.

காளியாட்டத்திற்கான தேதி குறித்துவிட்டால் இதற்கு உரிமையாளர்களான தெய்யம்பாடி குறுப்பு, அகம்படிச் செட்டியார், லோகனார் காவில் உள்ள காரணவர் (மூத்தவர்) போன்றவர்களுக்கு ஓலை மூலம் செய்தி அனுப்பப்படுகிறது.

இக்கோயிலின் முக்கியமான வழிபாட்டு உருவம் அம்மனின் மறுவடிவமான நாந்தகம் (வாள்) என்பதாகும். விஷாரிக்காவில் திருவிழா நாட்களில் பாலை மரத்தினடியிலிருந்து தான் ஊர்வலம் புறப்படும்.

மலபாரில் பிற கோயில்களில் நடைபெறும் விழாக்களிலிருந்து மிக வேறுபாடு உடையதாகக் காணப்பெறுகின்றது விஷாரிக்காவு விழா. சாதிபாகுபாடின்றி அனைவரும் பங்கேற்று, விழாவினை சிறப்பிப்பர். நம்பூதிரி, வைசியர், நாயர், மூசாது, நம்பீசன், பட்டர், வெளுத்தேடன், கணியர், வாணியர், சாலியர், ஈழவர், முக்குவர், வேட்டுவர், வண்ணான்மார், தட்டான்மார், மலயர், புலையர் போன்ற பல்வேறுபட்ட இன மக்களின் கூட்டுமனப்பான்மையால், விஷாரிக்காவு விழா சிறப்பாக இன்றும் நடைபெற்று வருகின்றது.

விழாநாளில், தெய்யம்பாடி குறுப்பின் நடனம் பக்திமயமான ஒரு சடங்காகும். களியாட்டத்தின் போது தீயர் இனத்தைச் சேர்ந்த பெண்கள் விரதம் இருந்து தாலப்பொலி நடத்துகிறார்கள். இது மிகவும் மனதைக் கவரக்கூடிய நிகழ்ச்சியாகும். குருதி பூஜை (வலிய வட்டளம் குருதி) இக்கோயிலின் முக்கியமான வழிபாடாகும். இக்கோயில் அனைத்து சாதியினருக்கும், பல உரிமைகள் உண்டு. இஸ்லாம் மதத்தினர் இக்கோயிலில் வழிபாடு நடத்துகின்றனர்.

**தொகுப்புரை**

பண்டைத் தமிழர் இயற்கையின் ஆற்றல் மீது பக்தி கொண்டு அதனை வழிபட்டுள்ளனர். அதன் தொடர்ச்சியாக சிலப்பதிகார காலத்திலும், ஞாயிறு, திங்கள்,

மழை, மரம் போன்றவற்றை வழிபட்டிருக்கின்றனர். அதற்குத் தக்க சான்றாக உச்சிக்கிழான் கோட்டம், நிலாக்கோட்டம் என்ற சில பதிவுகளை இளங்கோவடிகள் தந்திருக்கின்றார். அத்தகு வழிபாடுகளின் தொடர்ச்சியினை இன்றைய கேரளத்தில் காண்கின்றோம்.

தற்பொழுதும் கேரளத்தில் சூரியவழிபாடு இருந்து வருகின்றது. இதற்கு கோட்டயத்திலுள்ள ஆதித்யனார் கோவில் முக்கிய சான்றாகும். அங்ஙனமே உழவுத் தொழிலுக்கு அடிப்படையான மழையைப் போற்றி வணங்கியதை கேரள நாட்டார் பாடல் தெளிவுறுத்துகின்றது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகியோடு தொடர்புபடுத்திய நிலையில் வேங்கை மரத்தினை தெய்வ மரமாகக் கருதுகின்றனர். அதனால் கேரளத்தில் வேங்கை மரத்தினை கோயில் கட்டுமானத்திற்கு மட்டுமே பயன்படுத்துகின்றனர்.

கேரளத்தில் பாலைமரம் காளியின் தலவிருட்சமாக உள்ளது. பாம்புக்காவுகளிலும் இயற்கையைப் பாதுகாக்கும் விதமாக அங்குள்ள மரம், செடி, கொடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

சிலப்பதிகாரத்தில் நாளங்காடிப்பூதம், சதுக்கப்பூதம், நான்கு வருணப் பூதங்கள் போன்ற பூதங்களும், அவற்றிற்கான வழிபாட்டு முறைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பழங்காலத் தமிழர் வழிபாட்டில் பூதங்களுக்குத் தனியிடம் உண்டு. சிலப்பதிகாரம் அதற்குச் சான்று பகர்கின்றது. இன்றைய கேரளமக்கள் பூதங்களைத் துணைத் தெய்வங்களாக வழிபடுகின்றனர். பூதத்திற்கு பலி செலுத்தப்படுவதுண்டு. கேரள இனக்குழு மக்கள் 'திறயும், பூதனும்' என்னும் வேடம் புனைந்து ஆடுகின்ற ஒரு வழக்கமும் உண்டு.

இயக்கியர் காடு, மலை, நீர்நிலை முதலான இடங்களில் சுற்றித்திரிபவர்களாக சிலப்பதிகாரம் சுட்டுகின்றது. கேரளத்தில் இயக்கியைத் தாய்த்தெய்வமாகவும், துணைத் தெய்வமாகவும் வணங்கி வருகின்றனர். நாட்டாரிடையே இயக்கி பற்றிய செல்லாடல்கள் பரவலாக வழங்கி வருகின்றன.

சிலப்பதிகார காலத்தில் காமவேள் கோட்டம் இருந்திருக்கின்றது. காமனை வழிபட்டால் இம்மையிலும், மறுமையிலும் இன்பமுடன் வாழ்வர் என்னும் நம்பிக்கையும் அக்கால மக்களிடையே இருந்தது. சிலப்பதிகாரம் மதுரையில் காமன் விழா நடைபெற்றிருந்ததை உறுதிப்படுத்துகின்றது. அதன் தொடர்ச்சியாக இன்றும் அப்பகுதிகளில் காமன்விழா நடைபெற்று வருகின்றது.

கேரளத்தில் வடமலபார்ப் பகுதிகளில் ‘காமதகனத்தை’ அடிப்படையாகக் கொண்டு பூரவிழா நிகழ்கின்றது. அந்நிகழ்வு ஒன்பது நாட்கள் கன்னிப் பெண்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது. கேரள மக்கள் காமன் உருவத்தை மண்ணால் செய்து வழிபடும் வழக்கத்தினைக் கொண்டுள்ளனர். இவ்வழக்கம் தொல்மரபின் நீட்சியாகவே கருதப்படுகின்றது.

சிலப்பதிகாரத்தில் தாய்த்தெய்வ வழிபாட்டின் நீட்சியாகக் கொற்றவை வழிபாடு இடம்பெற்றுள்ளது அந்நூலில் இடம்பெறும். சாலினி என்னும் எயினர் குலக் குமரிப்பெண் கொற்றவையாகவே வேடம் அணிகின்றாள். கண்ணகியை காளியாக உருவகப்படுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கேரளத்தில் கொற்றவை என்னும் பெயரில் தெய்வத்தை வணங்குவதில்லை. கொற்றவையின் தோற்றம் கொண்ட காளியாகவே வணங்குகின்றனர். தாய்வழிச் சமூகத்தின் தொடர்ச்சியாகவே இத்தாய்த்தெய்வ வழிபாடு நிலைபெற்றுள்ளது.

கண்ணகி தெய்வமானதைக் குன்றக்குரவர்கள் செங்குட்டுவனுக்குக் கூறியதாகச் சிலப்பதிகாரம் உணர்த்துகின்றது. இவ்வாறு இனக்குழு மக்களால் வணங்கப்பட்ட கண்ணகி வழிபாடு, கேரளத்தில் பகவதி வழிபாட்டுடன் கலந்துள்ளது.

எல்லா பகவதிகளுக்கும் மூத்த பகவதியாக கொடுங்கல்லூர் குறும்ப பகவதி கருதப்படுகின்றாள். இப்பொழுதுள்ள பகவதி வழிபாட்டில் தாய்த்தெய்வ வழிபாடும், பழந்தமிழரின் கொற்றவை வழிபாடும், காளி வழிபாடும், நாகவழிபாடும் கலந்தமையினைக் காணமுடிகிறது.

# இயல் – மூன்று

## கலைகள்

## கலைகள்

கலைகள் மனித வாழ்வைச் செம்மைப்படுத்துவன, பண்பாட்டு மானுடவியலில் கலைக்கும் அறிவியலுக்கும் இன்றியமையாத இடமுண்டு. அவை பண்பாட்டின் இரு கண்களாகத் திகழ்கின்றன. மனிதர்களின் இரசனை உணர்வை வளர்த்தெடுப்பதில் கலைகளால் மட்டுமே இயலும். கலை இன்றேல் மனிதன் காட்டுமிராண்டியாக மாறிவிடுவான்.

**"இயற்கையோடு இயைந்து வாழ்க்கை நடத்திய மனிதனுக்கு இயல்பாகவே தோன்றிய உணர்வு கலை எனலாம். பண்டைக்காலத்தில் மன மகிழ்ச்சி ஒன்றே முக்கிய நோக்கமாக இருந்தது. உணர்ச்சியின் வெளியீடாகக் கலைகள் இருந்ததனால் கால வெள்ளத்தைக் கடந்து இன்றும் நிலைத்து நின்று வளர்கின்றன. இக்கலைகள் சமயத்துடனும் சமூகத்துடனும் இணைந்து காணப்படுகின்றன."** (டா. சு.சக்திவேல் நாட்டுப்புற இயல் ஆய்வு ப. 167 ) அத்தகைய கலைகளின் கொள்கலனாக சிலப்பதிகாரம் திகழ்கின்றது. இசை, நாடகம், கூத்து என்று பண்டைய தமிழர்களின் கலைச் சிறப்பினை விளக்கியமையும் சிறந்ததொரு காப்பியமாக சிலப்பதிகாரம் திகழ்கின்றது . இக்காப்பியத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் கலைகளின் மரபுத் தொடர்ச்சி கேரள நாட்டார் கலைகளான தோல் பாவைக்கூத்து, சாக்கியார் கூத்து, பூரக்களி, தெய்யம், திரை, முடியேற்று, தீயாட்டு, படையணி முதலான கலைகளில் கிடக்கின்றன. எனவே அவற்றை ஆராயும் விதத்தில் இவ்வாய்வு அமைகின்றது.

**தோல் பாவைக் கூத்து**

தென்னகத்தில் ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கூத்துக்கலை நல்ல வளர்ச்சி நிலையை அடைந்திருந்தது. அதற்கான சான்றுகள் தொல்காப்பியம்

மற்றும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. பாணர், பொருநர் முதலான கலைஞர்களுக்கு இருந்த சமூக மதிப்பு கூத்தர்களுக்கும் இருந்தது. கூத்தர்களை மன்னர்கள் பலரும் தக்க நிலையில் ஆதரித்து வந்தனர். அதனை எடுத்துக்காட்டும் விதமாக கூத்தராற்றுப்படை என்னும் பத்துப்பாட்டு நூல் தோன்றியது. சங்ககாலத்தில் தவிர்க்க இயலாத கலையாக போற்றப்பட்ட கூத்துக்கலை சிலப்பதிகார காலத்திலும் தனக்கான இடத்தைத் தக்க வைத்திருந்தது. காலச் சூழலுக்கு ஏற்றவாறு கதைக் கருவினையும் வடிவத்தையும் மாற்றிக்கொள்ளும் நெளிவு சுளிவுகள் அக்கலைக்கு இருந்த காரணத்தால் காலந்தோறும் பல்வகை கூத்துக்களாக அது பரிணமித்தது. அதனைப் 'பலவகை கூத்தும்' (சிலப். அரங்கேற்று –பா.13) என்ற இளங்கோவின் பதிவினால் உணரலாம். அவற்றுள் ஒன்றே தோல்பாவைக் கூத்து. இக்கலை கேரள நாட்டார் மரபில் இன்றும் நிலைத்து நிற்கின்றது.

*சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய கூத்துக்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் ,*

**'இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து**
**பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்'**

(சிலப்.அரங்கேற்று காதை பாடலடிகள் 12-13)

என்று இளங்கோவடிகள் சுட்டிச் செல்வதுண்டு. மேற்கண்ட பதிவில் இடம்பெறும் "பல்வகைக் கூத்து" என்பதற்கு உரையாசிரியர்கள் விளக்கம் கூறுகையில் 'பல்வகை என்பது பகரும் காலை வென்றி வசையே வினோதமாகும்' (சிலப்.ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை ப.78) என்று குறிப்பிட்டுள்ளனர். மேலும் வினோத கூத்து என்பதில் குரவை,கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை என்பன அடங்கும் என்றும் விவரிக்கின்றனர். இதனால் தோற்பாவைக் கூத்து என்னும் கலை வடிவம் மிகப் பழமையுடையது என்று அறிகின்றோம். முற்காலத்தில் இக்கூத்திற்காக

பயன்படுத்தப்படும் பாவைகள் ஓலைகளால் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. காலப்போக்கில் மான் தோலாலும், மாட்டுத் தோலாலும் பாவைகளை உருவாக்கத் தொடங்கினர். அதன் பின்னரே அக்கூத்திற்கு தோல்பாவை கூத்து என்ற பெயர் வந்திருக்க வேண்டும்.

இளங்கோவடிகளால் எடுத்துரைக்கப்பட்ட கூத்து வடிவங்களில் ஒன்றாகிய தோல்பாவைக்கூத்து கேரளத்தில் இன்றும் பல கோயில்களில் நிகழ்த்தப்படுவதுண்டு. அக்கூத்து பத்திரகாளிக் காவுகளுடன் தொடர்புடையது. காளிக்கும் தாருகனுக்கும் போர் நடைபெற்ற காலத்தில் இராம இராவணப் போரும் நிகழ்ந்தது. அதனால் பத்திரகாளிக்கு இராம இராவணப் போரினைக் காண இயலவில்லையே என்ற வருத்தம் ஏற்பட்டது. எனவே கேரள நாட்டார் பண்பாட்டில் பத்ரகாளியை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக இராமகதை முழுவதையும் தோல்பாவைக்கூத்து வழி நாடகமாக நிகழ்த்திக் காட்டுகின்றனர்.

பாலக்காடு, திருச்சூர், மலப்புறம் மாவட்டங்களில் சித்திரை, வைகாசி மாதங்களில் தோல்பாவைக் கூத்தினை நிகழ்த்தி வருகின்றனர். பொதுவாக பாவைக்கூத்து இந்தியாவின் பல பாகங்களிலும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. மரப்பாவை, தோல்பாவை போன்ற பலவகைப் பாவைகளைக் கூத்திற்காக பயன்படுத்தி வருகின்றனர்.

**"ஐரோப்பியா, சைனா, ஈஜிப்த், இந்தோனேசியா, சயாம், ஜாவா, கிரீஸ் முதலான ஆசிய நாடுகளிலும் இக்கலை, வளர்ச்சி அடைந்து ஒரு மக்கள் கலையாக திகழ்கின்றது."** (கே.ராமச்சந்திரப் புலவர், காளி சங்கல்பம் கேரள சரித்திரத்தில் பக்.217)

கேரளத்தின் பாலக்காடு மாவட்டத்தில் 'புலவர்கள்' என்று அழைக்கப்படுகின்றவர்களால் தோல்பாவைக் கூத்து நிகழ்த்தப்படுகின்றது. இவர்கள்

பாவைகளை உருவாக்கி அவற்றை ஆட்டுவித்து உரையாடல் மூலமாகக் கதை கூறுவதில் வல்லவர்கள். தோலால் செய்யப்பட்ட பாவைகளை ஒரு மூங்கில் தண்டில் பொருத்தி வைப்பர். அவைகளின் கைகளிலும் கால்களிலும் கழுத்திலும் சிறிய கயிற்றினைக் இயக்குவதற்குத் தகுந்தவாறு கட்டிவைத்திருப்பர். அனுபவம் வாய்ந்த கூத்துக் கலைஞர் இப்பாவைகளைக் கயிற்றின் உதவியால் இயக்கும் போது அவை உயிருள்ள கதாபாத்திரங்களாகவே மாறுகின்றன. பாவைகளை இயக்கும் போது ஏற்படுகின்ற சலங்கை ஒலியும் இக்கலைக்கு வலுவூட்டுகின்றன.

கோயில்களில் காணப்படுகின்ற நிரந்தரமான கூத்து மாடங்களில் தோல்பாவைக்கூத்து நிகழ்த்தப்படுகின்றது. சில இடங்களில் தற்காலிகமாக அமைக்கப்படுகின்ற மாடங்களில் நிகழ்த்தப்படுகின்றது. கூத்து மாடங்கள் கோயிலின் வடக்கு பகுதியில் தெற்கு நோக்கி அமைந்திருக்கும். இவை கோயில் சடங்குகளுடன் நிகழ்த்தப்படுவதோடன்றி, கலைவடிவம் என்ற நிலையிலும் பிற அரங்குகளில் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. வெளிச்சமும் நிழலும் கலந்த ஒருவகைக் கூத்து வடிவத்தில் நிகழ்த்தப்படுவதால் இது ”நிழல் கூத்து” என்றும் பெயர் பெறுகின்றது. தோல் பாவைக்கூத்து இரவு நேரத்தில் தொடங்கி விடியற்காலை வரை நடைபெறும். கூத்து நடக்கும் இடத்திற்கு ”கூத்துமாடம்” என்று பெயர். கூத்து மாடத்தின் முன்னால் ஒரு திரைச்சீலையைக் கட்டி வைத்திருப்பர். அத்திரை சீலையின் மேற்பகுதி வெள்ளை நிறமும் கீழ்ப்பகுதி கருப்பு நிறத்துடனும் காணப்படுகிறது. இத்திரைக்கு 'ஆயப் புடவை' என்று பெயர். அதற்கு பின்புறமாக இருபத்தியொரு தேங்காய் மூடிகளை ஒரு மூங்கில் தண்டின் மீது வரிசையாக வைத்து அதில் தேங்காய் எண்ணையை ஊற்றி தீபம் ஏற்றி வைக்கின்றனர். இத்தீபங்களின் ஒளியில் இத்திரைச் சீலை வெள்ளித்திரையாக

மாறுகின்றது. திரையின் பின்னால் இருந்து கொண்டு பாவை கூத்துக் கலைஞர்கள் தங்கள் கலைத்திறனை வெளிப்படுத்துகின்றனர். இராமாயணக் கதையினை உள்ளடக்கிய கூத்துப் பாடலைப் பாடுவதற்கு தமிழும் மலையாளமும் கலந்த ஒரு மொழியினைப் பயன்படுத்துகின்றனர். இவை உரையாடல் வடிவிலும் பாடல் வடிவிலும் காணப்படுகின்றன.

ஒவ்வொரு கதையையும் ஆரம்பிப்பதற்கு முன்பாக அக்கதையினைக் குறித்த ஒரு சுருக்கத்தினை கூறுவார்கள். அதற்கு "ஆடல்பற்று" என்று பெயர். ஒவ்வொரு பாவைகளையும் பிரதிநிதியாகக் கொண்டு உரையாடுவதற்கு வெவ்வேறு ஆட்கள் இருப்பர். இவர்களின் குரல் வேறுபாட்டின் மூலம் கதாபாத்திரங்களைப் புரிந்து கொள்ள முடிகின்றது. இதற்காகத் திரைக்குப் பின்னால் ஐந்துபேர் கொண்ட குழுவினர் இருப்பர். மேலும் கூத்தரங்கத்திற்கான அனைத்து காரியங்களையும் கவனிப்பதற்காக ஒருவர் இருப்பார் அவர் "மாடப்புலவர்" என்று அழைக்கப்படுகின்றார். இக்கலைக்காக செண்டை, கைமணி ,குறுங்குழல், மத்தளம் போன்றவற்றை வாத்தியக்கருவிகளாகப் பயன்படுத்துகின்றனர். இக்கூத்து நிகழ்த்துவதற்கு முன்பாக கோயிலின் சாமியாடியை இசைக் கருவிகளின் முழக்கத்துடன் கூத்து மாடத்திற்கு அழைத்துக் கொண்டு வருகின்ற ஒரு சடங்கும் உண்டு. சாமியாடி அனுமதி அளித்தால் மட்டுமே கூத்து ஆரம்பிக்கப்படும். இச்சடங்கினைக் "கூத்து மாடம் ஏறுதல்" என்று அழைக்கிறார்கள். பொதுவாக இக்கூத்து நிகழ்த்தப்படும் கால அளவு இக்கூத்து பதினான்கு நாட்கள் ஆகும். இராமனின் பட்டாபிஷேகத்துடன் இக்கூத்து நிறைவடைகின்றது. இதன் மூலம் மக்கள் நோய் நொடி இன்றி வாழவும் நினைத்த காரியம் நிறைவேறவும் நாடு நலம் பெறவும் வழி வகுக்கும் என்று நம்புகிறார்கள்.

**மீனப்பூரம்**

உலகில் அனைத்து உயிரினங்களின் பெருக்கத்திற்கும் காரணமாக அமைவது காம உணர்வே. அவ்வுணர்வைத் தூண்டுவதற்கு தெய்வம் ஒன்று உண்டு என்று பழந்தமிழர்கள் நம்பினர். இச்சை, ஆசை, விருப்பம் முதலான பொருள்களை உள்ளடக்கிய காமம் என்ற சொல்லுக்கு உரியவனான காமன் என்னும் தெய்வம் சிற்றின்பத்திற்கு மட்டுமே உரியவனாகக் கருதப்பட்டான். எனவே ரதியை மனைவியாகக் கொண்ட காமனுக்கு விழாக்களும் கோயில்களும் எடுக்கப்பட்டன. சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரத்திலும் காமனுக்கு எடுக்கப்பட்ட கோயிலைப் பற்றியும் விழாக்கள் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. அதன் வழி காமன் விழா வெகு விமரிசையாகப் பழந்தமிழகத்தில் நிலவி வந்தது என்று உணர்கின்றோம். காமனுக்காக எடுக்கப்பட்ட கோயிலை

**"காம வேள் கோட்டந் தொழுதார் கணவரொடு**
**தாமின் புறுவர் "** (சிலப். கனா திறம் உரைத்த காதை, பாடலடி 60-61)

என்று இளங்கோ பதிவு செய்து காட்டுவதன் வாயிலாக மன்மதன் ஆகிய காமனுக்கு எடுக்கப்பட்ட கோயில் 'காம வேள் கோட்டம்' என்று அழைக்கப்பட்டதாக அறிகின்றோம். அத்தெய்வத்திற்கு வருடம் தோறும் பங்குனி மாதத்தில் விழா நிகழ்ந்த செய்தியும் தெரிய வருகின்றது.

**“வெங்கண்நெடுவேள் வில் விழா காணும்**
**பங்குனி முயக்கத்து பனியரசாண்டுளான்”**

(சிலப், ஊர்காண் காதை, பாடலடி 111-112)

என்ற அடிகள் குறிப்பிடும் 'நெடுவேல் வில்விழா 'என்பது காமன் விழாவே ஆகும். கரும்பை வில்லாக உடைய காமன் அவ்வில்லில் பூக்களை அம்பாகத் தொடுத்து மக்களிடையே காமத்தை தோற்றுவிப்பவன். சிவபெருமானின் சினத்தினால்

உருவமில்லாதவனாக மாறிப்போன காமனுக்கு மக்கள் பங்குனி மாதம் தோறும் விழா எடுத்துச் சிறப்பித்தார்கள் அதனை மேற்கண்ட பாடல் அடிகள் உறுதி செய்கின்றது .

அவ்விழாவினை நினைவுறுத்தும் வகையில் இன்றும் கேரளத்தின் வடபகுதிகளில் 'மீனப்பூரம்' என்றறியப்படும் பங்குனிமாத விழாவொன்று நிகழ்த்தப்பெறுதலுண்டு. அது கேரளத்தின் நாட்டார் நிகழ்த்து கலைகளில் தனியிடம் பிடித்திருக்கின்றது. இளங்கோ, நெடுவேள் வில் விழா என்று அவ்விழாவினை குறிப்பிட்ட நிலையில் கேரளாவில் பங்குனி மாதமாகிய மீன மாதத்தில் உள்ள பூர நட்சத்திரத்தன்று இவ்விழாவினைத் தொடங்குகின்றார்கள். அதனால் அது மீனப்பூரம் என்று அறியப்படுகின்றது. அவ் விழா காலங்களில் பூரக்களி நிகழ்த்தப்படுகின்றது .

கேரளாவிலுள்ள கண்ணூர், காசர்கோடு மாவட்டங்களில் காவுகளிலும், கோயில்களிலும் வீடுகளிலும் மீனப்பூரம் ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுகின்றது. ஒன்பதாவது நாளான பூரம் நாளன்று பூரக்களி நிகழ்த்தப்படுகின்றது. இது ஒரு நிகழ்த்து கலைச் சடங்காகும். மணியாணி, தீயன், சாலியர், கம்மாளர் போன்ற இனத்தார் இவ்விளையாட்டில் பங்கேற்கின்றனர். பூரக்களி நிகழ்த்துவது பற்றிய பல தொன்மங்கள் உள்ளன. குறிப்பாக இக்களி 'காமதகனம்' என்னும் புராணக் கதையுடன் தொடர்புடையதாக அமைந்துள்ளது.

கேரள நாட்டார் நிகழ்த்து கலைகளில் ஒன்றான பூரக்களியின் தொடக்கமாக வாழ்த்துக்களும், வணக்கமும் பாடப்படுகின்றன. பிறகு பதினெட்டு 'பூரமாலகள்' பாடி விளையாடுகின்றனர். இவை ஸ்ரீ கிருட்டிணனைக் குறித்த பாடல்களாகவே உள்ளன. அப்பாடல்களின் பொருண்மை பின்வருமாறு: காமனை, சிவபெருமான் எரித்த போது காமனின் மனைவி ரதியின் வேண்டுகோளுக்கு இணங்கி, சிவபெருமான் காமனை

உயிர்ப்பிக்க ஒரு உபாயம் கூறினார். பூக்களால் காமனின் உருவம் செய்து ஸ்ரீ கிருட்டிணனை வணங்கி காமபூஜை நடத்த வேண்டும் என்று கூறினார். அதன்படி பதினெட்டு தேவதைகள் ஸ்ரீகிருஷ்ணனைப் புகழ்ந்து பாடியதாக நம்பப்படுகின்றது. இக்கதையை மெய்ப்பிக்கும் சான்று சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது.

**"உருவிலாளன் ஒறுக்கும் துன்பமும்"**

(சிலப். ஊர்காண்காதை, பா. 36)

**"மீனேற்றுக்கொடியோன்மெய்பெறவளர்த்த"**

(சிலப். இந்திரவிழா. பா.210)

என்னும் தொடர் சிவபெருமானின் சினத்தால் காமனுக்கு உருவம் இல்லாநிலை ஏற்பட்டது என்பதை உள்ளடக்கிக் காட்டுகின்றது. அதற்கேற்றவாறான கதைகளை கேரள நாட்டார் மரபில் தற்பொழுதும் காணமுடிகின்றது.

'பூரமாலா' பூரக்களியின் முக்கியமான விளையாட்டு ஆகும். பதினெட்டு (நிறம்) முறைகளில் பதினெட்டு கன்னிப் பெண்கள் பாடி ஆடியதாக மக்கள் நம்புகின்றனர். சப்தகன்னியர் (ஏழு கன்னியர்) தேவலோகத்திலும், ஆறு கன்னியர் பாதாள உலகிலும், ஐந்து கன்னியர் பூமியிலும் ஆடிப்பாடி காமனை உயிர்ப்பித்ததாக நம்புகின்றனர். அதாவது ரம்பை, ஊர்வசி,மேனகை, சித்ரலேகா, ரத்னாவலி, அருந்ததி, திலோத்தமை என்றறியப்படும் தேவலோகப் பெண்களும், ரதிதேவி, வாக்தேவி, கங்காதேவி, பூதேவி, கிரிகன்னி, ஸ்ரீதேவி என்று வழங்கப்பட்ட பாதாள உலகப் பெண்களும், அகலிகை, திரௌபதி, சீதை,தாரை, மண்டோதரி என்பவர்களான பூலோகப் பெண்களும் பூரக்களியில் பாடி ஆடியதாக கேரள நாட்டுப்புற மரபில் கதைகள் நிலவுகின்றன. எனவே சிலப்பதிகாரம் எடுத்துக்காட்டிய காமதகனம் குறித்தான தொன்மத்திற்கு ஏற்றவாறான நிகழ்த்துகலைகள் கேரளத்தில் இன்றும் நின்று

நிலவுகின்றன என்பது தெளிவு. (டா.எம்.வி.விஷ்ணுநம்பூதிரி, நம்முடெ பண்டத்தே பாட்டுகள்,ப.154)

அதன் நினைவாக பதினெட்டு பெண்களுக்கு பதிலாக பதினெட்டு ஆண்கள் இக்கலையை நிகழ்த்துகின்றனர். பூரமாலைக்குப் பின் 'வன்களி' என்னும் நிகழ்த்து கலை இடம்பெறுகின்றது. அக்கலைக்கு ஏற்றவாறு இராமாயணம், பாரதம் போன்ற கதைகளைப் பாடி ஆடுவர். சில பகுதிகளில் (கழகங்களில்) அங்கம், படை, காமன்பாட்டு, பாம்பாட்டம் போன்ற விளையாட்டுகளும் வழக்கத்திலுள்ளன. பூரக்களி அன்று ஆண்டு, பள்ளு, பொலிச்சு பாட்டு போன்ற பாடல்களும் பாடப் பெறுகின்றன. இவையெல்லாம் கேரள நாட்டார் மரபுக்கேயுரிய தனித்தன்மை மிக்க கலைகளாகும்.

பூரக்களியில் மிக முக்கியமான ஒரு விளையாட்டு 'பூரமாலா' என்பதாகும். இது பாடல்களைப் பாடிக் கொண்டே நடனமாடுவதாகும். இதில் பதினெட்டு ராகங்கள் உள்ளது. இவை தேவலோகம், பூலோகம், பாதாளம் என்னும் மூவுலகங்களில் பாடி ஆடுவதற்கு உபயோகித்த ராகங்கள் என்று கள ஆய்வின்போது அறியமுடிந்தது. இதற்கு நிறங்கள் என்னும் வேறு பெயர் உண்டு.

பூரக்களிக்கு ஒரு களி ஆசான் உண்டு அவரை பணிக்கர் என்று அழைப்பர் அவர் கையில் ஒரு வளையல் அணிந்திருப்பார். அது 'குரு' என்பதற்கான அடையாளம். பூரக்களி ஆட்டக்காரர்கள் சிவப்பு நிறத்தாலான வேட்டியை வரிந்து கட்டுவர். அதன்மேல் களரிப் (போர்க்கலை) பயிற்சியாளர்களைப் போல இடுப்பில் கச்சை கட்டுவர். பணிக்கரும் ஆட்டக்காரர்களும் களிஅரங்கத்திற்கு வருவதனை 'பந்தல் பிரவேசம்' என்று அழைப்பர். அங்கு ஒரு குத்துவிளக்கு ஏற்றி வைத்திருப்பர் .அவ்விளக்கைச் சுற்றி களியாட்டக்காரர்கள்

வட்டமாக நிற்பர். அனைவரும் 'ஓம்' என்று ஓங்காரமிட்டபின் ஹரி, நாராயணனை வணங்குவர். பின் ஆட்டம் தொடங்கும்.

ஆட்டக்காரர்கள் அதி வேகத்தில் அடிபெயர்த்தும் குதித்தும் ஆடுகின்றனர். தங்களது அனைத்து உடல் வலிமையினையும் அங்கு வெளிக்காட்டுகின்றனர். முன் காலங்களில் நிகழ்த்தியிருந்த பூரக் களியில் பல மாற்றங்கள் பெற்று இன்றைய நிலையை அடைந்துள்ளன. அதற்கு களரிப் பயிற்சி முறைகளைப் பயின்ற `தீயர்` இன மக்களுக்குப் பெரும் பங்கு உண்டு.

**சாக்கையர் கூத்து**

பழந்தமிழர் வாழ்வில் கூத்துக்கலைப் பெரும் பங்கு வகித்திருந்தது. இக்கலை மக்களின் பொழுது போக்கிற்காக ஆடப்பட்டது. வழிபாடு, காதல் என்ற வாழ்க்கையின் எல்லா நிலைகளையும் வெளிப்படுத்தும் கலையாக காணப்பட்ட இக்கலையில் பொருளீட்டும் நோக்கமும் பின்னாளில் இணைந்தது. இயற்கையில் விளங்கிய மயிலின் ஆடலும், மானின் துள்ளலும் மனிதனின் ஆடற்கலையினைப் படைக்கத் தூண்டியிருக்க வேண்டும். மயிலின் ஆட்டமும், மானின் துள்ளலும் மரநிழல்களிலும் குன்றின் உச்சிகளிலும் நிகழ்ந்தன. அவற்றைக் கண்டு இரசித்த மனிதன் தானும் ஆடுதலாகிய தொழிலை மேற்கொண்டு மனமகிழ்வெய்தினான். அங்ஙனமே கூத்துக்கலை தோற்றம் பெற்றிருக்க வேண்டும்.

தமிழர்கள் நிகழ்த்திய கூத்துக்கள் சமயத்தொடர்பு உடையன. முதல் கூத்தினை நிகழ்த்தியவர் முழுமுதற் கடவுளான சிவபெருமான் என்று அனைவரும் கூறிவருகின்றனர். சிவன் கூத்தன் என்றே பெயர் பெற்றார். சிவனை மக்கள் கூத்து நடத்தும் பாவனையில் வைத்தே ஆராதித்தனர். கொடுகொட்டியும், பாண்டுரங்கமும், கபாலமும் சிவன் நிகழ்த்திய

ஆடல்களாகக் கருதப்பெருகின்றன. சங்க காலத்தில் கூத்துக்களைப் பொதுவாக இருவகைப் படுத்தியுள்ளனர். அவை வேத்தியல், பொதுவியல் என்பன. அரசர் முன் நிகழ்த்தப்பெற்ற கூத்துகள் வேத்தியல் என்றும், அல்லாதவை பொதுவியல் என்றும் வழங்கப்பெற்றன. சிலப்பதிகாரத்தில், அரங்கேற்றுகாதையில் கூத்துகள் இருவகை, பலவகை, பதினோராடல்களென்று பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. சமய நிலையில் இருந்த கூத்துகள் சமுதாய நிலைக்கு மாறின. சிலப்பதிகாரம் இறைவர் ஆடிய பதினோராடல்களை விளக்கித் தந்துள்ளது. இதனை அடியார்க்கு நல்லார் பொதுவாக தெய்வ விருத்திகள் என்று குறிப்பிட்டுள்ளார். அவை, கொடு கொட்டி, பாண்டரங்கம், அல்லியம், மல்லாடல், துடி, குடை, குடம், பேடி, மரக்கால், பாவை, கடையம் என்பன. சிவனது ஆடல்களாகிய கொடுகொட்டி, பாண்டரங்கம், கபாலம் ஆகியவற்றை அறிஞர்கள் தனிப் பெரும் கூத்துகள் என்று குறிப்பிடுகின்றனர்.

மேற்சுட்டியவற்றில் கொடுகொட்டி என்னும் கூத்து குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது. இக்கூத்து ‘சாக்கையர் கூத்து’ தோன்றுவதற்கு மூலகாரணமாகத் திகழ்ந்துள்ளது.

**சாக்கையர் கூத்தின் தோற்றுவாய்**

சாக்கையர் கூத்தின் தோற்றுவாயாக ‘கொடு கொட்டி’ என்னும் கூத்து அமைந்துள்ளது. அக்கூத்து குறித்து சிலப்பதிகாரம் சில விடயங்களை எடுத்துரைப்பதுண்டு.

தெய்வ விருத்திகளில் முதலாவது இடம் பெறுவது கொடுகொட்டிக் கூத்து. இக் கூத்துப் பற்றி சிலப்பதிகாரத்தில்

> **”திரிபுர மெறிய தேவர் வேண்ட**
> **எரி முகப் பேரம் பேவல் கேட்ப**

**உமையவள் ஒரு திறளாக வோங்கிய**
**இமையவள் ஆடிய கொடு கொட்டி ஆடலும்"**

(சிலப். கடலாடுகாதை,பா.40-43)

எனத் தேவர்கள் வேண்ட, சிவபெருமான் திரிபுரத்தை எரியச் செய்தார். உமையவளை ஒரு புறமாகக் கொண்ட இறைவன் திரிபுரம் எரிந்ததைக் கண்டு வெற்றிக் களிப்பால் கைகொட்டி ஆடியதால் இக்கூத்து கொடுமையாகிய உணர்வை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. கொடுமை உடையதால் இக்கூத்து கொட்டிச்சேதம் என்றறியப்பட்டது. கொட்டி ஆடிய முறையால் இக் கூத்து கொடுங்கொட்டி என்றும் அறியப்பட்டது. அதனை இளங்கோவடிகள் இரு இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

**"இமயவன் ஆடிய கொடுகொட்டி ஆடல்"** (சிலப்.கடலாடுகாதை, ப,43)
**"இமயவன் ஆடிய கொட்டிச்சேதம்"** (சிலப்.நடுகல்காதை, பா.75)

என்ற குறிப்புகள் கவனத்திற்குரியன.

கொடு கொட்டி இறைவன் தேவர்களைக் காக்க நிகழ்த்திய கூத்தாகும். அதனுடைய ஆடற் பண்பில் சிறந்த கலையம்சங்கள் நிறைந்து காணப்பட்டது. எனவே பிற்காலத்தில், தொழில் முறைக்கான சிறந்த கூத்தாக விளங்கிற்று. இவ்வாறான வளர்ச்சி நிலையில் ஒரு கூத்தர் பரம்பரையே உருவாகியது. சக்தி உபாசகர்களான சாக்தர்களால் இது வெகுவாகப் பிரச்சாரம் செய்யப்பட்டுக் கூத்து வடிவம் பெற்றுள்ளது. சாக்கை கூத்தினை ஆடியவர்கள் 'சாக்கையர்கள்' எனப்பட்டனர். கொடுகொட்டிக் கூத்தின் தொழில் முறையாக அமைந்த சமுதாய வடிவமே சாக்கை கூத்தென்பது தெரிகிறது' சாக்கை கூத்து பற்றி சிலப்பதிகாரம் விரிவான விளக்கம் தந்துள்ளது.

சேரன் செங்குட்டுவன் வடநாட்டு அரசரைப் போரில் வென்று இமயமலையில் பத்தினிக்கடவுளுக்குக் கல்லில் வடிவெழுதிய பின்னர் வெற்றி வாகையுடன் வஞ்சியை அடைகின்றான். அங்கு மாலையில் தனது தேவியாகிய வேண்மாளுடன் அரண்மனை

நிலாமுற்றத்தில் கூத்தச்சாக்கையன் ஆடிய கொட்டிச்சேதம் என்னும் கூத்தினைக் கண்டு மகிழ்ந்தான். இக் கூத்து இறைவன் உமையை ஒரு பக்கத்து வைத்து நிகழ்த்திய கூத்து என்பதனை,

**"திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்**
**பரிதரு செய்கையிற் படுபறை யாப்பவும்**
**செங்கண் ஆயிரம் திருக்குறிப் பருளவும்**
**செஞ்சடை சென்று திசைமுகம் அலம்பவும்**
**பாடகம் பதையாது சூடகந் துளங்காது**
**மேகலை ஒலியாது மென்முலை அசையாது**
**வார்குழை ஆடாது மணிக்குழல் அவிழாது**
**உமையவள் ஒரு திறனாக ஓங்கிய**
**இமையவன் ஆடிய கொட்டிச்சேதம்**
**பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்**
**கூத்தைச் சாக்கைய நாடலின்"** (சிலப்.நடுகல் காதை, பா.,67 -75)

என்னும் பாடலடிகள் சாக்கையர் கூத்து பற்றி விரிவாக விளக்கிக் காட்டுகின்றன.

சாக்கையன் ஆண், பெண் எனும் இரு தன்மைகளைத் தனது ஒரே உடலில் புனைந்து கொண்டான். ஆடும் போது பெண் கூறான பகுதியினைத் துளங்காமல் பாதுகாத்தான். இறைவனது பாகத்தில் சிலம்பு ஒலித்தது, பறை முழங்கியது, செஞ்சடை பரந்து திக்குகளில் அலைந்தது. ஆனால் பாடகம் அசையாது, தோள் வளை நடுங்காது, மென் முலை அசையாது, கூந்தல் அவிழாது உமையவளை இடப்பக்கத்திலே கொண்டவனான இறைவன் நடித்த கொடு கொட்டியை பறையூர் கூத்தச்சாக்கையன் ஆடினான் என கொடுகொட்டி ஆட்டத்தின் சிறப்பினைச் சிலப்பதிகாரம் நடுகற்காதையிற் கூறிச் செல்கின்றது.

**சாக்கையர்**

சாக்கையர் என்பவர், முற்காலத்தில் அரசர்க்கு 'உள்படு கருமத்தலைவராக இருந்தவருள் ஒருவர்' என்பது திவாகரத்தால் பெறப்படுகின்றது. அரசரது ஆணைப்படி

அரசாங்கத் தொழிலுக்குத் தலைமை வகிப்பவர் என்ற பொருள் பெறுகின்றது. கூத்தச் சாக்கையர் என்பார் அரசரை நடனத்தால் மகிழ்விப்பவர் ஆவார். சங்க காலத்தில் தமிழ் கூறும் நல்லுலகமாக இருந்த மலைநாட்டில் பழைய தமிழ் வழக்கங்கள் பலவும் காணப்படுதல் போலவே, இச்சாக்கையர் குறித்த செய்தியும் காணப்படுகிறது. இச்சாக்கையர் இப்பெயருடனும், இத்தொழிலுடனும் தொடர்ந்து வருவதனையும், அவர்களது வழக்கங்களையும் குறித்து டி.கெ. கோபால பணிக்கர் அவர்கள், எழுதிய 'மலையாளமும் அதில் வாழ்நரும்' [Malabar and its Folk] என்னும் ஆங்கில நூலில் குறிப்பிட்டுள்ளார். **"சாக்கையர் கூத்தென்பது அநாதி காலமாக நடைபெறும் ஒரு புராதன விருத்தியாகும். சாக்கையர் ஒரு விநோதமானகுலத்தைச் சார்ந்தவர். அவர், பிராமணப் பெற்றோர்க்கு பேஷ்டகால சம்சர்க்கத்தில் பிறந்த சந்ததியார் என்று சொல்லப் படுகின்றனர். அதனால் அவர் தாழ்பிறப்பினராவார்.**

**திருவிழாக் காலங்களிலும், பிற காலங்களிலும் கோவில்களுக்கு சம்பந்தமானதும், கூத்து நடத்துவதற்காகவே ஏற்படுத்தப்பெற்ற் உட்புறக் கட்டிடங்களில் சாக்கையர் கூத்து நடத்தப் பெறுகின்றது. கூத்தன், கால்களிலும், கைகளிலும் சதங்கை கட்டிக்கொண்டும், இடையைச் சுற்றி நகைப்புண்டாக்கத்தக்கதும் மிகுந்த மடிப்புகளுடன் கூடியதுமான விநோதவுடை ஒன்றைத் தரித்துக் கொண்டும் தேக முழுவதும் விபூதி பூசியவனாய் வெறுந் தலையுடன் தன் கூத்தைத் தொடங்குவான்."** (மு.வை.இராகவையங்கார், ஆராய்ச்சித் தொகுதி,ப.453) என்று சாக்கையர் குறித்த பல கருத்துகள் அறிஞர்களிடையே நிலவிவருகின்றன. இத்தகு பழமை வாய்ந்த இயக்கத்தினை இன்றைய கேரள நாட்டார் வெகு விமரிசையாக நிகழ்த்தி வருகின்றனர்.

சாக்கியார் - நம்பியார் குடும்பங்களின் குல உரிமையாக கூத்து - கூடியாட்டக் கலைகள் விளங்குகின்றன. 'சிலாக்கியர்' என்ற சொல் சாக்கியார் என்று ஆயிற்று என்று

சிலர் கூறுவர். முன் காலங்களில் கூத்தம்பலங்களில் வைத்தே இக்கூத்து நடைபெற்றது. முழவு, சங்கு, இடக்கை, குறுங்குழல் போன்ற இசைக் கருவிகளைப் பயன்படுத்தினர். கூத்து தனி ஒருவரால் நடிக்கப் பெறுகின்றது. சாக்கையர் உலக இயல்புகளையும், மக்கள் இயல்புகளையும் ஆராய்ச்சி செய்வதில் வல்லவர். கூடியாட்டம் என்பது சாக்கியாரால் நிகழ்த்தப்பெறும் ஒரு கோயில் கலை. இருவருக்கு மேற்பட்டு ஆடக்கூடியது. கூடியாட்டத்தில், நடிப்பிற்கு சாக்கியார், இசைக்கு நம்பியார்; பாடுவதற்கு நங்கியார் என்ற முறைகள் காணப்படுகின்றன. நங்கியார் என்போர் நம்பியார் குலத்தைச் சேர்ந்த பெண்களாவர். இவர்கள் கூடியாட்டத்தில் பெண் வேடம் அணிகிறார்கள். நங்கியார் கூத்தென்பது பெண்கள் மட்டும் நடத்துகின்ற கூத்து. கூடியாட்டத்திற்கு இணையாக இக்கூத்து கருதப்பெருகின்றது. இன்றுவரை கேரளத்தின் பல பகுதிகளிலும் சாக்கியர் கூத்து, நங்கியார் கூத்து ஆகியன நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

**“சாக்கையார் கூத்து, தமிழ்நாட்டில் பிற்காலச் சோழர்கள் காலத்தில் வழங்கத் தொடங்கியது. முதன் முதலாக, பரகேசரி இராஜேந்திர சோழன் சாசனத்தில் தான் இது வருகின்றது. சாக்கை கூத்து என்ற தொடரே பின் வரும் சாசனத்தில் வருகின்றது. ஆலையூர்ச் சாக்கையன் என்பான் கீழைப் பழுவூர்க் கோயிலில் சாக்கை கூத்து மூன்று நடத்தப் பொன்னும் நிலமும் பெற்றது.”** (பேரா சண்முகசுந்தரம், (தொ.ஆ) காவிய காலம்,ப.115) என்னும் செய்தியிலிருந்து பிற்காலச் சோழர் காலத்திலும் இச்சாக்கையர் கூத்து பிரபலமாக வழங்கி வந்தமையும், தமிழ் மக்கள் அதனிடம் காட்டிய அபிமானமும் அறிய முடிகிறது.

**பிற கூத்துகள்**

சாக்கையர் கூத்து மட்டுமின்றி கேரளத்தில் வேறுபல கூத்துகளும் சிறப்பாக நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அவற்றில் மத்தவிலாசக் கூத்திற்கு இன்றியமையாத இடமுண்டு. கேரளத்தில் சாக்கையர் பரம்பரையாக நடத்துகின்ற கூத்துக்களில்

அங்குலியாங்கம் கூத்து, நங்கையார் கூத்து, மந்திராங்கம் கூத்து, மத்த விலாசம் கூத்து போன்றவை கோயில்களில் வழிபாடாக நடத்தப்பட்டு வருகின்றன. மகேந்திரபல்லவனின் மத்தவிலாசப்பிரகசம் எனும் நாடகமே சாக்கையரின் மத்தவிலாசம் கூத்தின் அடிப்படை என்று கருதப்பெருகின்றது. கபாலம், தலையோட்டினைக் குறிப்பதாகும். கபாலி ஒருவனைத் தலைமைப் பாத்திரமாகக் கொண்டு அமைந்த நாடகமே, மத்தவிலாசம். இந்நாடகத்தில், அன்று நிலவியிருந்த பௌத்தம், சைவம் போன்ற சமயங்களை எதிர்த்து அங்கதச் சுவையுடன் எடுத்துரைக்கப் பெற்றுள்ளது. சிவன் ஆடிய கபாலக் கூத்து மத்தவிலாசத்திற்கு முன்னோடியாக அமைந்துள்ளது எனக் கருதுகின்றனர். சிலப்பதிகாரம் பலவகைக் கூத்துக்களை எடுத்துரைத்த நிலையில் கேரள நாட்டார் மரபிலும் பலவகைக் கூத்துக்கள் காணப்படுவது கண்கூடு.

கேரளாவில் கண்ணூரிலுள்ள கரிவள்ளூர் சிவன் கோவிலில் ஐப்பசி மாதம் ஒன்றாம் தேதி முதல் ஒரு மாத கால அளவில் கூத்து நடத்தி வருகிறார்கள். இரவு பூசை முடிந்த பின் கூத்து நடத்துவார்கள். இக் கோயிலில் கூத்து நடத்துவதற்கான பிரத்தேகமான கூத்தரங்கம் இல்லை. கோயிலின் தெற்கு வாயிலில் உள்ள மாடத்தரையில் வடக்கு நோக்கி கூத்து நிகழ்த்தப்பெறுகின்றது. மாடத்தரையில் குத்து விளக்கு ஏற்றப்பெற்றிருக்கும். அதன் முன் கபாலிக்கூத்து நிகழ்த்தப்பெறுவதுண்டு. இன்றைய நிலையில் சாக்கியார் கூத்து ஒரு மக்கள் கலையாக வளர்ந்துள்ளது.

**வெறியாட்டு**

மலையும் மலை சார்ந்த பகுதியும் 'குறிஞ்சி' எனப்படும். அங்கு வாழும் மக்கள் சேயோனைத் தெய்வமாகக் கொண்டிருந்தனர். இதனை,

**"சேயோன் மேய மைவரை உலகமும்"** (தொல்.பொருள்,அகத்.6)

என்று தொல்காப்பியர் குறிஞ்சி நிலத்தெய்வமாக முருகனைக் குறித்துள்ளார். முருகனுக்கு பூசை செய்தோர் ‘வேலன்’ என்று அறியப்பட்டனர். அதனால் வேலன் வெறியாட்டத்தை குறிஞ்சியின் புறனான வெட்சித் திணையின் துறையாகக் கூறுவர்.

பழந்தமிழ் இலக்கியங்களில் மிக விரிவாகப் பேசப் பெறுகின்ற கூத்து வெறியாட்டு. பிற கூத்துக்களை விட மக்கள் வாழ்வோடு மிக நெருங்கி அமைந்தது இக்கூத்து. வெறியாடுவோர் பொதுவாக ’வேலன்’ என்று அறியப்படுவர். அவ் வேலன் ஆடுவதை வேலனாட்டம் என்று அழைப்பர். பிங்கலநிகண்டு வெறியாட்டு என்பதற்கு ’தேவர்க்காடும் கூத்து’ என்று விளக்கம் தந்துள்ளது. வெறியாடுதல் பழந்தமிழ் இலக்கியத்தில் வெறியயர்தல், வெறியாடுதல், வெறிசெறுதல், வெறியுறுதல் என்று குறிக்கப்பெறுகிறது. சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார், இதனைத் ’தெய்வம் ஏறப்பெற்று நிகழும் கூத்து’ என்று விளக்கியுள்ளார். வெறியாட்டு என்பது தனிநபர் கூத்தாகும். பொழுதுபோக்குக் கூத்தன்று. வழிபாடு சார்ந்த கூத்து. வெறியாட்டு வேலனாலும், மகளிராலும் நடத்த பெற்றது.

**வெறியாட்டின் வகை**

வெறியாட்டு பழந்தமிழரின் அகவாழ்க்கையோடும், புறவாழ்க்கையோடும் தொடர்புடையது. இது அகவெறியாட்டு புறவெறியாட்டு என இருவகைப்படும். வேலனாடலுக்கு ’காந்தட் கூத்தெ’ன்று வேறு பெயரும் உண்டு. இதனை,

> **”வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
> **வெறியாட்ட யர்ந்த காந்தளும்”** (தொல்.புறத்,60)

வெறியாட்டினை நிகழ்த்துகின்ற கடமைகளை அறியும் சிறப்பினையும், உயிர்க்கொலை செய்யுமாறு கூறுகின்ற கொடிய வாயினையும் உடைய வேலன், காந்தள்

மாலையணிந்து தெய்வமேறி ஆடுகின்ற காந்தளும் என்பதிலிருந்து வெறியாட்டு புறத்திணையிலும் நிகழ்ந்துள்ளது என்பதனை அறியலாம். எனினும் காதல் துறைக்கே வெறியாட்டு மிகவும் நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்படுகின்றது.

**"களவு அலராயினும் காமம் பொய்ப்பினும்**
**அளவு மிகத்தோன்றினும் தலைப்பெய்து காணினும்**
**கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்**
**ஒட்டிய திறத்தாற் செய்திக்கண்ணும்"** (தொல்.களவு ,21-24)

என்னும் தொல்காப்பிய நூற்பா, களவுக்காலத்தில் தலைவியின் உடல் மெலிவு கண்ட தாய் கட்டுவிச்சியை அழைத்து கழங்காடி வெறியாடச் செய்தாள் என்பதை உணர்த்துகின்றது. அதன் தொடர்ச்சியை சிலப்பதிகாரக் காலத்திலும் காணமுடிகின்றது.

**சிலப்பதிகாரத்தில் வெறியாடல்**

குன்றக் குரவையில் காட்டப்பட்டுள்ள அகப்பொருள் மரபு சங்க இலக்கிய மரபின் தொடர்ச்சியைக் கொண்டுள்ளது.

**"இறைவளை நல்லாய் இது நகையாகின்றே**
**கறிவளர் தண்சிலம்பன் செய்த நோய் தீர்க்க**
**அறியாள் மற்று அன்னை அலர்கடம்பன் என்றே**
**வெறியாடல் தான் விரும்பி வேலன்வருக என்றாள்"**

(சிலப்.குன்றக்குரவை, உ.பா.ம-10)

**"செறிவளைக்கை நல்லாய் இது நகைஆகின்றே**
**வெறிதழ் வெற்பன் நோய்தீர்க்க வரும் வேலன்**
**வேலன் மடவன் அவனினும் தான் மடவன்**
**ஆல் அமர் செல்வன் புதல்வன் வருமாயின்"**

(சிலப்.குன்றக்குரவை, உ.பா.ம-11)

என்னும் அடிகளால் தன் மகளுக்கு காதல் நோய் ஏற்பட்டிருக்கிறது என்று அறியாத தாய் 'முருகன் அணங்கினான்' என்று கருதி வெறியாட்டு நடத்த ஏற்பாடு செய்தாள். இதனை அறிந்த தலைவி, தனக்கு ஏற்பட்டது உடல் நோயன்று; அது ஓர் உணர்வார்ந்த காதல் நோயாகும் என்பதை உணர்ந்து தன் தாயின் செயல்களைக் கண்டு

இவை யாவும் நகைப்புக்கு உரியவையாகும் என்று தோழியிடம் கூறுவதாக பாடல் அமைந்துள்ளதை அறியலாம்.

காதலன் தந்த நோயினைத் தீர்க்க வேலன் வருவான். அவ்வாறு வந்தால் அவன் அறியாமை உடையவன், அவன் அழைக்க முருகன் வந்தால் அவன் வேலனை விடவும் மடையன் என்று தலைவி தோழியிடம் கூறுகின்றாள். இந்த வெறியாடல் நிகழ்வு களவு-காமம் பற்றி அமைந்துள்ளது. இத்தகைய பொருள் பற்றிய வெளிப்படையான பேச்சு திணைக் குடிகளிடம் பெண் சார்ந்த தன்னாட்சித் தன்மை மிகுந்திருப்பதைக் காட்டுகிறது. இங்ஙனம் இளங்கோவடிகள் பதிவுசெய்து காட்டிய வேலன் வெறியாடல் பற்றிய குறிப்பு வாயிலாக பண்டைத் தமிழர்கள் வெறியாட்டு நிகழ்த்தினார்கள் என்பது தெளிவு. அவற்றை சங்க இலக்கியங்களும் உறுதிப்படுத்துகின்றன.

**”சங்க இலக்கியத்தில் வெறியாட்டம் இரு நிலைகளில் காணப்படுகிறது. முதுவாய்ப் பெண்டிர்களாக விளங்கிய கட்டுவிச்சிகளே முற்காலப் பூசாரிகளாவர். இத்தகைய பெண் பூசாரி பற்றி நமக்குத் தெளிவான தரவுகள் உள்ளன. ஆதித் தாய்வழிச் சமூகத்தின் நேர்த்தொடர்ச்சியாக வேட்டுவவரியில் ’சாலினி’ இருப்பதைக் காண்கிறோம். இதன் பின்னரே வெறியாடல் நிகழ்வில் வேலனாகிய பூசாரி முதலிடம் பெற ஆரம்பித்தான். தொன்மையான பெண் பூசாரிகள் காலப்போக்கில் முக்கியத்துவம் இழந்து ஆண் பூசாரிகள் அவ்விடத்தை நிரப்பிய பாலினப் படிமலர்ச்சியினையும் குன்றக்குரவையிலிருந்து அறிய முடிகிறது.”** (பக்தவத்சல பாரதி, இலக்கிய மானிடவியல்,ப.228)

இக்கருத்தினை அரண் செய்வதாகப் புறநானூற்றுப் பாடல் ஒன்று காணப்படுகின்றது.

**”முருகு மெய்ப்பட்ட புலத்திபோலத்**

**தாவுபு தெறிக்கும் ஆன்போல**
**புடையிலங்கு ஒளவாட் புனைகழலோயே"** (புறம். 259:5-6)

என்னும் பாடல் வழி புலைமகள் தெய்வமேறி ஆடுகையில் ஆநிரைகளைப் போலத் துள்ளிக் குதித்தாள் என்று குறிப்பிட்டுள்ளது. இதன் வழி முருகன் பெண் மீது இறங்கி ஆடியதனை உணரமுடிகின்றது.

வெறிகொள்பவர் தாமாக ஆடுவதில்லை. அவர் மீது ஏறிய கடவுளின் தூண்டுதலால் ஆடினர் என்பதனை,

**"வெறிஅயர் வியன்களம் பொற்பவல்லோன்**
**பொறி அமை பாவையின் தூங்கல்"** (அகம். 98:17-20)

என்னும் பாடலடிகள் எடுத்துக்காட்டுகின்றன. பாவை ஒன்றில் பொறி இணைத்துவிட்டால் அது எவ்வாறு தானே இயங்கி ஆடுமோ அவ்வாறு வெறியாடுபவர் ஆடினார் என்று பாடல்வழி அறிகின்றோம்.

**அணங்குறு மகளிர்**

அணங்கு என்பது அச்சத்தைத் தரக்கூடிய வனதேவதையைக் குறிக்கும். முருகனால் பற்றப்பட்டு வெறியாட்டு நடத்துகின்ற மகளிரை 'முருகயர்தல்' என்று அழைப்பது போல வனதேவதையால் பற்றப்பட்டு வெறியாடுதலை 'அணங்குறு மகளிர்' என்றும் 'வெறியாட்டு மகளிர்' என்றும் அழைத்தனர். சிலப்பதிகாரக் காலத்தில் வெறியாடி 'வருவதை உரைக்கும் மகளிர்' 'சாலினி' என்று அறியப்பட்டனர்.

**வேட்டுவ வரியில் சாலினி**

சிலப்பதிகாரம் வேட்டுவவரியில் சாலினி தெய்வமேறப்பட்டு வாக்குரைத்தல் இடம்பெற்றுள்ளது. சாலினி என்பவள் பெண் பூசாரியாவாள், அவள் தெய்வத்திற்கு வழிபாடு செய்யும் உரிமை உடையவள். அவள் தெய்வமேறி வாக்குரைக்கின்றாள். இது

புறவாழ்வோடு ஒட்டிய வெறியாடலாக அமைந்துள்ளது. எயினர் குல வாழ்வியல் கூறுகளில் ஒன்றாக இது விளங்குகிறது.

**"வழங்கு வில் தடக்கை மறக்குடித் தாயத்துப்**
**பழங்கட னுற்ற முழங்குவாய்ச் சாலினி**
**தெய்வ முற்று மெய்ம்மயிர் நிறுத்துக்**
**கையெடுத் தோச்சிக் கானவர் வியப்ப**
**இடுமுள் வேலி எயினர்க் கூட்டுண்ணும்**
**நடுவூர் மன்றத் தடிபெயர்த் தாடிக்**
**கல்லென் பேரூர்க் கணநிரை சிறந்தன**
**வல்வில் எயினர் மன்று பாழ்ப்பட்டன**
**மறக்குடி தாயத்து வழிவளஞ் சுரவாது**
**அறக்குடி போலவிந் தடங்களிர் எயினரும்**
**கலையமர் செல்வி கடனுணி னல்லதி**
**சினயெமர் வென்றி கொடுப்போ ளல்லள்**
**மட்டுண் வாழ்க்கை வேண்டுதி ராயின்**
**கட்டுண் மாக்கள் கடந்தரு மென"** (சிலப்.வேட்டுவ வரி, பா 6-19)

சாலினி, எயினர்கள் ஒன்றாகக் கூடி உண்ணும் நடு ஊர் மன்றத்தில், தெய்வமேறிய நிலையில் மருள் வந்து ஆடினாள். அவளுடைய உடல் மயிர்கள் குத்திட்டு நின்றன. கைகளை ஓங்கி வீசினாள். கால்களைப் பெயர்த்து ஆடினாள். எயினர்களே! கொற்றவைக்குக் கொடுக்க வேண்டிய கடனைக் கொடுத்துவிடுங்கள். இல்லையென்றால் நீங்கள் உங்களுடைய வீரச் செயல்களில் வெற்றிபெற மாட்டீர்கள்! என்று கொற்றவைக்கு பழைய நேர்த்திக் கடன் கொடுக்காததால் தன் இனத்தாருக்கு நேர்ந்த துன்பத்தினை எடுத்துக் கூறுகின்றாள்.

**"சங்க இலக்கியங்களில் வெறி, குரவை, துணங்கை வெறியாட்டு உள்ளிட்ட பரவச நிலையடையும் பல புராதனக் கூறுகள் இடம் பெற்றுள்ளன. இத்தகைய புராதனக் கூறுகள், சாலினி எனும் கன்னிப்பெண் தன் தாய்த் தெய்வமாகிய கொற்றவையின் துணையோடு தெய்வமேறி வாக்குரைத்தல் என்பது, அதற்கு முந்தைய தமிழ் புராதன**

**மரபின் ஒரு தொடர்ச்சியாகவே அமைகிறது”** என (பக்தவத்சல பாரதி, இலக்கிய மானிடவியல்,ப.208) இச்செயல் ஷாமானிசத்தின் மாறுபட்ட நீட்சியாகவும் அமைகிறது. சாலினியின் தெய்வமுறுதல், வாக்குரைத்தல் ஆகிய இரண்டும் ஷாமானிசத்தின் வடிவங்களாகவே காணப்படுகின்றன.

**ஷாமானிசம்**

**”ஷாமினிசம் என்பது ஆதிமனிதனின் அதீத அறிவுநிலை மனித வாழ்வை இயக்குவதாகவும் பாதிப்பதாகவும் நம்பிய இயற்கை மீறிய ஆற்றல்களை வயப்படுத்துதல், கலை சார்ந்த அனைத்து நம்பிக்கைகளும் செயல்முறைகளும் 'ஷாமானிசம்' எனப்படும். சங்க காலத்தில் இது வெறியாடல் எனப்பட்டது.”** (மேலது, 216)

**”ஷாமானிசத்தின் போது ஷாமான்கள் தங்கள் சொந்த சமூகத்துக்குரிய சமிக்ஞைகளை வெளிப்படுத்துவார்கள். இவை வார்த்தைகளாகவும் இசைக் கூறுகளாகவும், ஆட்டக்கூறுகளாகவும் இருக்கும். இவை அனைத்திற்கும் பொருளுண்டு. இத்தகைய குறியீடுகளையும் அசைவுகளையும் அங்கு கூடியிருக்கும் சமூகத்தார் நன்றாகவே அறிந்து கொள்வார்கள். ஆதி அறிவு முறையில் மொழிசாராக் கூறுகள் அதிகம் என்பதற்கு ஷாமானிசம் நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.”** (பக்தவத்சல பாரதி, இலக்கிய மானிடவியல், ப.217) இங்கு சாலினி தெய்வமேறி வாக்குரைத்தலில் ஷாமானிசத்தின் தன்மைகளைக் காணமுடிகின்றது. இவ்வாறு சிலப்பதிகாரம் தெய்வமேறிய மகளிரின் தோற்றங்கள் குறித்து விரிவாக விளக்கிக் காட்டிய நிலையில் எவ்வாறு அவர்களால் சடங்குக் கலைகள் நிகழ்த்தப்பட்டன என்று குறிப்பிடவில்லை. ஆனால் சடங்குக் கலைகள் குறித்து விரிவான தரவுகளை திருமுருகாற்றுப்படை வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.

**குறமகளின் வெறியாட்டு**

பெண்கள் முருகனின் பூசாரிகளாக இருந்துள்ளனர் என்பதனை திருமுருகாற்றுப்படை விளக்குகின்றது. குறமகள் வெவ்வேறு நிறத்தை உடைய இரண்டு ஆடைகளை உடுத்தியிருந்தாள், சிவந்த நூலினால் கையில் காப்புக் கட்டினாள், வெண்பொரியைத் தூவினாள், ஆட்டின் குருதியோடு கலந்த வெள்ளரிசியை சிறு பலியாக பலிபீடத்தில் இட்டாள். மஞ்சள், குளிர்ந்த சந்தனம் ஆகியவற்றைத் தெளித்தாள். குறிஞ்சிப்பண் பாடி, இசைக்கருவிகள் முழங்க செந்நிறப் பூக்களைத் தூவி வழிபட்டாள். குறமகள் பிறர் அஞ்சும் படியாக முருகனை வருவிக்க வெறியாடினாள். (திருமுருகாற்றுப்படை, 6:.230) என்று குறமகள் முருகனுக்கான சடங்குமுறைகளை எவ்வாறு செய்தாள் என்று அறிந்துகொள்கின்றோம்.

குறமகள் நடத்திய வெறியாடல் போன்றே கேரளாவிலுள்ள வட மலபார் வேலனும், சேவலின் கழுத்தை அறுத்து அதன் இரத்தத்தை ஒரு நீர் நிறைந்த அகன்ற பாத்திரத்தில் வடித்து, அதனைக் கையால் கலக்குகின்றான். அரிசி, நெற்பொரி, தெச்சி மலர் போன்றவற்றைக் குருதியில் கலக்கி, மந்திரம் உச்சாடனம் செய்து கொண்டே களத்தின் மீது தெளிக்கின்றான்.

பழந்தமிழ் இலக்கியம் எடுத்துரைத்துள்ள வேலன் வெறியாடல் சடங்குக் கலையினைக் கருத்து நிலையில் அதன் மரபுத் தொடர்ச்சியினை கேரள நாட்டுப் பகுதிகளில் நிகழ்த்தப்பட்டு வரும் வட மலபார் வேலனின் தெய்யாட்டக்கலையில் அங்ஙனமே படிந்திருப்பதைக் காணமுடிகின்றது. அதனுடன் சிலப்பதிகாரம் விளக்கிக்காட்டிய தெய்வக் கோலங்களும் இன்றைய தெய்யாட்டக் கலையில் செல்வாக்குப்பெற்று விளங்குவதைக் காணமுடிகின்றது. சங்ககால வெறியாட்டின்

தொடர்ச்சியான கேரளத் தெய்யம், தொல்திராவிடப் பண்பாட்டின் கொள்கலனாக விளங்குகின்றது.

**வேலன்**

சிலப்பதிகாரம் வேலன் என்ற இனத்தார் பற்றிய பல தரவுகளைத் தந்துள்ள நிலையில், அவ்வேலன் இனத்தார் இன்றுவரையிலும் கேரளத்தின் வட மலபார்ப் பகுதிகளில் வாழ்ந்துவருவதைப் பார்க்கின்றோம். ஆனால் அவர்கள் இன்று முருகனுக்காக மட்டுமன்றி பிற தெய்வங்களுக்காகவும் தெய்யக் கோலம் புனைந்து வெறியாட்டு நிகழ்த்தி வருகின்றார்கள்.

**"கண்ணூர், காசர்கோடு என்னும் மாவட்டங்களில் வாழ்ந்து வரும் வேலன் இனத்தார் 'துளுவேலன்' என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் மூங்கிலாலான பொருட்களை உருவாக்குவதைத் தம் தொழிலாக செய்து வருகின்றனர். தெய்யவேடம் புனைந்து ஆடுவதில் வல்லவர்கள். குண்டோர சாமுண்டி, பஞ்சுருளி, சுடலை பத்திரகாளி, புள்ளிக் குறத்தி, மலங்குறத்தி போன்ற தேவதைகளின் வேடம் புனைந்து தெய்யாட்டம் ஆடுகின்றனர்** ''என்று இவர்களைப் பற்றி ஃபோக்லோர் நிகண்டு ப.,365 குறிப்பிடுகின்றது.

கல்லாடம் என்னும் பழந்தமிழ்நூல் வேலனாட்டம் காடன் மலையில் நடந்தது என்ற செய்தியினை தருகின்றது.

**"கோல்தலை பனிப்ப வான்விடு பெருங்குரல்**
**வீயாது துவைக்கும் காடன் மலைநாடர்"**

(கல்லாடம் துறை:25,பா.,15-16)

மேற்குறிப்பிட்ட காடன் மலை பாடலில் வருகின்ற காடன் மலை, கோலத்து நாட்டினைக் குறிக்கின்றது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். **"இன்று வேலனாட்டத்தின்**

**பிரதிபலியாக விளங்கும் தெய்யாட்டம் நடக்கும் பகுதியான கோலத்துநாடு கி.பி.10,11ஆம் நூற்றாண்டுகளில் காடன்மலை என்றே அழைக்கப்பட்டது"** என்ற செய்தி கல்வெட்டுக்களில் குறிப்பிட்டுள்ளதாக பா ஆனந்தக்குமார் குறிப்பிட்டுள்ளார். (பக்தவத்சல பாரதி, இலக்கியமும் பண்பாட்டு மரபுகளும், ப.88)

**"தென் கன்னட மாவட்டத்தில் புத்தூர் வட்டத்தில் சுப்பிரமணிய ஸ்தலம் ஒன்றுள்ளது. மலபார் வேலன் இதைத் தங்கள் மூதாதையர் வாழ்ந்த இடம் என்று கூறிக் கொள்கிறார்கள். இத்தெய்வத்தையே தங்கள் குலதெய்வம் என்றும், தாங்கள் அஞ்ஞூற்றான் என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறினர். கர்நாடகத்திலுள்ள சோமேஸ்வரத்திலிருந்து மங்களூர் வழியாக மலபாருக்கு வந்ததாகவும் அவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் முதலில் துளுநாட்டில் தங்கி வாழ்ந்தார்கள். பின்னர் மலபாரிலுள்ள அள்ளட நாட்டிற்குப் பரவினர்."** என்று என்று காடர்கள் பற்றிய சில தரவுகளை பி.எல்.சாமி (நா.வானமாமலை (ப.ஆ) மக்களும் மரபுகளும், ப.14) குறிப்பிட்டுள்ளார்.

**தொல்பொருள் சான்று**

மலபார் வேலன் அணியும் தலைப்பாகைக்கும் சிந்து சமவெளி முத்திரையில் காணப்படும் தலைமைப் பூசாரி அணிந்துள்ள தலைப்பாகைக்கும் இடையே ஒற்றுமை காணப்படுவதாக பி.எல்.சாமி கருத்துத் தெரிவித்துள்ளார் . **"முத்திரையில் காணப்படும் தலைமைப் பூசாரியும், கொம்புடைய தெய்வமும் தலையணியிலிருந்து நீண்டு தொங்கும் பாகையை அணிந்திருக்கிறார்கள். இவை மலபாரில் தெய்யாட்டத்தின் போது வேலன் அணிந்துள்ள தலைப்பாகையோடு ஒத்துள்ளது. அத்தகைய பாகை தலையிலிருந்து பின்புறமாக முதுகுப்புறத்தில் நீண்டு தொங்குகிறது."** (பி.எல்.சாமி, வேலன் வழிபாடு.ப.14)

எனவே, இவ்வேலன் வழிபாடு ஹாரப்பா, மொகஞ்சதாரோ நாகரிகத்திலிருந்து தொடங்கியது என்று கருதுவதற்கும் இடம் உண்டு. அவ் வேலன் வழிபாட்டின் வழிமுறை தொடர்ச்சியினைக் கேரள நாட்டார் சடங்குகளைத் தெய்யக் கோலத்தில் கண்கூடாக காண முடிகிறது.

**தெய்யம்**

ஒவ்வொரு கலைக்கும் ஒரு தனித்தன்மை உண்டு. சடங்குகள், தொன்மங்கள், நிகழ்த்துதல்கள் போன்றவற்றால் இவை வேறுபடுகின்றன. வடகேரளத்தில் பழைய கோலத்துநாடு தான் தெய்யங்களின் விளையாட்டு பூமி. கோலத்துநாடு என்பது வடக்கு காசர்கோடு முதல் தெற்கு கோரப்புழை வரையிலும், கிழக்கு குடகு மலையிலிருந்து அரபிக்கடல் வரையிலும் பரந்து கிடக்கின்ற நிலப்பரப்பாகும்.

`தெய்யம்` என்றால் தெய்வக்கோலம் கொள்ளுதல் என்பது பொருள். இச்சடங்குக் கலை வடமலபார் பகுதிகளில் மிகப்பரவலாக நிகழ்த்தப்பெற்று வரும் ஒரு நாட்டார் கலையாகும். தெய்யம் என்ற சொல் தெய்வம் என்பதிலிருந்து வந்துள்ளதாகவும் கருதப்படுகின்றது. தெய்ய வேடம் அணிவது சாதாரண மனிதர்களே. அவர்கள் தெய்யத்திற்குரிய வேடம் அணிந்து விட்டால் தெய்வமாகவே மாறிவிடுகின்றனர். தெய்யம் வீரமரணமடைந்து தெய்வீக நிலை அடைந்தவர்களுக்காக ஆடுவது, அவர்களை தெய்வமாக நினைத்து வேடம் புனைந்து தெய்யாட்டம் நடத்தி வருகிறார்கள். மூச்சிலோட்டு பகவதி, கதிவனூர் வீரன், மாக்கப்போதி போன்ற தெய்வங்களை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

காலப்போக்கில், தெய்யத்தில் வீர ஆராதனையுடன், தெய்வ ஆராதனையும் முக்கியத்துவம் பெற்றன. தெய்யங்களில் பெரும்பான்மையும், தாய்தெய்வங்களின் வேடம்

புனைந்து ஆடுகின்றனர். பகவதி, காளி, சாமுண்டி என்னும் பொதுப் பெயர்களால் இத்தேவதைகள் அறியப்படுகிறார்கள். ஒரே தேவதை பல பெயர்களில், பல இடங்களில் அழைக்கப்படுகின்ற நிலையும் உண்டு.

தாய்த்தெய்வங்களில் 'திருவர்க்காட்டு பகவதி' முக்கிய இடம் பெறுகின்றாள். இப்பகவதி கோலத்து நாட்டு மன்னனின் குலதேவதையாக வணங்கப்பட்டாள். மாடாயிக்காவு என்னும் இடத்தில் இத்தெய்வம் கோயில் கொண்டுள்ளாள்.

ஒவ்வொரு இனத்தவருக்கும் தனித்தனி தெய்யக்காவுகள் உண்டு. இவை, காவுகள், முண்டியகள், பள்ளியறைகள், ஸ்தானங்கள் என்றழைக்கப் பெறுகின்றன. இவ்விடங்களிலெல்லாம் வண்ணான், மாவிலன் போன்ற இனத்தார் தெய்யக் கோலம் கட்டி ஆடுகின்றனர். இவர்கள் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஐப்பசி மாதம் முதல் வைகாசி மாதம் வரை வடமலபாரில் தெய்யாட்டங்கள் நிகழ்த்தப்பெறுகின்றன. தெய்ய வேடம் புனைந்துவிட்டால் இவர்களை உயர்வகுப்பினரும் வணங்குவர். இவர்கள் மனிதன் என்னும் நிலையிலிருந்து தெய்வம் என்னும் நிலைக்கு உயர்த்தப்படுகிறார்கள்.

தெய்யங்களில் 'ஒன்று குறை நாற்பது தெய்யங்கள்' முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. அவற்றில், தாய்த்தெய்வங்கள், கிராமத் தெய்வங்கள், படைவீரர்கள், விலங்குத் தெய்வங்கள், நாகத் தெய்வங்கள், வீரமரணம் அடைந்தவர்கள் ஆகியோர் உள்ளடங்குவர். அவற்றுடன் சைவ, வைணவ மூர்த்திகள் போன்ற தெய்வங்களுக்காகவும், தெய்யக் கோலங்கள் புனைந்து ஆடுவதுண்டு . ஜலத்தெய்யம், மாப்பிளத் தெய்யம் என்னும் தெய்யங்களும் உண்டு.

குறிப்பிட்ட தெய்வத்தை தெய்யமாக வேடம் புனைந்து ஆடுதலைக் களியாட்டம் என்றும் கோலங்கட்டி ஆடுதல் என்றும் வடமலபாரில் வழங்குகின்றனர். **“இந்தக் களியாட்டங்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மர்மமூர்த்தி, தந்திரமூர்த்தி, உபயமூர்த்தி என்று மூன்று வகை மூர்த்திகளாகப் பிரிக்கின்றனர். ‘பரத சங்கிரத்தில்’ கோலம் என்ற ஆட்டம் விளக்கப்பட்டுள்ளது. குறள், மறம், சிந்து, சோனகம், பார்ப்பான், சடாதாரிப்பறை முதலிய பல கோலங்களை மேற்கொண்டு அவ்வவ் கோலத்திற்குப் பொருத்தமான வசனத்துடன் மகளிரால் ஆடப்படும் கூத்துகள் கோலம் என்ற வகையைச் சேர்ந்தன என்பர். குறள் என்ற குள்ளனின் கோலம் இன்றும் ‘செம்மறத்தி’ என்னும் பெயரில், இறந்த கணவனோடு உடன்கட்டை ஏறும் பெண்களுக்குக் கோலம்கட்டி, மலையாள நாட்டில் ஆடப்படுகின்றது”** என்று கோலம் என்பதற்கு விளக்கம் தருகின்றார் P.L.சாமி. (நா.வானமாமலை, மக்களும் மரபுகளும், ப.46)

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் வரிக்கூத்தென்பதற்கு ஒருவர் பெரும்பாலும் வேற்றுருத்தாங்கி நடப்பது என்று விளக்கம் கூறுகின்றனர். இதனை, ”அவரவர் பிறந்த நிலத்தின் தன்மையும் பிறப்பிற்கேற்ற தொழில் தன்மையும் தோன்ற நடித்தல்” என்று அரும்பத உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார். (சிலம்பு. அரங்கேற்று காதை- நாட்டார் உரை,ப.92) 'வரி’ என்பதனைப் பல்வரிக் கூத்து என்றும் கூறுவர். அடியார்க்கு நல்லார் அதற்கு எடுத்துக்காட்டாக பழைய கலிவெண்பாட்டினைக் குறிப்பிட்டுள்ளார். அதில் ‘மலையாளி’ என்ற கூத்தும், பகவதி என்ற கூத்தும் பல்வரிக் கூத்தாகக் காணப்படுகின்றன. தமிழகத்தில் இக்கூத்துகள் சிலப்பதிகார காலத்திற்கு முன்னரே நிகழ்ந்திருக்க வேண்டும் என்பதே இங்கு வலியுறுத்தப்படுகின்றது.

சிலம்பில் நாளங்காடிப் பூதத்திற்கு மறக்குடிப் பெண்கள் பூவும், பொங்கலும் முதலியன சொரிந்து, கூத்துகள் ஆடி வழிபட்டனர் என்பதனை, கீழ்க்கண்ட சான்று உறுதிப்படுத்துகின்றது.

**"துணங்கையர், குரவையரணங் கெழுந்தாடிப்"**

(சிலப், இந்திரவிழா,பா,70)

துணங்கைக் கூத்தும், குரவைக் கூத்தும் ஆடினர் என்பதை மேற்குறிப்பிட்ட அடிகள் உணர்த்துகின்றன.

கொற்றவை ஏறி வெறிநிகழ்வது பழைய வழக்காக இருந்துள்ளது. **"சங்க இலக்கியங்களில் வெறியாட்டுப் பயின்றுவருதல் போல வேறுவகைக் கூத்துக்கள் பரவலாகப் பயின்றுவரவில்லை என்றே கூறலாம். காப்பிய காலத்தில் வெறியாட்டு இன்னும் முற்றிலுமாக சமுதாய வடிவம் தரப்பட்டு இயங்கியது. அதுவே 'வரிக்கூத்து' என்ற பெயரில் எழுந்த புதுவகைக் கூத்தாகும். வெறியாட்டிலிருந்து முகிழ்த்தெழுந்தாலும் முற்றிலுமான சமுதாயக் கூத்தாக அது குரவையோடு வைத்துக் காப்பிய காலத்தில் எண்ணப்பட்டுள்ளது."** என்னும் கருத்து (ஜாண் ஆசிர்வாதம், தமிழர் கூத்துகள்,ப.112) வெறிக்கூத்து ஒரு சமுதாயக் கூத்தாக மாற்றமடைந்ததை தெளிவுறுத்துகின்றது.

சிலப்பதிகாரத்தில் குரவை குறிக்கப்படும் இடங்களிலெல்லாம் பெரும்பாலும் வரிக்கூத்தே குறிக்கப்பட்டுள்ளது. **"குரவையும் வரியும் விரவல செலுத்தி**" (சிலப், அரங்கேற்று காதை, வேங்கடசாமி நாட்டார் உரை, பா-,24) என்னும் பாடலடிகள் மூலம் அதை உணரமுடிகின்றது.

**தீப்பாற்றாத் தெய்யம்**

தீப்பாற்றாத் தெய்யம் கண்ணகி கதையுடன் தொடர்புடைய ஒரு தெய்யமாகும். வடமலபாரில் கண்ணங்காடு என்ற ஊரில் உள்ள பகவதியின் பெயர் கண்ணங்காட்டுப்

பகவதி என்பதாகும். இப்பகவதியை யாதவ குலத்துடன் தொடர்புபடுத்திக் கூறுகின்றனர். யாதவ குலத்தில் மாயன், ஆயன் என்னும் இரு பிரிவினர் உள்ளனர். அவர்கள் 'மணியாணி' என்னும் பெயரில் அறியப்படுகின்றனர். **"ஏழிமலை நந்தன் ஆட்சிக் காலத்திலும், கோலத்திரியின் ஆட்சிக் காலத்திலும் 'மணியம்' என்ற ஆட்சி அதிகாரம் இவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது."** (குட்டமது எ. ஸ்ரீதரன், பெருங்களியாட்டம்,ப.40) 'மாயன்' இனத்தவர் எருமைகளையும், 'ஆயன்' இனத்தவர் பசுக்களையும் வளர்த்தி அதன் பயன் கொண்டு வாழ்ந்திருந்தனர் என்று வரலாறு கூறுகின்றது. (டா.எம். விஷ்ணுமூர்த்தி, ஃபோக்லோர் நிகண்டு, ப.299 ) துளுநாட்டினர் 'மணியாணி'களை 'ஊராயே' என்று சிறப்பித்து அழைக்கிறார்கள். ஊரில் உள்ள ஆட்சியதிகாரத்தையே இது குறிப்பிடுவதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

கண்ணங்காட்டு பகவதி தொன்மத்தில் யாதவர்களுக்கு கண்ணங்காட்டு பகவதியுடன் உள்ள தொடர்பினைக் காணமுடிகின்றது. கண்ணன் காட்டிய பகவதி என்றும் கண்ணனைக் காட்டிய பகவதி என்றும் இப்பகவதியை அழைக்கிறார்கள். **"விந்தியா இமயமலைகளுக்கும், சிந்து, கங்கை நதிகளுக்கும் இடையிலுள்ள பிரதேசங்களில் வாழ்ந்த யாதவ இனத்தார், இயற்கைச் சீற்றத்தின் போதும். தொற்று நோய், போர்கள் போன்ற பேரிடர் ஏற்பட்டபோதும் தென்பகுதிகளில் குடியேறினர். இதுபோன்று பல இனத்தவரும் பல இடங்களிலாக குடியேறி வாழ்ந்து வந்தனர்"** (குட்டமது எ. ஸ்ரீதரன், பெருங்களியாட்டம், ப.41 ) அவ்வாறு குடியேறியவர்கள் தான் கோலத்து நாட்டிலுள்ள 'மணியாணிகள்' என்றழைக்கப்படும் யாதவ குலத்தவராவர்.

கோலத்து நாட்டிலுள்ள மற்றொரு பிரிவினரான ஆயர்கள் கண்ணகி கதையை தங்கள் குலதேவதையான யோக மாயா கதையுடன் இணைத்திருக்கலாம் என்று

அறிஞர்கள் கருதுகின்றனர். இடைக்குல மடந்தையான மாதரியிடம் அடைக்கலமாக (பணயம்) கொடுக்கப்பட்டவள் தான் கண்ணகி. அதனால் கண்ணகியும் பணயக்காட்டு பகவதியாக வழிபடப்பட்டாள் என்ற ஒரு கருத்து நிலவி வருகின்றது .

சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையில் கண்ணகி மாதிரியிடம் அடைக்கலமாகக் கொடுக்கப்பட்டாள். கோவலன் சிலம்பினை விற்க மதுரைக்குச் சென்றான். அங்கே கோவலன் கொல்லப்பட்டான். இதையறிந்த கண்ணகி கையில் ஒற்றைச் சிலம்பு ஏந்தி பாண்டிய மன்னனிடம் வழக்குரைத்தாள், வெற்றியும் பெற்றாள். மதுரையைத் தீக்கிரையாக்கினாள். இதனை,

**"பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில்**
**ஒட்டேன் அரசோடொழிப்பேன் மதுரையும்"**

(சிலப். வஞ்சினமாலை, பா.36 - 37)

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

நானும் கற்புடைய மகள் என்பது உண்மையானால் மன்னனையும், மதுரை நகரினையும் அழிப்பேன் என்று கண்ணகி கூறினாள். தன் இடது கையால் வலது முலையினைத் திருகி மதுரை நகரத்தினை மும்முறை வலம்வந்து விட்டெறிந்தாள், மதுரை நகரம் தீப்பற்றி எரிந்தது. கண்ணகியின் ஏவலால் தீயோர் எரிந்தனர். இதன் நினைவாக தற்பொழுது கண்ணங்காட்டுப் பகவதியின் திருநடையில் மணியாணிப் பெண்கள் வட்டமாக நின்று குலவையிடுகின்றனர். முன் காலங்களில் பெண்கள் இக்கோயிலில் குரவைக் கூத்து ஆடியிருந்ததாகவும், அதற்குத் தமிழ்ப்பாட்டுக்கள் பாடியிருந்ததாகவும் முதியவர்கள் கூறுகின்றனர்.

கண்ணங்காட்டுப் பகுதியில் பதினொரு காவுகள் இடம்பெற்றுள்ளன. அக்காவுகளில் களியாட்ட விழா நடக்கும்பொழுது 'மேலேரி' அமைப்பர். மேலேரி என்பது

கோயிலைச் சுற்றிலுமாக நிறைய விறகுகளை அங்கங்கே கூம்பாரமாகக் கூட்டிவைத்து எரிப்பர். அது கனல் குன்றுகளாக மாறும். இரவிலே இந்நிகழ்ச்சி நடைபெறும். விடியற்காலையில், தெய்ய வேடம் புனைந்தவர் சிவப்புப் பட்டு உடுத்து, தலையில் சிவப்புத் துணியைத் தலைப்பாகையாகக் கட்டி கையில் ஒற்றைச் சிலம்பினை ஏந்தியவாறு தயார் செய்த மேலேரிகளின் (கனல்மேடு) இடையே ஓடுவர். அதன் பின் சாமியாடி ஓடுவார். அதனைத் தொடர்ந்து விரதம் எடுத்து இளைஞர்கள் கூக்குரலிட்டு மேலேரியின் கனல்களைத் தட்டி நீக்கியவாறு ஓடுவார்கள்.

இந்நிகழ்ச்சி கண்ணகி ஒற்றைச் சிலம்பு ஏந்தி, மதுரையை தீக்கிரையாக்கியதை நினைவு கூறும் வகையில் நிகழ்த்தப்படுகின்றது என நம்புகிறார்கள். கோயிலைச் சுற்றி சிறிது இடைவெளியுடன் உருவாக்கிய கனல்மேடுகள் தீக்கிரையான மதுரையைச் சுட்டுவதாகும் என்றும் கூறுகின்றனர்.

**குண்டூர் சாமுண்டித் தெய்யம்**

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் குன்றக்குரவையில் வேலன் வெறியாடல் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. இதில் தலைவியின் தாய் தன் மகளின் உடல்நோய் கண்டு, வேலனை வெறியாட அழைத்ததாக இளங்கோ குறிப்பிட்டார். ஆனால் தற்காலத்தில் வடமலபார் வேலன் நாட்டு நலனுக்காகவும், மக்கள் இன்புற்று வாழவேண்டியும் தாய்த் தெய்வங்களின் வேடமணிந்து தெய்யம் நிகழ்த்துகின்றான்.

வடமலபார் ராமவில்லியம் கழகத்தில் களியாட்டம் நிகழ்த்துதலின் போது வேலன் குண்டோர் சாமுண்டித் தெய்யக் கோலம் புனைந்து ஆடுகின்றான். உயிர்ப்பலி கொடுப்பதனால் இத்தெய்யம் மதிற்சுவருக்கு அப்பால் நிகழ்த்தப்பெறும். சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றி, தாருகனை அழித்த காளியாகவும், குண்டோர்

சாமுண்டியைக் கூறுகின்றனர். எனவே இங்கு ஆரிய மயமாக்கத்தின் தாக்கம் காணப்படுவதாகக் கருதலாம்.

**வேலனின் சடங்குகள்**

வடக்கு பகுதி வேலனின் வேடத்தில் தொல்மரபு காணப்படுகின்றது. தெய்யம் சிறிது நேரம் முகமூடியை அணிகின்றது. தெய்யம் கால் பெயர்த்து ஆடும் போது மிகப் பழங்கால இசைக்கருவிகளை, உபயோகிக்கின்றனர். சடங்குகளில் முக்கியமாக 'வடக்கேன் வாதிலில் அமைக்கப்பட்ட களத்தில் கோழியை அறுத்து குருதி பலி அளிக்கின்றனர். வாழைமட்டையால் களம் உருவாக்கி கோல்திரியை (எரிகோல்) எரிய வைப்பர். அக்களத்தில் வேகவைத்த கொள்ளு போன்ற தானியங்கள், நெற்பொரி, மது என்பனவற்றைப் படைக்கின்றனர். இச்சடங்குகள் சங்ககால வேலனாட்டச் சடங்குகளின் தொடர்ச்சியாகவே எண்ணப்படுகின்றது.

**குறத்தித் தெய்யம்**

கேரளாவின் தாய்த்தெய்வ வழிபாட்டில் குறத்தித் தெய்வமும் இடம்பெற்றுள்ளது. வடமலபாரிலுள்ள இராமவில்லியம் கழகத்தில் இத்தெய்யம் புனைந்து ஆடுவது வேலன் இனத்தாராவர். மலையரும் குறத்தி தெய்யம் புனைந்து ஆடுவதுண்டு. குறத்தி இரண்டு வகையான பெயர்களில் வழிபடப்பட்டு வருகின்றாள். அவை புள்ளிக்குறத்தி, குஞ்சாரக் குறத்தி என்பன. இவர்கள் பார்வதியின் மகள்களாகக் கருதப்படுகின்றனர். குறத்தி வெற்றிலைக் கொடியைத் திருடர்களிடமிருந்து பாதுகாக்கும் காவல் தெய்வமாகக் காணப்படுகின்றாள். இத்தெய்வம் வேளாண்மையுடன் தொடர்புடையது.

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் குன்றக்குரவையில் குறமகளிர் வாழ்வியல் சித்திரிக்கப்பட்டுள்ளது. மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும். அங்கு வாழும் மக்கள் குறவர்கள். அவர்கள் தினைப் புனங்களில் குருவிகளை ஓட்டியும்,

கிளிகளை விரட்டியும், அருவியில் நீராடியும், சுனைகளில் மூழ்கியும் விளையாடுவதை காப்பியம் வருணிக்கின்றது.

**"குருவி ஓப்பியும் கிளி கடிந்தும் குன்றத்துச் சென்றுவைகி**
**அருவி ஆடியும் சுனை குடைந்தும் அலவுற்று வருவேம்முன்"**

(சிலப். குன்றக்குரவை ,1-2)

குறவர்களின் தினைப்புன விவசாயத்தையும், அதனைச் சார்ந்த பெண்களின் செயல்பாடுகளையும் விளக்குகிறது.

**"மலைமகள் மகனைநின் மதிநுதல் மடவரல்**
**குலமலை உறைதரு குறவர்தம் மகளார்"**

(சிலப்.குன்றக்குரவை,பா. ம.15)

**"குறமகள் அவளெம் குலமகள் அவளொடும்**
**அறுமுக ஒருவநின் அடியிணை தொழுதேம்"**

(சிலப்.குன்றக்குரவை, பா.ம.16)

என்ற பதிவுகள் அனைத்தும் கவனத்திற்குரியன.

வேட்டுவவரியில், மலையில் வாழ்கின்ற குறவரின் மகளாக வள்ளியைச் சித்திரிக்கின்றார். குறவர் குலமாகிய எங்கள் குலத்தில் பிறந்த வள்ளி தெய்வத்தையும், முருகனது இணையடிகளையும் சேர்த்து வணங்குவோம் என்று குறவர்கள் முருகனை வாழ்த்திப் பாடுகின்றார்கள். இத்தொல்தெய்வ வழிபாட்டு மரபு கேரளத்தில் இன்றும் நிலைபெற்று வருகின்றது.

வடமலபாரில் குறத்தித் தெய்யமும், குறத்தித் தோற்றமும் நிகழ்த்தி வருகிறார்கள். குறத்தியைப் பற்றிக் குறிப்பிடுகையில் சிவபெருமானையும், பார்வதியையும், மலங்குறவனும், மலங்குறத்தியுமாகக் கருதுகின்றனர். சிவனும், பார்வதியும், குறவனும், குறத்தியுமாக வேடம் பூண்டு நாடு சுற்றிப் பயணம் செய்த நாட்டார் கதையினை

அடிப்படையாகக் கொண்டு, குறத்தித் தெய்யம் நிகழ்த்தப்படுகின்றது. இவர்களுக்கு மதுவும், மாமிசமும் படையலாக அளிக்கிறார்கள். இவர்களது ஆயுதம் குறுங்கோல், கத்தி, முறம் போன்றவையாகும். பார்வதிதேவி மலங்குறத்தியாக நாடு சுற்றியபோது அவருக்கு பிறந்த மக்களே பிற குறத்தித் தெய்வங்கள் என்று நம்பப்படுகிறது.

குறத்தித் தெய்வம் மிக சக்தி வாய்ந்த தெய்வமாக கருதப்படுகின்றாள். அத்தெய்வத்தை மகிழ்ச்சிப்படுத்தினால் தங்கள் குலமும், சமுதாயமும் வளம்பெறும் என்று நம்புகின்றனர்.

**காலிச்சன் தெய்யம்**

பழங்கால ஆயர் இனத்தார் கன்றுகாலிகளை மேய்ப்பதனைத் தங்கள் தொழிலாக மேற்கொண்டிருந்தனர். முல்லை நிலம் காடும் காடு சார்ந்தது என்பதால் 'காடுறை உலகம்' என்றே கூறப்பட்டது. கலித்தொகை நூற்றியெட்டாவது பாடலில் ஆயர் இன மகளிர் எருமன்றத்தில் குரவையாடி தங்கள் தலைவன் பாண்டிய மன்னன் இனிது வாழவேண்டி வழிபாடு செய்த முறையைக் கூறுகிறது. சிலம்பில் அடைக்கல காதையில் ஆயர் முதுமகளாகிய மாதரியைக் குறிப்பிடுகையில்,

**"ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும்**
**கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை**
**தீதிலள், முதுமகள், செவ்வியள், அளியல்"**

(சிலப். அடைக்கலகாதை, பா. 120-122)

என்னும் பாடலடிகள் பசுக்களைப் பாதுகாத்து, அவற்றின் பயனை பிறர்க்குக் கொடுக்கின்ற இடையர் குல மக்களின் வாழ்க்கையினை சித்திரிக்கின்றது.

சிலம்பில் ஆய்ச்சியர் குரவையில், கண்ணகி காணும்படியாக, 'ஆயர்பாடியில் எருமன்றத்தில் மாயவன் நப்பின்னையோடு ஆடிய குரவையை ஆடுவோம்' என்று ஆயர் முதுமகளாகிய மாதரி தன் மகள் ஐயையிடம் கூறுவதாக அமைந்துள்ளது.

**"வேல் நெடுங்கண் பிஞ்ஞையோ டாடிய குரவையாடுதும்**
**யாம் என்றாள் கறவை கன்று துயர் நீங்குக"**

(சிலப். ஆய்ச்சியர் குரவை, கருப்பம், ப.163)

கன்றுகாலிகளின் துன்பம் நீங்குவதற்காக, மாயவனை வாழ்த்திப் பாடியதாக மேற்கண்ட அடிகள் புலப்படுத்துகின்றன.

கால்நடைகள், உழவர்களின் உழவுத் தொழிலுக்கு முக்கிய பங்கு வகிக்கின்றன. அவைகளுக்கு வருகின்ற துன்பங்களைப் போக்குவதற்காகக் குறிப்பிட்ட தெய்வத்தை வணங்குதல் என்பது தொல்மரபாகும். இவ்வழக்கம் கேரள நாட்டாரிடையே இன்றும் தொடர்ந்து வருகின்றது.

மலபார் பகுதிகளில் கன்றுகாலிகளை வளர்ப்பவர்கள், அதனை மேய்க்கும் போது வழி தவறி காணாமல் போய்விட்டால் 'காலிச்சன்' என்னும் தெய்வத்தை வணங்குகிறார்கள். பொதுவாக இத்தெய்வம் எட்டி மரத்தின் அடியில் இருக்கும். இதனை 'காலிச்சன் காஞ்சிரம்' (எட்டி )என்று அழைப்பர்.

செறுவத்தூர், திருக்கரிப்பூர் போன்ற கிராமங்களில் எட்டிமரத்தின் அடியில் வண்ணான் இனத்தவர் 'காலிச்சன் தெய்யம்' நிகழ்த்துகின்றனர். நாட்டார் தெய்வமாகிய 'காலிச்சனை புலையர்களும் தெய்யம் புனைந்து ஆடுகிறார்கள். காணாமல் போன கால்நடைகளைத் திரும்பக் கிடைப்பதற்காக, 'புலையன் தெய்யத்திடம்' அருள்

வேண்டுகின்றனர். என்று கே.கே.என்.குறுப்பு அவர்கள் கூறுகின்றார். (டா.கே.கே.என்.குறுப்பு, மலபாரிலே நாடன் கலைகள்.ப.64)

ஆயர் சமூகத்தினரின் தொல் தெய்வம் காலிச்சன். சமூகப் பொருளாதார மாற்றத்தின் காரணமாக அவர்கள் வேளாண் தொழிலில் ஈடுபட்டபோதும், தங்கள் தெய்வமாகிய காலிச்சனை வழிபடுகின்ற மரபு இன்றும் நீடித்து வருகின்றது.

**தோற்றம் பாட்டு**

தெய்யம் ஆடுபவர்களின் பரம்பரைச் சடங்குகளில் ஒன்று 'தோற்றம்' என்பதாகும். தெய்யாட்டத்திற்கு முன்னோடியாக இதனை நிகழ்த்துவர். தோற்றம் என்பதற்கு தோன்றுதல் என்ற பொருள் கொள்ளலாம். தாருகனாகவும், பத்ரகாளியாகவும் வேடமணிந்து பாடுகின்ற பாட்டிற்கு 'தோற்றம் பாட்டு' என்று பெயர்.

தெய்யம் நிகழ்த்துவதற்கு முதல்நாள் மாலையில் 'கோலக்காரன்' என்பவன் தோற்றம் பாட்டு பாடுவார். தோற்றம் பாட்டு பாடத்துவங்குமுன் கணபதி, சரஸ்வதி, விஷ்ணு, சிவன் போன்ற தெய்வங்களை வாழ்த்தியபின் தெய்யத்தின் வரலாறு பாடப்பெறுகின்றது. இவர் 'காணிமுண்டு' என்னும் ஓர் உடையினை அணிவர். தலையில் பட்டு கட்டி, தலைப்பாளி அணிவர். இதற்கு முகத்தெழுத்து இல்லை, எளிய வேடம் புனையப்படுகின்றது. 'செண்டை' எனும் இசைக்கருவியின் முழக்கத்துடன் இத்தோற்றம் பாட்டு பாடப்படுகின்றது. செண்டையின் இசை தெய்வீகச் சூழலை ஏற்படுத்துகின்றது. தோற்றம் பாட்டின் போது வரவிளித்தோற்றம், வாழ்த்து அஞ்சடித்தோற்றம், பொலிச்சு பாட்டு முதலானவை பாடப்படுகின்றன. இப்பாடலில் தெய்வம் தோன்றிய வரலாறு முழுவதும் பாடப்பெறுகின்றது.

**வாழ்த்து**

தெய்யாட்டக்காரன் எத்தெய்வத்திற்காக தெய்யக்கோலம் அணிந்தானோ அந்த தெய்வத்தை மனதில் நினைத்து, கைகூப்பி வணங்குவார். கோலக்காரன் தெய்வமேறப்பட்டு, ஆவேசமாக ஆடி பக்தர்களுக்கு ஆசி வழங்குவார். அப்பொழுது அவரை அனைவரும் தெய்வமாகவேக் கருதுவர்.

**சடங்குகள்**

தெய்யமும், திரையும் சடங்குக் கலை மரபாகும். விரதம், சடங்கு, மந்திரம் போன்றவை இதன் முக்கியக் கூறுகளாகும். சாமியாடிகள், தெய்யவேடம் புனைபவர், கோயிலின் பொறுப்புக்களை வகிப்பவர் போன்றோர் தெய்யாட்ட விழாவின் போது விரதம் மேற்கொள்கிறார்கள். சைவ உணவுகளை மட்டுமே உண்கிறார்கள். விரதத்தின் போது ‘தினைக்கஞ்சியை’ உண்ணுகின்ற வழக்கமும் காணப்படுகின்றது. இவர்கள் விரதம் எடுத்த நாள் முதல் கோயிலின் பக்கத்திலேயே ஒரு குடிசை அமைத்துத் தங்குகின்றனர்.

**மந்திரம்**

கோலம் புனைபவர் விரதம் மேற்கொள்ளும் போதும், முகத்தெழுத்தின் போதும், அணிகலன்கள் அணியும்போதும் மந்திரங்கள் உச்சரிக்கின்றனர். பொய்முகங்கள் அணியும் போதும், கோழியை பலியிடும் போதும் மந்திரம் உச்சரிக்கின்றனர்.

**தெய்யத்தின் அணிகலன்கள்**

தெய்யவேடம் புனைகின்ற தெய்யாட்டக்காரர்கள் அணிகின்ற அணிகலன்களை ‘அணியலங்கள்’ என்று அழைக்கிறார்கள். கைகள், கால்கள், மார்பு, கழுத்து, காது, நெற்றி போன்றவற்றில் அணிகலன்களை அணிகின்றனர். அவை கைவளையல், கடகம், சூடகம், கையுறை, சென்னிப்பத்தி, சிலம்பு, பாடகம், தலைப்பாளி, மணிக்கயல் போன்ற

பெயர்களில் அணிகலன்கள் அறியப்படுகின்றன. இடையிலும் அணிகலன்கள் அணிகின்றனர்.

தெய்யாட்டக்காரர்கள் அனைவரும் கால்சிலம்பு அணிகின்றனர். கைகளில் சூடகம், பூவளையம், கடகம், கைவளையல், தண்டை, வளையல் போன்றவை அணிகின்றனர். 'தலைப்பாளி' வைப்பது என்பது முக்கியமான சடங்காகும். அது நெற்றிக்கு மேல் தலையில் அணிகின்ற ஒரு உலோகத்தாலான அணிகலன் ஆகும்.

**தெய்யங்களின் உடைகள்**

தெய்யங்களின் உடையலங்காரங்கள், வண்ணமயமானதாகக் காணப்படுகின்றன. அவை பட்டு, விதானத்தறை, காணிமுண்டு, சிறகு உடுப்பு, வெளுப்பன் என்னும் பெயரில் அறியப்படுகின்றன. மரச்சட்டங்களில் மீது மூடிய அலங்கார உடை விதானத்தரை, தோற்றம் பாடுபவர் 'காணிமுண்டு' என்னும் உடை அணிவார். குருத்தோலையை உடையாக அணிவதும் உண்டு. குருத்தோலைகளை சிறிது சிறிதாகக் கீறிப் பாவாடையாக இடையில் அணிவர்.

தெய்யங்களின் அலங்காரத்திற்கு குருத்தோலை முக்கிய இடம் பெறுகின்றன. உடைக்காக மட்டுமன்றி திருமுடியிலும் கூடுதலாகக் குருத்தோலையைப் பயன்படுத்துகின்றனர். ஆண் தெய்யங்களுக்குத் தாடி உண்டு. பெண் தெய்யங்கள் மார்பினை அணிகலனாக அணிகின்றனர்.

**எழுதுவரிக்கோலம்**

முகத்தெழுத்து, வண்ணங்கள், உடை, அணிகலன்கள் ஆயுதங்கள் இவை அனைத்தும் ஒன்றிணைந்துதான் ஒரு தெய்யம் முழுமையடைகின்றது.

**முகத்தெழுத்து**

ஒவ்வொரு தெய்ய வேடங்களுக்கும் முகத்தெழுத்தில் வேறுபாடு உண்டு. அவை வெள்ளை, மஞ்சள், கடும் சிவப்பு, கறுப்பு போன்ற நிறங்களைப் பயன்படுத்தி ‘முகத்தெழுத்து’ புனைகின்றனர். மெய்யெழுத்தும் (உடலில் வர்ணம் பூசுதல்) தெய்யத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. முகத்தெழுத்துப் போல் மிக நுட்பமான புனைதல் தேவையில்லை என்றே கூறுகிறார்கள். இதனை ‘எழுதுவரிக்கோலம்’ என்று சிலப்பதிகாரம் குறிப்பிட்டுள்ளது.

> **”தமர் தொழ வந்த குமரிக்கோலத்து**
> **அமரிளங் குமரியும் அருளினள்**
> **வரியுறு செய்கை வாய்த்ததா லெனவே”**
>
> (சிலப்.வேட்டுவவரி,உ.பா.ம. பா.72-74)

மேற்கண்ட பாடலடிகளில் திருமாலும் நான்முகனும் வணங்குகின்ற குமரியின் வரிக்கோலம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

எயினர் குல சாலினி என்னும் குமரிப்பெண் கொற்றவைக் கோலம் புனைந்ததை வரிக்கோலம் என்றே சிலம்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கேரளத்தில் தெய்ய வேடம் அணிவதும் `எழுது வரிக் கோலத்தில்` உட்படும் என்றே கருதமுடிகிறது.

**திருமுடி**

தெய்யம் என்ற சடங்குக் கலைக்கு ‘திருமுடி வைத்தல்’ என்பது முக்கிய நிகழ்வாகும். தெய்ய வேடம் திருமுடி வைத்தபின் தான் முழுமை பெறும். `முடி` வைத்தால் வேடம் புனைந்தவரை தெய்வமாகவே அனைவரும் கருதுவர். வேடம் புனைந்தவர் முடியெடுத்தால் மனிதனாக மாறிவிடுவார் என்று நம்புகின்றனர். ஒவ்வொரு தெய்யக் கோலத்திலும் அதன் தெய்வத் தன்மைக்கேற்றவாறு திருமுடி வைக்கின்ற வழக்கம் உண்டு. திருமுடி வைத்தவுடன் தெய்ய வேடமணிந்தவர் தெய்வமேறப்பட்டு ஆவேசம்

அடைகின்றார். தெய்வம் மனிதனுக்குள் இறங்குவது என்பது நாட்டார் பண்பாட்டில் இன்றியமையாத இடத்தைப் பிடித்துள்ளது.

**திரு ஆயுதம்**

தெய்ய வேடமணிந்தவர்கள் பயன்படுத்துகின்ற திருவாயுதங்களில் 'வாள்' சிறப்பிடம் பெறுகின்றது. தாய்த்தெய்வ வேடம் புனைபவர் நாந்தக வாள் உபயோகிப்பார், கேடயமும் கையில் ஏந்துவது வழக்கம். அம்பும் வில்லும் ஏந்துகின்ற தெய்யங்களும் உண்டு. இது வேட்டைச் சமூகத்தை நினைவுபடுத்துகின்றது. குளிகன் என்னும் தெய்யத்திற்கு சூலம் ஆயுதமாகவும், குறத்தித் தெய்யத்திற்கு அறுவாள் ஆயுதமாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

**கலசம்**

தெய்யச் சடங்குகள் நடைபெறும் இடத்தில் வெண்கலப் பாத்திரங்களில் கள் நிறைத்து வைப்பர். பிறகு அப்பாத்திரங்களை குருத்தோலை, வாழைமட்டைத் துண்டுகள், தென்னம்பூக்குலை போன்றவற்றால் அலங்கரிப்பர். அதனைத் தலையில் சுமந்து கொண்டு வந்து கோயிலில் அதற்கான இடத்தில் வைப்பர். தீயர் எனும் இனத்தைச் சேர்ந்த உரிமை உடைய ஒருவர் இச்சடங்கினைச் செய்கிறார்.

**களியாம்பள்ளி**

தெய்யம் நிகழ்த்தப்பெறும் இடத்தில் வாழைமட்டைகளால் களம் அமைத்து, அதில் ஒன்பது எரிகோல் குத்தி வைக்கின்றனர். பச்சரிசி, அவல், மலர், வேகவைத்த ஐந்து வகைத் தானியங்கள், இளநீர் முதலானவற்றை படையலாக வைக்கின்றனர். அங்கு கோழியை அறுத்து பலியிடுதலும் உண்டு. தெய்ய வேடம் புனைந்தவர் ஆவேசமடைந்த நிலையில் கோழியின் கழுத்தைக் கடித்து குருதியைக் குடிப்பதும் உண்டு.

ஆரியமயமாக்கப்பட்ட கோயில்களில் மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த சிவந்த நீரினைக் குருதியாகக் கொடுக்கின்றனர்.

**மீன் அமுது**

தெய்யம் என்னும் மந்திரச் சடங்கு நிகழ்வின்போது மாடாயிக்காவு திருவர்க்காட்டு பகவதிக்கு மீனமுது சமர்ப்பிக்கின்றனர். தெய்யாட்டம் நிகழ்வதற்கு முன் விரதம் மேற்கொள்ளும் சிலர் சாமியாடியிடம் அனுமதிபெற்று ஆற்றில் மீன்பிடிப்பதற்காக ஊர்வலமாகச் செல்வர். கையில் கம்பினால் தண்ணீரில் அடித்து மீன் பிடிக்கின்றனர். இதை தெய்யத்தின் முன் வைத்து அருள்பெற்று, பின் சமைத்து உணவுடன் பிரசாதமாக பக்தர்களுக்கு அளிக்கின்றனர். (டா.எம்.வி.விஷ்ணு நம்பூதிரி, தெய்யமும் திறயும்,ப.62) மேற்சுட்டிய அனைத்து பண்பாட்டு பழக்க வழக்கங்களிலும் பழந்தமிழ் மரபு ஊடுருவிக் கிடக்கின்றது.

**அய்யடி**

தோற்றம் பாட்டின் மிக முக்கியமான பகுதியாக விளங்குவது அய்யடி என்பது. அதாவது ஐந்து அடிகளால் ஆன பாடலாகும். இதனை அய்யடி என்று அழைக்கின்றனர். தேவதைகள் குறித்த வருணனைகள் இப்பாடல்களில் இடம்பெறுகின்றன.

**வெள்ளாட்டம்**

தெய்யம் நடைபெறும் கோயிலின் கருவறைக்கு முன்னால் 'வெள்ளாட்டம்' என்பது நிகழ்த்தப்பெறுகின்றது. வெண்ணிற ஆடையை அணிந்தவாறு கருவறையில் உள்ள தெய்வத்திற்கு முன்பாக இவ்வாட்டம் நடைபெறும். ஆண் தெய்யங்களுக்கு மட்டுமே வெள்ளாட்டம் நடத்தப்பெறுகின்றது. வேடம் புனைந்து, ஓடியும் துள்ளியும் நடனம் ஆடுகிறார்கள். விரைவுதான் இதன் முக்கிய அம்சம். மாலை நேரங்களில்

நிகழ்த்தப்பெறுகின்றது. வெள்ளாட்டத்தை ‘A Salaman Dance’ என்று Dr.குண்டர்ட் குறிப்பிட்டுள்ளார். (டா.எம்.விஷ்ணு நம்பூதிரி, தெய்யமும் திறயும்,ப.59)

**கண்ணாடி பார்த்தல்**

தெய்யம் ஆட்டம் தொடங்குவதற்கு முன், ’கண்ணாடி பார்த்தல்’ என்னும் ஒரு சடங்கு உண்டு. கோலக்காரன் தன்னுடைய கோலம் புனைந்த உருவத்தினைக் கண்ணாடியில் பார்த்ததும் அவ்வுருவம் அவர் மனதில் பதியும். அதன் பிறகு கோலக்காரன் ஆவேசம் பூண்டு வெறியாடுவார். பக்தர்களுக்கு, மஞ்சள்பொடி அல்லது திருநீறு பிரசாதமாகக் கொடுத்து ‘குணம் வரணம்’ என்று ஆசிர்வதிப்பார்.

**பொலிச்சு பாட்டு**

பொலிக என்றால் பெருகுதல்,செழித்தல் என்று பொருள்படும்.இது தோற்றத்தின் கடைசியில் பாடப்படுவதாகும். பாணர்கள் பகவதி தெய்வங்களுக்கு எல்லாம் பாடுகின்ற ஒரு பொலிச்சுப்பாட்டினை விஷ்ணு நம்பூதிரி எடுத்துக்காட்டி உள்ளார்.

தேவதைகளைப் புகழ்ந்து பொலிச்சுப்பாட்டு பாடுகின்றனர்.

**"பொலிக பொலிக பகவதியோ பொலிக பகவதியோ**
**பொலிக என்று பொலி உணர்த்திப்**
**பாடும் போதே**
**இந்நாட்டை காக்கும் சுவாமி**
**பொலிக பகவதியோ**
**கறந்து குடிக்கும் கன்றோடு**
**காலி பொலிக பகவதியோ**
**ஸ்ரீ மகாதேவன் தன்**
**மூன்றாம் திருக்கண்ணில்**
**தோன்றியவளோ பகவதியோ"**

(பய்யனூர் குஞ்ஞிராமன் பெருங்களியாட்டம் ப.26)

இப்பாடலில் கால்நடைகள் பெருகி நாடு செழிக்க பகவதியை வாழ்த்திப் பாடுகின்றனர்.

**திரையாட்டம்**

கேரளத்தில் மிகவும் புராதனமான காளி வழிபாட்டிலிருந்து தோன்றியது திரையாட்டம். இக் கலை வடிவம் மிகவும் பழமையானது. கோழிக்கோடு மாவட்டத்திலும், மலப்புறத்தின் சில பகுதிகளிலும் திரையாட்டம் நிகழ்த்தப்பெற்று வருகின்றது. இக் கலை ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதம் முதல் சித்திரை மாதம் வரை நடைபெறுகின்றது. நாட்டார் மரபினை பின்பற்றிவரும் மக்கள் பகவதி, தலச்சிலோன், பைரவர், குட்டிச்சாத்தன், குளிகன், வீரபத்திரன் முதலிய தெய்வங்களைத் தங்கள் குலதெய்வங்களாக வழிபட்டு வருகின்றனர். இத்தெய்வங்களை வீட்டின் கன்னி மூலையில் இருப்பிடமாக அமைக்கின்றனர்.

நாட்டுப்புற மக்கள் தங்கள் பரம்பரை வீடுகளுடன் தொடர்புடைய கோயில்களில் ஆண்டுதோறும் பலவிதமான விழாக்களைக் கொண்டாடி வருகின்றனர். குடும்பத்தினருக்கு ஏதேனும் ஆபத்துக்கள் ஏற்பட்டால் அவர்கள் இங்கு வந்து முறையிடுவர். இந்த தெய்வங்களின் கோலம் புனைந்து ஆடுவர். இது திரையாட்டம் எனப்பெறும். சிவன், பார்வதி, பூதகணங்கள் முதலான தெய்வங்களுக்காக மட்டுமே அதிகளவில் திரையாட்டங்கள் ஆடப்படுகின்றன. இவ்வழக்கம், புராதன காலம் முதல் சிவனையும், சக்தியையும் வழிபட்டு வந்ததன் தொடர்ச்சியே எனலாம். ஆரியர்களின் வருகைக்குப் பின் திரையாட்டத்தில் விஷ்ணுமூர்த்தியின் கோலமும் இடம்பெறுகின்றது. திரையாட்டத்தில் ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒவ்வொரு கோலம் உண்டு.

கோயிலில் நடத்தப்பெறுகின்ற கலை நிகழ்ச்சிகளில் இரண்டு பிரிவுகள் காணப்பெறுகின்றன. ஒன்று சமூகத்தின் உயர்தர வகுப்பினருக்கானவை. அவை பெருந்தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையது. மற்றொன்று, சாதாரண மக்களுக்கானவை. அவை திரை, தெய்யம் போன்றவை. ஒரு காலகட்டதில் உயர்தர

மக்கள் செல்லக்கூடிய கோவில்களில் சாதாரண மக்கள் செல்ல அனுமதி இல்லை. அதனால் அவர்களுக்குச் செல்ல அனுமதி அளிக்கப்பெற்ற வழிப்பட்டிடங்களுக்கு அவர்கள் சென்று, கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர். அதனால் திரை, தோற்றம் போன்ற சடங்குக் கலைகள் சாதாரண மக்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றன.

**திரையின் அமைப்பு**

அரை வட்டவடிவிலான ஒரு பலகையால் 'திரை' உருவாக்கப்பெறுகின்றது. அது 'கிரீடம்' போன்ற வடிவில் இருக்கும். அது வருக்கைப் பலா, பாலை முதலிய மரப்பலகையாலானது.அதில் காளியின் உருவமும் நாகங்களும் செதுக்கப் பட்டிருக்கும். திரையாடுபவர் அதனை தலையில் சூடிக்கொள்வர். திரையாட்டத்தில் ஒவ்வொரு மூர்த்திக்கும் தனித்தனி வேடங்கள் புனையப் பெறுகின்றன. 'உமியன் குன்றில் தொடங்கி கடமேறியில் நிறைவுறும்' எனும் பழமைச் சொல், திரையாட்டம் பரவலாக நடைபெற்று வருவதற்கான சான்றாகும்.

**திரையின் தோற்றம்**

தலையில் பெரிய திருமுடி, முகத்திலும், மார்பிலும் அழகான சித்திரமெழுத்து, கழுத்தில் மாலைகள், கைகளில் வாள், கேடயம், உடுத்துகெட்டு (உடையின் அமைப்பு), காலில் சிலம்பு இவையெல்லாம் காண்போரை வியக்கவைக்கும் விதத்தில் திரையின் தோற்றம் அமைந்திருக்கும்.

ஒருவர் திரையாட்டம் நடத்த வேண்டும் என்று தீர்மானித்து விட்டால், அந்த தேசத்திலுள்ள உரிமையாளரை அங்கு வரவழைத்து விழாக் கொண்டாடப்பெறும் நாளினைத் தீர்மானிப்பர். அதன் பிறகு திரையின் முகத்தெழுத்திற்கு தேவையான சாயங்கள் வாங்க பணம் கொடுப்பர். இதற்கு 'நிறத்தின் பணம்' கொடுத்தலென்று பெயர். ஒரு இடத்தில் திரை நடத்த நிச்சயம் செய்து விட்டால், அதற்கு வேண்டிய

முன்னேற்பாடுகள் செய்கிறார்கள். திரை நடத்தப்பெறுகின்ற இடத்தையும், சுற்றுப்புறங்களையும் தூய்மை செய்கின்றனர். பந்தல் அமைத்து, பந்தலை அலங்கரிக்கின்றனர். கொடிக்கூறையும் கட்டுகின்றனர். ஆட்டக்காரர் இளைப்பாறுவதற்காகவும், ஒப்பனை செய்வதற்காகவும் அணியறையினை [ஒப்பனையறை] ஏற்பாடு செய்கின்றனர். கனலாட்டம் உள்ள இடங்களில் அதற்கான ஆயத்தங்களையும் செய்கின்றனர்.

**அரங்கோலைக்குப் புறப்படுதல்**

இளைஞர்கள் சிலர், திரை நடத்துவதற்கு உரிமையுடைய சில வீடுகளுக்கு வாத்தியங்களுடன் செல்வர். அங்குள்ள குருத்தோலை, தேங்காய், இளநீர்க் குலைகள் முதலியவற்றை வெட்டிக் கொண்டு வருவர். இக்குருத்தோலைகள், பந்தல் அலங்காரத்திற்காகவும், திரை வேடத்திற்கான திருமுடி உருவாக்குவதற்காகவும் பயன்படுத்தப் பெறுகின்றது. இச்சடங்கின் ஆரவாரம் திரை நடக்கவிருப்பதை மக்களுக்கு அறிவிக்கின்றதாக அமைகிறது.

விழா நாளன்று காலையில் ஆட்டக்காரர்களுடன் வாத்தியக்காரர்களும், வந்து திரையாட்டத்தின் ஆரம்பச் சடங்குகளைத் தொடங்குவர். மதியம் ஆட்டக்காரர் ஒப்பனை அறையில் விளக்கேற்றி, வணங்கி, எளிமையான வேடமிட்டு, ஒரு கோலம் கட்டி, வாத்திய முழக்கங்களுடன் கோவிலுக்குப் புறப்படுவார். விழா முற்றத்தில் வருவதற்குள் கோவில் நடையில் குத்து விளக்கு ஏற்றி வைக்கின்றனர். வந்தவுடன், ஒருவர் வெற்றிலையும் முழு அடைக்காயும் கொடுக்கின்றார். அதற்கு `ராசியடக்கம்` என்று பெயர். ஆட்டக்காரர் வெற்றிலையை எண்ணிப் பார்த்து, பாக்கு நிற்கின்ற திசையைப் பார்த்து, பலன் கூறுவார். அதன் பிறகு தோற்றம்பாட்டு பாடுவார். குடும்ப உறுப்பினர்கள் தரையிலுள்ள பீடத்தின்

மேல் அரிசியை எறிவர். இத்துடன் தெய்வத்தை உணர்த்துவதாக நம்புகின்றனர். பிறகு ஆட்டக்காரர் ஒப்பனை அறைக்கு வந்தவுடன் விளக்கேற்றி குரு வணக்கத்துடன், அங்குள்ள தெய்வங்களுக்கு அணியறை பூசை நடத்துவார். இத்துடன் தெய்வசக்தி ஆட்டக்காரரின் மேல் வந்துவிடுவதாக நம்புகின்றனர்.

முதலில் தலையில் ஒரு வெள்ளைத் துணியால் கட்டுவர். அதற்கு மேல் வெள்ளியாலான, தலைப்பாளியை வைக்கின்றனர். தலைப்பாளிக்கு தெய்வீகத்தன்மை இருப்பதாக நம்புகின்றனர். தலைப்பாளிக்கும் மிகுந்த பயபக்தியுடன் பூசை செய்கிறனர்.

திரையாட்டக்காரர் தெய்வக் கோலம் புனைந்து கோயில் முற்றத்திற்கு வருகின்ற பொழுது, அங்குள்ளவர்கள் ஓலையாலான தீப்பந்தங்களைப் பிடிக்கின்றனர். திரை வேடமிட்ட சிலர் கைகளிலும், இடுப்பைச் சுற்றிலும் தீப்பந்தங்களை வைத்திருப்பர். இத் தீப்பந்தங்கள் தொல் இனக்குழு மக்களின் சில பண்பாட்டுக் கூறுகளை நினைவுறுத்துகின்றது. திரை, கோயில் திருநடை முன் வருவதற்குள் பல வகை நடனங்கள் ஆடுகின்றார். கோயில் முற்றம் வரை நடப்பது `நடையாட்டம்`, சடங்கு நிகழ்த்துகின்ற களத்திற்கு முன் 'கணபதியாட்டம்' ஆடி சரசுவதி வந்தனம் கூறுவர். பிறகு தரையில் இறங்கி வந்து 'இளகியாட்டம்' ஆடுவர். இவ்வாட்டம் பலமணி நேரங்கள் நடைபெறும். அருள் வாக்குரைப்பதும் உண்டு. சில இடங்களில் 'கனலாட்டமும்' நடைபெறும்.

கேரளத்தில் நிகழ்த்தப்பெற்று வருகின்ற முடியேற்று, தீயாட்டு, கதகளி எனும் நிகழ்த்துகலைகளுக்கு திரையுடன் தொடர்பு காணப்படுகின்றது. தீயாட்டிலும், திரையாட்டத்திலும் காளி வேடங்களுக்கு ஒற்றுமை காணப்படுகின்றது. திரையாட்டத்திலிருந்து, கதகளி என்னும் கலையானது வேடம், உடை, அணிகலன்கள்

போன்றவற்றைப் பெற்றுள்ளது.

முடிகள், முகத்தெழுத்து, வேடங்கள், உடைகள், அணிகலன்கள், ஆயுதங்கள் போன்றவையே திரை, தெய்யங்களுக்கு புதுப் பொலிவூட்டுகின்றன. தெய்வங்களையும், முன்னோர்களையும் வழிபடுவதன் மூலம் அவர்கள் மனிதனின் உடலில் புகுந்து, தன்னை மறந்து, ஆவேசமுற்று ஆடுகின்றனர். ஆடும் போது மக்கள் அவர்களைத் தெய்வமாகவே வணங்குகிறார்கள். இதன் அடிப்படையில் தான் புராதன நிகழ்த்துகலைகள் உருவெடுத்திருக்க வேண்டும்.

**முடியேற்று**

கணவனுக்கு நேர்ந்த அநீதியை அறிந்த கண்ணகி சினந்தணியா நிலையில் மதுரையை எரித்தாள். அதற்குப் பிறகு பல பகுதிகளிலும் மக்கள் பஞ்சம் பட்டினிக்கு ஆளானதாக இளங்கோவடிகள் எடுத்துரைக்கின்றார். அதன்பொருட்டு மக்கள் பல வழிபாட்டு முறைகளைக் கையாண்டு கண்ணகியை வழிபட்டு தங்களைக் காத்துக் கொள்ளும் முயற்சியினை மேற்கொண்டார்கள். கண்ணகி வழிபாடு சேரமன்னனால் தோற்றுவிக்கப்பட்டதை அனைவரும் அறிவர். காலப்போக்கில் வேறு பல நாட்டாரும் கண்ணகியை வழிபட ஆரம்பித்தார்கள். அதற்கான சான்றுகள் கீழ் வருமாறு:

1. **“அன்று தொட்டுப் பாண்டியனாடு மழை வறங்கூர்ந்த வறுமை எய்தி வெப்புநோயுங் குருவுந்தொடரக் கொற்கையிலிருந்த வெற்றிவேற்செழியன் நங்கைக்குப் பொற்கொல்லாராயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடு மலிய மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கியன.”** (சிலப். உரைபெறு கட்டுரை)

2. அது கேட்டுக் கொங்கிளர் கோசர் தங்கள் நாடகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழைத் தொழிலென்றும் மாறாதாயிற்று. (சிலப், உரைபெறு கட்டுரை)

என்பதான பதிவு இங்கு கவனிக்கத்தக்கது. பாண்டியரும் கோசரும் மட்டுமின்றி இலங்கை மன்னரும் சோழரும் கூட கண்ணகிக்குக் கோயிலெடுத்து பலவகை விழாக்களை எடுப்பித்து மகிழ்ந்தார்கள் என்பதை இளங்கோ கூறிச் சென்றிருக்கின்றார்.

சிலப்பதிகாரத்தின் வழக்குரைகாதையில் கண்ணகியின் தோற்றத்தினைக் கண்ட வாயிற்காவலனின் மனம்

**"அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்**
**பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி**
**வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்**
**அறுவர்க்கு இளைய நங்கை இறைவனை**
**ஆடல்கண் டருளிய அணங்கு சூருடைக்**
**கானகம் உகந்த காளி தாருகன்**
**பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்"**

(சிலப். வழக்குரைகாதை. பா.34 – 40)

என்று கண்ணகியை கொற்றவையாக, பிடாரியாக, பத்திரகாளியாக, காளியாக, துர்க்கையாக எண்ணிப்பார்த்து மயங்கியதுண்டு. கண்ணகியின் சீற்றமிகு தோற்றம் அத்தகைய தடுமாற்றத்திற்கு இடந்தந்தது. அந்நிலை வெகுசனங்களின் மனதிலும் ஏற்பட்டிருந்தது என்பதை உணர்த்தும் வகையில் கேரள நாட்டார் வழிபாடுகள் காணப்படுகின்றன. கேரள நாட்டார் மரபில் கண்ணகியை தாருகனைக் கொன்றழித்த காளியாகக் காணும் மரபு காணப்படுகின்றது.

கண்ணகியை தாருகனைக் கொன்றழித்த காளியாக உருவகித்துப் பார்த்த மக்கட் சமுதாயம் பற்பல விழாச் சடங்குகளில் அவளுடைய வரலாற்றினையும் ஆற்றலையும் கதைப்பாடல்கள் வழி எடுத்துரைத்துப் போற்றினார்கள். அதனால் மகிழ்வடையும் கண்ணகி தங்களுக்கு செழிப்பான வாழ்க்கையை நல்குவாள் என்று நம்பினார்கள். அதற்காக வருடந்தோறும் பற்பல விழாக்களையும் சடங்குமுறைகளையும் முறை தவறாமல் நிகழ்த்தி வந்தார்கள். கேரளப்பகுதிகளில் அவை இன்றும் சிற்சில

மாறுதல்களுடன் நிகழ்ந்து வருவது கண்கூடு. முடியேற்று, முடியெடுப்பு, தீயாட்டு, பத்திரகாளிப்பாட்டு, பூதனும் திரையும், தெய்யம் முதலான வழிபாட்டுச் சடங்குக் கலைகள் வழி கண்ணகியை இன்றும் கேரள மக்கள் வழிபட்டு வருவது சிறப்பு. நாட்டார்மரபு சார்ந்த அச்சடங்குக் கலைகளுக்கான கதையாடல்களில் கண்ணகி கதையும் காளி கதையும் ஒன்றுகலந்து காணப்படுகின்றன. அவற்றை ஆய்ந்து காணும் முறையில் இவ்வியல் அமைந்துள்ளது.

ஒரு சடங்குக்கலை சூழ்நிலைகள் காரணமாக வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பெயர்களில் அறியப்படுவதுண்டு. வட கேரளத்தில் ”தெய்யம்" ,"திரை” என்று அறியப்படும் சடங்குக்கலை  தென் கேரளத்தில் ”முடியெடுப்பு” என்னும் பெயரில் வழங்கப்படுகிறது. அக்கலைக்கான சடங்குகள் அனைத்திலும் ஒற்றுமை காணப்பட்டாலும் மத்திய கேரளத்தில் அக்கலையினை ”முடியேற்று” என்று அழைக்கின்றனர். முடியேற்றில் ’களமழுத்துப் பாட்டு’ முக்கிய சடங்காக நிகழ்த்தப்படுகின்றது. காளி - தாருகவதம் கதை முடியேற்றில் மிக விரிவாக நிகழ்த்தப்படுகின்றது.

பத்திரகாளி கோயில்களில் ’முடியேற்று’ என்னும் சடங்குக்கலை நிகழ்த்தப்பட்டு வருகின்றது. 'முடி' என்றால் தலையில் அணியும் கிரீடம். முடியை தலையில் ஏற்றி வைத்த நிலையில் இச்சடங்குக்கலையினை நிகழ்த்துவதால் இப்பெயர் பெறுவதாயிற்று. 'முடியேற்றில்' பலவகையான வேடங்கள் புனைகின்றனர். ஒவ்வொரு கோலத்திற்கும் வேறு வேறு வகையான முடிகளை அணிகின்றனர். நீளமுடி, வட்டமுடி, சட்டமுடி, பீலிமுடி, ஓலைமுடி போன்ற பல பெயர்களால் அவை அறியப்படுகின்றன. முடிகள் உருவாக்குவதற்கு முள்முருங்கை, பாலை, கமுகு, மூங்கில் போன்றவற்றைப்

பயன்படுத்துகின்றனர். காளி போன்ற தேவதைகளுக்கு வட்டமுடி முக்கியமாகக் கருதப்படுகிறது. தீயாட்டினைப் போல முடியேற்று என்னும் சடங்குக் கலைக்கும் பஞ்சவர்ணப் பொடிகளால் களம் அமைக்கின்றனர். கார்த்திகை மாதம் முதல் இச்சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. பக்தர்கள் தங்கள் நேர்த்திக்கடனுக்காகவும், நாடு நன்மையடையவும் இச்சடங்குக் கலையினை நிகழ்த்துகின்றனர்.

களம் வரைந்தவரிடமிருந்து களத்தை ஏற்று வாங்கிக் கொண்டால் பின் 'களம் பூஜை' நடத்தப்படும். முதலில் கோயில் பூசாரி பூசை செய்து தெய்வத்தை அக்களத்தில் குடியமர்த்துவார். அதன் பிறகு காளி வேடம் புனைகின்ற நபர் 'திரிஉழிச்சல்' நடத்துவார். திரிஉழிச்சல் என்பது நெல், அரிசி, எரிகின்ற திரி, ஆகியவற்றை வாழை இலையில் வைத்து களத்தைச் சுற்றி வருதலைக் குறிக்கும்.

'களம்பாட்டு' விநாயகர் வணக்கத்துடன் ஆரம்பிக்கும். அதற்கு செண்டை சேங்கிலை, இலைத்தாளம் போன்றவை பக்க வாத்தியக் கருவிகளாக விளங்குகின்றன. களம்பாட்டில் தேவியின் வர்ணனை பாடப்படும். பாட்டு முடிந்தவுடன் களத்தினை அழிக்கின்றனர். இதற்குப் பிறகு காளி நாடகம் ஆரம்பிக்கும்.

**வேடங்கள்**

காளி, தாருகன், நாரதன், சிவன், கோயிம்பட நாயர், வேதாளம், கூளி என்னும் வேடங்கள் முடியேற்றில் காணப்படுகின்றன. காளியின் முகத்தில் வைசூரிப்புள்ளி முக்கியமானதாகும். கோலங்களிற்கான முடியினை குருத்தோலையால் உருவாக்குகின்றனர். பெரிய கோரைப் பற்களும் வருக்கைப் பலாவினால் ஆன வட்ட முடியும் காளியின் தோற்றமாக அமைகின்றது.

காளி அரங்கத்திற்கு வரும்போது காளியின் இரு பக்கங்களிலும் தீப்பந்தங்கள் ஏந்தியபடி இருவர் நிற்பர். முடியேற்று நடக்கின்ற பந்தலில் குத்துவிளக்கு ஏற்றி வைப்பர். அதனைக் 'களிவிளக்கு' என்று அழைக்கின்றனர். விளக்கின் பின்னால் வாத்தியக்காரர்கள் அமருகின்றனர். அரங்கில் கேளி, அரங்கு வாழ்த்துதல் ஆகியவை முடிந்தால் சிவனும் நாரதனும் அரங்கில் தோன்றுவர். பிறகு தாருகன் உரையாடல் தொடங்கும். அதனைக் கேட்டுக் கொண்டே சினத்துடன் காளி நடனமாடியவாறு போர்க்களத்திற்கு வருவாள். காளியுடன் பார்வையாளர்களும் போரில் பங்கெடுக்கின்றனர். காளி தாருகன் தலையுடன் கைலாயத்திற்குச் செல்வதுடன் 'முடியேற்று' நிறைவு பெறுகின்றது.

முடியேற்று என்னும் இச்சடங்குக்கலையினை வருடந்தோறும் நிகழ்த்துவதால் காளியாகிய கண்ணகி மகிழ்வடைந்து வைசூரி முதலான கொடிய நோய்களிலிருந்து தங்களைக் காத்தருளுவாள். நாடு நலம் பெறும் என்பது கேரள மக்களின் நம்பிக்கை.

***தீயாட்டு***

"தீயாட்டு" என்னும் சடங்குக்கலை மத்திய திருவிதாங்கூரில் பத்ரகாளி கோயில்களிலும், வீடுகளிலும், காவுகளிலும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. காளி-தாருகவதை கதையின் அடிப்படையில் இது நிகழ்த்தப்படுகிறது. தெய்வத்தின் வேடம் புனைந்து ஆடுவதால் தெய்வத்தின் ஆட்டம் என்னும் பொருள் பெறும்படி இதற்கு "தெய்யாட்டம்" என்ற பெயரும் வழங்கப்படுகின்றது. தீயில் குதித்து ஆடுதலால் இதனைத் "தீயாட்டு" என்று கூறுகின்றனர். கேரள நாட்டாரிடையே தீயாட்டு குறித்த ஒரு பழமொழி காணப்படுகின்றது. "வைசூரி வந்தால் தீயாட்டு. வராமல் இருக்க முடியேற்று'" என்னும் பழமொழி வைசூரி நோயிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள மக்கள் மேற்கொண்ட வழிபாட்டு முறைகளை உணர்த்துகின்றது. இச்சடங்குக்கலைக்கும் வடமலபாரில்

நிகழ்த்தப்படும் திரை, தெய்யம் முதலான சடங்குக் கலைகளுக்கும் இடையே பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

தீயாட்டு நடத்துவதற்கு உரிமை உடையவர்கள் தீயாட்டு உண்ணிகள் என்று அறியப்படுகின்றனர். இவ்வுரிமை இவர்களுக்கு எவ்வாறு கிடைத்தது என்பது குறித்த ஒரு நம்பிக்கை காணப்படுகிறது. ஒருமுறை மத்திய கேரளத்தில் வைசூரி படர்ந்தது. அதனால் மக்கள் அனைவரும் பீதி அடைந்தனர். மக்கள் அனைவரும் திருக்காரியூர் கோவிலில் ஒன்றாகக் கூடி இக்கொள்ளை நோயிலிருந்து தங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று சிவபெருமானை வேண்டினர். அப்பொழுது சிவபெருமான் தோன்றி தீப்பந்தம் ஒன்றினை ஏற்றி அங்கிருந்த ஒரு நம்பூதிரியிடம் கொடுத்தார். அத்தீப்பந்தத்தினால் நீவினால் வைசூரி நோய் மாறும் என்றும் கூறினார். சிவனை நேரில் கண்ட நம்பூதிரி அச்சமடைந்த நிலையில் தன் இடது கையால் அதனை வாங்கினார். அதன் காரணமாக சிவபெருமானின் சாபத்திற்கு ஆளானார். அன்று முதல் சிவபெருமானின் சாபத்தால் அக்குடும்பத்தார் தீயாட்டுண்ணிகளாக மாறினர். தீயாட்டு நடத்துவதற்கான உரிமையும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

**சடங்குகள்**

தீயாட்டின் போது பல்வேறு சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. பந்தல் அலங்காரம், உச்சப்பாட்டு, களமெழுத்து, சந்தியாகொட்டு , பகவதியை வரவேற்றல், களம்பூஜை, களம் கண்டு வணங்குதல், களம் பாட்டு, களம் அழித்தல், வேடம் அணிதல், பந்தம் உழிச்சல் போன்ற பல சடங்குகள் தீயாட்டில் இடம்பெறுகின்றது. தீயாட்டின் முக்கியச் சடங்காக அமைவது 'களம் அழித்தல்' ஆகும். பத்திரகாளித் தீயாட்டில் பத்திரகாளியின் வேடம் அணிந்த தீயாட்டுண்ணி களம் அழிப்பார்.

மாலை நேரத்திற்குள் களம் வரைந்து முடித்தபின் தீயாட்டு நடப்பதற்கு அறிவிப்பாக 'கேளிக் கொட்டு' நடத்தப்படுகின்றது. கோயில் கருவறையிலிருக்கும் வால் கண்ணாடியில் பகவதியை ஆவாகித்து தீயாட்டு நடக்கும் இடத்தில் குடியமர்த்துவர்.

வீடுகளில் தீயாட்டு நடப்பதாக இருந்தால் வாசலில் இருந்து பகவதியை வரவேற்பர். களம் பாட்டில் 'மணிமங்க தோற்றமும்' பாடப்பெறும். தீயாட்டுண்ணிகள் பத்ரகாளியின் களம் வரைந்து 'களம்பூஜை' நடத்துவர். முதலில் பூசாரியும் பின் தீயாட்டுண்ணியும் பூசை செய்து 'திரிஉழிச்சல்' நிகழ்த்துவர். திரிஉழிச்சல் என்பது தீப்பந்தத்தால் தீயாட்டுண்ணி தன் உடலை நீவுதலாகும்.

'களம்அழித்தல்' நிகழ்வுக்குப் பிறகு 'தீயாட்டு' நிகழ்த்தும் களத்தில் வைத்து தீயாட்டுண்ணி பத்ரகாளி வேடம் புனைவார். வேடம் புனையும் போது முகத்தில் புள்ளிகள் வைப்பது வழக்கம். அவை வைசூரிப் புள்ளிகள் என்று கருதப்படுகின்றன. தீயாட்டுண்ணி வேடம் அணிந்து விளக்கினைத் தொழுத பின் விளக்கிற்கு, தன் முதுகை காண்பித்தவாறு திரும்பி அமர்வார். அதற்கான காரணம் பின்வருமாறு கூறப்படுகின்றது.

தாருகனைக் கொன்ற பிறகும் சினமடங்காத காளி தாருகனின் தலையுடன் கைலாயத்தை அடைந்தாள். சிவன் காளியின் சினத்தை அடக்குவதற்காக திகம்பரனாக நடனம் ஆடினார். அதனால் நாணமடைந்த காளி திரும்பி நடந்தாள். தீயாட்டு நிகழ்வில் இடம்பெறும் 'விளக்கு' சிவபெருமானாக நம்பப்படுகிறது. அதனால் காளி வேடம் புனைந்த தீயாட்டுண்ணி காளியின் நாணத்தை வெளிப்படுத்தும் விதமாக விளக்கிற்கு தன் முதுகினைக் காட்டியவாறு அமர்கின்றார்.

காளி கைலாயத்தைச் சுற்றி வந்து தன் தந்தையின் முன் நின்றவாறு தாருகவதக் கதை முழுவதையும் கூறுவதாக தீயாட்டில் விவரிக்கப்படுகின்றது. முழுக்கதையினையும் கை முத்திரைகளால் காட்டி விளக்கிவிடுகின்றார்கள். தீயாட்டுண்ணி காளி வேடம்

அணிந்து சடங்குகளை நிறைவேற்றிய தறுவாயில் கிரீடம் மற்றும் விளக்கினை வணங்கி கதையினை முடிப்பார். பக்தர்களையும், களத்தையும் தீப்பந்தத்தால் நீவி பந்தத்தினை அணைத்த பிறகு சடங்கு பூரணமாக நிறைவு பெறும்.

தீயாட்டு என்னும் இச்சடங்குக்கலை சைவத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. காளி வைசூரியைத் தடுப்பவள் என்பதால் 'காளிதீயாட்டு' நிகழ்த்துவதன் மூலம் வைசூரிநோய் மக்களை துன்புறுத்தாது என்று நாட்டார் நம்புகின்றனர்.

**படையணி**

கேரளத்தில் மத்திய திருவிதாங்கூரில் பகவதி கோயில்களில் 'படையணி' ஒரு முக்கிய சடங்குக் கலையாகத் திகழ்கிறது. மாசி, பங்குனி மாதங்களில் கொண்டாடப்படும் பரணி விழாவின் போது படையணி நிகழ்த்தப்படுகின்றது. கொல்லம் பத்தனம் திட்டை, ஆலப்புழை மாவட்டங்களில் படையணி சிறப்பாக நிகழ்த்தப்பட்டு வருகின்றது. படையணி என்பதற்குப் படைகளின் வரிசை என்பது பொருள். தாருகனை அழித்த பின்னும் சினம் அடங்காத காளி கைலாயத்திற்குச் செல்வதைக் கண்ட அனைவரும் பயந்தனர். சிவபெருமான் காளியின் சினத்தை அடக்குவதற்காக தன்னுடைய பூத கணங்களுடன் பைரவி, மாடன், மருதா, காலகேசி ,காலாரி போன்ற வேடம் புனைந்து பாட்டுப் பாடி ஆடினார். இதன் நினைவாக இன்றும் படையணி கொண்டாடப்படுகின்றது. படையணியின் போது பல்வேறு வேடங்கள் இட்டு ஆடுவதுண்டு. அவற்றில் மருதாக் கோலம், இயக்கிக் கோலம், பறவைக் கோலம், குதிரைக் கோலம், பைரவிக் கோலம் போன்றவை முக்கியமான கோலங்களாகும். ஒவ்வொரு கோலங்களுக்கும் ஒவ்வொரு குறிக்கோள் உண்டு. பைரவிக்கோலம் பற்றிய குறிப்பு சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றிருக்கின்றது.

**"பாரதி யாடிய பாரதி அரங்கத்துத்**

**திரிபுரம் எரிய தேவர் வேண்ட"**

(சிலப்.கடலாடுகாதை,பா.39-40)

என்ற பதிவில் காணும் பாரதி என்பதற்கு பைரவி என உரையாசிரியர்கள் பொருள் கொள்கின்றனர். பைரவி ஆடிய சுடுகாடு பைரவி அரங்கம் என ஆயிற்று.

**"பாரதி ஆடிய வியன்பாண்டரங்கமும்"**

(சிலப். கடலாடுகாதை , பா .44 -45)

பாரதி வடிவாய இறைவன் வெண்ணீற்றை அணிந்து ஆடிய பெரிய பாண்டரங்கக் கூத்தும் என்ற பதிவுகள் இங்கு குறிப்பிடத்தக்கன. கேரளத்தில் நிகழ்த்தப்படும் படையணியில் இடம்பெறும் பைரவிக் கோலம் சிலப்பதிகாரம் காட்டும் பாரதியாட்டமே என்று துணியலாம்.

படையணி என்னும் துள்ளல் கலையினை நிகழ்த்துவதற்கு சிறந்த உடற்பயிற்சியும் அனுபவமும் தேவை. கடமணிட்டகாவு என்னும் கோயிலில் நிகழ்த்தப்படுகின்ற படையணி மிகப் புகழ் பெற்றதாகும். ஓட்டந்துள்ளல், பறையன் துள்ளல், சீதங்கன் துள்ளல் என்னும் துள்ளல் கலை உருவானதில் படையணிக்கு முக்கிய பங்கு உண்டு. படையணியை முழுமையாக நிகழ்த்துவதாக இருந்தால் இருபத்திநான்கு நாட்கள் வேண்டும். இன்றைய காலங்களில் ஏழுநாட்கள் நிகழ்த்தப்படுகின்றன. சாதி, மத, இன வேறுபாடு இன்றி அனைத்து மக்களும் விழாவில் கலந்து கொள்கின்றனர். ஒவ்வொரு நாளும் இக்கலை நிகழ்ச்சிகளின் இறுதியில் மக்களை மகிழ்ச்சிப் படுத்துவதற்காக பல வினோதங்களையும் நிகழ்த்துகின்றனர். காக்காத்தி (குறத்தி) மரைக்காத்தி (முகமதியப் பெண்) ஸ்ரீரங்கன், பறையன், பரதேசி, வயோதிகப்பெண், அந்தோணி, கள்குடித்தவன் போன்ற பல வேடங்களும் பார்வையாளர்களை ரசிக்க வைக்கின்றது. நகைச்சுவை உணர்வைத் தூண்டுகின்றது. இவை காலமாறுதல்களுக்கேற்றவாறு மாற்றமடைந்த

தன்மையினைக் காட்டுகின்றன. அத்துடன் அந்நாட்டாரிடையே உள்ள ஒற்றுமை உணர்வையும் புரிந்து கொள்ள முடிகின்றது.

**சடங்குகள்**

'காச்சி கொட்டு' என்பது படையணி நடக்கவிருப்பதை அறிவிப்பதாகும். மரக்கம்புகள், வெள்ளைத் துண்டுகள் ஆகியவற்றை வீசி ஆரவாரத்துடன் ஒலி எழுப்பிய நிலையில் நடனக் கலைஞர் நடனம் ஆடுவார். இதனைக் 'காப்பொலி' என்று அழைக்கின்றனர். அதனைத் தொடர்ந்து கைமணி கிலிக்கித் தாளம் இசைக்கப்படும். அத்தாளத்திற்கேற்றவாறு நடனக் கலைஞர்கள் துள்ளுகின்றனர். அதனை 'தாவடி துள்ளுதல்' என்பர். இச்சடங்கில் 'செண்டை' வாத்திய கருவியாக விளங்குகிறது. காப்பொலி தொடங்குகின்ற அன்றே 'கோலந்துள்ளலும்' தொடங்குகின்றது. பல வகையான கோலங்களைத் தலையில் வைத்துத் துள்ளுகின்றனர். துள்ளலுக்கு தகுந்தவாறு இசையும் பாட்டும் முழங்குகின்றது.

**கிரீடம்**

பச்சை கமுகுப்பாளைகளை ஒரு குறிப்பிட்ட வடிவில் வெட்டி அதனைச் சேர்த்து வைத்து அதில் பல வகைக் கோலங்களின் முகங்களை வரைவர். அக்கோலங்களைத் தலையில் வைத்துத் துள்ளுவர். இதனைக் கிரீடம் என்று அழைப்பர்.

கமுகுப்பாளைகளில் நிறைய ஓவியங்களை இயற்கையான வண்ணங்களால் வரைவர். கருப்பு நிறத்திற்கு கரியும், மஞ்சள் நிறத்திற்கு பச்சைமஞ்சளும், சிவப்பு நிறத்திற்கு செங்கல் பொடியும், பச்சை நிறத்திற்கு கமுகுப் பாளையின் இயற்கையான நிறமும், பயன்படுத்தப்படுகின்றன. கமுகுப்பாளையினை சிறிதளவு சுரண்டுதலின்

மூலமாக வெள்ளை நிறமும் கிடைக்கின்றது. பதினாறு முதல் நூற்றியொரு வரையிலான பாளைகள் உபயோகித்து பைரவிக் கோலங்களை உருவாக்குகின்றனர்.

கோலம் துள்ளுபவர் விரதம் மேற்கொள்ள வேண்டும் . படையணியாகிய சடங்குக் கலைக்கு தப்பு, செண்டை, கைமணி போன்றவை இசைக்கருவிகளாகப் பயன்படுத்தப்படுன்றன. இது சாதி மத பேதமின்றி மக்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து செயல்படுகின்ற ஒரு சடங்குக்கலையாகும். இந்நிகழ்வில் ஒவ்வொரு இனத்தாருக்கும் ஒவ்வொரு உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. இளநீர், கமுகுப்பாளை, குருத்தோலை போன்றவற்றைக் கொண்டு வருவதற்கான உரிமை தண்டான் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. தப்பு எனும் கருவிக்கு வேண்டிய எருமைத்தோலிற்கான உரிமை பறையர்களுக்கு உரியது. துணிகள் தைப்பதற்கும் சித்திரவேலைப்பாடுகளுக்கும் பாணர்கள் உரிமையுடைவர்களாவர். கோலம் வரைவதற்கும் பாட்டுப் பாடுவதற்கும் கணியான்மார் உரிமை கொண்டாடுவர். மர வேலைகளை ஆசாரி மேற்கொள்வார். இங்ஙனமே நாயர், மாரான் போன்றோரும் தத்தம் பணியைத் திறம்படச் செய்கின்றனர்.

படையணி காளியை மகிழ்ச்சி படுத்துவதற்காகவும் இயற்கை சீற்றத்தில் இருந்தும் தொற்று நோயிலிருந்தும் நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாப்பதற்காகவும் நிகழ்த்தப்படுகின்றது. சாதி மத இன வேறுபாடு இன்றி அனைவரும் ஒற்றுமையாக இச்சடங்குக் கலையினை நிகழ்த்தி வருகின்றனர். இப்படையணியை நிகழ்த்துவதற்கு அனுபவம் வாய்ந்த இளைஞர் குழுவினரின் கூட்டு முயற்சி மிகத் தேவையாகின்றது.

**தொகுப்புரை**

சிலப்பதிகாரம் புகார் காண்டத்தில் இடம்பெறும் அரங்கேற்று காதையில் தமிழக நிகழ்த்து கலையின் பாரம்பரியத்தை அறிய முடிகின்றது அக்காதையில் மாதவி ஆடிய பதினொரு வகையான ஆடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் துணங்கைக் கூத்து, வரிக்கூத்து, குரவைக்கூத்து, சாக்கியர் கூத்து முதலான பல கூத்துக் கலைகள் குறித்த தரவுகள் பிற காதைகளில் காணப்படுகின்றது. அக்கலைகள் பலவும் இன்றையகேரள நாட்டார் கலைகளாக நிகழ்த்தப்பட்டுவருகின்றன.

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விநோதக் கூத்துகளில் ஒன்றான 'தோற்பாவைக்கூத்து' கேரள நாட்டாரி டையே கோயில் கலையாகவும்,மக்கள் கலையாகவும் திகழ்கின்றது.

சிலப்பதிகாரம் காட்டிய 'சாக்கியர் கூத்தின்' பன்முகத்தன்மையை இன்றைக்கும் கேரளத்தில் காண முடிகின்றது. சிலப்பதிகாரம் 'நெடுவேள் வில் விழா' என்று காமன் விழாவினைக் குறிப்பிடுகின்றது. இன்றைய வடகேரளத்தில் 'மீனப்பூரம்' என்னும் பெயரில் இவ்விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்விழாவில் பூரமாலா ,பூரக்களி போன்றவை மிகச்சிறப்பானவையாகும்.இவ்விழா சாதி, மத பேதமின்றி அனைவராலும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

பழங்காலத்தில் பெண்களே பூசாரியாக இருந்தனர் என்பதற்கு சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் 'சாலினி,' 'தேவந்தி' ஆகியோர் சான்றாக அமைகின்றார்கள். அதன் மரபுத் தொடர்ச்சி இன்றைய கொடுங்கலூர் பகவதி வழிபாட்டில் நிலை பெற்றுள்ளது.

வேட்டுவவரியில் இடம்பெறும் எயினர் குலப் பெண்ணாகிய சாலினியின் வெறியாட்டு, வடமலபாரில் இன்றைக்கும் நிகழ்த்தப்பட்டுவரும் வேலனின் 'தெய்யம்' என்னும் நிகழ்த்து கலையுடன் தொடர்புடையதாகும். கேரள நாட்டார் கலைகள்

பெரும்பான்மையும் தாய்த் தெய்வங்களோடு தொடர்புடையவனாகவே காணப்படுகின்றன. இந்நிகழ்த்து கலைகளில் சடங்குகளும் கலைகளும் இரண்டறக் கலந்துள்ளன. இக்கலைகள் தேவதைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையேயுள்ள, நெருங்கிய தொடர்பினை எடுத்துரைக்கின்றது.

வட மலபாரில் தெய்யம், திரை போன்ற நிகழ்த்து கலை வடிவங்களில் தெய்வ ஆராதனையுடன் வீர ஆராதனையும் முக்கியத்துவம் பெறுகின்றது.

'தீயாட்டு' என்னும் சடங்குக்கலைக்கு திரையுடன் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. தீயாட்டு நிகழ்த்துவதன் மூலம் அம்மை முதலான பல தொற்று நோய்களிலிருந்து மக்களை பாதுகாக்க இயலும் என்றும்,

மழை வளம் பெருகும் என்றும் கேரள நாட்டார் நம்புகின்றனர். இத்தகைய நம்பிக்கையினூடே கண்ணகி வழிபாடு கேரள நாட்டாரிடையே உள்ளடங்கிக் கிடப்பதனையும் உணர முடிகின்றது.

தீயாட்டு, முடியேற்று, படையணி போன்ற நாட்டார் நிகழ்த்து கலைகள் காளி - தாருக வதைக் கதையுடன் தொடர்புபடுத்தியே நிகழ்த்தப்படுகின்றது.

இனக்குழு மக்களான மன்னான், வேலன், மலையன் போன்றோருக்கு அக்காலத்தில் சமூகத்தில் இருந்த பங்கினை அறிய முடிகின்றது. இவர்கள் தெய்வங்களின் வேடம் புனைந்து ஆடும் போது இவர்களை தெய்வமாகவே நினைத்து வழிபடுகின்றனர். இதன் அடிப்படையில் தான் புராதன நிகழ்த்து கலையின் தோற்றம் உருவெடுத்திருக்க வேண்டும் என்று கருதலாம்.

எனவே கேரள நாட்டார் கலைகள் சிலப்பதிகாரம் உள்ளிட்ட செவ்விலக்கியங்கள் எடுத்துக் காட்டிய கலை வடிவங்களில் இருந்து உருவாகி சிற்சில மாற்றங்களுடன் இன்றளவிலும் பாரம்பரியத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றன எனலாம்.

# இயல் – நான்கு

# சடங்குகளும் நம்பிக்கைகளும்

## சடங்குகளும் நம்பிக்கைகளும்

பழங்காலம் முதல் இன்றுவரை சடங்குகளும் நம்பிக்கைகளும் மனித வாழ்வில் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன. ஒவ்வொரு சமூகத்திலும் அவர் தம் பண்பாட்டுச் சூழலுக்கேற்றவாறு சடங்கியல் நிகழ்த்து கலைகளும் அவை குறித்த நம்பிக்கைகளும் வேறுபடுகின்றன. சடங்குகளும் நம்பிக்கைகளும் பன்முகத்தன்மை கொண்டவை. அவை தேவை, இடம், நோக்கம் போன்றவற்றின் அடிப்படையில் வேறுபடுகின்றன. **”பண்பாட்டின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட அனைத்து வகையான நடத்தை முறைகளையும் சடங்கு என்பது குறிக்கிறது”**. (தெ.வே.ஜெகதீசன், பழந்தமிழ்க் கலைகளும் அதன் நீட்சியும், ப.130) சடங்கு என்பது ஒருவகை நடத்தை முறையாகும் என்று ஏற்றுக்கொள்கின்ற அதே தறுவாயில் அதனை ஏனைய பல நடத்தை முறைகளில் காணலாகும் பல சிறப்புக் கூறுகள் வேறுபடுத்திக் காட்டுகின்றன.

மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு நம்பிக்கைகளைக் கொண்டிருக்கிறான். நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு அவர்களாலாலேயே பாதுகாக்கப்படுகின்றன. மனிதனின் தன்னல உணர்வும், சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன.

**”நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்ச உணர்வின் அடிப்படையாகத் தோன்றியதாகக் காட்சியளித்தாலும், இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராத பொழுதும், மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்கு காரணம் கற்பிக்க இயலாத பொழுதும், மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கையாக உருவாகின்றன.”**(டா.சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு,ப.108)

மனிதர்கள் தாங்கள் நினைத்த இலக்கினை அடைவதற்காகச் சடங்குகளை மேற்கொள்கின்றார்கள். அதன்பொருட்டு தமக்கும் தெய்வத்திற்குமிடையே, ஓர் உறவினை உருவாக்குகின்றனர். பழங்காலத்தில் அத்தகைய உறவு முறைக்கு வழிவகுத்தவர்கள் பாணர்களே என்று துணிந்து கூறலாம். ஏனெனில் இறை வழிபாட்டில் இரண்டறக் கலந்து காணப்படுவது பாட்டும் கூத்தும் ஆகும். அக்காலத்தில் பாடல்களைப் பாடுவதிலும் ஆடற்கலைகளை நிகழ்த்துவதிலும் பாணர்கள் சிறந்து விளங்கினர். சங்க இலக்கியங்கள் வாயிலாகப் பழந்தமிழ்ச் சமூகத்தில் பாணருக்கிருந்த சிறப்பிடத்தைப் புரிந்து கொள்ளலாம்.

**பாணர் மரபு**

'பாணர்' என்றசொல் 'பண்' என்பதன் அடியாகப் பிறந்தது. பண் என்பது பாடலையும், இசையையும் குறிக்கும். பண்ணை இசைத்தவர்களே பாணர்கள் எனப்பட்டனர். 'பாணன்' என்பதற்கு 'பாடவல்ல ஒரு சாதி' என்று தமிழ்ப்பேரகராதி விளக்கம் தருகின்றது.

**"பாணர் யாழ் என்னும் இசைக்கருவியோடு பாக்களைப் பாடும் கலைஞர். இவர்கள் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் என மூன்று வகைப்படுவர். யாழ்ப்பாணர்களில் சிறுபாணர், பெரும்பாணர் என இருவகைப்படுவர்."** (பக்தவத்சல பாரதி, பண்டைத்தமிழர் பண்பாடு,ப.75) பாணர்கள் கருவி இசையிலும், குரலிசையிலும் வல்லவர்களாகத் திகழ்ந்துள்ளனர் என்பதனை,

***"இன்குரல் சீறியாழ் இடவயிந் தழீஇ"*** (சிறுபாண்- பா .35)
**"இடனுடைப் பேரியாழ்"** (பெரும்பாண்- பா.462)

என்னும் பாடலடிகளால் உணரமுடிகின்றது.

சங்ககாலத்தில், நிகழ்த்துகலைக் கலைஞர்களில் பாணர்களே முக்கியமானவர்களாகக் கருதப்பட்டனர். அவர்களை பெருநிலவேந்தர்களும்

குறுநிலமன்னர்களும், திணைநிலை மக்களும் போற்றிப் புகழ்ந்துள்ளனர் என்பதனை ஆற்றுப்படை நூற்களும், அக, புற இலக்கியங்களும் கூறுகின்றன.

**"பழுமரம் தேடும் பறவை போல**
**கல்லென் சுற்றமொடு கால் கிளர்ந்து திரிதரும்**
**புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண"  ( பெரும்பாண் ,20-21)**

என்னும் பெரும்பாணாற்றுப் பாடலடிகளால் பாணர்கள் பழுமரம் தேடும் பறவைபோல தங்கள் உணவிற்காகப் பல்வேறு இடங்களிலுள்ள மன்னர்களை நாடிச் சென்றனர் என்று தெரிகின்றது. மேலும் சங்ககாலச் சமூகத்தில் பாணர்களுக்கு ஓர் இன்றியமையாத இடம் இருந்தது என்பதை,

**"துடியன் பாணன் பறையன் கடம்பனென்று**
**இந்நான் கல்லது குடியுமில்லை"**  (புறம். பா. 335:78)

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் புலப்படுத்துகின்றன. துடியன், பாணன், பறையன், கடம்பன் என்னும் இந்நான்கு குடிகளுமில்லை என்றால் இவர்களைச் சார்ந்த சமூகம் இயங்காது என்பதனை புறநானூற்றுப் பாடல் சுட்டுகின்றது.

சங்ககாலப் பாணர் போலவே சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் பாணர்களும் யாழ் வாசிக்கின்றவர்களாகவும், வாய்பாட்டு இசைக்கின்றவர்களாகவும் சித்திரிக்கப் பெற்றுள்ளனர். புகார்க்காண்டத்தில், பெரும்பாணர்களின் இருக்கையினைக் குறித்த செய்தியினை,

**"குழலினும் யாழினுங் குரல் முதலேழும்**
**வழுவின்றிசைத்து வழித்திறங் காட்டும்**
**அரும்பெறல் மரபிற் பெரும்பாண் இருக்கையும்**

(சிலப் ,இந்திரவிழவூர், பா .35-37)

என்னும் பதிவு காட்டுகின்றது.

மருவூர்ப்பாக்கத்தில், குரல் முதலான ஏழிசையினையும் குற்றமின்றி அமைத்து, பண்களையும் அவற்றின் வழி பிறக்கும் திறங்களையும், பாடவல்ல பெறற்கரிய இசைமரபினை அறிந்த பெரும்பாணர்களின் இருப்பிடங்கள் உள்ளதாக சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பட்டினப்பாக்கத்தில் உலவுகின்ற பொதிகைத் தென்றலை கோவலனுடன் ஒப்பிட்டுக் கூறுமிடத்தில் பாணர்கள் பற்றிய செய்தியும் இடம்பெறுகின்றது.

**"நகை யாடாயத்து நன்மொழி திளைத்துக்**
**குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு**
**திரிதரு மரபில் கோவலன் போல**
**இளிவாய் வண்டினொடு இன்னிள வேனிலொடு**
**மலய மாருதந் திரிதரு மறுகிற்"** (சிலப்.இந்திரவிழவூர்.பா.199-203)

என்ற பதிவு அதற்குச் சான்றாகின்றது..

மேற்கண்ட பாடலடிகள் பாணர்கள் கோவலன் போன்ற செல்வமிக்க இளைஞர்களுடன் நகரவீதியில் திரிந்தனர் என்பதனை உணர்த்துகின்றன. இதன் மூலம் சிலப்பதிகாரக் காலத்தில் பாணர்களுக்கு இருந்த செல்வாக்கினை அறியமுடிகிறது. மேலும் பல்வேறு இசைக்கலைஞர்களுடன் இணைந்து பாணர்களும் பாடல்கள் பாடி இருந்தனர் என்பதை

**"கண்ணுளாளர் கருவிக் குயிலுவர்**
**பண்ணி யாழ்ப்புலவர் பாடற் பாணரொடு**
**எண்ணருஞ் சிறப்பின் இசை சிறந்தொரு பால்"**

( சிலப். இந்திரவிழவூர்,184-186)

என்ற அடிகள் வாயிலாக அறிகின்றோம். கூத்தர், குழல்வாசிப்பவர், யாழ்வாசிக்கின்ற புலவர், கண்டத்தால் பாடுகின்ற பாணர் என்னும் இக்கலைஞர்களின் சிறப்பான இசைத்திறன்கள் சிறந்து விளங்கியதாக மேற்கண்ட பாடலடிகள் தெளிவுறுத்துகின்றன.

வெற்றியை அளிக்கக் கூடிய துர்க்கையின் போர்க் கோலத்தைப் பாணர்கள் யாழ் வாசித்துப் பாடுவதனை,

**"ஆசில் கொள்கை அறவிபால் அணைந்தாங்கு**
**ஆடியில் கொள்கை அந்தரிக் கோலம்**
**பாடும் பாணரிற் பாங்குறச் சேர்ந்து"**

(சிலப். புறஞ்சேரியிறுத்த, பா.103-105)

**"கூடற் காவதம் கூறுமின் நீர்"**

(சிலப். புறஞ்சேரியிறுத்த, பா.114)

என்ற பதிவுகள் காட்டுகின்றன.

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் 'வேட்டுவ வரி' என்னும் பகுதியில் கொற்றவையின் அருளால் மறவர்களுக்குக் கிடைத்த பசுக்கூட்டங்கள் துடியன்,பாணன் போன்றோர் முன்றிலில் நிறைந்து காணப்பட்டன என்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

**"இளமா வெயிற்றி இவை காண் நின்னையர்**
**தலை நாளை வேட்டத்துத் தந்த நல்ஆனிரைகள்**
**கொல்லன், துடியன்கொளை புணர்சீர் வல்ல**
**நல்லியாழ்ப் பாணர் தம் முன்றில் நிறைந்தன"**

(சிலப்.வேட்டுவவரி. உரைபாட்டு.14)

என்ற இளங்கோவடிகளின் பதிவு குறிப்பிடத்தக்கது. மறவர்கள் தாம் கவர்ந்த பசுக்கூட்டங்களை, துடி கொட்டும் துடியன், யாழிசைத்துப் பாடவல்ல பாணர்கள் போன்றோருக்கு கொடுத்தார்கள் என்பதிலிருந்து பாணன் மறவர் இனத்துடன் தொடர்பு கொண்டுள்ளமையை அறியலாம். இதனை தொல்காப்பிய நூற்பா '**கொடை'** (தொல்.புறத்.58) என்று குறிக்கின்றது. அதாவது தாம் கொண்ட நிரையை இரவலர்க்கு வரையாது கொடுத்து மனமகிழ்தலும், நிரைமீட்டோர்க்கு வெற்றியின் பொருட்டு விளைந்த கொடைப் பகுதியும் எனச் சுட்டுகின்றது.

**கேரளத்தில் பாணர்**

சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரத்திலும் குறிப்பிடப்படும் பாணர் மரபினர் கேரளப்பகுதிகளில் இன்று வரையிலும் அப்பெயரிலேயே அறியப்பட்டு வருகின்றனர். பண்டைய இலக்கியங்கள் காட்டிய அவர்தம் வாழ்க்கை முறையினை தற்காலத்தில் அவ்வாறே காண இயலுவதில்லை. எனினும் அவ்விலக்கியங்கள் எடுத்துரைத்த வாழ்வியல் கூறுகள் பல கேரளப் பாணர்களிடையே இன்றும் தொடர்ந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. கேரள நாட்டார் மரபிலிருந்து பாணர்களை அவ்வளவு எளிதாக விலக்கி விட முடியாது. பண்டைய பாட்டு மரபினை இன்றும் வளர்த்துவரும் இனத்தினராக இவர்கள் காணப்படுகின்றார்கள். கேரளத்தில் இன்று அவர்கள் அடித்தள மக்களாகக் கருதப்பட்டு வருகின்றனர். இப்பாணர்கள் வரருஜி என்ற பிராமணருக்கும் பஞ்சமி என்ற ஒரு பறையர் இனப்பெண்ணுக்கும் பிறந்ததாக ஒரு கதை கேரளத்தில் வழங்கி வருகின்றது.**"பறைப்பெண் பெற்ற பன்னிரண்டு குலங்களுள் ஒருவரே கேரளத்தில் வாழும் பாணர் மரபினர் என்று தங்களைக் கூறிக் கொள்கின்றனர். அப்பன்னிரண்டு குலங்கள்- அக்னிகோத்திரி, ரஜகன், பெருந்தச்சன், வள்ளுவன், நாராணத்துப்பிராந்தன், உப்புக்கூற்றன், வடுதல்நாயர், திருவரங்கத்துப் பாணனார், பாக்கனர், அகவூர்ச்சாத்தன், காரைக்காலம்மையார், வாயில்லா குன்றிலப்பன் ஆகியோர் ஆவர்"** (என்.கிருஷ்ணன் நாயர், நாராணத்துப் பிராந்தனும் பாக்கனாரும்,ப.19)

திருவரங்கத்துப் பாணனார் பரம்பரையில் தோன்றியதாகக் கூறும் கேரளப் பாணர்கள், முன்காலங்களில் மன்னர்கள், மற்றும் குறுநிலமன்னர்களின் விருந்தினராக இருந்தனர். இப்பொழுது இசைக்கலைத் தொழிலுடன் யானைக்கு நெற்றிப்பட்டம் கட்டுதல், முத்துக்குடை தைத்தல், கோவிலுக்குத் தேவையான ஓலையாலான

பொருட்களைத் தயாரித்தல் போன்றவற்றுடன், அனைத்துத் தொழில்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

கேரளத்தில் பாணர்கள் தங்களுக்கே உரித்தான பல சடங்குகளையும், கலைகளையும் நிகழ்த்தி வருகின்றனர். இவர்கள் ஆடல், பாடல், இசையில் சிறந்தவர்களாக விளங்குகின்றனர். சடங்குக் கலைகள் நிகழ்த்தும் போது பாணனின் மனைவியாகிய 'பாட்டி'யும் உடன் வருவாள். மந்திரவாதமும், மருத்துவமும் அவர்களின் தொழிலாக இருந்தது. கோலங்கள் புனைந்து ஆடுவதிலும், தெய்யம், திற முதலான வேடம் புனைவதிலும் சிறந்தவர்களாக விளங்கினர்.

தென்கேரளத்திலும் மத்தியகேரளத்திலும் 'பாணர்களி' என்ற ஒரு கலையையும், பாணர்கள் நிகழ்த்தி வருகின்றனர். பாலக்காடு மாவட்டத்தில் 'பாங்களி' என்ற கலை சிறப்புமிக்கதாக விளங்குகிறது. ஓணப்பாட்டுகள், பொலிச்சுபாட்டுகள், சீவோதிப்பாட்டுகள், கோதாவரிப்பாட்டுகள், துயிலுணர்த்துப்பாட்டுகள், தோற்றம்பாட்டு, கண்ணேறுபாட்டு, பலிக்களப்பாட்டு, தோலுழிச்சல்பாட்டு, மந்திரப்பாட்டு போன்ற பாடல்களை பாணர்கள் பாடிவருகின்றனர்.

கேரளாவில் பாலக்காடு மாவட்டத்திலுள்ள பல பகுதிகளிலும் பாணர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் பாட்டோடு தொடர்புள்ளவர்கள். நெற்கதிர் அடிக்கும் இடங்களில் இம்மக்கள் இன்றைக்கும் பாடி வருகிறார்கள். இவர்கள் பாடினால் நெற்பொலி மிகுதியாகும் என்பது நம்பிக்கை. அதேபோல் வீடுகளுக்குச் சென்று வாழ்த்துச் சொல்லி பாடி வருகிறார்கள். இது 'அகவுணர் செய்கை' போன்று உள்ளது. ஆகவே பண்டைய பாணர் மரபினை தற்காலக் கேரளத்து பாணர்களிடம் தான்

பார்க்க முடிகின்றது. இங்குள்ள பாணர்கள் தாழ்த்தப்பட்ட பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பேரா.ஞானப்பழம் குறிப்பிட்டுள்ளார்.

பாலக்காடு மாவட்டத்தில் பாணர்கள் சிறந்த 'பொறாட்டு' நாடகக் கலைஞர்களாகவும் விளங்குகின்றனர். மலப்புறம், வள்ளுவநாடு போன்ற பகுதிகளில் கோயில் விழாக்கள் கொண்டாடுவதற்கான நாளினைக் குறித்துவிட்டால் பாணர்கள் 'பூதவேடம்' புனைந்து வீடுகள் தோறும் செல்கிறார்கள். அதற்கான பரிசில்களையும் பெறுகின்றனர்.

ஓணத்தின் முன்னோடியாக ஆனி மாதத்தில் பாணர்கள், பகலில் ஒவ்வொரு வீடாகச் சென்று பாட்டுப் பாடி, ஆடுவதைக் 'குறத்திக்களி' என்றழைக்கின்றனர். ஆடிமாதம் விடியற் காலையில் ஒவ்வொரு வீடாகச் சென்று பாடி வீட்டிலுள்ளவர்களை உணர்த்துவதை 'துயிலுணர்த்தல்' என்றழைக்கின்றனர். ஆவணி மாதங்களில் 'ஓணேஸ்வரன்' வேடம் அணிந்து பாடுகின்றனர். புரட்டாசி மாதங்களில் வருகின்ற திருவோண நாளையும் கேரளமக்கள் ஓணமாகவே கொண்டாடி வருகின்றனர். புரட்டாசி திருவோண நாளிலும் பாணர்கள் ஓணப்பாட்டு பாடுகின்றனர். வடமலபார் வாழ் பாணர்கள், வடக்கன் வீரர்களாகிய தச்சோளி உதயணன், ஆரோமல் சேவகர் போன்றவர்களைப் பற்றி பாடல்களைப் பாடியுள்ளனர். அவை 'வடக்கன்பாட்டுகள்' என அறியப் பெறுகின்றன. இங்ஙனம் சிலப்பதிகாரம் எடுத்துரைத்த பாணர்களின் மரபார்ந்த பாட்டு மரபு மற்றும் கலைத்திறன்கள் இன்றைய கேரள வாழ் பாணர்களிடம் நிலைபெற்றிருப்பதை அறிய முடிகின்றது.

**குறத்திக்களி**

பாணர்களின் வாழ்வியலோடு தொடர்புடைய குறத்திக்களியை கேரளத்தில் ‘பொட்டிக்களி’ என்றும் அழைப்பர். களி என்றால் ஆடல் என்று பொருள். இச்சடங்கில் பாணன் ஒவ்வொரு வீடாகச் சென்று பாட்டுப் பாடுவான். பாணனுடன் ஒரு சிறுமி அல்லது சிறுமி வேடம் பூண்ட ஒரு சிறுவன் இருப்பான். அச்சிறுமி மஞ்சள்பொடி, சாந்து, பச்சரிசிப் பொடி ஆகியவற்றால் முகத்தில் (கோலம்) வேடம் புனைந்திருப்பாள். பாணனின் பாட்டிற்கு ஏற்றவாறு உடனிருக்கும் சிறுமி ஆட்டம் ஆடுவாள். பாணர்கள் துடி என்னும் இசைக்கருவியைப் பயன்படுத்துவர். இச்சடங்கு வேளாண்மை சிறக்கவும், மக்கள் செழிப்புடன் வாழவும் நடத்தப்படுவதாக கேரள மக்கள் நம்புகிறார்கள்.

**துயிலுணர்த்துப்பாட்டு**

பாணர்பாட்டுக்களில் ‘துயிலுணர்த்துப்பாட்டு’ மிகப் புகழ் பெற்றதாகும். பாணனும் பாடினியும் ஆடி, ஆவணி மாதங்களில் விடியற் காலையில் ஒவ்வொரு வீடாகச் சென்று துடி கொட்டிப் பாடி வீட்டிலுள்ளவர்களை துயிலுணர்த்துவர். துடி கொட்டுதலின் ஓசையைக் கேட்டு வீட்டிலுள்ளவர்கள், பாணர் வரவினை அறிந்து, அவர்களை வரவேற்பர். வீட்டின் முற்றத்தில் விளக்கேற்றி, வாழை இலையில் நெல், அரிசி, தேங்காய் என்பனவற்றை வைப்பர். பாணன் இவற்றின் முன் நின்று கைமணி, தட்டு, துடி போன்ற இசைக்கருவிகளால் ஒலி எழுப்பிப் புராணக்கதைகளைப் பாடுவார். முதலில் திருவரங்கன் கதையைப் பாடுவார். நேரம் இருப்பின் ஹரிச்சந்திர சரிதம், ஸ்ரீகிருஷ்ணலீலை போன்ற சில புராணக்கதைகளையும் பாடுவதுண்டு. ஆடி மாதத்தின் ஒன்றாம் தேதி முதல் துயிலுணர்த்து பாட்டு பாடப்படுகின்றது. ஆடி மாதத்தில் மூதேவியை வீட்டிலிருந்து

வெளியேற்றி ஸ்ரீதேவியை வரவேற்பதற்காக இப்பாடல் பாடப்பெறுகின்றது. இதன் மூலம் வீட்டில் வறுமை நீங்கி, வளம் பெருகும் என்று கேரள மக்கள் நம்புகிறார்கள்.

**"நாதா நாதா துயிலிணர்க**
**அச்சுதா ஹரி துயிலுணர்க**
**கோவிந்தா ஹரி துயிலுணர்க**
**கோபாலா ஹரி துயிலுணர்க"**

(டா.எம்.வி.விஷ்ணுநம்பூதிரி, நாட்டறிவு படணங்கள், ப.128)

எனப்பாடி பாணர்கள் கிருஷ்ணனைத் துயிலுணர்த்துகின்றனர்.

துயிலுணர்த்திப் பாடியவர்களுக்கு நெல், அரிசி, தேங்காய் இவற்றுடன் பணமும் காணிக்கையாகக் கொடுப்பது வழக்கம். இன்றும் இத்துயிலுணர்த்துப் பாட்டு பாடப்படுகிறது.

துயிலுணர்த்துப் பாடல் குறித்த ஒரு கதை கீழ் வருமாறு,

**"சிவனும், பார்வதியும் பிக்ஷாடனம் நடத்திய காலத்தில், சிவபக்தனாகிய திருவரங்கத்துப்பாணனாரும் அவர்களுடன் சுற்றி நடந்தார். ஒருமுறை சிவனும், பார்வதியும் சூதாட்டம் ஆடினர். இவ்வாட்டத்தில் பார்வதி சிவபெருமானைத் தோற்கடித்தார். இதனைக் கண்ட பாணனார் கைகொட்டிச் சிரித்தார். சிவபெருமான் சினந்து, பாணனைக் கொன்றார். பார்வதி பாணனை உயிர்த்தெழச் செய்தாள். உயிர்த்தெழுந்த பாணன், சிவனைப்பார்த்து 'நித்திரையில் ஆழ்க' என்று சாபம் கொடுத்தார். சிவன் நித்திரையில் ஆழ்ந்ததைக் கண்ட தேவர்கள், திருவரங்கத்துப் பாணனாரால் மட்டுமே சிவனை துயிலெழுப்ப முடியும் என்று கருதினர். எனவே திருவரங்கத்துப் பாணனார் தன் மனைவியுடன் வந்து சிவனைத் துயிலெழுப்பினார். அன்றிலிருந்து, திருவரங்கத்துப்பாணன் 'துயிலுணர்த்துப்பாட்டு' பாடி, அதன்மூலம் கிடைக்கின்ற வருமானத்தால் வாழ்க்கையை நடத்துமாறு சிவன் வரம் அருளினார்.**

**அதன்படி பரம்பரையாக பாணர்கள் துயிலுணர்த்துப் பாட்டு பாடி வருகின்றனர்."** (டா.எம்.வி.விஷ்ணுநம்பூதிரி, ஃபோக்லோர் நிகண்டு) இக்கதை இன்றும் பாணர்களிடையே வழங்கப்பட்டு வருகின்றது.

பாலக்காட்டில் பாணர்கள் ஈழவர் என்னும் இனத்தாருக்கு பிறப்பு, இறப்பு, திருமணம் போன்ற செய்திகளை அறிவிக்கின்ற தூதுவர்களாக இருந்தனர். இது பழந்தமிழ் நூல்கள் காட்டும் மரபார்ந்த தொழிலாகும். தற்பொழுது இவர்கள் இசைக்கலைஞர்களாகவும், நடனக்கலைஞர்களாகவும், பொறாட்டு நாடகக் கலைஞர்களாகவும், கோயில் கலைகளை வளர்ப்பவர்களாகவும் காணப்படுகின்றனர். கேரளப் பாணர்களின் இத்தகு கலைத்திறன்கள் சங்க காலம் முதலே தொடர்ந்து வருவன என்பது கண்கூடு. இவை மட்டுமின்றி தற்காலத்தில் தங்கள் பொருளாதார மேம்பாட்டிற்காக பிற தொழில்களையும் செய்து வருகின்றனர். இங்ஙனம் சிலப்பதிகாரம் வழி நாம் உணர்ந்த பாணர்களின் கலைகள் சார்ந்த வாழ்வியலை கேரள நாட்டார் மரபில் காணமுடிகின்றது.

**குரவைக்கூத்து**

பழந்தமிழரின் கூத்து வகைகளில் ஒன்று குரவைக்கூத்தாகும். அடியார்க்கு நல்லார் ஆறு வினோதக் கூத்துக்களுள் ஒன்றாக இதைக் குறிப்பிடுவர். அவை குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை ஆகியன. பழந்தமிழ் இலக்கியங்களில் குரவைக்கூத்துப் பற்றி குறிப்பிட்டிருப்பினும், மிக விரிவான செய்திகளை சிலப்பதிகாரம் மட்டுமே தருகின்றது. இது ஒரு 'மலைநடனம்' என அபிதான சிந்தாமணி குறிப்பிட்டுள்ளது. சிலப்பதிகாரம், குறிஞ்சி நிலத்தில் முருகனைத் தெய்வமாகக் கொண்டு குறவர் ஆடிய குரவையை 'குன்றக்குரவை' என்று அழைத்தது. முல்லை நிலத்தில்

ஆய்ச்சியர் மாயவனை தெய்வமாகக் கொண்டு ஆடிய குரவையை 'ஆய்ச்சியர் குரவை' என்று குறித்தது.

குன்று, மரநிழல், மணல்பரப்புகள், மன்றங்கள் போன்றவை குரவையாடும் இடங்களாக இருந்தன. குரவை என்பது எழுவர் அல்லது ஒன்பது பேர் ஆடும் கூத்து என்று அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டுள்ளார்.

**"தண்ணுமைப் பாணி தளராது எழூஉக**
**பண் அமை இன்சீர்க் குரவையுள்"** (கலி. பா.102:34-35)

என்னும் பாடலடிகள் மூலமாக குரவை என்பது வட்டமாக நின்று, இசைக் கருவி முழங்க பாடல் பாடி ஆடியதாக அறிய முடிகின்றது. சிலப்பதிகாரம் காட்டும் குரவைக்கூத்து ஆடப்பெற்ற களம் வட்டவடிவமானது. அவை குரல், துத்தம், விளரி, கைக்கிளை, உழை, இளி, தாரம் என இசையின் ஏழு பண்களின் பெயர்களைப் பெற்றிருந்தது. கண்ணன் நப்பின்னையோடு ஆடிய நாடகத்தைப் பாடி ஆடினர். குரவைக் கூத்தினை தமிழக கிராமங்களில் 'கும்மி' ஆட்டத்தின் வடிவில் காணமுடிகின்றது. இதன் நீட்சியினை கேரளத்திலும் காணமுடிகின்றது. திருவாதிரை விழாவின் போதும், ஓணவிழாவின் போதும் குரவையுடன் தொடர்புடைய 'திருவாதிரைக்களி' நிகழ்த்தப்படுகின்றது. கைகொட்டிக்களி என்ற ஆடல் வகையும் இதனுள் உள்ளடங்கும். இது பெண்களால் ஆடப்பெற்று வரும் கலையாகும். இவ்வாடலின் போது இராமாயணக் கதைமாந்தர்கள் ஸ்ரீகிருஷ்ணன், வாமனன் போன்றோர்களின் கதைகள் பாடப் பெறுகின்றன.

**"கண்ணா கடல்வண்ணா**
**கனிவேறும் முகில்வண்ணா**

**கண்மதம் அகலவே**
**வழி நல்குக என் முகுந்தா"**

(டா.என்.விஷ்ணு நம்பூதிரி, நாட்டறிவுப் படணங்கள், ப.126)

என்னும் பாடலடிகள் கண்ணனை வேண்டிப் பாடிய பாடலாகும். கைகொட்டிக்களியில் ஏழுபேர் அல்லது ஒன்பது பேர் வட்டமாக நின்று, குத்துவிளக்கு ஏற்றி அலங்கரித்து அதன் முன் ஆடுவதாகும். கைகொட்டிக்களியும், திருவாதிரையும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையன. இவையிரண்டும் கேரள மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றார்கள் என்று மகாபலி சக்கரவர்த்திக்கு எடுத்துரைக்கும் பொருட்டு நிகழ்த்தப்படுகின்ற சடங்குக் கலையாகத் திகழ்கின்றன.

மனிதனின் நம்பிக்கைகள் தொன்று தொட்டு ஆழ்மனதில் பதிந்த ஒன்றாகும். சங்க இலக்கியத்தில் நம்பிக்கை சார்ந்த செயல்பாடுகளாகக் கட்டு, கழங்கு, வெறியாடல் போன்றவை பதிவு செய்யப்பட்டுள்ளன.

**"கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்**
**ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்"** (தொல்.களவு.24)

என அக்கால நம்பிக்கை சார்ந்த நிகழ்வுகள் குறித்து தொல்காப்பியம் பதிவு செய்துள்ளது. மேலும், வெறியாட்டினை தனித்துறையாக தொல்காப்பியம் கூறுகின்றது.

**"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
**வெறியாட்டயர்ந்த காந்தளும்"** (தொல்.பொருள்.60)

வெவ்வாயினை உடைய வேலன் தெய்வமேறியாடுதலையும் தொல்காப்பியர் சுட்டிச் செல்கின்றார். அதனை 'செங்காந்தள்' என்பார் நச்சினார்க்கினியர்.

வெட்சி வீரர்கள் நிரை கவரச் செல்வதற்கு முன் போரில் வெற்றி கிடைக்குமா என்பதனை அறிய வேலனை அழைத்து, வெறியாட்டு நடத்தி குறி கேட்பர். வேலன் காந்தள்மலர் சூடி வெறிக்களம் அமைத்து, வெறியாடி வாக்குரைப்பான்.

**பழந்தமிழ் இலக்கியங்களில் வெறியாட்டுக்களம்**

**"வெறியாட்டு முருக வழிபாட்டின் தொடக்கமாக நடத்தப்பெற்ற ஒரு இனக்குழுச்சடங்கு"** என்று குறிப்பிட்டுள்ளார் நா.வானமாமலை. (செவ்வியல் இலக்கியச்சிந்தனைகள், 2009,ப.55)

வேலன் வெறியாட்டின் போது, தெய்வத்தை சாந்தி செய்து பூசிப்பதற்கும், வெறியாடுவதற்கும் பயன்படும் இடத்தினை களம் என்றழைப்பர். வெறியாட்டுக்களம் குறித்து சங்க இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின்றன. திருமுருகாற்றுப்படை வேலன் வெறியாடுகின்ற களம் அமையும் இடங்களைக் குறித்துள்ளது.அவை காடு,காவு, துருத்தி, மன்றம், பொதி, கடம்பமரம் போன்றவையாகும். இதனை,

**"வேலன் தைஇய வெறிஅயர் களனும்**
**காடும் காவும் கவின்பெறு துருத்தியும்**
**யாறும், குளனும் வேறுபல் வைப்பும்**
**சதுக்கமும், சந்தியும், புதுப்பூங் கடம்பும்**
**மன்றமும் பொதியிலும்"** (பத்துப் ,திருமுருகாற்றுப்படை,6:222 -226 )

என்னும் பாடல் விரிவாக எடுத்துரைத்துள்ளது.

**"வேலன் வெறியயர் வியன் களம்"** (அகம்.பா.182-17)

வேலன் வெறியாட்டயர்கின்ற களம் அகன்றதாக இருந்தது என்றும்,'பெயம்மணல் முற்றம்' (ஐங்குறுநூறு,பா.எ.248) என்றவாறு அங்கு புதிய மணல் பரப்பப்பட்டிருந்தது என்றும் சங்க இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன.

**"எம்மணங்கினவே மகிழ்ந முன்றில்**
**நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்**
**வேலன் புனைந்த வெறியயற் களந்தொறும்**
**செந்நெல் வான்பொரி சிதறி யன்ன"** (குறுந். பா. எண் 53)

என்ற குறுந்தொகைப் பாடலின் மூலம் மணற்பரப்பிலே புன்க மலர்கள் உதிர்ந்து பரவிக்கிடத்தல், முருகன் வெறியயர் களந்தொறும் செந்நெல்லின் வெண்பொரி சிதறியது போல இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளது. வேலன், வெறியாட்டக்களத்தில் வெண் பொறிதூவி வழிபட்டமை தெரியவருகின்றது. வேலனே வேறியாட்டுக் களத்தினை அமைத்த தகவலும் மேற்கண்ட பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமுருகாற்றுப்படை வெறியாட்டக் களத்தினை மிக விரிவாக எடுத்துரைத்துள்ளது. **”தெய்வமேறி ஆடும் குறப்பெண், வெறியாட்டக்களத்தில் வெண்பொரியைத் தூவி, கிடாயினது ரத்தத்துடன் கலந்த வெள்ளரிசியை பலியாக இடுகின்றாள். பந்தலில் செவ்வலரி மாலையையும், பிற மாலைகளையும் சமமாக அறுத்துத் தோரணங்களாகத் தொங்கவிட்டிருந்தார்கள். இசைக்கருவிகள் முழங்கியது. சிவந்த நிறத்தினை உடைய பல பூக்களையும் தூவி”** வெறியாட்டச் சடங்கு நிகழ்த்தியதாகக் குறிப்பிட்டுள்ளது. ( பத்துப். திருமுருகாற்றுப்படை, பா. 244-277)

**கல்லாடம்**

கல்லாடம் என்னும் நூலில் வேலனின் களம் அமைப்பு முறையும்,அதன் சடங்கும் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. **“உறவினர் கூடியிருக்கும் முற்றத்தில் முருகனது மயில் கொடி நடப்பட்டது. தரையெங்கும் வெட்சிமலர்கள் பரப்பப்பட்டன. தேக்கிலைகளில் ரத்தம் கலந்த தினைமாவு படைக்கப்பட்டது. அவை நான்கு திசைகளில் வைக்கப்பட்டன. வேலன் ஆட்டுக்குட்டியைப் பலிகொடுக்கிறான்.”** (கல்லாடம்,25:4-11 )என்ற பதிவு இங்கு கருதத் தக்கது.

**தொல்லியல் சான்று**

**”வேலன் வெறியாட்டினை விளக்கும் வகையிலான முத்திரை ஒன்று மொகஞ்சதாரோ அகழாராய்ச்சியின் போது கிடைத்துள்ளது. அதில் மூன்று பிரிவுள்ள**

**சதுர வடிவிலான சின்னமொன்று உள்ளது. மொகஞ்சதாரோ முத்திரையில் களஞ்சியத்தைக் குறிப்பிடும் குறியீடு மௌரியர் காலத்து நாணயங்களில் களஞ்சியத்தைக் குறிக்கும் சித்திரத்தோடு ஒத்திருக்கின்றது.'களம்' என்ற சொல்லும், களஞ்சியம் என்ற சொல்லும் ஓசையிலும், பொருளிலும் ஒன்றுக் கொன்று தொடர்புடையவை. எனவேதான் இரண்டிற்கும் ஏறத்தாழ ஒரே மாதிரியான குறியீடு பயன்படுத்தப்பட்டுள்ளது"** இச்சதுரம் மூன்று பிரிவுகளைக் கொண்ட களம் என்றே கருதவேண்டும் என்று பி.எல்.சாமி குறிப்பிட்டுள்ளார். (நா. வானமாமலை, (ப.ஆ) வேலன்வழிபாடு,ப. 19 )

சிலம்பில் காணப்படும் வேலன் வெறியாடலும், வெறியாட்டுக்களமும் குறித்த செய்திகளை பழந்தமிழ் இலக்கியங்கள் மிகச் சிறப்பாக எடுத்துரைத்துள்ளன.

கேரளத்தின் வடமலபார் பகுதிகளில், பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் வேலன் வழிபாட்டுச் சடங்கு முறைகளைப் பின்பற்றும் இனத்தவர் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் வேலன் என்றழைக்கப்படுகின்றனர்.

**"மலையாள நாட்டில் வேலன்மார் செய்யும் தெய்வம் சார்ந்த வழிபாடுகள் சங்ககாலத்து வேலன் வெறியாட்டின் எஞ்சிய கூறுகளே என்றும், வேலன் வழிபட்ட களமே பல்வேறு மந்திரங்கள் செய்யும் களமாகப் பின்னாளில் மாறியது"** என்று கேரள வேலன் ஆட்டத்தை ஆராய்ந்த பி.எல்.சாமி குறிப்பிடுகின்றார். (நா.வானமாமலை, (ப.ஆ) மக்களும் மரபுகளும், ப.11) கேரளநாட்டார் வழிபாட்டு மரபில், வேலன் இனத்தாரால் நிகழ்த்தப்பெறும் வெறியாட்டக்களத்தின் சடங்குகள், இன்றுவரை தொடர்ந்து வருகின்றது. இவை சங்ககால வெறியாட்டின் மரபுத்தொடர்ச்சியே எனலாம். வெறியாட்டு வெவ்வேறு வடிவங்களில் வழிபாடாகவும், சடங்காகவும் இன்றைய சூழலில் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

**சிலப்பதிகாரம் காட்டும் வெறியாடல்**

களவுக்காலத்தில் தலைவி, தலைவனை பிரிந்த காரணத்தால் உடல் மெலிந்தாள். இதனை அறியாத தாய் தன் மகளை, முருகன் அணங்கினான் எனக் கருதி வேலனை வெறியாட அழைக்கின்றாள். இதனை,

**"கரிவளர் தண்சிலம்பன் செய்த நோய் தீர்க்க**
**அறியாள் மற்றன்னை அலர் கடம்பன் என்றெ**
**வெறியாடல் தான் விரும்பிவேலன்வரு கென்றாள்"**

(சிலப்.குன்றக்.பாட்டுமடை,10)

தன்மகளுக்கு அவள் காதலனால் வந்த நோய் என்று அறியாமல் தாய் வேலனை அழைத்து வெறியாடல் நிகழ்த்தவிருப்பதனை மேற்கண்ட பாடல் உணர்த்துகின்றது.

**வெறியாடல் களம்**

**"வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து**
**நீலப் பறவை மேல் நேரிழை தன்னோடும்**
**ஆலமர்செல்வன் புதல்வன் வரும் வந்தால்**
**மால்வரை வெற்பன் மணவணி வேண்டுதுமே"**

(சிலப்.குன்றக்.பாட்டுமடை,14)

மேற்கண்ட பாடலடிகள் வழி வேலன் வந்து வெறியாடலைச் செய்யும் விரும்பத்தக்க களத்தில் முருகன், வள்ளியுடன் மயில் மீது ஏறி வருவான் என்று கூறப்படுகிறது. வெறியாடல் நிகழ்த்துகின்ற களத்தில் முருகன் வந்து, வேலன்மீது ஆவேசித்து வெறியாடுவான் என்ற செய்தியினை சிலப்பதிகாரம் வழியாக அறியமுடிகின்றது.

**மலபாரில் வேலனின் களம்**

**"வாழைமட்டைத் துண்டுகளை தரையில் வைத்துச் சதுரமான வடிவம் அமைக்கிறார்கள். இதில் சம அளவுள்ள பன்னிரெண்டு பிரிவுகள் இருக்கும். இப்படி**

**அமைக்கப்படும் வடிவம் 'களம்' என்ற பெயராலேயே அழைக்கப்படுகிறது. இக்களத்தில் வேலன், தான் வழிபட நினைக்கும் தெய்வத்திற்கு வேண்டிய பலிப்பொருள்களாகிய வெண்பொரி, காப்பரிசி, வெட்சிமலர்கள் போன்றவற்றைத் தூவுகின்றான். அக்களம் சதுரமாகவோ, வட்டமாகவோ, நீண்ட சதுரமாகவோ இருக்கும்.அவை' யந்திரம்' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது."** (நா.வானமாமலை (ப.ஆ),மக்களும்மரபும், ப.8)

**"மலபார் வேலன் சேவலின் காதில் மந்திரம் ஓதி நீர் நிறைந்த பாத்திரத்தில் இரத்தத்தை வடிக்கின்றான். அவற்றுடன் நெற்பொரி, செக்கிமலர், காப்பரிசி ஆகியவற்றை கைகளால் கலக்கி, மந்திரம் செய்து கொண்டே களத்தின் மீது தெளிக்கின்றான்."** (நா.வானமாமலை (ப.ஆ) மக்களும்மரபும், ப.9)

சங்கப்பாடல்களில் ஆட்டினை பலியிட்டு, அதன் இரத்தத்துடன் தினைமாவைக் கலந்து களத்தில் தெளிக்கப்பட்டது. அந்நிகழ்வோடு இன்றைய மலபார் வேலன் செய்யும் சடங்கு முறைகள் ஒத்ததாக உள்ளன.

இப்பொழுது மலபார் பகுதிகளில் மட்டுமின்றி கேரளத்தில் நடைபெறும் அனைத்துச் சடங்குகளிலும், வழிபாடுகளிலும் தென்னங் குருத்தோலைகளையும், செக்கிமலர்(தெச்சிப்பூ)களையும் பெரும்பான்மையாகப் பயன்படுத்துகின்றனர். வேலனின் வாழைமட்டைத் துண்டுகளால் உருவாக்கப்பட்ட களம் நாளடைவில் உருவக்களமாகவும் மாறியது .

**உருவக் களங்கள்**

மனதை ஒருநிலைப்படுத்தி தெய்வத்தை வணங்க ஒரு குறிக்கோள் வேண்டும். அதற்காகத்தான் தரையில் பஞ்சவர்ணப்பொடிகளால் களம் வரைகின்றனர்.

சடங்குமுறைகளும் நம்பிக்கைகளும் பெருகப் பெருக வழிபடக்கூடிய தெய்வங்களின் எண்ணிக்கையும் பெருகின.

கேரளக் காவுகளில்(கோயில்களில்) காளியின் உருவத்தை மட்டும் நிலத்தில் வரைந்து வழிபாடு செய்து வந்தவர்கள் காலப்போக்கில் நாகதேவதைகள், பறவைகள், விலங்குகள், இயக்கிகள், காமன், பூதம் போன்றவைகளையும் நிலத்தில் உருவங்களாக வரைந்து வழிபடுகிறார்கள். இதனை 'தூளிச்சித்திரம்' என்று அழைக்கின்றனர்.

**கேரளத்தில் களமெழுத்து**

பழங்காலத்தில் மக்கள் வழிபடும் தெய்வங்களின் உருவங்களை ஓவியத்தில் தீட்டி வழிபடும் ஒரு வழக்கம் இருந்துள்ளது. அதனை

**" தோற்றிய அரங்கில் தொழுதனர்**
**பூதரை எழுதிமேல்நிலை வைத்து"**

(சிலப்.அரங்கேற்று. பா.106 -107)

என்னும் பதிவு வழி அறியலாம். அத்தகையதொரு வழிபாட்டுத் தொடர்ச்சியினை இன்றும் கேரளத்தில் காணமுடிகின்றது,

**"கேரளக் காவுகளிலும் கோயில்களிலும் வீடுகளிலும் நிகழ்த்தப்பெறும் சடங்கு மரபுகளில் பஞ்சவர்ணப் பொடிகளால் உருவம் வரைதல் 'களம்' என்றழைக்கப்படுகிறது. பத்ரகாளிக்களம், கந்தர்வன்களம், இயக்கிக்களம், நாடகக்களம், பூதக்களம், பலிக்களம், மந்திரவாதக் களம் போன்ற பலவகைக் களங்கள் உண்டு. களம் எல்லோராலும் வரையப்படுவதில்லை. அதற்கென்று உரிமை பெற்றவர்கள்தான் பரம்பரைபரம்பரையாகக் களம் வரைகின்றனர்."** (டா.எம்.வி.விஷ்ணுநம்பூதிரி, ஃபோக்லோர் நிகண்டு.ப.84) என்ற பதிவின் மூலம் இன்றைய கேரள நாட்டார் மரபில் பூதங்கள் மட்டுமின்றி கந்தர்வர், இயக்கியர், பத்ரகாளி முதலிய தெய்வக் கோலங்களையும்

வரைந்து வழிபட்டு வருகின்றதொரு பண்பாட்டுச் சூழல் நிலவி வருவதை அறிந்து கொள்ள முடிகின்றது. களம் வரைபவர்கள் இயற்கையிலேயே திறமை உடையவர்களாக விளங்குகின்றார்கள். பத்ரகாளிக்களம் வரைபவர் கல்லாற்றுக் குறுப்பர், தீயாட்டுண்ணிகள், தெய்யாட்டு நம்பியார் முதலியோராவர். புள்ளுவர்கள் நாகக்களங்களை வரைவார்கள். தோற்றம்பாட்டிற்கு களம் வரைபவர்களாக வேலன், வண்ணான், பாணர், மலயன், கணியான், புலையர், முந்நூறான் போன்றோர் காணப்படுகின்றார்கள்.

ஒவ்வொரு இனத்தவரின் களங்களுக்கும், களம் வரைதலுக்கும் இடையே வேறுபாடு உண்டு. அதைப்போன்றே களம் பாட்டுகளும், அதற்கு இசைக்கின்ற இசைக்கருவிகளும் வேறுபடுகின்றன.

**பஞ்சவர்ணப்பொடி**

வெள்ளை, மஞ்சள், சிவப்பு, பச்சை, கறுப்பு போன்ற ஐவகை நிறப் பொடிகளால் களம் வரைகின்றனர். பச்சரிசிப் பொடி வெள்ளை நிறத்தையும், மஞ்சள் பொடி மஞ்சள் நிறத்தையும், பச்சிலைகளின் பொடி பச்சை நிறத்தையும், மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த கலவை சிவப்பு நிறத்தையும், உமியின் கரி கறுப்பு நிறத்தையும் அளிக்கின்றது. இவ்வைந்து நிறங்களும் பஞ்ச பூதங்களின் அடிப்படை என்று கருதப்படுகின்றன. பச்சை நிறத்திற்காக வாகையிலை, மஞ்சாடி இலை போன்றவற்றை நிழலில் காயவைத்து பொடித்து உபயோகிக்கின்றனர். நாகக் களத்திற்கு வாகை இலையைப் பயன்படுத்துவதில்லை. ஏனெனில் வாகைமரமானது விஷ வைத்தியத்திற்கு பயன்படுத்துகின்றது. (தெ.வே.ஜெகதீசன் ,கேரளத்தனிமா, ப. 93) என்ற பதிவு களம்

வரைவதற்குப் பயன்படுத்தப்படும் வர்ணங்களின் அடிப்படைக் காரணத்தை விளக்கியமைகின்றது.

சிலர் கறுப்பு நிறத்தினால் வெளிச்சுற்று வரைந்து பச்சைநிறப் பின்னணியில் காளியின் உருவத்தை வரைவதுண்டு. சிலர் கறுப்பு நிறப் பின்புலத்திலும் சிலர் பின்புலம் இன்றியும் களம் வரைகின்றனர்.

தாய்த்தெய்வ வழிபாட்டில் களம் எழுத்திற்கு முக்கிய இடம் உண்டு. இந்தியாவில் தாய்த்தெய்வத்தை இயற்கையின் மறு உருவமாகக் கருதுகின்றனர். இந்தத் தாய்த் தெய்வவழிபாடு சக்தி வழிபாடாக மாறியது. சக்தி என்பது சிவனோடு சேர்ந்த சக்தியாகவும், சிவனின் மகளாகவும் சித்திரிக்கப்படுகின்றாள்.

களமெழுத்தில் காளி சிவனின் மகள் வடிவத்தில் இருப்பதாகக் கருதப்படுகின்றாள். அதாவது தாருகனை அழிப்பதற்காக சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய காளியாகவே காட்சியளிக்கின்றாள். தாருகாசுரனின் தலையைக் கையில் ஏந்தி சினத்துடன் நிற்கின்ற காளியின் உருவத்தைக் களத்தில் வரைகின்றனர். கோயில் கருவறையின் முற்றத்தில் இக்களம் வரையப்படுகின்றது. நெற்றிக்கண்ணோடு சேர்த்து மூன்று கண்கள், கொம்பு போன்று வாயின் வெளியே நீண்டிருக்கும் இரண்டு பற்கள், முகத்தில் வைசூரி புள்ளிகள் (அம்மை), எட்டுக்கைகளில் ஆயுதம் என்றவாறு காளியின் உருவம் வரையப்படுகின்றது. கல்லாற்றுக்குறுப்பன், தெய்யம்பாடி நம்பியர் என்போர் இக்களத்தினை வரைகின்றனர்.

களத்திற்கு சமீபமாக பீடம், விளக்குகள், வாழைக்குலை போன்றவை வைக்கப்படும். பீடத்தின் மேல் வாளும், வால்கண்ணாடியும் வைப்பது ஒரு சடங்காகும். களத்தின் நான்கு திசைகளிலாக எட்டுப் பக்கங்களில் நெல், அரிசி, தேங்காய், வெற்றிலை,

பாக்கு வைக்கப்படுகின்றன. சில இடங்களில் வாள், சூலம், சிலம்பு போன்றவற்றை களத்தைச் சுற்றி வட்ட வடிவில் நட்டு வைக்கின்றனர்.

கோயிலின் கருவறைக்கு வலது பக்கத்தில் நிரந்தரமான ஒரு பாட்டரங்கு இருக்கும். அல்லது தற்காலிகமாக உருவாக்கப்பட்ட அரங்கில் களமெழுத்தும் பாட்டும் நடைபெறும். களமெழுத்து நடத்துகின்ற மேல்பகுதியில் மரச்சட்டங்களாலோ, கயிற்றாலோ பந்தல் அமைப்பர் அதன்மேல் சிவப்புத்துணியால் கூறை வேய்ந்து குருத்தோலையாலும், பூக்களாலும் அலங்கரிப்பர்.

களம் வரைதலில் மூன்று நிலைகள் உண்டு. அவை களமெழுத்து, களம்பூஜை, களமழித்தல் என்பனவாகும். இவை முறையே படைத்தல், காத்தல், அழித்தல் என்பதன் குறியீடாகும்.

களமெழுத்துச் சடங்குகளிலெல்லாம் பாட்டுக்கள் பாடுவது வழக்கம். எனினும் காளி காவுகளில் (கோயில்களில்) கல்லாற்றுக் குறுப்பர்கள் நடத்துகின்ற சடங்குகளை மட்டுமே ’களமெழுத்தும் பாட்டும்’ என்று குறிப்பிடுவதைக் காண இயலுகின்றது. பஞ்சவர்ணப் பொடிகள் உபயோகித்து தேவியின் உருவங்களை நிலத்தில் வரைந்து, பூசை செய்வார்கள். இக்களமெழுத்துப் பாட்டானது பாட்டுகள் பாடி, நடனத்துடன் களம் அழிக்கின்ற ஒரு சடங்குக் கலையாகும்

தென்கேரளத்தில் ’தீயாட்டு’, ’முடியேற்று’ என்னும் சடங்குகளின் தொடக்கமாக களமெழுத்தும் பாட்டும் நிகழ்த்தப் பெற்று வருகின்றது. வடகேரளத்தில் மாடாயிக்காவிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் களமெழுத்துப் பாட்டிற்குப் பதிலாகப் ’பாட்டும் களத்திலரி’யும் பாடப்பெறுகின்றன. உயர்தர வகுப்பினரின் கோயில்களில் தெய்யம்பாடி நம்பியார் களம்பாட்டுப் பாடுவார். உயர்சாதியினரல்லாத

தீயர் போன்றோர்களின் காவுகளில் கணிசன் என்றழைக்கப்படும் இனத்தவர் ’பாட்டும் களத்திலரியும்’ பாடுகின்றனர். இங்கு அம்மனின் உருவத்தைக் களத்தில் வரைவதில்லை.

**உயிர்ப்பலி**

பழந்தமிழ்ச் சமூகத்தில் பல்வேறு சடங்குகளும் நம்பிக்கைகளும் மிகுதியாகவே இருந்தன. சங்ககாலத்திலேயே உயிர்ப்பலியிடல் ஒரு முக்கிய சடங்கியல் கூறாக இருந்துள்ளது. அணங்கு, சூர், சூலி, காலன், பேய், பூதம் போன்ற அதீத சக்திகளிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்காக அவற்றை அமைதிப்படுத்துவதன் மூலம் அவற்றின் சீற்றத்திலிருந்து விடுபடுவதற்காகப் பலியிட்டனர். கடவுளின் சீற்றத்தைத் தணிக்கும் வகையில், உயிர்ப்பலி தரும் வழக்கத்தினை மேற்கொண்டனர். தெய்வத்தின் பேராற்றலிருந்து விலகி இருக்கவும் உயிர்ப்பலியிட்டனர். மேற்சுட்டப்பட்ட தெய்வங்களை அச்சம் தரும் தெய்வங்களாகவே கருதினர். பலிகளின் தன்மைகளும், அவற்றின் சமூகச் செயல்பாடுகளும் பலதிறத்தால் வேறுபட்டு காணப்படுகின்றன. நாட்டார் வழிபாடுகளில் பெரும்பாலும் ஆடு, கோழி, சேவல், பன்றி, எருமை போன்ற உயிர்கள் பலியிடப்படுவது வழக்கம்.

**சங்கஇலக்கியத்தில்உயிர்ப்பலி**

சங்க இலக்கியங்களில் வேலன், கொற்றவை போன்ற தெய்வங்களுக்கு உயிர்ப்பலி கொடுத்திருந்தனர் என்பதை சில இலக்கியச் சான்றுகள் வழி அறிகின்றோம்.

> **”மறிக்குரல் அறுத்து தினைப் பிரப்பரீஇச்**
> **செல்லாற்றுக் கவலைப் பல்லியங் கறங்கத்”**

(குறுந்,,263:1- 2)

மேற்கண்ட பாடல் அடிகள் மூலமாக தினை அரிசியுடன் ஆட்டின் இரத்தமும் கலந்து தூவி முருகனை வழிபட்டதை அறியமுடிகிறது.

**"உயிர்ப்பலி பெறும் உருகெழு தெய்வம்"** (அகம் - 166:7)

என்னும் பதிவு வழி வீரர்கள் போர்க்களத்திற்குச் செல்வதற்கு முன் அவர்கள் அனைவரும் போரில் தங்களுக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்று கொற்றவைக்கு உயிர்ப்பலி நடத்தியதை அறிந்து கொள்கின்றோம்.

**சிலப்பதிகாரம் காட்டும் உயிர்ப்பலி**

புகார் நகரில் மருவூர்ப்பாக்கத்திற்கும், பட்டினப்பாக்கத்திற்கும் இடையே நாளங்காடிப்பூதம் இருந்தது. அப்பூதம் புகார் நகருக்கும், அரசருக்கும் காவலாக விளங்கியது. மருவூர்ப்பாக்கத்திலுள்ள வீரர்களும், பட்டினப்பாக்கத்திலுள்ள வீரர்களும் தாமாகவே நாளங்காடிப் பூதத்தின் முன் உள்ள மிகப்பெரிய பலிபீடத்தின் முன் சென்று, எங்கள் மன்னனுக்கு வரும் துன்பத்தை ஒழித்து வெற்றி தருக என வேண்டினர். அதற்கு பதிலாக தங்களது தலைகளையே காணிக்கையாக பலிபீடத்திலே கொடுத்தனர். இவ்வாறு காவல்பூதத்திற்கு வீரர்கள் தங்கள் உயிராகிய சிறந்தபலியை கொடுத்தனர் என்பதை,

**"ஆர்த்துக் களங்கொண்டோ ராரம ரழுவத்துச்**
**சூர்த்துக் கடைசிவந்த சுடுநோக்குக் கருந்தலை**
**வெற்றி வேந்தன் கொற்றங் கொள்கென**
**நற்பலி பீடிகை நலங்கொள வைத்தாங்கு**
**உயிர்ப்பலி யுண்ணும் உருமுக்குரன் முழுக்கத்து**
**மயிர்க்கண் முரசொடு வான்பலி யூட்டி"**

(சிலப்.இந்திரவிழவூர்.83-88)

என்ற பதிவு எடுத்துரைக்கின்றது.

வேட்டுவவரியில் எயினர் குடியில் தெய்வத்திற்கு வழிபாடு செய்யும் உரிமை உடைய சாலினி என்பவள் தெய்வமேறிய நிலையில் 'எயினர் மன்றுகள் பாழ்பட்டன. கொற்றவைக்குக் கொடுக்க வேண்டிய உயிர்ப்பலியினைக் கொடுக்காவிட்டால் நீங்கள் விரும்பும் வெற்றியினைக் கொடுக்கமாட்டாள்' என்று வாக்குரைக்கின்றாள். இதனை,

**"கலையமர் செல்வி கடனுணினல்லது**
**சிலையமர் வென்றி கொடுப்போ ளல்லள்**
**மட்டுண் வாழ்க்கை வேண்டுதி ராயின்**
**கட்டுண் மாக்கள் கடந்தரு மெனவாங்கு"** (சிலப். வேட்டுவவரி,15-19)

என்பதனால் அறியலாம். மேற்குறிப்பிட்ட பாடலடிகள் மூலம் எயினர்களிடையே கொற்றவைக்கு உயிர்ப்பலியிடும் வழக்கம் இருந்ததாகத் தெரியவருகின்றது.

**"அடல்வலி எயினர்நின் அடிதொடு கடனிது**
**மிடறுகு குருதிகொள் விறல்தரு விலையே"**

(சிலப்.வேட்டுவவரி,துறை.பா.ம.17)

**"கணநிறை பெருவிறல் எயின் இடு கடனிது**
**நிணனுகு குருதி கொள் நிகரடு விலையே"**

(சிலப்.வேட்டுவவரி,துறை.பா.ம.18)

என்னும் அடிகள் மறவர்கள் பகைவர்களை வெற்றி கொண்டதால் கொற்றவைக்கு மிடற்றிலிருந்து சிந்தும் குருதியினை பலியாகக் கொடுத்ததனை வலியுறுத்துகின்றன.

உரைபெறுகட்டுரை வாயிலாக கண்ணகியின் சினத்தால் பாண்டியநாடு மழையின்றி, வறுமையும் நோயும் மிகுந்து துன்பமுற்றது என்பது தெரிய வருகின்றது. அதனால் வெற்றிவேற்செழியன் கண்ணகிக்காக ஆயிரம் பொற்கொல்லரைக் கொன்று பலியிட்டு, களவேள்வியால் விழா எடுத்தான் என்ற செய்தியினை அறியமுடிகிறது.

**"அன்று தொட்டுப் பாண்டியநாடு மழை வறங்கூர்ந்து**
**வறுமை எய்தி வெப்புநோயுங் குருவுந் தொடரக்**
**கொற்கையிலிருந்த வெற்றிவேற்செழியன் நங்கைக்குப்**
**பொற்கொல்லாராயிரவரைக் கொன்று களவேள்வியால்**
**விழவொடு சாந்தி செய்ய நாடு மலிய மழை பெய்து**
**நோயும் துன்பமும் நீங்கின"** (சிலப்.உரைபெறுகட்டுரை-1,ப.41)

என்ற உரைபெறு கட்டுரைப் பதிவு வழி கண்ணகியைக் கொற்றவையாகவே கருதி பொற்கொல்லர்களை உயிர்ப்பலி அளித்த நிலை புலப்படுகின்றது.

**நரபலி**

இந்தியாவில் நரபலி நடைபெற்றிருந்தது என்பதை தொல்பொருள் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. 'ஹாரப்பாவில் கிடைத்த ஒரு முத்திரையில் ஒருபுறம் பூமிதேவியும், மறுபுறத்தில் அதனோடு தொடர்புடைய நரபலியும் சித்திரிக்கப்பட்டுள்ளது' என்று ஜான்மார்ஷல் 'மொகஞ்சதாரோவும், சிந்துநதிக்கரை நாகரீகமும்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளதாக டா.கே.கே.என்.குறுப்பு எடுத்துக்காட்டியுள்ளார். (டா.கே.கே.என்.குறுப்பு, மலபாரில் நாடன்கலைகள்,ப.67)

**கதைப்பாடலில் நரபலி**

வடமலபாரில் காளிக்கு நரபலி கொடுத்ததாக ஒரு கதைப்பாடல் வழங்கி வருகின்றது. அதனை 'காளிநாடகம்' என்று குறிப்பிடுகின்றார்கள். இது காளியின் புராணக் கதையைப் பாடுவது. வண்ணான், மலையன் போன்ற இனத்தார் காளி தெய்யங்களுக்கெல்லாம் 'காளி நாடகம்' பாடுவர். திருவர்க்காட்டு பகவதிக்கு இப்பாடல் முக்கியமானது. இப்பாடல்களில் தாருகனைப் போருக்கு அழைப்பதும், போர் செய்தலும், தாருகன் தலையைக் கொய்தலும் ஆகிய செய்திகள் காணப்படுகின்றன.

தாருகனை அழித்தும் சினம் அடங்காத காளியை அமைதிப்படுத்த பரமசிவன் தன்னுடைய விரலை அறுத்து இரத்தம் அளிக்கின்றார். கீழ்வரும் கதைப்பாடல் அக்கதையைத் தெரிவிக்கின்றது.

**"தாருகன் தலையும் முடியும் கொண்டு**
**கைலாயத்தை அடைந்து எழுந்தருளினாள்**
**ஸ்ரீ சிவபாதம் நமோ நமோ**
**கோழியறுத்து குருசி அளித்தும்**
**அதனால் தாகம் தணியாத அம்புஜ காளி**
**வீரத்துடன் அலறும் வேளையில்**
**ஆட்டினை வெட்டி குருதி அளித்தும்**
**ஆனையை வெட்டி இரத்தம் கொடுத்தும்**
**தாகம் தணியாத அம்புஜ காளி**

**வீரத்துடன் அலறும் வேளையில்**
**தந்தை தன் அணி விரலறுத்து ரத்தம் கொடுத்தார்**
**குடி குடியென்று குடித்துக் கொண்டு**
**போதும் போதும் என்று சிலம்பும் எடுத்து**
**கொடுங்கல்லூர் குடி கொண்டு வசிக்கும் பத்ரகாளி."**

என்னும் பாடல் பதிவு கவனிக்கத்தக்கது. தாருகனின் வதைக்குப் பின் சினமடங்காத காளி தாருகனின் தலையைக் கையில் ஏந்தியவாறு கைலாயத்தை அடைகின்றாள். அதைக் கண்ட சிவபெருமான், யானை கோழி, ஆடு ஆகியவற்றை பலி கொடுத்தும் காளிக்கு தாகம் தணியவில்லை. அதனால் சிவபெருமான் தன் கைவிரல் அறுத்து குருதி கொடுத்தவுடன் காளி தாகம் தணிந்து சினமடங்கினாள். பின் பூமியை அடைந்து கொடுங்கல்லூரில் குடிகொண்டு வாழ்கின்றாள் என்ற கதை வழங்கி வருகின்றது.

காளிக்கு கோழி, ஆடு, யானை முதலியவற்றுடன் நரபலியும் அளித்தநிலையினை நாட்டார் பாடல் புலப்படுத்துகின்றது.

**குத்தியோட்டம்**

உயிர்ப்பலியோடு தொடர்புடைய நிகழ்வுகளில் ஒன்று குத்தியோட்டம் என்பதாகும். கேரளத்தில் செட்டிக்குளங்கரை, ஆற்றுகால், காயம்குளம், மாவேலிக்கரை போன்ற பிரதேசங்களில் இக்குத்தியோட்டம் நடைபெற்று வருகின்றது. இது தேவி கோயில்களில் நடத்தப்படும் ஒரு சடங்காகும். பங்குனி, சித்திரை மாதங்களில் குத்தியோட்டச் சடங்குகள் நடத்தப்படுகின்றன. **"குத்தியோட்டம்' என்பதில் குத்துதல், ஓடுதல் என்று இரு சடங்குகள் அடங்கி உள்ளன. குத்தியோட்டத்தில் பங்கெடுக்கும் குழந்தைகளின் விலாப்பகுதியில் தங்கத்தாலோ, வெள்ளியாலோ செய்யப்பட்ட கயிற்றால் தோலின் வழியாகத் துளைத்து மறுபக்கமாக இழுத்தெடுப்பார்கள். முன்காலங்களில் பிரம்பினால் குத்தியதாகக் கூறுகின்றனர்."** (டா.எம்.வி.விஷ்ணுநம்பூதிரி, ஃபோக்லோர்நிகண்டு-113 )

குத்தியோட்டச் சடங்கு நடக்கின்ற ஏழு நாட்களுக்கு முன்பாக கோயிலுக்கு அருகில் பந்தல் அமைப்பர். அங்கு தேவிக்குத் தனி இடம் அமைக்கப்படும். இப்பந்தலை ஆலிலை, மாவிலை, கமுகின் பூக்குலை, குருத்தோலை போன்றவற்றால் அலங்கரிப்பர். குத்தியோட்டத்தில் பங்கேற்கின்ற குழந்தைகளுக்கு நடனப் பயிற்சி அளிக்கப்படும்.

குத்தியோட்டத்தின் தொடக்கமாக, இதில் பங்கெடுக்கும் குழந்தைகளுக்கு வேடம் அணிவர். வாத்தியங்களும், குரவையும் முழங்க குழந்தைகளை ஊர்வலமாகக் கோயில் முற்றத்திற்கு அழைத்து வருவர். கோவிலை மூன்று முறை வலமாக வந்து, தேவியின் முன் குழந்தைகளின் விலாவில் குத்திய கயிற்றினை உருவி எடுக்கிறார்கள். இச்சடங்கு நரபலியை நினைவுறுத்துகின்றது. கேரளத்தில் முருகவழிபாட்டின் போது குறிப்பாக திருச்சூர் மாவட்டத்தில் 'அலகு குத்துதல்' சடங்கு நடைபெறுகின்றது. இதுவும் நரபலியின் எச்சமாகக் அமைகிறது. திருவனந்தபுரம் ஆற்றுகால் பகவதி கோயிலில் குத்தியோட்டம் சிறப்பாக நிகழ்த்தப்படுகின்றது. குழந்தைகளை நோயிலிருந்து பாதுகாக்கவும், வாழ்க்கையில் முன்னேறவும், இச்சடங்கு நேர்த்திக் கடனாகச் செய்யப்பட்டு வருகின்றது.

**உயிர்ப்பலி**

வடமலபாரில் தெய்யாட்டத்தின் போது மலையன், காளிக்குக் கோழியை பலி கொடுக்கும் வேளையில் ஒரு பாடலைப் பாடுகின்றான். இப்பாடல் நரபலி நடந்துள்ளது என்பதற்குச் சான்றாக அமைந்துள்ளது. இதனை,

**"நான் உனக்கு இருபத்தியொரு இலைகளில் குருதியும், மலரும் தருகின்றேன். முன்பு உனக்கு குருதிபலி இடுவதற்காக மனிதனை பலி தந்தேன். அது கிடைக்காததால் யானையைப் பலி தந்தேன், அதுவும் முடியாததால்ஆட்டினை பலி தந்தேன்.இப்பொழுது, மனிதன், யானை, ஆடு கிடைக்காததால் உனக்கு குருதி தர ஒரு கோழியை**

**வெட்டுகின்றேன்"** (C.M.S.சந்தேரா.கண்ணகியும்-சீர்மக்காவும்,ப.161) என்ற பதிவு எடுத்துக்காட்டுகின்றாது.

மேற்கண்ட நாட்டார் பாடலிலிருந்து ஒரு காலத்தில் கேரளத்தில் நாட்டார் வழிபாட்டின் போது நரபலி தரப்பட்டது என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது.

**"மேலும் தெய்யாட்டக் கலைஞர்களில் அஞ்ஞூறான், முந்நூறான் என்ற இனத்தவர் உண்டு. 'அஞ்ஞூறான்' என்றறியப்படுபவர்கள் ஐந்து குற்றங்களை செய்தவர்கள் என்று தங்களை கூறிக் கொள்கின்றனர். அவை, நரபலி, கஜபலி, மகிடபலி, ஆடுபலி, கோழிபலி எனப்படும். முந்நூறான் மூன்று குற்றங்களைச் செய்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். அவை, எருமைக்கடா, ஆடு, கோழி போன்றவைகளை தெய்வங்களுக்கு குருதி பலியாகக் கொடுத்தவர்கள்."** (டா.கே.கே.என்.குறுப்பு, மலபாரில் நாடன்கலைகள்,ப.69) இத்தகு செய்திகளிலிருந்து மலபாரில் நரபலி வழக்கத்திலிருந்தது என்பதுதெளிவாகின்றது.

**வடக்கேன் வாதில்**

சாக்தேயக் காவுகளில் காளிக்கு குருதியும், பலியும் முக்கியமான வழிபாட்டுச் சடங்காகக் கருதப்படுகின்றது. **"சாக்தேயக் கோவில்களில் குருதிப்பலி கொடுப்பதற்காகக் கோவிலின் வடக்குப்பக்கத்தில் ஒரு பலிபீடம் இருக்கும். அங்கு வைத்து நடத்தப்பெறுகின்ற உயிர்ப்பலிக்கு வடகேரளத்தில் 'வடக்கேன்வாதில்' (வடக்குவாசல்) என்ற பெயர் வழங்கப்படுகின்றது. இதனைக் 'களியாம்பள்ளி' என்றும் அழைக்கின்றனர். வடமலபாரில் மாடாயிக்காவு, சாமக்காவு, கோழித்திடல், மன்றபுரத்துக்காவு என்று நான்கு வடக்கேன் வாதில்கள் உண்டு. சில இடங்களில் நிரந்தரமான பலிபீடங்கள் இருக்காது. அதற்குப் பதிலாக வாழைத்தண்டினால் பீடம் உருவாக்கி, தீப்பந்தமும், கோல்த்திரிகளும் குத்திவைப்பர்."** (டா.எம்.வி.விஷ்ணுநம்பூதிரி, காளி சங்கல்பம் கேரளபரிசரத்தில்,ப.51)

வடமலபாரில் தெய்யக்காவுகளில், தெய்ய ஆட்டத்தின்போது காவினது வடக்குப் பகுதியில் வாழை மட்டையால் சதுர வடிவிலான களம் ஏற்படுத்துவர். அதில் தெய்யக்காரனோ அல்லது தெய்யக்காரன் முன்னிலையில் வேறொருவரோ குருதிப்பலியுடன் கோழியும் அறுக்கின்றனர்.

**குருதி**

குருதி என்பது கேரளக் காவுகளிலும், கோவில்களிலும் காளிக்குக் கொடுக்கப்படும் உயிர்ப்பலியாகும். பிரமணர், காவுகளில் சாக்தேய முறைப்படி பூசை செய்யத் தொடங்கியபோது இவ்வுயிர்ப்பலி, மங்களக் குருதியாக மாற்றம் பெற்றது. குருதியை 'குருசி' என்றும் அழைக்கிறார்கள். சுண்ணாம்பும், மஞ்சளும் நீரில் கலந்தால் சிவப்பாக மாறும். இது குருதி போன்று காட்சியளிக்கும். அதில் தெச்சிப்பூக்களை இட்டு தேவிக்கு குருதிப்பலி அளிக்கின்றார்கள்.

**குருதியின் வகைகள்**

**"கருங்குருதி, நிணம்குருதி, செங்குருதி, ருத்ரகுருதி, மங்களகுருதி என்று குருதி ஐந்து வகைப்படும். கரியைப் பொடித்து நீரில் கரைத்து உண்டாக்குவது கருங்குருதி. இதற்கு கோழி, கிடாய் போன்றவற்றை வெட்டி பலி கொடுப்பர். கருங்குருதி கருங்காளிக்காக நிகழ்த்தப்படுகிறது. மஞ்சளும், சுண்ணாம்பும் கலந்த நீருடன் அரிசிமாவு சேர்த்து வேகவைப்பதுதான் நிணங்குருதி. ருத்ரகாளிக்கு வெள்ளைப்பூசணியை வெட்டிக் குருதிநீரில் இடுவர். அதில் பூக்களும், இலஞ்சித்தோலும் இடுவதால் அதனை இரத்தமும், மாமிசமுமாகக் கருதுவர். செங்குருதியில் சுண்ணாம்பு, மங்சளுடன் குங்குமமும் கலக்கின்றனர். மஞ்சளும், சுண்ணாம்பும் கலந்த கலவைதான் மங்களகுருதி. இதற்கு அரத்தம் என்றும் பெயர். 'அரத்தம்' என்றால் 'சிவந்த' என்று பொருள். இப்பொழுது அரசாங்கம் உயிர்பலி தடை செய்தபின் குறியீட்டுவடிவிலான குருதியை நடத்துகின்றனர். பலிக்களத்தில் குலை வாழையை வெட்டுகிறார்கள். அது, யானையை வெட்டுவதற்குச் சமமாகக் கருதப்படுகின்றது."** (டா.எம்.வி.விஷ்ணுநம்பூதிரி, காளிசங்கல்பம்,ப.118)

தொல்பழங்காலம் முதலே உயிர்ப்பலி நிகழ்த்தப்பட்டிருந்தது. அவை சமூக, அரசியல், பண்பாட்டு மாற்றங்களால் குறியீட்டு முறையில் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

**கோழிக்கல் மூடல்**

கொடுங்கல்லூர் காவில் பங்குனி மாதம் திருவோணம் நாளில் 'கோழிக்கல்' மூடல் சடங்கு நடத்தப்பட்டு வருகின்றது. இதுவும் உயிர்ப்பலியோடு தொடர்புடையதாகும். காவின் வடக்குவாயிலில் வட்டவடிவமான இரண்டு கருங்கற்கள் காணப்படுகின்றன. முன்காலங்களில் இங்கு கோழியை வெட்டி பலி கொடுத்திருந்தனர். இப்பொழுது சமர்ப்பித்தல் மட்டுமே நடைபெறுகின்றது. இந்த உரிமை பகவதி வீட்டிலுள்ள மூத்தவருக்கு உரியதாகும்.

கோழிக்கல்லின் சமீபத்தில் இரண்டு குழிகள் தோண்டி இரு கற்களையும் அதில் மூடுவர். பிறகு மண்திட்டு உருவாக்கி, அதன்மேல் சிவந்த பட்டினை விரிப்பர். முதற்கோழி தச்சோளி உதயணன் குடும்பத்திற்கு உரியது. பகவதி வீட்டு காரணவர் (மூத்தவர்) தச்சோளித் தறவாட்டிலிருந்து (பரம்பரை) கோழி கொண்டுவந்துள்ளீரா எனக் கேட்டு, ஆம் என்ற பதில் கிடைத்த பின் கோழிக்கல்லை மும்முறை வலம் வந்து கோழியை சமர்ப்பிப்பர்.

முன்பு ஆயிரக்கணக்கான கோழிகளை இக்கல்லில் பலியிட்டிருந்தனர். அரசாங்கம் உயிர்ப்பலியைத் தடை செய்த பின் கோழிகளை பலி கொடுப்பதற்குப் பதிலாக கோழியை பறக்க விடுகிறார்கள் என்று கூறுகின்றனர். மேற்கண்ட தரவுகள் வாயிலாக சிலப்பதிகாரம் காட்டிய பலியிடல் நிகழ்வுகள் பல்வேறு வடிவங்களில் இன்றைய கேரள நாட்டார் மரபில் காணப்படுகின்றது என்று உணர முடிகின்றது.

சிலம்பில் பதிவு செய்யப்பட்டுள்ள தொல்குடி மரபாகிய உயிர்ப்பலி இன்று கேரள காவுகளிலும் கோயில்களிலும் சிலவகை மாற்றங்களுடன் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

சில இடங்களில் பதிலிப் பலியாக சுண்ணாம்பும் மஞ்சளும் கலந்த நீரினை குருதியாகப் படைக்கின்றனர்.

**வெளிச்சப்பாடு** (சாமியாடி)

சங்ககாலச் சூழலில் தேவராட்டி, வேலன் எனப்பட்டோர் பூசாரிகளாகவும், சாமியாடிகளாகவும் விளங்கியிருந்தனர். இத்தகைய அதீத மீவியல் நிலையைச் சங்க இலக்கியங்கள் வெறியாட்டு என்றழைக்கின்றன.

**"இயற்கை மீறிய ஆற்றல்கள், மனித வாழ்வை இயக்குவதாகவும், பாதிப்பதாகவும் சங்ககால மக்கள் நம்பினர். இவற்றைத் தன்வயப்படுத்துகின்ற ஓர் அதீத கலை சார்ந்த அனைத்து நம்பிக்கைகளும், செயல்முறைகளும் சாமியாட்டம் அல்லது வெறியாட்டம் எனப்பட்டன."** (பக்தவத்சல பாரதி, பண்டைத் தமிழ்ப் பண்பாடு, ப.215)

பழங்காலம் முதல் தற்காலம் வரை சாமியாடிகள் இருந்து வருகின்றனர். 'வேட்டுவவரி'யில் எயினர் குலப் பெண் 'சாலினி' என்பவள் தெய்வமேறிய நிலையில் வாக்குரைக்கின்றாள்.

**"வழங்குவில் தடக்கை மறக்குடித் தாயத்துப்**
**பழங்கட னுற்ற முழங்குவாயச்சாலினி**
**தெய்வமுற்று மெய்ம்மயிர் நிறுத்துக்**
**கையெடுத் தோச்சிக்கானவர் வியப்ப**
**இடுமுள் வேலி எயினர்கூட் டுண்ணும்**
**நடுவூர் மன்றத்தடிபெயர்த் தாடிக்"** (சிலப்.வேட்டுவவரி,6-11)

என்ற பதிவில் சாலினி மறவர்கள் வியக்குமாறு தெய்வத்தன்மை அடைகின்றாள். அவளுடைய மெய்ம்மயிர் சிலிர்த்தது, கைகளை எடுத்து உயர்த்தினாள், நடுவூர் மன்றத்தில் கால்களைப் பெயர்த்து ஆடினாள் என்று தெய்வமேறப்பட்ட சாலினியின் நிலைகளை எடுத்தியம்புகின்றது.

**"ஆவேசமான கூக்குரல், உரத்த வாத்திய ஒலி, புகைமூட்டம், உயிர்ப்பலி போன்றவற்றின் துணையுடன் ஒரு குறிப்பிட்ட மனிதன் மீது தெய்வம் தோன்றும்படி செய்யலாம் என இனக்குழு மக்கள் நம்பினர்."** (ஆ.சிவசுப்பிரமணியன், மந்திரமும் சடங்குகளும்,ப.29) சிலப்பதிகாரம் குறிப்பிடும் வேட்டுவகுலத்து சாலினியின் தெய்வ ஆட்டமும் இந்நம்பிக்கையின் வெளிப்பாடேயாகும்.

இளங்கோவடிகள் படைத்துக்காட்டிய சாலினியின் வெறியாட்டு போன்றே கேரளக் காவுகளிலும், கோயில்களிலும், குடும்ப வீடுகளிலும் 'வெளிச்சப்பாடு' என்றறியப்படுவர் தெய்வமேறி வாக்குரைக்கின்றனர். பல தெய்வங்களுக்கும் சாமியாடிகள் இருப்பினும், தாய்த் தெய்வங்களுக்கான சாமியாடிகள் மிக அதிகமாகக் காணப்படுகின்றனர். அதற்குச் சான்றாக கொடுங்கல்லூர் அம்மனின் சாமியாடிகளைக் குறிப்பிடலாம். அவர்களை 'கோமரம்' என்று அழைக்கின்றனர். கொடுங்கல்லூர் பரணி விழாவின்போது ஆயிரக்கணக்கான சாமியாடிகள் ஒன்றாகக் கலந்து கொள்வர். அவர்களுடைய தோற்றமானது சிலப்பதிகாரம் எடுத்துரைத்த சாலினியின் தோற்றத்துடன் ஒத்துள்ளது. சாமியாடிகள் சிவப்புப் பட்டு உடுத்து, கையில் வாளேந்தி, இடையிலே வெண்கலத்தாலான மேகலையணிந்து, காணப்படுவர். கால்களில் வெண்கலத்தாலான சிலம்பும் அணிந்திருப்பர். கைகளில் வளையல்கள், கழுத்தில் அணிகலன்கள் என்று பல அணிகளை அணிந்து கூந்தலை விரித்திட்டபடி அவர்கள் காட்சியளிப்பர். அந்நிலையில் சாமியாடிகள் தெய்வமேறி ஆவேசமுற்று கூக்குரலிட்டு, கைகளை உயர்த்தி, கால் பெயர்த்து ஆடுகின்றனர். தலையிலே வாளால் வெட்டி குருதி சிந்துகின்ற காட்சி ஒரு போர்க்களக் காட்சியை நம் கண்முன் காட்டுவதாக அமைகின்றது.

ஆண் சாமியாடிகளும் பெண் வேடம் அணிகின்றனர். இது பழங்காலத்தில் பெண்கள் வெறியாடியதனைக் குறிப்பதாக உள்ளது.

சாமியாடிகள் தெய்வமேறப்பட்ட நிலையில் மக்கள் அவர்களை தெய்வமாகவே கருதுகின்றனர். இவர்களை 'மனித உருப்பெற்ற தெய்வங்கள்' என்று பிரேசர் குறிப்பிட்டுள்ளார்.

கேரளப் பண்பாட்டில் தெய்வமேறி வருவதுரைத்தலை 'கோமரம் துள்ளல்' என்றழைப்பர். இவர்களை தெய்வமாகவே நினைப்பதால் இவர்களிடம் குறிகேட்டு, வேண்டிய சடங்குகளைச் செய்தால், நலம் பெற வாழலாம் என்று நம்புகின்றனர். வேட்டுவவரியில் சுட்டப்படும் சாலினியின் வெறியாட்டமும், கேரளத்திலுள்ள வெளிச்சப்பாடுகளின் துள்ளலும் ஒப்பு நோக்குகையில் ஒன்றாகவே உள்ளது. இன்றைய காலத்தின் சூழ்நிலையில் உடை, அணிகலன்கள், வழிபாட்டுச் சடங்குகளில் சில மாற்றங்கள் காணப்படுகின்றன. இங்ஙனம் மனிதனுக்கு தெய்வத்துடன் இருக்கும் நெருக்கத்தை வெளிப்படுத்தும் வெறியாடல் நிகழ்வு, காலந்தோறும் தொடர்ந்து கொண்டிருப்பதைக் கேரள நாட்டார் தெய்வ வழிபாட்டில் காணமுடிகிறது.

**பொங்கல்**

தமிழர்களின் படையல்களில் பொங்கலுக்கு இன்றியமையாத இடம் உண்டு. **"தெய்வங்களைவாழ்த்தி அதனோடு நெருங்கி, அணுகிப் பக்தர்கள் சேரவிழையும் ஆவல் வெளிப்படுகிறது. பூச்சொரிந்து (பூசை) இறைவனை நெருங்குதல் இன்னொரு படிமலர்ச்சி நிலையாகும். இது 'ஆக்கமுறைச் சடங்காகும்' இத்தகு ஆக்கமுறைச் சடங்கானது தமிழ் மரபில் படையலாக உருவெடுத்தது. அதிலும் இரண்டு படிமலர்ச்சி நிலைகள் ஏற்பட்டன. சமைக்காத படையல் இடுதல் தொடக்கநிலை. அடுத்து பொங்கலிட்டு படைத்தல் என்பது**

**'சமைத்த படையல்' ஆகும். வழிபாட்டுக்குப் பின்னர் இறைவனுக்குப் படைத்த படையல் பிரசாதமாகப் பக்தர்களுக்கு மீளவழங்கப்பட்டது. பிரசாதம் உண்பது என்பது இறைவனும் மனிதனும் ஒன்றிணையும் நேரமாகும்."** (பக்தவத்சலபாரதி, பண்டைத் தமிழ்ப்பண்பாடு, ப.210)

தெய்வத்தின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதனிடமிருந்து விலகி, தன்னைப் பாதுகாத்துக் கொள்ள உயிர்ப்பலி இடுகிறான். இதன் அடுத்த கட்டமாக கடவுள் மீது தோன்றுகின்ற அன்பு மற்றும் பக்தி காரணமாக பொங்கலிட்டு வழிபடுதல் முதலான சடங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**சிலப்பதிகாரத்தில் பொங்கல் வழிபாடு**

புகாரில் இந்திரவிழாவின் போது நாளங்காடிப் பூதத்திற்கு மறக்குடிப் பெண்கள் பொங்கல் வழிபாடு செய்தனர் என்பதைக் கீழ்க்காணும் பதிவு உறுதி செய்கின்றது.

**"காவல் பூதத்துக் கடைகெழு பீடிகைப்**
**புழுக்கலும் நோலையும் விழுக்குடைமடையும்**
**பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து**
**துணங்கையர் குரவைய ரணங் கெழுந்தாடி"** (இந்திரவிழவூர்,67-70)

புகாருக்கும், அரசருக்கும் காவலாக இருந்த பூதத்தின் வாசலில் உள்ள பலிபீடிகையில் அவரை, துவரை முதலிய தானியங்களை வேகவைத்ததும், எள்ளுருண்டை, நிணத்துடன் கூடிய சோறும், மலர்களும், நறுமணப் புகையும், பொங்கலும் படைத்ததை மேற்கண்டபதிவு உணர்த்துகின்றது.

சிலப்பதிகார காலத்தில் பூத வழிபாட்டிற்காக 'பொங்கல்'படைக்கப் பட்டதன் தொடர்ச்சியினை இன்றைய கேரளக் கோயில்களில் காணமுடிகின்றது. அதன் நீட்சியாக கேரளத்தில் பல தேவி கோயில்களிலும் பொங்கல் வழிபாட்டுச் சடங்கு நிகழ்த்தப்பட்டு வருகின்றது. கேரளத்திலுள்ள பல கோவில்களிலும் கருவறையை சுற்றியுள்ள பகுதிகளில்

திக் (திசை) பூதங்களை நிறுவியிருப்பர். நாள்தோறும் காலை வேளையில் தெய்வத்திற்கு பூசை செய்து அமுது படைக்கின்ற போது திக் பூதங்களுக்கும் அமுது படைப்பர். சடங்குகளும் பழக்க வழக்கங்களும் காலம்தோறும் மாறுதலுக்கு உள்ளாவன எனினும் முற்றிலும் மாறுபாடு அடைகின்ற தன்மையை காண இயலாது. தொன்மங்களில் உண்மை ஒளிந்திருப்பது போலவே சடங்கு முறைகளிலும் மூலம் உள்ளடங்கிக் கிடக்கும். அதன் அடிப்படையில் பார்க்கின்றபோது சிலப்பதிகாரத்தில் காணலாகும் 'பொங்கல் சொரிந்த' நிகழ்வு இன்றைக்கு கோவில் பூசாரி அமுது படைக்கின்ற அளவில் சுருங்கியுள்ளது.

**சூரிய வழிபாட்டுச் சடங்கில் பொங்கல்**

இளங்கோ காலத்தில் சூரிய வழிபாடு இருந்துள்ளது. அவர் 'சூரிய கோட்டம்' பற்றிய பதிவினை தன் காப்பியத்தில் இடம்பெறச் செய்துள்ளார். இன்றும் அவ்வழிபாடு கேரளம், தமிழகம் உள்ளிட்ட பாரதப் பண்பாட்டில் நிலைபெற்றுள்ளது.

சூரிய வழிபாடு என்பது இயற்கை வழிபாடாகும். கேரளத்தில் கொட்டாரக்கரை, கொல்லம், திருவனந்தபுரம் போன்ற பகுதிகளில் சூரியனுக்குப் பொங்கல் வைத்து வழிபடுகின்ற சடங்கு காணப்படுகின்றது. ஞாயிறு என்றால் சூரியன், அதனால் தை மாதத்தில் வருகின்ற ஞாயிற்றுக்கிழமைகளில் பச்சரிசியால் பொங்கல் வைத்து சூரியனுக்குப் படைக்கின்றனர். புதிய மண்பானையில் பச்சரிசியை இடுவர். அரிசிகொதித்துக் கொண்டிருக்கின்ற நிலையிலும் பொங்கல் தயாரான நிலையிலும் சூரியனை நோக்கி தீபாராதனை காட்டுகிறார்கள். துளசி, மாவிலை, பலாவின் இலைகளால் படையல் பூசை செய்கிறார்கள். இவ்வழிபாடு தமிழகத்தில் கொண்டாடப்படும் தைப்பொங்கலோடு தொடர்புடையது என நம்பப்படுகிறது.

**பத்தாம் உதயம்** (துலாப்பத்து)

'துலாப்பத்து' என்பது ஐப்பசி மாதம் பத்தாம் நாள் ஆகும். இந்நாள் உழவர்களின் முக்கிய நாளாகக் கருதப்படுகின்றது. முதல் பருவத்தின் பயிர்கள் அறுவடை முடிந்தபின் இரண்டாம் பருவத்திற்கான ஆயத்தம் ஆகின்ற நாள். முதல் பருவத்தில் விளைச்சல் தந்தமைக்கு நன்றி செலுத்துவதற்காகவும் அடுத்த பருவத்தில் நல்ல விளைச்சல் தருவதற்காகவும் சூரியனுக்கு வழிபாடு நடத்துகின்றனர். சூரியன் உதயமாவதற்கு முன்பே, வீட்டிலுள்ள பெரியவர்கள் சூரியனுக்கு தீபமும், நறுமணப்புகையும் காட்டி, குத்துவிளக்கு ஏற்றி சூரியனை வரவேற்று பூஜை அறைக்கு அழைத்துச் செல்கின்றனர். அதன் பிறகு கன்றுகாலிகளுக்கு தீபம் காட்டி வழிபாடு செய்கின்றனர். சிலர் மாட்டுத்தொழுவத்தின் கன்னி மூலையில் புதிய நெல் அரிசியிட்டு இனிப்புப் பொங்கல் வைக்கின்றனர்.

உழவுத் தொழில் சிறக்க தங்களுக்கு உதவிய இயற்கைக்கு நன்றி செலுத்தும் விதமாக இந்த நாள் அமைந்துள்ளது. வடமலபாரில் தெய்ய ஆட்டம் நிகழ்த்துகின்ற காலம் 'ஆரம்பம்' என்று அறியப்படுகின்றது.

வயநாட்டில் தொல் திராவிடரின் வேட்டைச் சமூகத்தின் நினைவாக 'துலாப்பத்து' ஒரு விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. ஆண்கள் ஒரு குழுவினராக சேர்ந்து தங்கள் வேட்டைக் கருவியாகிய வில்லினை உருவாக்குகின்ற சடங்கினை இந்நாளில் செய்கின்றனர். மலை தெய்வத்தை வணங்கி முற்றத்தில் குத்துவிளக்கேற்றி அதன் முன் வில்லினை உருவாக்கக்கூடிய சிறு மரத்துண்டுகளை வைத்து பூஜை செய்வர், பின் வில்லினை உருவாக்குவர். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் இயற்கை வாழ்த்தாக ஞாயிற்றை வாழ்த்தியுள்ளார். சூரியன், உலகில் அனைத்து உயிர்களும் வாழ்வதற்கான

ஆற்றலைத் தருகின்றது. ஆதலால் சூரியனை ஒவ்வொரு பருவ காலங்களிலும் மக்கள் சிறப்பாக வணங்கி வருகின்றனர். இங்கு சிலப்பதிகாரம் உணர்த்திய ஞாயிறு வழிபாட்டின் பல பரிணாமங்கள் நிலவிலிருப்பதை உணர முடிகின்றது

**ஆற்றுகால் தேவி**

ஆற்றுகால் பகவதியை கண்ணகியாகவே கருதி வழிபடுகின்றனர். கண்ணகி மதுரையைத் தீக்கிரையாக்கி, கொடுங்கல்லூருக்குப் போகின்ற வழியில் ஆற்றுகால் என்னும் இடத்தை அடைந்து ஓய்வு எடுத்ததாகவும், அங்குள்ள பெண்கள் தேவியை வரவேற்று பொங்கல் வைத்துப் படைத்ததாகவும் கூறுகின்றனர். அதன் நினைவாகவே இன்றும் 'பொங்காலா' திருவிழா நடத்தப்பட்டுவருவதாக நம்பப்படுகிறது.

**பொங்காலா** (ஆற்றுகால் பொங்காலா)

பொங்கல் ஒரு புராதான வழிபாட்டுச் சடங்காகும். கேரளத்தின் தென் திருவிதாங்கூர்ப் பகுதிகளிலுள்ள தேவி கோயில்களில் இச்சடங்கு இன்றும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. திருவனந்தபுரம் ஆற்றுகால் கோவிலில் நடைபெறும் 'பொங்காலா' உலகப் புகழ்பெற்றது. உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. மாசிமாத 'பரணி' நாளில் 'பொங்காலா' நடத்தப்படுகிறது. பல்லாயிரக்கணக்கான பெண்கள் தற்காலிகமாக அமைத்த அடுப்பில், புதிய மண்பானையில் பச்சரிசியும் வெல்லமும் சேர்த்து இனிப்புப் பொங்கல் உண்டாக்குவர். அதனை தேவிக்கு சமர்ப்பித்து பிறகு பிரசாதமாக வீட்டிற்குக் கொண்டு வருவர். இந்நிகழ்வில் பெண்கள் மட்டும் பங்கெடுப்பர். ஆற்றுகால் பகவதி கோயிலை 'பெண்களின் சபரிமலை' என்ற பெயரில் அழைக்கிறார்கள்.

**கலம் கனிப்பு**

வட மலபாரில் பொங்கலோடு தொடர்புடைய ஒரு சடங்கு 'கலம் கனிப்பு' என்ற பெயரில் அறியப்படுகின்றது. இச்சடங்கு பெண்களால் நடத்தப்பெறுகின்றது. புதிய மண்பானையில் பச்சரிசிப்பொடியை நிறைத்து, அதன் மேல் வெற்றிலை, முழு பாக்கு, தேங்காய், வெல்லம் போன்றவற்றையும் நிரப்பி வைப்பர். அக்கலத்தினை தலையில் சுமந்தவாறு கோயிலை அடைவர்.கோயிலுள்ள தேவியை வணங்கியபின் வீட்டிற்குச் செல்வர். மறுநாள், கலத்திலுள்ள மாவினால் அடை செய்து தேவிக்கு படைத்து, மீதி வருவனவற்றை பிரசாதமாக வீட்டிற்குக் கொண்டு வருவார்கள். இந்த அடையை 'தண்ட அடை' என்று அழைக்கிறார்கள்.

'கலம் கனிப்பு' என்னும் இச்சடங்கு காசர்கோடு மாவட்டத்திலுள்ள பாலக்குன்று கழகத்தில் நடத்தப்படுகிறது. மாசி, பங்குனி மாதங்களில் வரும் பரணி, பூரம் முதலான நட்சத்திரங்கள் வரும் நாளில் இச்சடங்கு நடைபெறுகின்றது.

கொடுங்கல்லூரை அடுத்த 'ஆனப்புழா' தேவி கோயிலில் 'கலம் பூஜை' என்ற பெயரில் இச்சடங்கு நடைபெற்று வருகின்றது. கண்ணூர் முதல் செல்லானம் வரையுள்ள மீனவர்கள் இச்சடங்கில் பங்கெடுக்கிறார்கள். அப்போது கொடுங்கல்லூர் அம்மன் பக்தர்கள் மீதேறி அருள்வாக்கு உரைப்பதைக் காணமுடிகின்றது.

மக்களை நோயிலிருந்து பாதுகாக்கவும், நினைத்த காரியம் நிறைவேறவும், பருவ காலங்கள் நாட்டிற்கு அனுகூலமாக அமையவும் இச்சடங்கு மக்களால் நடத்தப்பெற்று வருகின்றது. கேரளத்தில் நடைபெறும் அனைத்துச் சடங்குகளும் வேளாண்மையோடு தொடர்புடையனவாகும். சிலப்பதிகாரம் குறித்தமைந்த பொங்கல் வழிபாடு கேரளத்தில் பல்வேறு விதங்களில் நடைபெற்று வருவதை மேற்கண்ட பதிவுகள் உணர்த்துகின்றன.

**தாலப்பொலி**

கன்னிப் பெண்களோ, மங்கலப் பெண்களோ நடத்துகின்ற சடங்குதான் தாலப்பொலி. 'தாலம்' என்றால் 'தட்டு' என்று பொருள். (ஃபோக்லோர் நிகண்டு, ப.175) தட்டில் பச்சரிசி, உடைத்த தேங்காய், விளக்கு, பூக்கள் இவற்றை வைத்து வாத்திய கருவிகள் முழங்க ஊர்வலமாக காவு அல்லது கோயிலை அடைந்து வலம் வருதலே தாலப்பொலி ஆகும்.

சிலப்பதிகார வேட்டுவ வரியில், எயினர் குடியைச் சேர்ந்த சாலினி என்னும் குமரிப்பெண் கொற்றவைக் கோலம் புனைந்தாள். முறுக்குடைய கொம்பினை உடைய கலைமானின் மீது அமர்ந்து, கொற்றவைக் கோயிலை நோக்கி நகர்ந்தாள். அவ்வாறு சாலினி முன்னே செல்ல, வண்ணக்குழம்பும் பலவகை நறுமணப் பொடிகளும், குளிர்ந்த சந்தனமும், அவரை, துவரை முதலியவற்றின் புழுக்கலையும், எள்ளுருண்டை, நிணத்துடன் கலந்த சோறு, பூக்கள், நறுமணப் புகைகள், பலவகை நறுமணப் பொருட்கள் முதலியவற்றுடன் மறக்குடிப் பெண்கள் ஊர்வலமாக சாலினியின் பின்னே சென்றனர். இப்பயணத்தில் இசையாக சிறுபறையும், துடியும், துத்தரிக்கொம்பும், குழலும், மணியும் முழங்கியது.

எயினர்கள் மலர்பலி பீடிகையை வணங்கி, குமரியையும் தொழுது கொற்றவையையும் வணங்கினர். இதனை,

**"வண்ணமுஞ் சுண்ணமுற் தண்ணறுஞ் சாந்தமும்**
**புழுக்கலும் நோலையும் விழுக்குடை மடையும்**
**பூவும் புகையும் மேவிய விரையும்**
**ஏவல் எயிற்றியர் ஏந்தினர் பின் வர**
**ஆறெறி பறையுஞ் சூறைச் சின்னமுன்**
**கோடும் குழலும் பீடுகெழு மணியும்**
**கணங்கொண்டு துவைப்ப அணங்குமுன் நிறீஇ"**

(வேட்டுவவரி,பக்.36-42)

என்னும் மேற்கண்ட பாடலடிகள் மூலம் புலப்படுகின்றன.

ஒரு எயினர்குலக் கன்னிப்பெண் கொற்றவையின் வேடம் பூண்டு கொற்றவை கோயிலுக்குச் செல்கின்றாள். அவள் பின்னே மறக்குடி பெண்களும் பல பொருட்களை ஏந்தியவாறு வாத்தியங்கள் முழங்க செல்கின்றனர். இக்காட்சி இன்றைய கேரளத்தில் கோயில்களிலும், காவுகளிலும் நடைபெறும் தாலப்பொலி விழாவினை நினைவுறுத்துகின்றது.

கேரளத்தில் ஐயப்பன் காவு, கணபதிக்காவு, பத்ரகாளிக்கோட்டம் போன்ற இடங்களில் 'தாலப்பொலி' என்னும் வழிபாட்டுச் சடங்கு நடைபெற்றிருந்ததாக 'கேரளோற்பத்தி' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளது. கேரள வழிபாட்டுச் சடங்கு மரபுகளில் 'காளி' முக்கிய இடத்தைப் பெறுகின்றாள். கன்னிப்பெண்கள் தாலத்தைக் கையில் ஏந்தி, குரவையிட்டு, கோயிலை வலமாக வருகின்றனர். தாலத்திலுள்ள மங்களப் பொருட்களை கோயிலின் முன் வைத்துள்ள பெரிய அகன்ற பாத்திரத்தில் சமர்ப்பிப்பர். சில இடங்களில் தாலப்பொலிக்கு வாத்தியங்களை முழக்குகின்றனர். 'காளி'க்காக மட்டும் நடத்தப்பெற்ற தாலப்பொலி, பிற்காலத்தில் பிற கோயில்களிலும், காவுகளிலும் சிறுதெய்வ வழிபாட்டின் போதும் நடத்தப்பெற்று வருகின்றன.

**கொடுங்கல்லூர் தாலப்பொலி**

ஒவ்வொரு வருடமும் மகரம் (தைமாதம்) ஒன்றாம் தேதி முதல் நான்காம் தேதி வரை நான்கு நாட்கள் தாலப்பொலி விழா நடந்து வருகின்றது. கொடுங்கல்லூர் காவிலிருந்து அரை கிலோமீட்டர் தூரத்திலுள்ள குறும்பக் கோவிலிலிருந்து தான் தாலப்பொலி ஊர்வலம் ஆரம்பிக்கிறது. விரதம் மேற்கொண்ட கன்னிப் பெண்கள் தாலத்தில் மங்கலப் பொருட்களை ஏந்தியவாறு வாத்திய முழக்கங்களுடன் தேவிக்கு சமர்ப்பிக்கின்றனர். இதனைக் கன்னிப்பெண்கள் நடத்துகின்ற சடங்காகவே கருதுகின்றனர்.

தாலப்பொலி என்பது கேரளப் பண்பாட்டின் அடையாளம், தொல்திராவிடத் தன்மை வாய்ந்தது. வழிபாட்டுச் சடங்குடன் தொடர்புடையது. இப்பொழுது சடங்கின்றி, தலைவர்களை அல்லது பெரியோர்களை வரவேற்பதாகவும் காணமுடிகின்றது.

**கூட்டம் கூடல்**

குடும்பி என்னும் இனத்தவர் ஒன்றாகக் கூடுகின்ற கூட்டம். தாலப்பொலி ஆரம்பித்த ஒன்றாம் நாள் முதல் அதாவது மகரசங்கிரமம் முதல் குடும்பி இனத்தார் கூட்டம் கூட்டமாகக் கோவிலுக்கு வருகின்றனர். பிற பக்தர்களைப் போல் தேவியை வழிபட்டவுடன் திரும்பிச் செல்வதில்லை. ஒருநாள் முழுவதும் கோயிலிலேயே தங்குகின்றனர். அவ்வாறு தேவியுடன் தங்கினால் அடுத்த வருடம் வரை அவர்களுக்கு ஒரு துன்பமும் வராது என்று நம்புகின்றனர்.

முதல்நாள் தாலப்பொலியன்று, இவர்கள் குறும்பக்காவிலிருந்து வாத்திய முழக்கங்களுடன் ஆடுகளையும், தங்கள் உழைப்பின் பலனாக கிடைத்த நல்லமிளகு, இஞ்சி, மஞ்சள், வாழைக்குலைகள் முதலியவற்றை கொடுங்கல்லூர் அம்மனின் வடக்கு வாயிலில் சமர்ப்பிக்கின்றனர். ஆட்டிற்கு மாலையிட்டு, நெற்றியில் குங்குமம் இட்டு தேவிக்கு ஆட்டை சமர்ப்பிப்பதற்கு 'நடைதள்ளுதல்' என்று பெயர்.

கோழிக்குளங்கரை, இடமுக்கு என்னும் இடங்களிலுள்ள குடும்பி இனத்தவர் கொடுங்கல்லூர் கோயிலில் மகர சங்கிரமம் அன்று தங்குகின்றனர். இதனை சிலம்பில் வேட்டுவவரியில் மறவர்களின் மன்றம் காணப்படுகின்றது. ஆவேசம் பூண்ட மறப்பெண்டிரும் உண்டு, 'கொற்றவைக்குக் கொடுக்கவேண்டிய நேர்த்திக்கடன் கொடுக்காவிட்டால் மன்றம் பாழ்படும்' என்று வருவது உரைக்கின்றாள் மறப்பெண் ஒருத்தி. இந்நிகழ்வு தாலப்பொலியின் போது குடும்பி இனத்தவரின் செயல்களோடு ஒத்துள்ளது.

கொடுங்கல்லூர் கோயில் வளாகத்தில் நிறைய அரச மரங்களும், பாலை மரங்களும் காணப்படுகின்றன. அம்மரங்களைச் சுற்றி வட்டமாகத் திண்ணை போன்று கட்டி வைக்கப்பட்டுள்ளது. அதற்கு அவகாசத்தரை (உரிமைத் தரை) என்று பெயர். ஒவ்வொரு ஊர்க்காரர்களுக்கும் ஒவ்வொரு தரை உண்டு. வலிய தம்புரானுக்கு (மன்னன்) வரி செலுத்தி, அதை உரிமையாக்கிக் கொள்கின்றனர்.

மன்றம் என்பது ஒரு இனத்தவர் ஒன்றாகக் கூடுகின்ற இடம், சிலம்பில் எருமன்றம், கூட்டுணவு உண்ணும் மன்றம் போன்றன காணப்படுகின்றன. இது தொல் திராவிட வழக்கம். இவ்வழக்கத்தின் தொடர்ச்சியே 'கூட்டங்கூடல்' சடங்காகக் கருத இடமுண்டு.

கோயிலின் வடக்கு வாயிலில் இவ்வினத்தார் ஒன்றாகக்கூடி சுவாசினி பூஜையை நடத்துகின்றனர். அவல், நெற்பொரி, வெல்லம், தேன், பழம் இவற்றைக் கலந்து தேவிக்குப் படைக்கின்றனர்.

மேற்குறிப்பிட்ட செய்திகளிலிருந்து ஒரு காலத்தில் இனக்குழு மக்களுக்கு இக்கோயிலில் உரிமை அளிக்கப்பட்டிருந்ததையும், இழந்த அவ்வுரிமையை நிலைநாட்டுவதற்காகவே குறிப்பிட்ட நாட்களில் இனக்குழு மக்கள் தங்கள் சடங்குகளைச் செய்கின்றனர் என கருத முடிகின்றது.

**ஊசல்**

ஊஞ்சல் விளையாட்டு என்பது ஊஞ்சலில் அமர்ந்து ஆடுவதைக் குறிக்கின்றது. பெரிய மரக்கிளையில் நீண்ட கயிற்றைக் கட்டி, அதில் உட்காருவதற்கான பலகையையும் பொருத்துவர். கயிறுகளை இருகைகளாலும் பிடித்துக் கொண்டு கால்களினால் பூமியை உதைத்து வேகவேகமாக ஆடுவர். இது பெண்களுக்குரிய விளையாட்டு.

பழந்தமிழ் இலக்கியங்களிலும் ஊசல் பற்றிய குறிப்பு காணப்படுகின்றன.

**"பெருங்கயிறு நாலும் இரும்பனம் பிணையல்"** (நற், 90:6)

**"............ சில்வளைக் குறுமகள்**

**ஊசல் உறுதொழில் பூசல் கூட்டா"** (நற்.90:9-10)

முதலான சங்கப்பாடல்களில் ஊஞ்சல் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. அதாவது கரிய பனை நாரினால் உறுதியாக செய்யப்பட்ட ஊஞ்சலை நற்றினை எடுத்துக்காட்டுகின்ற நிலையில் பரத்தை ஊசலாடாது தலைவனுடன் ஊடினாள் என்ற செய்தியையும் எடுத்துரைக்கின்றது. அதனால் சங்ககாலம் முதலே பெண்கள் ஊஞ்சல் ஆடினர் என்பது தெரிய வருகின்றது.

**சிலம்பில் ஊசல்**

சிலப்பதிகாரம் பெண்கள் ஊஞ்சலாடிய தகவலைத் தருகின்றது.

**"வடங்கொள் மணியூசல் மேலிரீஇ ஐயை**
**யுடங் கொருவர் கைநிமிர்த்தாங் கொற்றைமே லூக்கக்**
**கடம்பு முதல் தடிந்த கவலனைப் பாடிக்**
**குடங்கை நெடுங் கண்பிறழ ஆடாமோ வூசல்**
**கொடுவிற் பொறிபாடி ஆடாமோ வூசல்"**

(சிலப்,வாழ்த்துக் காதை,ஊசல்வரி-26)

**"கார்செய் குழலாட ஆடாமோ ஊசல்**

**கடம் பெறித்த வாபாடி ஆடாமோ ஊசல்"**

(சிலப்,வாழ்த்துக் காதை ஊசல்வரி-27)

**"மின் செய் இடைநுடங்க ஆடாமோ ஊசல்**

**விறல்விற் பொறிபாடி ஆடாமோ ஊசல்"** (மேலது-28)

கயிற்றினால் கட்டப்பட்ட அழகிய ஊஞ்சலிலே ஒரு பெண் அமர்ந்தாள். உடன் நின்றவர்களில் ஒருத்தி தன் கைகளால் ஊஞ்சலை வேகமாக செலுத்தினாள். அப்பெண்கள் ஊஞ்சல் ஆடியவாறே சேரனை வாழ்த்திப் பாடியதாக மேற்கண்ட பாடல் உணர்த்துகின்றது. ஊஞ்சலாடுவதென்பது இன்றைய கேரளப் பெண்களுக்கும் பிடித்தமான ஒன்றாகும்.

கேரளத்தில் ஓணம், திருவாதிரை போன்ற விழாக் காலங்களில் பெண்கள் ஊஞ்சல் கட்டி விளையாடி மகிழ்கின்றனர். மார்கழி மாதத்தில் திருவாதிரைநாள் வருவதற்கு ஒரு வாரம் முன்னதாகவே ஒவ்வொரு வீடுகளிலும் ஊஞ்சல் கட்டி ஆடுவார்கள். அவ்வூஞ்சலில் இலக்குமி குடியிருப்பாள் என நம்பப்படுகிறது. இன்றும் மார்கழி மாதத்தில் சிறுமியரும், சிறுவர்களும் ஊஞ்சல் கட்டி ஆடுவது வழக்கமாக உள்ளது.

**கன்னி வழிபாடு(குமாரிபூஜை)**

இந்தியாவில் நவராத்திரி விழா ஒன்பது நாட்கள் கொண்டாடப்பட்டு வருகின்றது. துர்க்காதேவி மகிடாசுரனை அழித்த நாளினை நவராத்திரி விழாவாகக் கொண்டாடுகின்றனர். மேற்குவங்காளம், குஜராத் போன்ற சில மாநிலங்களில் ஆனி மாதத்தில் அவ்விழாவைக் கொண்டாடுவர். சில மாநிலங்களில் தை மாதமும் கொண்டாடப்படுகிறது. ஆனால் தென்னிந்தியாவில் பரவலாக புரட்டாசி மாதத்தில் அமாவாசை முடிந்த ‘பிரதமை’ முதலாகத் தொடங்கி ‘நவமி’ ஈறாகக் கொண்டாடப்படுவது வழக்கம்.

நவராத்திரியின் முதல் மூன்று நாட்கள் துர்க்கையை வழிபடுவர். அடுத்த மூன்று நாட்களுக்கு லட்சுமியை வழிபடுவர். கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதி தேவியை வழிபடுவது பெருவழக்காகக் காணப்படுகின்றது. இவ்வழிபாடு இந்தியா முழுவதும் பரவக் காரணமாக இருந்தவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் என நம்பப்படுகிறது. அவர் தனது மனைவி சாரதா தேவியை மகாகாளியாகவே மனதில் கண்டார். அவரை நாற்காலியில் உட்கார வைத்து பூசை செய்து வந்தார். காளி தீமையை அழித்து நன்மையை நிலைநாட்டுபவளாகப் போற்றப்படுகின்றாள். அவளின் அம்சமாகக் கருதப்படுகின்ற கன்னியரை நவராத்திரி நாட்களில் வழிபடும் முறையினை இந்தியாவின்

பல இடங்களில் பரவலாகக் காணமுடிகின்றது. நவராத்திரி நாட்களான அவ்வொன்பது நாட்களிலும் ஒன்பது கன்னிப்பெண்களை தேவியாகவே கருதி வழிபட்டு வருகின்ற சடங்கு நடைபெறும். அதனைப் பொதுவாக கன்னி வழிபாடு (குமாரிபூஜை) என்றழைக்கின்றனர்.

**சிலப்பதிகாரம்  காட்டும் கன்னி வழிபாடு**

கன்னி வழிபாடு தொல் திராவிடர்களின் புராதன வழிபாட்டுச் சடங்காகும். கன்னிப்பெண்கள் 'சக்தியின் மறுஉருவம்' என்று கருதப்பட்டதாக கே.கே.என்குறுப்பு 'மலபாரில் நாடன் கலைகள்' என்ற நூலில் எடுத்துரைத்துள்ளார். சிலப்பதிகாரத்திலும் இதற்கான சான்று கிடைக்கின்றது. வேட்டுவ வரியில் 'சாலினி' என்னும் எயினர்குலக் குமரிப்பெண் (கன்னிப்பெண்) கொற்றவைக்கோலம் புனைந்தாள். இதனை,

**"இட்டுத்தலை எண்ணும் எயினர் அல்லது**
**சுட்டுத்தலை போகத் தொல்குடிக் குமரியைச்**
**சிறுவெள் அரவின் குருளை நாண்சுற்றிக்**
**குறுநெறிக் கூந்தல் நெடுமுடி கட்டி"** (சிலப்.வேட்டுவவரி-20 -23)

என்று இளங்கோவடிகள் எடுத்துக்காட்டுகின்றார். இதனால் எயினர்களிடையே குமரியைக் கொற்றவையாக நினைத்து வழிபடும் வழக்கம் இருந்தது என்றறிகின்றோம்.

**கேரளத்தில் கன்னி வழிபாடு**

கேரளத்தின் சில இடங்களில் கன்னிப்பெண்ணை தேவியாகவே அலங்கரித்து கோயில் கருவறைக்கு முன் பக்தர்களை நோக்கிய வண்ணம் அமரவைக்கிறார்கள். அப்பெண்ணை தேவியாகவே நினைத்து பூசாரி பூசை செய்கின்றார். பக்தர்களும் வணங்குகின்றனர். தேவிக்கு காணிக்கையாக ஆடை, அணிகலன்கள், பழம், தாம்பூலம், மலர், சீப்பு, கண்ணாடி முதலிய மங்கலப் பொருட்களுடன் மஞ்சள், குங்குமம், பணம்

போன்றவற்றை வழங்குகின்றனர், அறுசுவை உணவையும் படைக்கின்றனர். இதன்மூலம் தெய்வக்கோலம் பூண்ட கன்னிப்பெண் தன் வாழ்வில் அனைத்து நலன்களையும் பெறுவாள் என்று நம்புகிறார்கள்.

கன்னி வழிபாடாகிய இப்புராதனச் சடங்கு மலபாரில் ராமவில்யம் கழகத்தில் 'தீயர்' என்னும் இனத்தாரிடையே வழக்கிலுள்ளது. இச்சடங்கு படகத்தி பகவதி கோயிலில் நடைபெற்று வருகின்றது. **"பூப்படையாத கன்னிப்பெண்கள் புதிய உடையணிந்து தாலம் (தட்டு) ஏந்தியவாறு பகவதியின் முன் ஊர்வலமாகச் செல்கின்ற ஒரு வழக்கம் உண்டு."**(டா.கே.கே.என்.குறுப்பு,மலபாரில்நாடன்கலை,ப.37) என்னும் பதிவில் கேரளாவில் குமரிவழிபாடு எவ்வாறு நிகழுகின்றது என்பதற்கான குறிப்பு கிடைக்கின்றது. கொல்லம் மாவட்டத்தில் காளவாய் என்னுமிடத்தில் உள்ள பகவதிக்காவில் ஒன்பது நாளும் ஒவ்வொருகன்னிப் பெண்ணாக அலங்காரம் செய்து கன்னிவழிபாடு நடத்தி வருகின்றனர். சேர்த்தலா என்னும் இடத்திலுள்ள கூட்டாலபகவதி கோயிலிலும் இச்சடங்கு நடத்தப் படுகின்றது.

**நவராத்திரிவிழா**

பெண்களை சக்தியின் வடிவங்களாக வழிபடும் நவராத்திரி விழாவின் போது கன்னி வழிபாடு(குமாரிபூஜை) நடைபெறுகின்றது. இரண்டு முதல் எட்டு வயது வரையிலான பூப்படையாத சிறுமியரை இச்சடங்கிற்குத் தேர்ந்தெடுக்கிறார்கள். இதற்கு சில விதிமுறைகளும் உண்டு. நோயற்றவர்களாகவும், குறையற்றவர்களாகவும் இருக்கவேண்டும். இச்சிறுபருவத்தில் மனதில் எந்தவிதக் களங்கமும் இல்லாமல் இருப்பார்கள் என்பதாலேயே இத்தகைய தேர்வு நடைபெறுகின்றது.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு சிறுமி என்ற முறையில் குமாரி, திருமூர்த்தி, கல்யாணி, ரோகிணி, காளி, சண்டிகா, சாம்பவி, துர்க்கா என்ற பெயர்களால் அச்சிறுமியர் வழிபடப்படுகிறார்கள்

தொல்தமிழரின் கன்னி வழிபாட்டுச் சடங்குமுறையின் தொடர்ச்சியாக கேரளத்தில் இன்றும் பல இடங்களில் சிற்சில மாற்றங்களுடன் கன்னி வழிபாடு (குமாரிபூஜை) நடைபெற்று வருகின்றது. நவராத்திரி நாட்களில் வீடுகள் தோறும் சிறுமியரை தேவியாக பாவித்து வழிபட்டு வருகின்ற நிலையும் உண்டு. இங்ஙனம் சிலப்பதிகாரம் எடுத்துரைத்த கன்னி வழிபாட்டின் அறுபடாத தொடர்ச்சியினை கேரளத்தின் பல்வேறு பகுதிகளில் இன்றும் கண்டு கொண்டிருக்கின்றோம் .

**திருவோணம்**

’ஓணவிழா ’கேரளத்தின் தேசியவிழா ஆகும். ஆவணி மாதம் அத்தம் நாள் முதல் பத்து நாட்கள் ஓணம் கொண்டாடிவருகின்றனர். அவ்விழாவில் 'திருவோண' நாள் மிக இன்றியமையாத நாளாக கருதப்படுகின்றது.

பழந்தமிழ் நூலான மதுரைக்காஞ்சியில் ஓணவிழாக் கொண்டாடியதைப் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது.

**”மாயோன் மேய ஓணநன்னாள்**
**கோணம் தின்ற”**

( மதுரைக்காஞ்சி, பா. 590-91)

என்பது மதுரைக்காஞ்சி தரும் செய்தியாகும். பெரியாழ்வாரும்

**”அத்தத்தின் பத்தாம்நாள் தோன்றிய அச்சுதன்”**(பெரியாழ்வார் திருமொழி ,2:6) என்கின்றார். இங்கு திருமால் அத்தத்தின் பத்தாம் நாளாகிய திருவோணத்தில் பிறந்தவர் என்ற குறிப்பு இடம்பெற்றுள்ளது.

சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவையில் ,

**................திருமால் நின் செங்கமல**
**இரண்டடியான் மூவுலகும் இருள் தீர நடந்ததையே**

(ஆய்ச் -முன்னிலைபரவல்-3)

**"மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகை முடியத்**
**தாவிய சேவடி சேப்பத்"**

(ஆய்ச் -படர்க்கைப்பரவல்-1)

என்றவாறு திருமால் மூன்றுலகங்களையும் தன் இரண்டடியால் அளந்த கருத்து வலியுறுத்தப்படுகிறது. திருமாலின் வாமன அவதாரத்தைக் குறியீடாக இங்கு காட்டியுள்ளார்கள். மதுரையில் சிலம்பு விற்கச் சென்ற கோவலன் பொற்கொல்லனனின் சூழ்ச்சியால் பாண்டிய மன்னனால் கொல்லப்பட்டான். அப்பொழுது ஆயர்பாடியில் தீயசகுனங்கள் ஏற்பட்டது. மாதரி தன்மகள் ஐயையினை அழைத்து குரவைகூத்து ஆடுமாறு கூறினாள். அதன்பொருட்டு அங்குள்ள இளமகளிர் மாயவனை வாழ்த்தி குரவையாடுகின்றனர். அப்போது திருமாலின் வாமன அவதாரச் சிறப்பினை வாழ்த்திப் பாடிய நிலையில் குரவையாடுகின்றனர்.

**"மாயோன் மேய காடுறை உலகம்"** (தொல்.பொருள்.அகம்.5)

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின்படி, மாயோன் ஆயர் குலமக்களின் வழிபடு தெய்வமாக இருந்தது தெரியவருகின்றது. அவர்கள் வணங்குகின்ற திருமாலின் 'வாமன' அவதாரத்தையே இரண்டடியால் மூவுலகை அளந்தவன் என்று புகழ்ந்து பாடுகின்றனர்.

**திருக்காக்கரை வாமனமூர்த்தி**

திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்று வாமன அவதாரம். வாமனனாக வந்த திருமால் மகாபலி மன்னனிடம் மூன்றடிமண் கேட்டல், மகாபலியை பாதாளத்தில் தள்ளுதல் முதலிய நிகழ்வுகள் திருக்காக்கரை என்னும் இடத்தில் நிகழ்ந்தன என்று

கேரளமக்கள் நம்புகின்றனர். இக்கோவிலில் மகாவிஷ்ணுதான் மூலவர். ’கால்கரை’ என்பது இவ்விடத்தின் பழைய பெயர். ’கால்’ என்ற சொல்லினை வாமனமூர்த்தியின் பாதத்தினை குறிப்பதாக நம்பப்படுகின்றது.

மகாபலி குறித்த ஒரு தொன்மம் கேரள நாட்டாரிடையே வழங்கி வருகின்றது. மகாபலியின் ஆட்சியில் மக்கள் வறுமையும், துன்பமுமின்றி மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். மகாபலி மன்னன் மூவுலகையும் தன்கீழ் கொண்டுவர ஆசைப்பட்டான். இதனை அறிந்த தேவர்கள் திருமாலிடம் முறையிடவே, திருமால் ’வாமன’ அவதாரம் எடுத்தார். மகாபலியிடம் தானமாக மூன்றடி மண் கேட்டார். மன்னனும் தருவதாகக் கூறினார். திருமால் விஸ்வரூபம் எடுத்தார். ஒரு அடியால் மண்ணையும் மற்றொரு அடியால் விண்ணையும் அளந்தார். மூன்றாவது அடிக்கு இடம் இல்லாதகாரணத்தால், மகாபலி தன் தலையைக் காண்பித்தார். திருமால் மகாபாலியின் தலையில் கால் வைத்து பாதாளத்திற்குத் தள்ளினார். அதற்கு முன் மகாபலியிடம் என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். மகாபலியும் வருடத்திற்கு ஒருமுறை என் நாட்டு மக்களைக் காண வேண்டும் என்ற வரத்தினைப் பெற்றார். அந்நாளையே கேரளநாட்டார் ஓணவிழாவாகக் கொண்டாடி வருகின்றனர்.

**அத்தப் பூக்களம்**

'பூக்களம்' என்றால் பூக்களால் கோலமிடுவது. அத்தம் தொடங்கி திருவோண நாள் இறுதியாக உள்ள பத்து நாட்களும் வீட்டின் முற்றத்தில் பூக்களால் அலங்கரிப்பர். இப்பூக்களம் மகாபலியை வரவேற்பதற்காக உருவாக்கப் படுகின்றது. தும்பைப்பூ, வெட்சிப்பூ, காசிப்பூ போன்ற மலர்களால் அலங்கரிப்பர். பத்தாம் நாளான திருவோணத்தன்று மண்ணால் செய்த’ திருக்காக்கரையப்பன்’(திருமால்) உருவத்தை

பூக்களத்தின் நடுவில் வைத்து பூசை செய்கின்றனர். மண்உருவம் நீண்ட சதுரமாக இருக்கும். திருக்காக்கரையப்பன் உருவத்துடன் நான்கு அல்லது ஆறு சிறிய மண்உருவத்தினையும் காவலாக நிறுத்துவர்.

**ஓணவிருந்து**

’காணம் விற்றும் ஓணம் உண்ணணம்’ என்பது பழமொழி. அதாவது விளைநிலத்தை விற்றாவது ஓணம் கொண்டாட வேண்டும் என்பது பொருள். அறுசுவையுடன் கூடிய பலவகை உணவுகளைத் தயார் செய்து உண்பதுதான் ஓணவிழாவின் சிறப்பாக அமைகின்றது.

**ஓணக்கோடி**

ஓணவிழாவிற்காக வாங்குகின்ற புதிய உடையை 'ஓணக்கோடி' என்பர். வீட்டிலுள்ள பெரியவர் ஓணவிழாவினை முன்னிட்டு, குடும்ப உறுப்பினர்களுக்கும் உறவினர்களுக்கும் புதிய உடையை வழங்குதல் என்பது மரபுவழிச் சடங்காகும்.

**ஓணவில்**

மகாபலி நாட்டுமக்களைப் பார்க்க வரும்பொழுது திருமாலின் தசாவதாரங்களையும் காணவேண்டும் என்று திருமாலிடம் வரம் பெற்றிருந்தார். அதன் நினைவாக மரத்தால் வில் செய்து அவ்வில்லின் மேற்பகுதியில் திருமாலின் பத்து அவதாரங்களையும் வரைவர். இதனை திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோயிலில் நேர்த்திக்கடனாக சமர்ப்பிப்பர். ஓணவில் கடம்பு, மஹாகனி போன்ற மரங்களால் செய்யப்படுகின்றது. இரும்பாலான நாண்(கயிறு) கட்டுகிறார்கள். மரத்தாலான அம்பும் மூங்கிலால் செய்த வில்லினையும் உருவாக்குகின்றனர். பாணர்கள், இந்த ஓணவில் உபயோகித்து ஓணப்பாட்டு பாடுகிறார்கள். அத்தப் பூக்களத்திலும் வில் வைத்து வழிபடுகிறார்கள்.

**ஓணத்தல்லு**

ஓணவிருந்து உண்டபின் ஆண்களுக்கான வீரவிளையாட்டு நிகழ்த்தப்படுகின்றது. ஊரில் உள்ள பொதுவான இடத்தில் இதற்காக அனுபவமிக்க வீரர்கள் ஒன்று கூடுவர். ஒரு போட்டியில் இரண்டு அணியாகப் பிரிந்து நிற்பர். பிறகு எதிரணியைப் பார்த்து சவால் விடுவர். இவர்களைப் பிரித்துவிட ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பார். 'ஓணத்தல்லு' என்பது இரண்டு கைவிரல்களை மடக்காமல் நேராக வைத்துக் கொண்டு ஒருவர் மற்றொருவரை அடிக்க வேண்டும். உடம்பில் அடிபடாமல் தப்பித்துக் கொள்பவர் போட்டியில் வெற்றி பெற்றவர்ஆவர். 'கையம்களி' என்ற வேறு பெயரும் இதற்கு உண்டு.

மேற்கண்ட சடங்கு முறையானது பழங்காலங்களில் மன்னர்கள், நிலஉடமைச் சமூகங்கள் போன்றவர்கள் தங்கள் படைவீரர்களுக்கு அளித்த போர்பயிற்சியினை நினைவுபடுத்துவதாக அமைகின்றது.

**ஓணப்பாட்டு**

கேரளத்தில் ஓணப்பாட்டுக்கள் என்னும் பெயரில் நிறைய பாடல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதில் ஓணவிழாச் சடங்குகள் குறித்த வருணனைகளே மிகுதியாகக் காணப்படுகின்றன.

**"சிங்ஙமாசத்திலே திருவோணத்து நாள்**
**மாவேலிதானும் வரும் இவிடே**
**பண்டே இதினேகாள் மோடியாய்**
**வேண்டுந்நதொக்கேயும் ஒருக்கிடேணம்**
**முற்றத்து வட்டக் களவுமிட்டு**
**புஷ்பங்கள் கொண்டு மதில் வளைச்சு**
**ஆர்ப்பு விளிச்சும் அலங்கரிச்சும்**
**எத்றயும் கோஷங்களொக்கே வேணம் "**

ஓணவிழாவின் போது மகாபலியை வரவேற்க பூக்களால் அத்தக்களம் இட்டு, ஆரவாரத்துடன் கொண்டாடப்படுவதை இப்பாடல் புலப்படுத்துகின்றது.

**ஓணவிளையாட்டுக்கள்**

கைகொட்டிக்களி, ஊஞ்சல் ஆடுதல், கிளித்தட்டு, தும்பிதுள்ளல், வள்ளங்களி, புலிக்களி போன்ற விளையாட்டுக்கள் ஓணவிழாவினை ஒட்டி நிகழ்த்தப்படுகின்றன. இவை சடங்கு சார்ந்த விளையாட்டுகள் ஆகும்.

ஓணவிழா கேரளமக்களின் அறுவடைத் திருவிழாவாகும். ஏற்றத்தாழ்வின்றி அனைவரும் ஓணவிழாவினைக் கொண்டாடி வருகின்றனர். அத்தப்பூக்களத்தில் தும்பை, வெட்சி மலர்களைத் தூவி வழிபடுதல் என்பது சங்க இலக்கியத்தில் போர்வீரர்கள் சூடிச்செல்லும் மலர்களாக உள்ளதால், இவ்விழா இரண்டு இனக்குழுமக்களிடையே நடைபெற்ற போர்நிகழ்ச்சியின் நினைவாக இருக்கலாம். எவ்வாறாயினும், இயற்கையைப் போற்றும் விதமாக ஓணவிழா அமைந்துள்ளது.

**மகாபலி பூஜை**

**”இந்தியாவில் பல இடங்களிலும் மகாபலி பூஜை நடைபெற்று வருகின்றது. மத்திய பிரதேசத்திலும் மகாபலி பூஜை நிலவிலுள்ளது. துலாம் (ஐப்பசி) மாதத்தில் அமாவாசையைத் தொடர்ந்து கோலத்து நாட்டில் பிராமணர்களின் வீடுகளிலும் மகாபலி பூஜை நடத்துகிறார்கள். இதற்கு 'வில்லேந்திரனை வரவேற்பது' என்ற வேறு பெயரும் உண்டு.துளுநாட்டிலும் ஓணம் கொண்டாடி வருகின்றனர். அமாவாசைக்கு முந்தின நாள் சூரிய உதயத்திற்கு முன் கிணற்றிலிருந்து நீர் எடுத்து குடத்தில் நிறைப்பர்.அதில் பூக்களை இடுவர். அமாவாசைக்கு அடுத்த நாள் மீண்டும் அதனைக் கிணற்றுக்குள் ஊற்றிவிடுகிறார்கள். மகாபலி பாதாள உலகிலிருந்து வெளியே வந்து மக்களைக் கண்டு**

**மீண்டும் பாதாளத்திற்கே சென்றுவிட்டதாக நம்புகின்றனர்."** (C.ராகவன், துளுநாடும் பாஷையும் நாட்டறிவும்,ப,335) இவ்விதமாக சிலப்பதிகாரம் வெளிப்படுத்திய திருமாலின் 'ஈரடியால் மூவுலகும் அளந்த செய்தி' வாயிலாக திருவோணம் பற்றிய பல்வேறு தரவுகளை அறிந்து கொண்டோம்.

**தொகுப்புரை**

சடங்குகள் என்பது நிகழ்த்துதல் தன்மை உடையது. அது சமூகத்தில் கருத்துகளைப் புலப்படுத்தும் காரணியாகவும் அமைகிறது. அனைத்துச் சடங்குகளும் தங்கள் இனமும் சமூகமும் வளம் பெற்று வாழவேண்டும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

சிலப்பதிகாரத்தில் பாணர்கள் மருவூர்ப்பாக்கத்தில் நிலையான குடியிருப்பினை உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். இவர்கள் குரல்வாய்ப் பாணர்களாகவும், யாழிசைத்துப் பாடுபவர்களாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

கேரளத்தில் இன்றும் பாணர்கள் நல்ல பாடகர்களாகவும், பொறாட்டு நாடகக் கலைஞர்களாகவும், மந்திரச்சடங்கு செய்பவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

ஆய்ச்சியர் குரவையில் மாதரி ஏழு ஆயர் கன்னியர்களைக் கொண்டு குரவையாடி கண்ணனை வழிபட ஏற்பாடு செய்தாள். கண்ணன் ஆயர்பாடியில் நப்பின்னையுடன் ஆடிய ஆடலை அவர்கள் ஆடினர். இது மரபு வழிச் சடங்காகவே நிகழ்த்தப்பட்டது.

கேரளத்தில் ஓணம், திருவாதிரை விழாக்களின் போது கைகொட்டிக்களி நிகழ்த்தப்படுகின்றது. இவ்வாடலில் பெரும்பான்மையும் கண்ணனைக் குறித்த பாடல்களே பாடப்பெறுகின்றன,

சிலப்பதிகாரத்தில் நாளங்காடிப் பூதத்திற்கு மறப்பெண்கள் பொங்கலிட்டு வழிபட்டனர். கேரளத்தில் பொங்கல் தெய்வ வழிபாட்டுச் சடங்குடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. கேரளக் கோயில்களில் இடம்பெறும் திசை பூதங்களுக்கு 'அமுது படைத்தல்' நிகழ்வு இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கி ன்றது.

சிலப்பதிகாரத்தில் 'ஞாயிறு போற்றுதும்' என்று இளங்கோவடிகள் சூரியனைப் போற்றிப் பாடியுள்ளார். அழற்படு காதையில், கண்ணகி முன் தீக்கடவுள் தோன்றிப் பேசியதாகக் கூறப்பட்டுள்ளது. கேரளத்திலும் ஐப்பசி மாதம் பத்தாம் நாள் சூரிய உதயத்தின் போது சூரியனுக்குப் பொங்கலிட்டு, தீபம் காட்டி வழிபடுகின்றனர்.

சிலப்பதிகாரத்தில் தொல் வழிபாட்டு மரபாகிய 'குமரி வழிபாடு' காணப்படுகின்றது. எயினர் குலத்து 'சாலினி' என்னும் கன்னிப்பெண் கொற்றவைக் கோலம் புனைந்தாள், அவளைக் கொற்றவையாகவே எயினர்கள் வணங்கினர். அதை நினைவூட்டும் விதத்தில் கேரளத்தில் பூப்படையாத கன்னிப்பெண்களை நவராத்திரி விழாவின் போது குமரித்தெய்வமாகவே வணங்குகின்றனர்.

கொற்றவைக் கோலம் புனைந்த சாலினியை மறப்பெண்கள் ஐயை கோட்டத்திற்கு அழைத்துச் சென்றனர். அவள் பின்னே பணிப்பெண்கள் பலர் மங்கலப் பொருட்களை ஏந்திச் சென்றனர். கேரளத்தில் அதனுடன் தொடர்புடைய 'தாலப்பொலி' என்னும் சடங்கு கோவில் வழிபாட்டுடன் தொடர்புடையதாக நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

சிலப்பதிகாரத்தில் சங்க இலக்கியத்தின் தொடர்ச்சியாகவே 'வேலன் களம்' குறிப்பிடப்பட்டுள்ளது. வடகேரளத்தில் இன்றும் 'வேலன் களம்' அமைத்து 'வெறியாட்டு' நிகழ்த்துகிறான்.

மலபார் வேலன் களம் அமைக்கும் முறை சங்க காலத்தின் நீட்சியாகவே உள்ளது. தமிழகத்தில் வேலன் களம் வழக்கொழிந்ததாகவே கருதமுடிகிறது. போர்த்தெய்வமாகிய கொற்றவையின் கோலத்தை பல வண்ணப்பொடிகளால் நிலத்தில் வரைந்து வழிபடுகின்றனர்.

சிலப்பதிகாரத்தில் வேலன் வெறியாடல் இடம் பெறுகின்றது சாலினி தெய்வமேறி வாக்குரைத்தல் நிகழ்வும் கூறப்பட்டுள்ளது.ஷாமானிசத்தின் தன்மைகளே. ஷாமானிசம் என்பது ஆதி மனிதனின் அதீத அறிவு நிலை. வடமலபாரில் நிகழும் வேலனாட்டத்தின் நீட்சியே என்பது தெளிவு.

சிலப்பதிகாரத்தில் நாளங்காடிப்பூதம் வழிபாட்டின் போதும், கொற்றவையின் வழிபாட்டின் போதும் மறவர்கள் தங்கள் தலையை அறுத்து குருதியினை காணிக்கையாகக் கொடுக்கும் தொல் மரபினைக் காணமுடிகிறது.

வடமலபார் பகுதிகளில் வடக்கேன் வாதில் என்பது உயிர்ப்பலி கொடுக்கின்ற இடமாகும். இன்றும் தெய்வத்திற்கு உயிர்ப்பலி கொடுத்துவருகின்றனர். இதற்குப் பதிலியாக சுண்ணாம்பும் மஞ்சளும் கலந்த குருதியினை தெய்வத்திற்கு படைக்கின்றனர்.

சிலப்பதிகாரத்தில் ஓணம் குறித்த தொன்மங்களாக வாமனன் மூன்றடி மண் கேட்ட செய்தி குறிக்கப்பட்டுள்ளது.

கேரளத்தில் இன்றும் வெகு சிறப்பாக ஓணப்பண்டிகைக் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஓணப்பாட்டு, ஓணக்களி, தும்பிதுள்ளல் போன்றவை சடங்கு முறையாக நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

# முடிவுரை

## முடிவுரை

சேரநாட்டில் தோன்றிய சிலப்பதிகாரம் என்னும் பழந்தமிழ்க் காப்பியமும் அதற்கு முன்பு தோன்றிய சங்க இலக்கியங்களும் எடுத்துக்காட்டிய பல பண்பாட்டுப் பதிவுகளை இன்றைய கேரளநாட்டு மக்கள் கடைப்பிடித்து வருதலைக் காண்கிறோம். கேரள நாட்டாரின் தொன்மக்கதைகள், வழிபாடுகள், சடங்குகள், நம்பிக்கைகள், கலைகள் முதலானவற்றினூடே அவை இரண்டறக் கலந்து கிடக்கின்றன. அவற்றை ஆய்ந்து கண்ட முடிவுகள் பின்வருமாறு:

தமிழ்ச் செவ்விலக்கிய ஆய்வுகளில் தொன்மங்களும் பழமரபுக் கதைகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் கதை ஓர் உயர்ந்தவகைக் கற்புநெறியையும் வீரஉணர்வினையும் வெளிக்காட்டுகின்றது. கண்ணகி கதை வாய்மொழியாக வழங்கப்பட்ட பின்னரே காப்பியமாக இயற்றப்பட்டிருக்கவேண்டும். கண்ணகி கதையானது தமிழகத்தில் மட்டுமின்றி கேரளத்தின் அனைத்து நிலப்பரப்புகளிலும் மிகுதியாக வழங்கப்பட்டு வருகின்றது. கண்ணகிகதை காலந்தோறும் மாற்றங்களுக்குட்பட்டு வழங்கப்பட்டு வந்துள்ளது என்பதனை கேரளநாட்டார் கதைபாடல்கள் தெளிவுறுத்துகின்றன.

கண்ணகிக்கு சேரன்செங்குட்டுவன் வஞ்சியில் கோயில் எடுத்ததாக சிலப்பதிகாரம் கூறுகின்றது. அதன் விளைவாகவே கேரளநாட்டார் மரபில் கண்ணகி பற்றிய கதைகள் பரவலாக வழங்கி வருகின்றன. கேரளநாட்டார் கண்ணகியை வீரமங்கையாகவும் பத்தினித்தெய்வமாகவும் கருதுவதனை அறியமுடிகிறது. கேரளநாட்டார் கதைப்பாடலில் கண்ணகியை நல்லம்மா, பொன்மகள், கர்ணகை, காளி, தேவி என்னும் பல்வேறு பெயர்களில் அழைக்கிறார்கள். கோவலன் நல்லச்சன், பொன்மகன், கோவிலன், பாலகன் என்னும் பெயர்களில் அறியப்படுகின்றான்.

கேரளநாட்டாரிடையே வழங்கி வருகின்ற கண்ணகி கதைகள் சிலப்பதிகாரக் கதையிலிருந்து மாறுபட்டு காணப்படுகின்றன. சிலப்பதிகாரக் கதையின் நிகழ்வு சேர சோழ பாண்டிய நாட்டில் நிகழ்ந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கேரளநாட்டார் கதைப்பாடலில் கதை நிகழ்வு கேரளத்தில் தொடங்கி கேரளத்தில் நிறைவு பெறுவதாகக் காணப்படுகிறது. ஒரு பெண் தன் கணவனுக்கு நேர்ந்த அநீதியை தட்டிக் கேட்கக்கூடிய ஆற்றல் வாய்ந்தவளாக இருந்தாள் என்பதை கேரள நாட்டார் பழமரபுக் கதைகள் மாற்றமின்றி காட்டுகின்றன. அங்ஙனமே கோவலன் சிலம்பினை விற்பதற்கு முயற்சி செய்யும் நிகழ்வு அனைத்து கேரளநாட்டார் கதைகளிலும் ஊடுருவிக் கிடக்கின்றது.

கேரள நாட்டார் கதைகளில் பாண்டிய நாட்டுப் பொற்கொல்லன் சிலம்பு திருடிய நிகழ்வு பதிவாகியுள்ளது. கேரள நாட்டார் கண்ணகியை காளியின் அம்சமாகவே கருதுகின்றனர். காளி - தாருகக் கதையுடன் கண்ணகி கதையை இணைக்கின்றனர். காளி, தாருகன் என்னும் தீமையை அழித்து உலகில் நன்மையை நிலைநாட்டுபவளாகக் காணப்படுகின்றாள். நாட்டார் கதைகளில் கதை சொல்பவரின் வட்டாரச் சூழலும் மொழியும் கண்ணகி கதைகளோடு கலந்து கொள்வதனைக் காணமுடிகின்றது.. ஆடவர்களை தன் அழகால் மயக்கி துன்பம் செய்கின்ற வனசாரினி என்னும் இயக்கியினை சிலப்பதிகாரம் குறிப்பிட்டுள்ளது. அங்ஙனமே கேரள நாட்டாரிடையே இயக்கியர் பற்றிய தொன்மக்கதைகள் பரவலாகக் காணப்படுகின்றன. இயக்கியரை சைவ வைணவ மதங்களுடன் இணைந்த தாய்த் தெய்வங்களாகவும் கருதுகின்றனர்.

சிலப்பதிகாரத்தில் மூன்று காண்டங்களிலும் பூதம் பற்றிய செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. புகார்நகரத்திற்கு பூதம் எங்ஙனம் காவலாகியது எனும் தொன்மக் கதையும் குறிப்பிடப்பட்டுள்ளது. கேரள நாட்டாரிடையே பூதங்கள் பற்றிய

தொன்மக்கதைகள் இன்றும் வழங்கிவருகின்றன. பூதங்களை காவல் தெய்வங்களாகவும் காளியின் பரிவாரங்களாகவும் கருதி வழிபட்டு வருகின்றனர்.

பண்டைத்தமிழர் இயற்கையின் ஆற்றல் மீது பக்தி கொண்டு அதனை வழிபட்டுள்ளனர். அதன் தொடர்ச்சியாக சிலப்பதிகாரக் காலத்திலும், ஞாயிறு, திங்கள், மழை, மரம் போன்றவற்றை வழிபட்டிருக்கின்றனர். அதற்குத் தக்க சான்றாக உச்சிக்கிழான்கோட்டம், நிலாக்கோட்டம் என்ற சில பதிவுகளை இளங்கோவடிகள் தந்திருக்கின்றார். அத்தகு வழிபாடுகளின் தொடர்ச்சியினை இன்றைய கேரளத்தில் காண்கின்றோம். தற்பொழுதும் கேரளத்தில் சூரியவழிபாடு இருந்து வருகின்றது. இதற்கு கோட்டயத்திலுள்ள ஆதித்யனார் கோவில் முக்கிய சான்றாகும். அங்ஙனமே உழவுத்தொழிலுக்கு அடிப்படையான மழையைப் போற்றி வணங்கியதை கேரளநாட்டார் பாடல் தெளிவுறுத்துகின்றது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகியோடு தொடர்பு படுத்திய நிலையில் வேங்கைமரத்தினை தெய்வமரமாகக் கருதுகின்றனர். அதனால் கேரளத்தில் வேங்கை மரத்தினை கோயில் கட்டுமானத்திற்கு மட்டுமே பயன்படுத்துகின்றனர். கேரளத்தில் பாலைமரம் காளியின் தலவிருட்சமாக உள்ளது. பாம்புக்காவுகளிலும் இயற்கையைப் பாதுகாக்கும் விதமாக அங்குள்ள மரம், செடி, கொடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

சிலப்பதிகாரத்தில் நாளங்காடிப்பூதம், சதுக்கப்பூதம், நான்கு வருணப்பூதங்கள் போன்ற பூதங்களும், அவற்றிற்கான வழிபாட்டு முறைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. பழங்காலத் தமிழர் வழிபாட்டில் பூதங்களுக்குத் தனியிடம் உண்டு. சிலப்பதிகாரம் அதற்குச் சான்று பகர்கின்றது. இன்றைய கேரளமக்கள் பூதங்களைத் துணைத்தெய்வங்களாக வழிபடுகின்றனர். பூதத்திற்கு பலி செலுத்தப்படுவதுண்டு. கேரள

இனக்குழுமக்கள் 'திரையும், பூதனும்' என்னும் வேடம் புனைந்து ஆடுகின்ற ஒரு வழக்கமும் உண்டு.

இயக்கியர் காடு, மலை, நீர்நிலை முதலான இடங்களில் சுற்றித்திரிபவர்களாக சிலப்பதிகாரம் சுட்டுகின்றது. கேரளத்தில் இயக்கியைத் தாய்த்தெய்வமாகவும், துணைத்தெய்வமாகவும் வணங்கி வருகின்றனர். நாட்டாரிடையே இயக்கி பற்றிய சொல்லாடல்கள் பரவலாக வழங்கிவருகின்றன.

சிலப்பதிகார காலத்தில் காமவேள் கோட்டம் இருந்திருக்கின்றது. காமனை வழிபட்டால் இம்மையிலும், மறுமையிலும் இன்பமுடன் வாழ்வர் என்னும் நம்பிக்கையும் அக்காலமக்களிடையே இருந்தது. சிலப்பதிகாரம் மதுரையில் காமன்விழா நடைபெற்றிருந்ததை உறுதிப்படுத்துகின்றது. அதன்தொடர்ச்சியாக இன்றும் அப்பகுதிகளில் காமன்விழா நடைபெற்றுவருகின்றது. கேரளத்தில் வடமலபார்ப் பகுதிகளில் 'காமதகனத்தை' அடிப்படையாகக் கொண்டு பூரவிழா நிகழ்கின்றது. அந்நிகழ்வு ஒன்பதுநாட்கள் கன்னிப்பெண்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது. கேரளமக்கள் காமன் உருவத்தை மண்ணால் செய்து வழிபடும் வழக்கத்தினைக் கொண்டுள்ளனர். இவ்வழக்கம் தொல்மரபின் நீட்சியாகவே கருதப்படுகின்றது.

சிலப்பதிகாரத்தில் தாய்த்தெய்வவழிபாட்டின் நீட்சியாகக் கொற்றவை வழிபாடு இடம்பெற்றுள்ளது. அந்நூலில் இடம்பெறும் சாலினி என்னும் எயினர்குலக் குமரிப்பெண் கொற்றவையாகவே வேடம் புனைகின்றாள். கண்ணகியை காளியாக உருவகப்படுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. கேரளத்தில் கொற்றவை என்னும் பெயரில் தெய்வத்தை வணங்குவதில்லை. கொற்றவையின் தோற்றம் கொண்ட காளியாகவே வணங்குகின்றனர். தாய்வழிச் சமூகத்தின் தொடர்ச்சியாகவே இத்தாய்த் தெய்வ வழிபாடு

நிலைபெற்றுள்ளது. கண்ணகி தெய்வமானதைக் குன்றக்குரவர்கள் செங்குட்டுவனுக்குக் கூறியதாகச் சிலப்பதிகாரம் உணர்த்துகின்றது. இவ்வாறு இனக்குழுமக்களால் வணங்கப்பட்ட கண்ணகி வழிபாடு, கேரளத்தில் பகவதி வழிபாட்டுடன் கலந்துள்ளது. அனைத்து பகவதிகளுக்கும் மூத்த பகவதியாக கொடுங்கல்லூர் குறும்ப பகவதி கருதப்படுகின்றாள். இப்பொழுதுள்ள பகவதி வழிபாட்டில் தாய்த்தெய்வவழிபாடும், பழந்தமிழரின் கொற்றவைவழிபாடும், காளிவழிபாடும், நாகவழிபாடும் கலந்தமையினைக் காணமுடிகிறது.

சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்தில் இடம்பெறும் அரங்கேற்று காதையில் தமிழக நிகழ்த்துகலையின் பாரம்பரியத்தை அறியமுடிகின்றது. அக்காதையில் மாதவி ஆடிய பதினொருவகையான ஆடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் துணங்கைக்கூத்து, வரிக்கூத்து, குரவைக்கூத்து, சாக்கியர் கூத்து முதலான பல கூத்துக்கலைகள் குறித்த தரவுகள் பிற காதைகளில் காணப்படுகின்றது. அக்கலைகள் பலவும் இன்றைய கேரளநாட்டார் கலைகளாக நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விநோதக்கூத்துகளில் ஒன்றான 'தோற்பாவைக்கூத்து' கேரளநாட்டாரிடையே கோயில்கலையாகவும், மக்கள் கலையாகவும் திகழ்கின்றது. சிலப்பதிகாரம் காட்டிய 'சாக்கியர்கூத்தின்' பன்முகத்தன்மையை இன்றைக்கும் கேரளத்தில் காணமுடிகின்றது. சிலப்பதிகாரம் 'நெடுவேள்வில்விழா' என்று காமன் விழாவினைக் குறிப்பிடுகின்றது. இன்றைய வடகேரளத்தில் 'மீனப்பூரம்' என்னும் பெயரில் இவ்விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்விழாவில் பூரமாலா, பூரக்களி போன்றவை மிகச் சிறப்பானவையாகும். இவ்விழா சாதி, மதபேதமின்றி அனைவராலும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

பழங்காலத்தில் பெண்களே பூசாரியாக இருந்தனர் என்பதற்கு சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் 'சாலினி,' 'தேவந்தி' ஆகியோர் சான்றாக அமைகின்றார்கள். அதன்மரபுத் தொடர்ச்சி இன்றைய கொடுங்கலூர் பகவதி வழிபாட்டில் நிலைபெற்றுள்ளது. வேட்டுவவரியில் இடம்பெறும் எயினர் குலப்பெண்ணாகிய சாலினியின் வெறியாட்டு, வடமலபாரில் இன்றைக்கும் நிகழ்த்தப்பட்டு வரும் வேலனின் 'தெய்யம்' என்னும் நிகழ்த்துகலையுடன் தொடர்புடையதாகும். கேரளநாட்டார் கலைகள் பெரும்பான்மையும் தாய்த் தெய்வங்களோடு தொடர்புடையவனாகவே காணப்படுகின்றன. இந்நிகழ்த்து கலைகளில் சடங்குகளும் கலைகளும் இரண்டறக் கலந்துள்ளன. இக்கலைகள் தேவதைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையேயுள்ள, நெருங்கிய தொடர்பினை எடுத்துரைக்கின்றது.

வடமலபாரில் தெய்யம், திரை போன்ற நிகழ்த்து கலை வடிவங்களில் தெய்வ ஆராதனையுடன் வீரஆராதனையும் முக்கியத்துவம் பெறுகின்றது. 'தீயாட்டு' என்னும் சடங்குக்கலைக்கு திரையுடன் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. தீயாட்டு நிகழ்த்துவதன் மூலம் அம்மை முதலான பல தொற்றுநோய்களிலிருந்து மக்களை பாதுகாக்க இயலும் என்றும், மழைவளம் பெருகும் என்றும் கேரளநாட்டார் நம்புகின்றனர். இத்தகைய நம்பிக்கையினூடே கண்ணகி வழிபாடு கேரளநாட்டாரிடையே உள்ளடங்கிக் கிடப்பதனை உணரமுடிகின்றது. அதாவது தீயாட்டு, முடியேற்று, படையணி போன்ற நாட்டார் நிகழ்த்துகலைகள் கண்ணகியாகக் கருதப்படும் காளி - தாருகவதைக் கதையுடன் தொடர்புபடுத்தியே நிகழ்த்தப்படுகின்றது. இனக்குழு மக்களான மண்ணான், வேலன், மலையன் போன்றோருக்கு அக்காலத்தில் சமூகத்தில் இருந்த பங்கினை அறியமுடிகின்றது. இவர்கள் தெய்வங்களின் வேடம் புனைந்து

ஆடும்போது இவர்களை தெய்வமாகவே நினைத்து வழிபடுகின்றனர். இதன் அடிப்படையில்தான் புராதன நிகழ்த்துகலையின் தோற்றம் உருவெடுத்திருக்க வேண்டும் என்று கருதலாம். எனவே கேரளநாட்டார் கலைகள் சிலப்பதிகாரம் உள்ளிட்ட செவ்விலக்கியங்கள் எடுத்துக்காட்டிய கலைவடிவங்களில் இருந்து உருவாகி சிற்சில மாற்றங்களுடன் இன்றளவிலும் பாரம்பரியத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றன எனலாம்.

சடங்குகள் என்பது நிகழ்த்துதல் தன்மை உடையது. அது சமூகத்தில் கருத்துகளைப் புலப்படுத்தும் காரணியாகவும் அமைகிறது. அனைத்துச் சடங்குகளும் தங்கள் இனமும் சமூகமும் வளம்பெற்று வாழவேண்டும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

சிலப்பதிகாரத்தில் பாணர்கள் மருவூர்ப்பாக்கத்தில் நிலையான குடியிருப்பினை உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். இவர்கள் குரல்வாய்ப் பாணர்களாகவும், யாழிசைத்துப் பாடுபவர்களாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.கேரளத்தில் இன்றும் பாணர்கள் நல்ல பாடகர்களாகவும், பொறாட்டு நாடகக் கலைஞர்களாகவும், மந்திரச்சடங்கு செய்பவர்களாகவும் வாழ்ந்துவருகின்றனர்.

சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவையில் இடம்பெறும் மாதரி ஏழு ஆயர் கன்னியரை உடனழைத்துக் குரவையாடி கண்ணனை வழிபட ஏற்பாடு செய்தாள். கண்ணன் ஆயர்பாடியில் நப்பின்னையுடன் ஆடிய ஆடலை அவர்கள் ஆடினர். இது மரபுவழிச் சடங்காகவே நிகழ்த்தப்பட்டது. இதனை அடியொற்றிய நிலையில் கேரளத்தில் ஓணம், திருவாதிரை விழாக்களின் போது 'கைகொட்டிக்களி' நிகழ்த்தப்படுகின்றது. அதற்காகப் பாடப்படும் பாடல்களில் பெரும்பான்மையும் கண்ணனைக் குறித்த பாடல்களே இடம்பெறுகின்றன,

சிலப்பதிகாரத்தில் நாளங்காடிப் பூதத்திற்கு மறக்குலப் பெண்கள் பொங்கலிட்டு வழிபட்ட செய்தி இடம்பெறுகின்றது. கேரளத்தில் அவ்வழிபாடு இன்றும் நிலைபெற்றிருக்கின்றது. கேரளக் கோயில்களில் இடம்பெறும் திசை பூதங்களுக்கு 'அமுதுபடைத்தல்' நிகழ்வு தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

சிலப்பதிகாரத்தில் 'ஞாயிறுபோற்றுதும்' என்று இளங்கோவடிகள் சூரியனைப் போற்றிப் பாடியுள்ளார். அழற்படுகாதையில், கண்ணகி முன் தீக்கடவுள் தோன்றிப் பேசியதாகக் கூறப்பட்டுள்ளது. கேரளத்திலும் ஐப்பசி மாதம் பத்தாம் நாள் சூரிய உதயத்தின்போது சூரியனுக்குப் பொங்கலிட்டு, தீபம் காட்டி வழிபடுகின்றனர்.

சிலப்பதிகாரத்தில் தொல்வழிபாட்டு மரபாகிய 'குமரிவழிபாடு' காணப்படுகின்றது. அதில் இடம்பெறும் எயினர் குலத்தைச் சார்ந்த 'சாலினி' என்னும் கன்னிப்பெண் கொற்றவைக் கோலம் புனைந்தாள். அவளைக் கொற்றவையாகவே கருதி எயினர்கள் வணங்கினர். அதை நினைவூட்டும் விதமாக இன்றைய கேரள மக்கள் நவராத்திரி விழாச் சடங்குகளில் பூப்படையாத கன்னிப்பெண்களை அலங்கரித்து குமரித்தெய்வமாகக் கருதி வணங்குகின்றனர்.

கொற்றவைக் கோலம் புனைந்த சாலினியை மறப்பெண்கள் ஐயை கோட்டத்திற்கு அழைத்துச் சென்றனர். அவள் பின்னே பணிப்பெண்கள் பலர் மங்கலப்பொருட்களை ஏந்திச் சென்றனர். கேரளத்தில் அதனுடன் தொடர்புடைய 'தாலப்பொலி' என்னும் சடங்கு கோவில் வழிபாட்டில் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.கேரள நாட்டார் மங்கலப் பொருட்களை ஏந்திச் செல்லும் நிகழ்வினை ‘தாலப்பொலி’ என்று வழங்குவர்.

சிலப்பதிகாரத்தில் சங்க இலக்கியத்தின் தொடர்ச்சியாகவே 'வேலன்களம்' குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை அடியொற்றியவாறு கேரள மலபார்ப்பகுதிகளில் இன்றும் வேலன் இனத்தார் 'களம்' அமைத்து'வெறியாட்டு' நிகழ்த்துகின்றார்கள். மலபார் வேலன் 'களம்' அமைக்கும் முறை சங்ககாலத்தின் நீட்சியாகவே உள்ளது. போர்த்தெய்வமாகிய கொற்றவையின் கோலத்தை பல வண்ணப்பொடிகளால் நிலத்தில் வரைந்து வழிபடுகின்றனர். தமிழகத்தில் வேலன் 'களம்' அமைக்கும் முறை வழக்கொழிந்ததாகவே கருதமுடிகிறது.

சிலப்பதிகாரத்தில் வேலன் வெறியாடல் இடம்பெறுகின்றது. சாலினி தெய்வமேறி வாக்குரைத்தல் நிகழ்வும் கூறப்பட்டுள்ளது. இவை ஷாமானிசத்தின் தன்மைகளே. ஷாமானிசம் என்பது ஆதிமனிதனின் அதீத அறிவுநிலை. வடமலபாரில் நிகழும் வேலனாட்டம் பழங்கால வேலன் வெறியாடலின் நீட்சியே என்பது தெளிவு.

சிலப்பதிகாரத்தில் நாளங்காடிப்பூதம் வழிபாட்டின் போதும், கொற்றவை வழிபாட்டின் போதும் மறவர்கள் தங்கள் தலையை அறுத்து குருதியினை காணிக்கையாகக் கொடுக்கும் தொல்மரபினைக் காணமுடிகிறது. அதனை நினைவூட்டும் நிகழ்வுகள் சில கேரளத்தில் காணப்படுகின்றன. குறிப்பாக வடமலபார்ப் பகுதிகளிலுள்ள கோயில்களில் காணலாகும் 'வடக்கேன்வாதில்' என்பது உயிர்ப்பலி கொடுக்கின்ற இடமாக விளங்குகின்றது. அங்கு இன்றும் தெய்வத்திற்கு உயிர்ப்பலி கொடுத்து வருகின்றனர். கேரளத்தின் சில பகுதிகளில் உயிப்பலிக்குப் பதிலியாக சுண்ணாம்பும் மஞ்சளும் கலந்த குருதியினை தெய்வத்திற்குப் படைக்கின்றனர்.

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் ஓணம் குறித்த தொன்மக்கதையில் வாமனன் மூன்றடி மண் கேட்ட செய்தி குறிக்கப்பட்டுள்ளது. அக்கதையோடு தொடர்புடைய ஓணப்பண்டிகையினை கேரள மக்கள் இன்றும் வெகுசிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். பத்து நாட்கள் வரை அப்பண்டிகைக் கொண்டாடப்படுவதுண்டு. அந்நாட்களில் ஓணப்பாட்டு, ஓணக்களி, தும்பிதுள்ளல் போன்றவை சடங்குமுறையாக நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

**மேலாய்வு**

இவ்வாய்வினை முன் வைத்து சில மேலாய்வுகள் நிகழ வழியுண்டு. அவை பின்வருமாறு:

சிலப்பதிகாரப் பனுவலை முன் வைத்து மலையாள மொழி உருவாக்கத்தின் தனித்துவப் பின்புலங்களை ஆராயலாம்.

பழந்தமிழ் இலக்கியங்களில் காணலாகும் நாட்டார் வழக்காறுகளையும் கேரள நாட்டார் வழக்காறுகளையும் ஒப்பாய்வு செய்வதற்கு இவ்வாய்வு ஒரு முன்னோடியாக அமைகின்றது.

இவ்வாய்வில் இடம்பெறும் இயல் தலைப்புகள் தனித்தனி ஆய்விற்கு உரியன.

# துணைநூற்பட்டியல்

## துணைநூற்பட்டியல்

**முதன்மை ஆதாரங்கள்**


1. **சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்குநல்லாருரையும்**
ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு,
எட்டாம் பதிப்பு-1968

2.வேங்கடசாமி நாட்டார்.ந.மு. **சிலப்பதிகாரம் மூலமும் உரையும்**
ராமையா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம்
3,ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை,
சென்னை-14, ஒன்பதாம் பதிப்பு-2018


**துணைமை ஆதாரங்கள்**


1. **அகநானூறு மூலமும் உரையும்**
NCBH, அம்பத்தூர், சென்னை-98
அக்டோபர்-2011

2. **ஐங்குறுநூறு**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1
மறுபதிப்பு-1966

3. **தொல்காப்பியம்** எழுத்து,சொல், பொருள்
புலியூர்க்கேசிகன் உரை

4. **தொல்காப்பியம்** பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியருரையும், பாகம்-1
உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை,
இரண்டாம் பதிப்பு-2007

5. **பத்துப்பாட்டு மூலமும் உரையும்**
NCBH, சென்னை-98, அக்டோபர்-2011

6. **பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரை**
டா.உ.வே.சாமிநாதய்யர் நூல்நிலையம்,

சென்னை-41, 1974

7. அருணாசலம். டா.ப, **சிலப்பதிகாரச் சிந்தனை**
தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-5
முதல் பதிப்பு-1971

8. அனந்த இராமய்யர். இ.வை. (பதிப்பித்தவர்) **கலித்தொகை மூலமும், நச்சினார்க்கினியர் உரையும்**
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613001, 1984

9. ஆனந்த குமார். பா. **இலக்கியமும் பண்பாட்டு மரபுகளும்**
N.C.B.H. சென்னை,
மூன்றாம் பதிப்பு-நவம்பர், 2007

10. இராகவையங்கார். மு., பேரா. **ஆராய்ச்சித் தொகுதி**
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
1984

11.காந்திதாசன்.க. **சங்க இலக்கியத்தில் பாணர் வாழ்வியல்**
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை
முதற்பதிப்பு-2011

12. கார்த்திகேசு சிவத்தம்பி **பண்டைத் தமிழ்ச் சமூகம்**
N.C.B.H.
முதல்பதிப்பு, ஜுன் – 2010

13. காவ்ய சண்முகசுந்தரம் (தொ.ஆ) **காவிய காலத் தமிழ் வையாபுரியாரியம்-2**
காவ்யா வெளியீடு
முதல் பதிப்பு – 2013

14. கோவிந்தன் உரை **நாலாயிர திவ்ய பிரபந்தம் மூலமும் எளிய உரையும்,**
சாரதா பதிப்பகம், சென்னை-14
இரண்டாம் பதிப்பு, 2017

15. சக்திவேல். டா.சு. **நாட்டுப்புற இயல் ஆய்வு**
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
மணிவாசகர் பதிப்பகம், சென்னை
நான்காம் பதிப்பு – 2003

16. சண்முகசுந்தரம். டா.சு. **நாட்டுப்புற இயல்**
மணிவாசகர் பதிப்பகம், சென்னை-8
மறுபதிப்பு, டிசம்பர்- 1994

17. சந்திரன். டா.வி.ஆர். ஜெயமோகன் (தமிழ்) **கொடுங்கோளூர் கண்ணகி**
யுனைட்டட் ரைட்டர்ஸ்,
முதல் பதிப்பு, டிசம்பர்- 2005

18. சாமி. பி.எல். **தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு**
NCBH, சென்னை- 98
ஐந்தாம் பதிப்பு, ஜனவரி- 2011

19. சாமி சிதம்பரநார் **பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை**
அறிவுப் பதிப்பகம், சென்னை-58,
மார்ச்-2008

20. சாமிநாதய்யர். உ.வே., டா. **குறுந்தொகை மூலமும் உரையும்**
தியாகராச விலாச வெளியீடு,
மூன்றாம் பதிப்பு, 1955

21. சிவசுப்பிரமணியன். ஆ. **மந்திரமும் சடங்குகளும்**
காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்,
நாகர்கோவில்- 629001,
ஏழாம் (குறும்) பதிப்பு, ஜூலை-2018

22. சீனிச்சாமி. துரை முனைவர். **சிலப்பதிகாரம் கதையும் கருத்தியலும்**
NCBH, சென்னை-600098

23.சீனிச்சாமி. து **தமிழில் காப்பியக் கொள்கை**
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
மறுபதிப்பு-1994

24. சுதாகர். கு. (தொகுப்பு) **கண்ணகி கதைகள்** (தமிழகம், கேரளம், ஈழம்)
NCBH, சென்னை- 98,
முதல் பதிப்பு, நவம்பர்- 2011

25. செல்லன் கோவிந்தன். முனைவர். **கண்ணகி வழிபாடு தென்னகத்திலும், இலங்கையிலும்,**
சேகர் பதிப்பகம், சென்னை- 600083,

ஜூன் – 2007

26. செல்வராசு. சிலம்பு நா. **சங்க இலக்கிய மறுவாசிப்பு**
காவ்யா பதிப்பகம்,
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி,
இரண்டாம் பதிப்பு-2009

27. சோமசுந்தரனார்.பொ.வே. **பரிபாடல் மூலமும் உரையும்,**
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை -1, மறுபதிப்பு-1969

28. துரைசாமிப்பிள்ளை ஒளவை **புறநானூறு மூலமும் உரையும்**
சாரதா பதிப்பகம், சென்னை-14,
2017

29. துளசி இராமசாமி. டா. **மங்கல தேவி கண்ணகி கோட்டம்**
I.I.T.S. தரமணி, சென்னை,
முதல் பதிப்பு-1987

30. பக்தவத்சல பாரதி **இலக்கிய மானிடவியல்**
அடையாளம் பதிப்பகம்,
இரண்டாம் பதிப்பு-2020

31. பக்தவத்சல பாரதி **பண்டைத் தமிழ்ப் பண்பாடு**
அடையாளம் பதிப்பகம்,
முதல் பதிப்பு-2020

32. பாலசுப்பிரமணியன். கு.வெ. **நற்றிணை மூலமும் உரையும்**
NCBH, 41, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600098
நான்காம் பதிப்பு-2011

33. முருகானந்தம். ச. **மக்கள் வழக்காற்றியல்**
தேன் மழைப் பதிப்பகம்,
முதற் பதிப்பு, டிசம்பர்-1989

34. லூர்து. தே. **நாட்டார் வழக்காற்றியல்: சில அடிப்படைகள்**
நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்,
தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி,

பாளையங்கோட்டை, முதல் பதிப்பு- 1997

35. வானமாமலை. நா. (ப.ஆ) **மக்களும் மரபுகளும்** NCBH, இரண்டாம் பதிப்பு-1993

36. வேங்கடசாமி நாட்டார். ந.மு. **சிலப்பதிகாரம் மூலமும் உரையும்** ராமையா பதிப்பகம், சென்னை-14 ஒன்பதாம் பதிப்பு-2018

37. வேதாசலம். வெ. **இயக்கி வழிபாடு** அன்னம் (பி) லிட், சிவகங்கை, முதல் பதிப்பு- 1989

38. ஜாண் ஆசீர்வாதம். டா. **தமிழர் கூத்துகள்** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை- 31 முதல் பதிப்பு- 1985

39. ஜெகதீசன். தெ.வே. முனைவர். (ப.ஆ) **பழந்தமிழ்க் கலைகளும் அதன் நீட்சியும்** காவ்யா வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு-2013

**மலையாள நூற்கள்**

1. அஜித்குமார். டா.என். **காளி நாடகம் பாடங்களும் படனங்களும்** கேரள பாஷா இன்ஸ்டிடியூட் பிப்ரவரி-2015

2. ஆனந்தகுட்டன் நாயர்.வி. **கேரள பாஷா கானங்கள்- தெக்கன் கேரளத்திலே பாட்டுகள்,** பாகம்-2 கேரள சாகித்ய அக்காடமி, திருச்சூர், மறுபதிப்பு-2005

3. கராட் பிரபாகரன் **நம்முடெ அனுஷ்டான கலைகள்** H&C புக்ஸ், திருச்சூர்-680001, முதல் பதிப்பு, ஜுலை-2014

4. கிருஷ்ணன் மாஸ்டர். வி. **ஸ்ரீ குறும்ப சரிதம்** கைரளி புக்ஸ் பிரைவேட் லிட், கண்ணூர், மார்ச்-2014

5. குஞ்ஞிக்குட்டன் இளையது **கொடுங்கல்லூர் க்ஷேத்ர இதிகாசம்**

தேவி புக் ஸ்டால், கொடுங்கல்லூர்-680664
6. குஞ்ஞிராமன் பய்யனூர் **பெருங்களியாட்டம்**
கிரீன் புக்ஸ் (பி) லிட், திருச்சூர்-680003
ஆகஸ்டு-2011
7. குறுப்பு. டா.கெ.கெ.என். **ஆரிய, திராவிட கடகங்கள், மலபாரிலெ நாடன் கலையில்**
8. கோபால கிருஷ்ணன். டா. நடுவட்டம் **கேரள சமஸ்கார தாரகள்**
பிரியதர்சினி பப்ளிகேஷன்ஸ் சொசைட்டி,
திருவனந்தபுரம்-10,
முதல் பதிப்பு, அக்டோபர்- 2014
9. கோபாலன்நாயர்.சி **மலபாரிலே திரையாட்டங்கள்**
மாத்ருபூமி புக்ஸ், மூன்றாம் பதிப்பு-2010
10. கோரமங்கலம். பி. **தெய்யத்திலே சாமூகிய வல்கரணமும் சமயீகரணமும்**
கேரள ஃபோக்லோர் அக்காடமி, தலைச்சேரி,
ஜூலை-2015
11. சத்திய நாராயணன். டா. **முந்நூற்றான் மாருடெ தெய்யங்கள் நாட்டறிவுகள்**
புஸ்தக பவன், கண்ணூர்-11
முதல் பதிப்பு, ஜனவரி-2011
12. பாஸிராஜ். டா.எஸ். **தெக்கன் கேரளத்திலெ தோற்றம் பாட்டு**
தாயாட்டு பப்ளிகேஷன்ஸ், 2005
13. மகாதேவ சாஸ்திரிகள் கண்டியூர் **சௌந்தர்யலகரி** பாஷா பாஷியம்
தேவி புக்ஸ்டால், கொடுங்கல்லூர்,
பத்தாம் பதிப்பு- 1988
14. மாதவன் நம்பூதிரி மேவெள்ளூர் **ஐதீக கதைகள்**
Corrent books, March-1995
15. மாரார். கே.கே. **கேரளத் தனிம**
பூர்ணா பப்ளிக்கேஷன்ஸ்,
கோழிக்கோடு-673001, இரண்டாம் பதிப்பு,
செப்டம்பர்-2008

16. ரவிக்குமார். பி. **அனுஷ்டான கலை ரங்க அவதரணங்களும், ஃபோக்லோரும்**
கேரள பாஷா இன்ஸ்டிடியூட், திருவனந்தபுரம்,
இரண்டாம் பதிப்பு, ஜூலை-2015

17.ராதா கிருஷ்ணன் பொற்றக்கல் **ஸ்ரீ கொடுங்கல்லூர் தேவி க்ஷேத்ர மகாத்மியம்**
கிருஷ்ணாஞ்சலி பப்ளிக்கேஷன்ஸ், திருச்சூர்,
ஆறாம் பதிப்பு, ஜூன் -2017

18. ராஜகோபாலன். டா.சி.ஆர். **ஆட்டக் கோலங்கள்**
International centre for kerala studies
University of kerala. Kariavattam, tvm,
1st edition, feb-2016

19. விஷ்ணுநம்பூதிரி. டா.எம்.வி. (General editor) **காளி சங்கல்பம் கேரள பரிசரத்தில்**
கேரள ஃபோக்லோர் அக்காதமி, சிறக்கல்,
கண்ணூர்-11, முதல் பதிப்பு, மே-2004

20. விஷ்ணுநம்பூதிரி. டா.எம்.வி. **தெய்யமும் திரையும்**
International centre for kerala studies
கேரளப் பல்கலைக் கழகம், காரியவட்டம்

21. விஷ்ணுநம்பூதிரி. டா.எம்.வி. **நம்முடெ பண்டத்தெ பாட்டுகள்**
டி.சி.புக்ஸ்,கோட்டயம்,
நான்காம் பதிப்பு-2010

22. விஷ்ணுநம்பூதிரி. டா.எம்.வி. **நாட்டறிவுப் படனங்கள்,** பகுதி-1
பூர்ணா பப்ளிக்கேஷன்ஸ்,
கோழிக்கோடு-673001,

23. ஸ்ரீதர மேனோன். ஷ. Pro. **கேரள சரித்ரம்**
டி.சி.புக்ஸ்

24. ஸ்ரீதரன். எ. குட்டமத்து **பெருங்களியாட்டம்**
புஸ்தகபவன், கண்ணூர்-670511,
முதல் பதிப்பு, ஜனவரி-2015

25. **சாக்தேயக் காவுகளும் பூஜையும்**
இன்டோலஜிக்கல் ட்ரஸ்ட், கோழிக்கோடு-5
ஐந்தாம் பதிப்பு, மே-2015

**அகராதிகள்**


1. **அபிதான சிந்தாமணி**
செம்பதிப்பு
தமிழ்க் கலைக்களஞ்சியம், சீதைப் பதிப்பகம்,
சென்னை-5

2. **தமிழ்மொழி அகராதி**
செம்பதிப்பு
நா.கதிரை வேற்பிள்ளை
சாரதா பதிப்பகம், சென்னை-14

3. **திவாகரம்** (முதல் தொகுதி)
(பதிப்பாசிரியர்கள்: மு.சண்முகம் பிள்ளை,
இ.சுந்தரமூர்த்தி)
சென்னைப் பல்கலைக்கழகம், 1990

4. விஷ்ணுநம்பூதிரி. டா.எம்.வி. **ஃபோக்லோர் நிகண்டு**
கேரள பாஷா இன்ஸ்டிடியூட், திருவனந்தபுரம்-3
முதல் பதிப்பு-1989


**மலையாள இதழ்கள்**


1. சந்திரமோகன்.கே **பொலிக**
நாடோடி ரங்கவேதி, திருச்சூர்-2003

2. **கேளி**
கேரள சங்கீத நாடக அகாடமி, திருச்சூர்,
ஜனவரி-2019

3. **பொலி**
கேரள ஃபோக்லோர் அக்காடமி வெளியீடு,
கண்ணூர்-670011,
17,18 ஜூன் 2008 – ஜனவரி 2009


**ஆய்வேடுகள்**


1. உமா மகேஸ்வரி. எஸ். **கேரள நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் சிலப்பதிகாரத்தின் தாக்கம்**
கேரளப் பல்கலைக்கழகம், காரியவட்டம்,

திருவனந்தபுரம்-695581, 2018

2. சுரேஷ்.இரா — **சிலப்பதிகாரம்- ஒரு கருத்தாய்வு**
அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு- 678104
1992

3. ஞானப்பழம். N. — **தமிழகப் பண்பாட்டு வரலாற்றுக்குக் கேரளப் பாணர்களின் பங்களிப்பு- இனவரைவியல் ஆய்வு,**
U.G.C (Major research project) Feb-2012

**ஆங்கில நூற்கள்**

1. Indu chudan. V.T. Foreward by sri panampilli Gounda menan — **The secret chamber**
Cochin devaswom board publication, trichur-1969

2.Innes.C.A,ICS — **Malabar Gazetteer**
Kerala gamattees Dept. 1997

3. kurup. K.K.N. — **The cult of Theyyam and Hero worship in kerala**
Kalkatta-1973

4.Pushpendra kumar — **Sakthi cult in ancient India**
Varanasi,1974

**இணையம்**

கொடிநிலை, கந்தழி, வள்ளி — www.dinamani.com
Published on: 30th august 2009
Updated: 20th September 2012

சூரிய வழிபாடு — Deiveegaa
https://m.facebook.com
23 october 2019

# தகவலாளர் பட்டியல்

| பெயர் | பால் | வயது | சாதி | கல்வித் தகுதி | தொழில் | ஊர் |
|---|---|---|---|---|---|---|
| 1.சசிதரன்.A.V | ஆண் | 65 | பத்மசாலியர் | 9 | பூரக்களி கலைஞர் | பய்யனூர் தெரு |
| 2.கமலாக்ஷன் பணிக்கர் | ஆண் | 54 | மணியாணி | 10 | பூரக்களி கலைஞர் | ஆலம்படம்பு |
| 3.கோபி மணப்பாட்டில் | ஆண் | 42 | மூவாரி | +2 | பூரக்களி கலைஞர் | பங்கடம் கண்டோத |
| 4.வத்ஸன் | ஆண் | 54 | விஸ்வகர்மா | 10 | சிற்பி | குஞ்சிமங்கலம் வடக்கன் கொம்பல் |
| 5.வேணுகோபாலன் கண்டன் | ஆண் | 55 | பெருவண்ணான் | 10 | தெய்யக் கலைஞர் | சிறைக்கல் |
| 6.கோபிநாதன் | ஆண் | 56 | பெருவண்ணான் | 9 | தெய்யக் கலைஞர் | வாழவளயில் |
| 7.அனீஷ் | ஆண் | 56 | குறும்பன்மார் | 10 | களம் வரைதல் | குனிசேரி |
| 8.பிரணவ் | ஆண் | 22 | மலையன் | டெக்ஸ்டைல் | கலைஞர் | பய்யனூர் |
| 9.கிருஷ்ணதாஸ் | ஆண் | 60 | மண்ணான் | 10 | ஓய்வு | திருப்பாளூர் |
| 10.கிரீஷ் | ஆண் | 40 | மண்ணான் | Pre degree | நந்துணிப்பாட்டு | பட்டாம்பி |
| 11.ரமேஷ் | ஆண் | 45 | ஈழவர் | 8 | கட்டிட வேலை (சாமியாடி) | சித்தூர் |
| 12.சுஜித் | ஆண் | 22 | செறுமர் | +2 | கட்டிட வேலை (சாமியாடி) | தத்தமங்கலம் |
| 13.விஜயலட்சுமி | பெண் | 45 | குறிச்சியர் | M.A | ஆசிரியர் | வயநாடு |
| 14.வினயன் | ஆண் | 47 | விஸ்வகர்மா | B.A | Labour officer | மானந்தவாடி |
| 15.உண்ணிக் கிருஷ்ணன் | ஆண் | 56 | மாரார் | 10 | முடியேற்று கலைஞர் | கீழில்லம் |
| 16.திருவிக்ரமன் அடிகள் | ஆண் | 62 | அடிகள் | LLB | கொடுங்கல்லூர் மேல்சாந்தி | கொடுங்கல்லூர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17.கீழயில் பாலன் நாயர் | ஆண் | 65 | நாயர் | 10 | விஷாரிக்காவு பரம்பரை Trustee | கொயிலாண்டி |
| 18.கெ.எம்.உண்ணிக் கிருட்ணன் | ஆண் | 70 | நாயர் | 10 | Trustee | கொல்லம் |
| 19.ஸ்ரீராஜ் | ஆண் | 45 | சாக்கியார் | 12 | கலைஞர் | கிள்ளிக்குறிச்சி மங்கலம் |
| 20.ராமச்சந்திர புலவர் | ஆண் | 70 | புலவர் | - | தோல்பாவைக் கூத்து | ஷொர்ணூர் |
| 21.T.K.ஜானகி | பெண் | 67 | தீயர் | இல்லை | இல்லை | நானியூர் |
| 22.K.சாந்தா | பெண் | 65 | தீயர் | 7 | இல்லை | நானியூர் |
| 23.சுந்தரம் | ஆண் | 60 | ஈழவா | Degree | ஐராத்து ஜுவெல்லரி | கொடுங்கல்லூர் |

# நிழற்படம்



களமெழுத்து காளி



குறத்தித் தெய்யம்



பாலக்கா வேலன்



குண்டூர் சாமுண்டி



படையணி



முச்சிலோட்டு பகவதி





திரை (கோழிக்கோடு)

பூதத்தான் பய்யனூர்





பத்மக்களம்

மாடாயிக்காவு





பூதத்தான்

கண்ணங்காட்டு பகவதி



நந்துணிப்பாட்டு



வாளும் சிலம்பும்



குண்டூர் சாமுண்டி



கொடுங்கல்லூர் பரணி விழாவின்
போதுள்ள கொடி



பூதனும் திரையும்



பள்ளிமாடம்



பகவதி தெய்யம்



கொடுங்கல்லூர் மன்னன்



பண்டாரத்தரை



நல்லம்மப்பாட்டு



அஸ்வினி காவுதீண்டல்



பிஷாரிக்காவு



தாலப்பொலி